வெளியீடு 9-9-2005 Issued 9-9-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


புதன்கிழமை, ஏப்ரல் 6, 2005—தொகுதி 80—எண் 1

**Wednesday the 6th April 2005 —Volume 80—No. 1**



சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009



V2H,31'805
805.801
185279


[Price Rs. 3.00

561
21.2.06

6–4–2005

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii - xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii - xxvii |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-37 |
| **2. விதி 110–ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்—** | |
| (அ) நோக்கியா நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் தொழிற்சாலை நிறுவுதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 38-41 |
| (ஆ) பள்ளிகளில் அடிப்படை வசதிகளும், ஆய்வுக் கூட வசதிகளும் ஏற்படுத்தல் மற்றும் கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் பணியிடங்களை நிரப்புதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 41-44 |
| **3. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவித் தொகை அளித்தல்—** | 44-45 |
| **4. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு—** | 45, 50-51 |
| **5. ஒழுங்குப் பிரச்சினை—** | |
| பேரவை நடைபெறுகையில் வெளியில் அறிவிப்பு செய்தது | 46 |
| **6. சட்டமன்ற நடவடிக்கைகளை எல்லா தொலைக்காட்சியினரும் படம் எடுக்க அனுமதி கோருதல்—** | 47-48 |
| **7. உகாதி பண்டிகைக்கு அரசு விடுமுறை அளித்தல்—** | 49-50 |

பக்கங்கள்

8. **கவன ஈர்ப்பு—**

(அ) கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை வட்ட அனுமன் தீர்த்தத்தை சுற்றுலா மையமாக்குதல் — 51-53

(ஆ) அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்டத்தில் சிவகங்கை, கீழாராங்கியம், மேலாராங்கியம் கிராமங்களைச் சேர்க்கக் கோரிக்கை — 54-57

9. **மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 19—உயர் கல்வித் துறை**
(ஆ) **கோரிக்கை எண் 41—பள்ளிக் கல்வித் துறை**
(இ) **கோரிக்கை எண் 44—தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு** — 57-145

* மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 57,66,77,85, 88, 89-90, 91, 92, 93, 94, 95-96, 97, 98, 118-119, 120-121, 133-134, 135, 139, 140-141, 142, 144

திரு. எஸ்.ஏ.எம். உசேன் — 85-96

* திரு. பெ. பழனியப்பன் — 98-115

* திரு. க. பாரமலை — 115-125

திரு. ஜி.கே. மணி — 126-145

10. **அரசினர் தீர்மானம்—**

விதி 32–ஐத் தளர்த்துதல் — 146

11. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** — 147



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

**5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**9. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
186279.



**10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**12. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**13. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

**16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

D
VA11,3' POS
POS.801

17. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. **கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

19. **பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

20. **கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

21. **மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

22. **சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



23. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

24. **செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

25. **விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. Chief Minister | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. Minister for Finance | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Law and Information Technology | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. Minister for Food and Co-operation | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |

\- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி. எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

முனைவர் செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. இணைச் செயலாளர்

திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. இணைச் செயலாளர்

திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. குழு அலுவலர்

திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. குழு அலுவலர்



திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. குழு அலுவலர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. .. தலைமை நிருபர்

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர்

திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம். .. தலைமை நிருபர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. .. தலைமை நிருபர்

செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. .. சார்புச் செயலாளர்

திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. .. சார்புச் செயலாளர்

திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. கோ. சுப்புராம், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. கதிரேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்

# பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கு. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. [illegible] |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19 | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வி. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. [illegible]ரூர்
97. [illegible], திரு. [illegible] .. [illegible]
98. [illegible]பெருமாள், திரு. அ .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. [illegible]ராஜ், திரு. [illegible] .. [illegible]ந்திரம்
100. சின்னசாமி, திரு. ம .. பழனி (செ.வ.)
101. [illegible]வேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி. ஆர் .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி [illegible] .. [illegible]வட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம் .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.சே .. மேட்டுப்பாளையம்
112. [illegible] குருசேகரன், திருமதி .. [illegible]
113. [illegible] .. [illegible]

| | | | |
|---|---|---|---|
| 114. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 115. | சோமசுந்தரம், திரு. வி. | .. | உத்திரமேரூர் |
| 116. | ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 117. | ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | .. | திருநாவலூர் |
| 118. | தமிழரசன், முனைவர் செ.கு. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 119. | தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | .. | மேல்மலையனூர் |
| 120. | தம்பிதுரை, டாக்டர் மு. | .. | பர்கூர் |
| 121. | தவமணி, திரு. க. | .. | திருவிடைமருதூர் |
| 122. | தளவாய் சுந்தரம், திரு. ந. | .. | கன்னியாகுமரி |
| 123. | தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ.வ.) |
| 124. | தாமோதரன், திரு. எஸ். | .. | விருதுநகர் |
| 125. | தாமோதரன், திரு. செ. | .. | கிணத்துக்கடவு |
| 126. | தாமோதிரன், திரு. ப.வெ. | .. | பொங்கலூர் |
| 127. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. | பேராவூரணி |
| 128. | துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 129. | துரைராஜ், திரு. சி. | .. | சேடப்பட்டி |
| 130. | தென்னரசு, திரு. கே.எஸ். | .. | ஈரோடு |
| 131. | நடராசன், திரு. வது. | .. | இளையான்குடி |
| 132. | நடராஜன், திரு. அ. | .. | குத்தாலம் |
| 133. | நடராஜன், திரு. எஸ். | .. | நாட்ராம்பள்ளி |
| 134. | நடராஜன், திரு. பி.கே.டி. | .. | ஆத்தூர் |
| 135. | நயினார் நாகேந்திரன், திரு. | .. | திருநெல்வேலி |
| 136. | நரசிம்மன், திரு. பி.எம். | .. | பள்ளிப்பட்டு |



| | | | |
|---|---|---|---|
| 137. | நளினி மனோகரன், திருமதி | .. | போளூர் |
| 138. | நன்மாறன், திரு. என். | .. | மதுரை கிழக்கு |
| 139. | நீலகண்டன், திரு. ப. | .. | ஆற்காடு |
| 140. | நீலமேகவர்ணம், திரு. லெ. | .. | சாத்தான்குளம் |
| 141. | நெப்போலியன், திரு. து. | .. | வில்லிவாக்கம் |
| 142. | பச்சைமால், திரு. கே.டி. | .. | குளச்சல் |
| 143. | பதினெட்டாம்படியான், திரு. க. | .. | முதுகுளத்தூர் |
| 144. | பரணிகுமார், திரு. பா. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 145. | பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 146. | பவானி கருணாகரன், திருமதி கே. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 147. | பழனிசாமி, திரு. கே.எஸ். | .. | பெருந்துறை |
| 148. | பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செவ.) |
| 149. | பழனியப்பன், திரு. பெ. | .. | மொரப்பூர் |
| 150. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 151. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. | பெரியகுளம் |
| 152. | பாண்டுரங்கன், திரு. கே. | .. | அணைக்கட்டு |
| 153. | பாப்பாசுந்தரம், திரு. அ. | .. | குளித்தலை |
| 154. | பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 155. | பாரிமோகன், திரு. கி. | .. | தருமபுரி |
| 156. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. | கடலாடி |
| 157. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | .. | தொண்டாமுத்தூர் |

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
165. புரட்சிமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன் திரு. .. பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. .. கடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பு. .. காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிபாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 206. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 208. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 211. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 212. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 216. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 217. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 218. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 224. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 225. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 231. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 233. (வெற்றிடம்) | .. | காஞ்சிபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | கும்மிடிப்பூண்டி |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 24, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 ஏப்ரல் 6, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

ஒருவர் தன் வாழ்க்கையின் ஒருநிலையில், தான் கற்ற கல்வியானது அவருக்கு எல்லா நிலைகளிலும் சென்று பாதுகாப்பாக உதவுந்தன்மை உடையதாகும்.

### I. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 301, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**301—**

### ஆராய்ச்சி மையம்

***45432—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) [illegible] ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 6

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நலன் காக்கும் வகையில் சேகோசர்வ் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்பனை வரியை 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்தது மாண்புமிகு அம்மா அவர்கள். மேலும், கூடுதல் விற்பனை வரி 2–1/2 சதவீதத்தை நீக்கியது மாண்புமிகு அம்மா அவர்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்ற பதிலைத் தெரிவித்திருக்கின்றார்கள். வரும் காலங்களில் விவசாயிகளுடைய நலன் கருதி, தாய்லாந்து போன்ற மேலைநாடுகளில் மரவள்ளிக் கிழங்கு மூலமாக ஆறு மாதத்தில் தரமான ஸ்டார்ச் கிடைக்கின்ற புதிய தொழில் யுக்தியை விவசாயத் துறையில் பயன்படுத்தி வருவதைப்போல், தமிழக விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் ஆறு மாத காலத்திற்குள் தரமான கிழங்கைப் பெற்றிட, புதிய தொழில் யுக்தியைப் பயன்படுத்திட சேகோசர்வ் மூலம் ஆராய்ச்சி மையம் உருவாக்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும், மேலைநாடுகளில் நவீன யுக்தியை அறிந்துவர—விஞ்ஞானிகள், விவசாய வல்லுநர்கள் குழு ஒன்று அறிந்து வந்து நடைமுறைப்படுத்திட—அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசுக்கு நல்ல யோசனை தெரிவித்திருக்கிறார். மரவள்ளிக் கிழங்கின் மூலமாக ஸ்டார்ச் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விதத்திலேதான் இந்த சேகோசர்வ் ஆரம்பித்த பின்னர், ஜவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்களுக்கு 2.25 இலட்சம் மூட்டைகள் அடுக்கி வைக்கக்கூடிய, மொத்தமாக சேமித்து வைக்கக்கூடிய, ஒரு மிகப்பெரிய godown வசதியை 1991 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்துதந்தது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின்படி, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடன் கலந்து, அரசு ஆய்ந்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.



2005 ஏப்ரல் 6]

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி மூட்டைகளை விற்பனை செய்ய சேகோசர்வ் என்னும் தொழில் கூட்டுறவுச் சங்கத்தை அரசு உருவாக்கிக் கொடுத்துள்ளது. ஒரு சில உற்பத்தியாளர்கள் வட மாநிலங்களில் நேரடியாக விற்பனை செய்பவர்கள். சிறிய factory–களிடம் உற்பத்தி செய்த ஜவ்வரிசியை விலைக்கு வாங்கி, விற்பனை வரி ஏய்ப்பு செய்து, தாங்கள் உற்பத்தி செய்ததாகக் கணக்கில் எழுதி, வட மாநிலங்களில் அவர்களது depot transfer என எடுத்துச் சென்று வரி ஏய்ப்பு செய்து வருகிறார்கள். எனவே, நேரடியாக வட மாநிலங்களில் விற்பனை செய்து, விற்பனை வரி ஏய்ப்பு செய்துள்ள வியாபாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 7, 8 மாவட்டங்களில் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இதுபோன்று வரி ஏய்ப்பு செய்யக்கூடிய இந்த மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியாளர்கள் யாராவது அந்தப் பகுதியிலே இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமேயானால், இதுபோன்ற தகவலை அரசுக்குத் தெரிவிப்பாரேயானால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலே இயங்கிவருகின்ற சேகோசர்வ் என்ற கூட்டுறவு ஸ்தாபனம் மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்றது. அங்கே விற்பனையாகக்கூடிய ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசிக்கு நல்ல விலை கிடைக்கின்றது. தற்பொழுது வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகின்ற ஸ்டார்ச்சின் காரணமாக இங்கே விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதைத் தடுக்கின்றமுகத்தான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களுக்கு தாய்லாந்திலிருந்து இறக்குமதியாகும் ஸ்டார்ச்சுக்கு நூறு சதவீதம் இறக்குமதி வரியை விதிக்க வேண்டுமென்று கடிதம் எழுதியதற்காக சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, விழுப்புரம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட விவசாயிகளின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். விவசாயிகளுடைய கடனைத் தீர்த்து — 311 கோடி ரூபாய் வட்டி, அபராத வட்டியைத் தீர்த்துவைத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு

நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் விவசாயிகளுடைய விளைபொருளான மரவள்ளிக் கிழங்கிற்கு அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செஸ் வரி விதிக்கப்பட்டிருந்தது. விவசாயிகளினுடைய விளைபொருளான மரவள்ளிக் கிழங்கிற்கு நல்ல விலை கிடைப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் கலந்துபேசி செஸ் வரியை நீக்குவதற்கு இந்தக் கூட்டத்தொடரிலேயே நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கேள்வியிலேயே குறிப்பிட்டிருக்கின்றபடி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும், முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், கலந்துபேசி, முறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 302, திரு. கோவை தங்கம். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

302

## தேயிலை கொள்முதல்

***50283 —திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேயிலைத் தோட்ட நிறுவனங்களில் உற்பத்தியை அதிகரிக்க தனிக் கவனம் செலுத்தி, தேயிலையை நேரடியாகக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதி வால்பாறையில் உற்பத்தியாகும் தேயிலை மற்றும் தேயிலைத் தூளை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்தால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் அதனால் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பளம் கிடைக்கும்; உபயோகிப்பவர்களுக்கும் தரமான டீ தூள் நியாயமான விலையில்



கிடைக்கும். ஆகவே அரசே கொள்முதல் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தத் தேயிலையை நேரடியாகக் கொள்முதல் செய்யக்கூடிய அந்தக் கொள்கை முடிவு அரசிடம் இல்லை. காரணம், இந்தத் தேயிலையை 3 அல்லது 4 மணி நேரத்திற்குள், பறித்தவுடனேயே தொழிற்சாலைகளுக்குக் கொண்டு வந்து உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையிலேதான் அந்தத் தேயிலையினுடைய தரம் உள்ளது. ஆக, அரசே கொள்முதல் செய்வது என்பது இயலாத காரியம். இருந்தாலும்கூட, நீங்கள் அந்தப் பகுதியிலே தேயிலைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்து, அதன் மூலமாக ஊட்டியிலே நிறுவப்பட்டிருக்கின்ற ஏல மையத்தின் மூலமாக நீங்கள் அந்தத் தேயிலை வியாபாரிகளுக்கு அல்லது தேயிலை விவசாயிகளுக்கு நலன் கிட்டக்கூடிய விதத்திலே முயற்சி செய்கிறபோது அரசு உங்களுக்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலிருந்து நீலகிரி மாவட்டம், ஊட்டிக்கு தேயிலையைக் கொண்டுவந்து விற்கின்றபோது, காலதாமதம் சுமார் ஏழு மணி நேரம் அதிகமாகின்றது. அதற்குரிய வாய்ப்பு வால்பாறையில் இல்லை. ஆகையால் வால்பாறையில் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், வால்பாறையில் உள்ள தேயிலை நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளை அரசே ஏற்றுக் கொள்முதல் செய்தால் அரசுக்கும் வருமானம் கிடைக்கும்; வால்பாறையில் படித்துவிட்டு, வேலையில்லாத இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். பொதுமக்களுக்கும் தரமான டீ தூள் கிடைக்கும். தொழிலாளர்களும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைவார்கள். இடைத் தரகர்கள் கொள்ளை இலாபம் அடிப்பதை தடை செய்ய முடியும். தேயிலைத் தயாரிக்கும் நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், உற்பத்தி செய்கிறவர்களைக்காட்டிலும் இடைத் தரகர்கள்தான் அதிகமான இலாபம் அடைகிறார்கள். இதனால் தேயிலைத் தொழில் மிகவும் பாதிக்கப்படுகிறது; தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அரசே கொள்முதல் செய்தால்தான், தேயிலையின் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க முடியும். தேயிலையையும் அதிகமாக உற்பத்தி செய்ய... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆகவே (குறுக்கீடு) ஆகவே என்று சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஒரேயொரு நிமிடம். தேயிலையையும் அதிகமாக உற்பத்தி செய்யலாம். தேயிலை உற்பத்தி அதிகமானால் வால்பாறை, அந்தப் பகுதி வளர்ச்சி அடையும். தொழிலாளர்களுக்கும் தரமான கல்வி கிடைக்கும், வியாபாரம் பெருகும். இப்போது குறைத்துக் கொடுத்து வருகின்ற கூலி உயர்வு உயர்த்தப்பட்டு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு *150* ரூபாய் சம்பளம் கிடைப்பதற்கும் வழி இருக்கிறது. ஆகவே, *25* ஆண்டு காலமாக தற்காலிகமாக பணிபுரிந்து வரும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும். ஆகையால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். தேயிலைத் தோட்ட நிறுவனங்களின் உற்பத்தி (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை, ஒரேயொரு நிமிடம். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம், பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே விவாதம் செய்யக் கூடாது.

**திரு. கோவை தங்கம்:** இல்லை, ஒரேயொரு நிமிடம். தொழிலாளர்களுக்கு அரசு 20 சதவீதம் போனஸ் கொடுப்பதற்கும் வழி கிடைக்கும். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன், அரசே கொள்முதல் செய்தால் தரம் உயர்ந்த தேயிலையைத் தயாரிக்கின்றார்கள் என்ற உலக நாடுகளின் பாராட்டும், மற்ற மாநிலங்களினுடைய பாராட்டும் நமக்குக் கிடைக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசே கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னேன். அரசே கொள்முதல் செய்வது என்பது கொள்கை முடிவு அல்ல. ஆனால் தேயிலை விவசாயிகளுக்கு அவர்களது தொழிலிலே ஊக்கப்படுத்த வேண்டும், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து பல்வேறு சலுகைகளை அந்தத் தேயிலை வியாபாரிகளுக்கு, தேயிலை விவசாயிகளுக்கு அளித்திருக்கிறார்கள். *2001–2002* ஆம் ஆண்டில் *50* சதவீத மானியத்தை மைய அரசு இந்தத் தேயிலை வாரியத்திற்கு அளித்தது. அது *25* சதவீதமாகக் குறைக்கப்பட்ட காரணத்தால், மறுபடியும் அவர்களால் முன்வந்து இதுபோன்ற தொழில்களைச் செய்ய முடியவில்லை என்று தெரிவித்ததற்குப் பிறகு அந்த *25* சதவீத மானியப் பணத்தைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்மா அவர்களே ஏற்றுக்கொண்டு, தேயிலை விவசாயிகளை ஊக்கப்படுத்தக்கூடிய விதத்திலே சலுகையை அறிவித்திருக்கிறார்கள்..



அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடைத்தரகர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த இடைத்தரகர்களை கட்டுப்படுத்துகிற விதத்திலேதான் தேயிலை விவசாயிகளுக்கு இடையிலே இடைத்தரகர்கள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதுபோன்ற மின்னணு ஏல மையத்தை ஏற்பாடு செய்து அதன்மூலமாக அவர்களே உற்பத்தி செய்யக்கூடிய தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும் என்கிற ஒரு முக்கியமான ஒரு திட்டத்தை, சலுகையைக்கூட அந்தத் தேயிலை வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *303*, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**303—**

**சமுதாயக் கூடம்**

***38856—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி, செங்கமேடு கொடிக்கால்வாரியம் மேலத்தெரு, ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி, செங்கமேடு கொடிக்கால்வாரியம் மேலத்தெருவில் சமுதாயக் கூடம் கட்டித்தர முன்மொழிவு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம் எனது சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சியில் சுமார் 5,000 பொதுமக்கள் வசித்து வருகின்றார்கள். அதில் 3,000 நபர்கள் ஆதிதிராவிட சமுதாய மக்கள். இவர்கள் கல்யாணம் மற்றும் சுப காரியங்களை நடத்த வேண்டுமானால் சுமார் 10 கி.மீ. தூரமுள்ள கொள்ளிடத்திற்குதான் செல்ல வேண்டிய கஷ்டமான சூழ்நிலை உள்ளது. இவர்கள் மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ளதனால் கொள்ளிடம் வரை சென்று சுப காரியங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் செய்வதற்கு முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, ஆச்சாள்புரம் ஊராட்சியிலேயே ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட குடியிருப்புகளில் சமுதாயக் கூடம் கட்டித் தரும் திட்டம் 1971–1972 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிதிநிலைமைக்கேற்ப ஓராண்டில் தாட்கோ நிறுவனம் தயாரித்து அளிக்கும் திட்ட மதிப்பீட்டுக்கு ஏற்ப 3 அல்லது 4 சமுதாயக் கூடங்கள் கட்டித் தரப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.14 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது 73 குடியிருப்புகளுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தரும் கோரிக்கை நிலுவையில் உள்ளது. இந்தப் பட்டியலில் கொடிக்கால்வாரியம் மேலத் தெரு குடியிருப்பு இடம்பெறவில்லை. எனினும், வரும் ஆண்டுகளில் நிதிநிலைமை மற்றும் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் மேற்படி ஆதிதிராவிட குடியிருப்புக்கு சமுதாயக் கூடம் கட்டித் தரும் கருத்துரு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரமோகன்.



**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகம் முழுவதும் ஆதிதிராவிட மாணவர்கள் வசிக்கின்ற அந்த இல்லங்களுக்கு 32 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழகம் முழுவதும் ஆதிதிராவிட மாணவர்களினுடைய வயிற்றில் பால் வார்க்கிற மாதிரி ஆதிதிராவிட மாணவர்கள் இல்லம் கட்டிக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அதேபோல மாண்புமிகு ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே, ஆதிதிராவிட அதிகமாக ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே, ஆதிதிராவிட மக்களின் திருமணம் மற்றும் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்காக சமுதாயக் கூடம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் நிதிநிலைமை மற்றும் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் மேற்படி ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தரும் கருத்துரு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களின் குடியிருப்புப் பகுதிகளுக்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு நடப்பு ஆண்டில் 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை சமுதாயக் கூடங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது; ஒரு சமுதாயக் கூடத்திற்கு அரசு நிர்ணயித்த ஒதுக்கீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சமுதாயக் கூடமும் குறைந்தபட்சமாக ரூ.4 இலட்சம் மதிப்பீட்டுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

[2005 ஏப்ரல் 6

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது 4 இலட்சம் ரூபாயிலே சமுதாயக் கூடம் கட்டித் தரப்படுகிறது என்று சொன்னார்கள். அது மிகவும் குறைவான தொகை என்று கருதுகின்ற காரணத்தினால் கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் அவர்கள் வீட்டிலே நடைபெறுகின்ற விசேஷங்களையெல்லாம் அந்த சமுதாயக் கூடத்திலேதான் நடத்துகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் தொகையை சற்று அதிகரித்துக் கொடுத்து, அவர்களுக்கு இன்னும் கூடுதலாக, ஆதிதிராவிட சமுதாயக் கூடங்கள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நல்ல யோசனையை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். கண்டிப்பாக, வருமாண்டில், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. என்னுடைய பேரணாம்பட்டு தொகுதி, ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர்மரபினர் வாழ்கின்ற பகுதியாகும். தாழ்த்தப்பட்ட மக்களுடைய தன்னிகரற்ற தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசு, என்னுடைய தொகுதியில், சமுதாயக் கூடம் கட்டித்தர முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய நான் விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியை, இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே, தேவையின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் நினைத்தால், அவரே ஒதுக்கிக்கொள்ளலாம். இருந்தாலும், துறையின் மூலமாக, கிட்டத்தட்ட 73 கோரிக்கைகள் நிலுவையில் இருக்கின்றன. அந்த நிலுவையில் இருக்கின்ற கோரிக்கைகளுக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் அது ஒவ்வொன்றாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து, சமுதாயக் கூடம் கட்டிக்கொள்ள நிதி ஒதுக்க முடியுமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. கருப்பாயி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருப்பமிருந்தால், கண்டிப்பாகக் கட்டிக்கொள்வதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. கருப்பாயி. (குறுக்கீடுகள்) டாக்டர் கருப்பாயி.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தேவைக்கேற்பவும், விதிமுறைகளின் அடிப்படையிலும், சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். சமுதாயக் கூடம் கட்டப்படுவதற்கு உரிய விதிமுறைகளை, அமைச்சர் அவர்களிடமிருந்து, தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக, தேவையான இடங்களில், மக்களுடைய விருப்பத்திற்கிணங்க, முன்னுரிமை அடிப்படையில், சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து சமுதாயக் கூடம் கட்டலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், விதிமுறைகள் அவ்வாறில்லை. அந்த விதிமுறைகளை மாற்றியமைப்பதற்கு, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தான் அந்தப் பகுதிக்குச் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு விருப்பப்படுவாரேயானால், உள்ளாட்சித் துறையின்மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பேசி, கண்டிப்பாகக் கட்டிக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகேசன்.

**திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் கேட்டதைத்தான் நானும் கேட்க நினைத்தேன். மாவட்ட....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதே பதில்தான் உங்களுக்கும்.

வினா எண் 304, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**304—**

## பேருந்து வசதி

***16740—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம்-கடப்பேரி வழியாக, திருநீர்மலை சென்று கொண்டிருந்த கண்டிகை-திருநீர்மலை வழித்தடப் பேருந்து, நிறுத்துப்பட்டுவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கண்டிகை-திருநீர்மலைக்கிடையே இதற்கு முன்பு நேரடியாக எந்தப் பேருந்தும் இயக்கப்பட்டு தற்போது நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிகையிலிருந்து திருநீர்மலைக்குப் பேருந்து இயக்கப்பட்டு, மூன்று மாதக் காலம் அந்தப் பேருந்து இயங்கி, அங்கு சாலை சரியில்லை என்கிற காரணத்தினால், அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்கான ஆதாரம் வேண்டுமானால், நான் அமைச்சரிடத்திலே



கொண்டுவந்து தருகிறேன். அது மீண்டும் இயக்கப்படுமா என்பதை மீண்டும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிகை-திருநீர்மலைக்கிடையே நேரடியாகப் பேருந்து வசதி இல்லை. ஆனால், பகுதிப் பகுதியாக அந்தப் பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு, நேரடியாகப் பேருந்து எப்போதும் இயக்கப்படவில்லை. ஆனால், எல்லாப் பகுதிகளிலும், அங்கே இருக்கின்ற அனைத்துக் கிராமங்களும், பகுதிப் பகுதியாக, அங்கே பேருந்து வசதி பெற்றிருக்கின்றன. இருந்தாலும், கடப்பேரி, தாம்பரத்திலேயிருந்து, கண்டிகைக்கு வழித்தடம் 55-சி எண்ணுள்ள இரண்டு பேருந்துகள்மூலம், 36 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடத்தில், பயணிகள் அடர்வு 57 சதவிகிதம்தான். அதேபோல், பல்லாவரத்திலிருந்து திருநீர்மலை வழியாக, பழந்தண்டலத்திற்கு வழித்தடம் 57 எண்ணுள்ள 4 பேருந்துகள் மூலம் 80 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடத்தில் அடர்வு 62 சதவீதம். அதேபோல, காலை அலுவலக நேரத்தில் திருநீர்மலைப் பகுதி மக்கள், குறிப்பாக பணிக்குச் செல்வோரின் நலன் கருதி பிராட்வே வரை ஒரு சிறப்புப் பயண நடை இயக்கப்படுகிறது. அந்தப் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்த வழித்தடத்தில் இந்த அளவிற்கு, போதுமான அளவிற்குப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட இன்னும் இந்த வசதி போதாது, இன்னும் கூடுதலாக இயக்கப்படவேண்டும் என்று உறுப்பினர் கருதுவாரேயானால், அவருடைய கோரிக்கை குறித்து அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியிலே இப்போது தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கிறபோது, தாம்பரத்திலேயிருந்து திருநீர்மலை வழியாகச் செல்வது, கடப்பேரி வழியாகச் செல்வதுதான் தொழிலாளர்களுக்கு மிகவும் குறுகிய வழியாக இருக்கும். குறைந்தபட்சம் காலையிலும், மாலையிலும் இரண்டு முறையாவது இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியால் 25,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்ற விதமாக திருப்பூரில் புதிய பின்னலாடை தொழிற்பூங்கா தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்பூங்கா கோவை—ஈரோடு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காரணத்தால், அங்கே நகரப் பேருந்து வசதிகள் இல்லாத காரணத்தால், தொழிலாளர்கள் அந்தத் தொழிற்பேட்டைக்குச் செல்வதற்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 305, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**305—**

### முன்பதிவகம்

***51600—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் சந்திப்பில் அரசு விரைவுப் பேருந்துகள் முன்பதிவகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முன்பதிவகம் திறக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலம் சந்திப்பில் முன்பதிவு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ்.



2005 ஏப்ரல் 6]

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் சந்திப்பில் முன்பதிவு மையம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லையென்று சொன்னாலும், சேலம் மத்தியப் பேருந்து நிலையத்திலே இயங்கி வருகிற முன்பதிவு அலுவலகத்தில் காலை 8—00 மணி முதல் 11—00 மணி வரையிலும், மதியம் 2—00 மணி முதல் 4—00 மணி வரையில்தான் பதிவு செய்கின்றார்கள். எனவே, இங்கு முன்பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால், அன்றைக்கு ஒரு நாள் மட்டும்தான், காலையிலேயே பதிவு செய்து, மாலையிலேதான் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு நாள், இரண்டு நாள் முன்னதாகப் பதிவு செய்கின்ற வசதி இல்லை. எனவே, அந்தத் திட்டத்தை அரசு ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலம் அச்சுவனேரி பேருந்து நிலையத்தில் அனைத்துப் பயணிகளின் வசதிக்காக கணினி மூலம் முன்பதிவு செய்யும் மையம் இயக்கப்பட்டு வருகின்றது. அந்த மையத்தில் இன்னும் கூடுதலாக அந்த வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவருடைய கோரிக்கை குறித்து அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல சேலத்திலேயிருந்து சென்னை செல்வதற்கு மட்டும்தான் அங்கே முன்பதிவு நடைபெறுகிறது. மற்ற, பிற ஊர்களான மைசூர், பெங்களூர், பாண்டிச்சேரி போன்ற பல்வேறு பெரிய நகரங்களுக்குச் செல்வதற்கு முன்பதிவு செய்வதில்லை. எனவே, அதைச் செய்வதற்கு அரசு முன்வர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்பதால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவு பஸ்கள் எல்லாம் புதிய பேருந்து நிலையத்திலேயிருந்து செல்கின்றன. எனவே, சேலம் மாநகரில் அரசு விரைவுப் பேருந்து நிலையம் செயல்படாமல் உள்ளது. அந்த இடம் நகரின் மையப் பகுதியில் உள்ளது. எனவே, அங்கு கைத்தறி வளாகம் அமைக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த இடத்தைக் கைத்தறித் துறைக்குக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கு துறை, நமது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் tender மூலமாக அதை விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே கைத்தறித் துறையும் பங்கேற்று அதிலே வெற்றிகரமாக வந்தால் அவர்களும் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வழித்தடங்களில் இயங்கிக்கொண்டிருந்த பேருந்துகள் சாலைகள் சரியில்லை என்கின்ற காரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. எனது தொகுதியில்கூட திருவெறும்பூரிலிருந்து எழில் நகர் வரை செல்கின்ற அந்தப் பேருந்துகூட பல ஆண்டுகாலமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் சாலைகளை எல்லாம் மேம்படுத்தி மீண்டும் அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நிலை, சென்ற ஆட்சிக் காலத்திலே இருந்தது உண்மைதான். அதை அவர் ஒப்புக்கொண்டதற்கு நன்றி. அதில் இப்போது பெருமளவு சீர்செய்யப்பட்டு, அந்த நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் எல்லாம் இப்போது புதிய பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதிலே இன்னும் ஓரிரு இடங்களிலே அப்படிப்பட்ட அந்தப் பேருந்து வசதி செய்யப்படாமல் இருந்தால், அரசு படிப்படியாக அந்த வசதிகளைச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளாத்திக்குளம் தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பேருந்துகள் தடை செய்யப்பட்டிருந்தன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுக் கூடாது.

வினா எண் 306, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**306—**

## மாணவர் விடுதி

***40759—திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானை தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், கண்ணங்குடியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு விடுதி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கண்ணங்குடி ஒன்றியம், கண்ணங்குடியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு புதிய விடுதி துவக்க இந்த ஆண்டு அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 307, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

[2005 ஏப்ரல் 6

**307—**

**மாணவர் விடுதி**

***62184—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடி பேரூராட்சியில் புதிதாக பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கு விடுதி தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழாது.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி வட்டம், புள்ளம்பாடி சிறப்பு ஊராட்சிப் பகுதியில் 1500 மாணவ, மாணவிகள் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளிகளும், 3 தனியார் நடுநிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. ஒன்றியத்தின் தலைமையிடமாக இருந்தும், இங்கு இதுவரை பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி தொடங்கப்படவில்லை. புள்ளம்பாடியைச் சுற்றிலும் கிட்டத்தட்ட 100 கிராமங்கள் இருக்கின்றன. ஏழையெளிய மாணவ, மாணவிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால் மீண்டும் மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் புதிய விடுதி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஏற்கெனவே 28 பிற்படுத்தப்பட்டோர், 5 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 4 சீர்மரபினர் மாணவ, மாணவியர் விடுதிகள், ஆக மொத்தம் 37 விடுதிகள் இயங்கி வருகின்றன. இதிலே 24 மாணவர் விடுதிகளும், 13 மாணவியர் விடுதிகளும் உள்ளன. 25 விடுதிகள் அரசுக் கட்டடங்களிலும், 12 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்கின்றபோது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்காக மொத்தமுள்ள 972 விடுதிகளில், 770 தனியார் விடுதிகளிலே அடிப்படை வசதியில்லாமல் மாணவச்



2005 ஏப்ரல் 6]

செல்வங்கள் தவித்துக் கொண்டிருந்ததை மனதிலே வைத்துக்கொண்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு நிதிச் சிரமம் இருந்தாலும்கூட, வருங்காலச் சந்ததிகளான மாணவச் செல்வங்களுடைய வாழ்வினை மேம்படுத்துவதற்காக, புரட்சிகரமாக வரலாறு படைக்கக்கூடிய திட்டமாக, சுமார் 770 விடுதிகளில் இன்றைக்கு 630 விடுதிகளில் 312 விடுதிகளுக்கு கட்டடப் பணி தொடங்கப்பட்டும், வரக்கூடிய ஆண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 318 விடுதிகளுக்கு கட்டடப் பணி தொடங்கப்படவிருக்கிற நிலையில், புதிய விடுதிகள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்குக் கொண்டுசென்று, பரிசீலிக்கப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி, போன கேள்வியை இப்போது கேளுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளிலே தங்கியிருக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்குத் தரமான உணவு கிடைப்பதில்லை. ஒவ்வொரு மாணவருக்கும், நீங்கள் எவ்வளவு ரூபாய் ஒதுக்குகிறீர்கள்? அதை இன்னும் அதிகப்படுத்துவதற்கு வழியிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு, தரமான உணவு கிடைக்கிறது. மேலும் மாணவச் செல்வங்களுக்கு 225 ரூபாய் மாதம் ஒன்றுக்கு என்றிருந்ததை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, 300 ரூபாயாக அறிவித்திருக்கிறார்கள். அதேபோன்று, கல்லூரிக் குழந்தைகளுக்கு, மாணவச் செல்வங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எம். பாலன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளம்பாடி ஒன்றியத்தில் மாணவர்கள் விடுதி தாமதமாகத் தொடங்கினாலும்கூட, மாணவிகள் விடுதி ஒன்றுகூட இல்லாமல், குக்கிராமங்களிலே வசிக்கும் மாணவ, மாணவிகள் மிகவும்

சிரமப்படுகிறார்கள். பெண்களின் வாழ்க்கைத்தரம் முன்னேறுவதில் பெரிதும் கவனம் செலுத்திவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சிறப்பு அனுமதியாக வருகின்ற கல்வியாண்டில் புதிதாகத் தொடங்கப்படுமா? தமிழக அரசின் அரசியல் வரலாற்றிலேயே யாருமே கட்டித்தர இயலாத அளவிற்கு, புதிய விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், லால்குடி தொகுதியில் வாளாடிக்கும், புதூர் பாளையத்திற்கும் புதிய விடுதிக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு.

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து வருடத்திற்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டு வருகிறது. இது அரசினுடைய ஒரு விதியாக இருக்கிறது. வருகிற நிதியாண்டில், இந்த விதியைத் தளர்த்தி, தொகுதியிலுள்ள வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அந்த நிதியை ஒதுக்கி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் அமைச்சர் முடிவு செய்யமுடியாது.

*வினா எண் 308, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

**308—**

**கால்நடை மருத்துவமனை**

***37390—திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





விழுப்புரம் மாவட்டம், திருமங்கலம் ஊராட்சியிலுள்ள புதுக்குப்பம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி, புதுக்குப்பம் கிராமத்தின் அருகில் 8 கி.மீ. தூரத்தில் இராதாபுரம் கால்நடை கிளை நிலையம் உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே, கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், புதுக்குப்பம் கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பிரமணியன்.

**திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள புதுக்குப்பம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பில்லை என்று கூறினார்கள். அந்தப் பகுதியிலுள்ள ஏழையெளிய கிராம மக்கள் கால்நடைகளையே பெரிதும் நம்பி வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். நான் வணங்குகின்ற தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழையெளிய மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, தன்னுடைய மூளை பலம், ஓய்வறியாத உழைப்பு, அசைக்கமுடியாத தன்னம்பிக்கை ஆகியவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டு, முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், இந்தியாவில் இருக்கின்ற அத்துணை மாநிலங்களிலும் தமிழகம், முதன்மைப் பெற்ற மாநிலம் என்ற நிலையை இன்றைக்கு நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார்கள்; அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அந்தவகையில், தமிழக அரசியல் வரலாற்றில் கால்நடை பராமரிப்புத் துறையிலேகூட, 274 கால்நடை கிளை நிலையங்களை இன்றைக்குத் தரம் உயர்த்தி, கால்நடை மருந்தகங்களாக உருவாக்கி, சாதனை படைத்து இருக்கின்றது புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்ல அரசு. ஆகவே, எனது கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள புதுக்குப்பம்

[2005 ஏப்ரல் 6

கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 274 கால்நடை கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டதாகச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், இந்த ஆண்டு மட்டும் 306 கால்நடை கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், புதிய கால்நடை கிளை நிலையம் தொடங்கிட மாநில திட்டக் குழுவால் விதிக்கப்பட்ட தடை உத்தரவு இன்னும் அமலிலுள்ள நிலையில், புதிய கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்த தற்போது வாய்ப்பில்லை. இருப்பினும், இத்தடைகள் நீக்கப்பட்ட பின்னர், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கு ஏற்ப புதுக்குப்பம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்பிரமணியன்.

**திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஒப்பற்ற மனித தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே, இன்றைக்கு எனது தொகுதியிலுள்ள புதுக்குப்பம் கிராமத்தில் நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துமாறு வேண்டியுள்ளார்கள். புதிய பதவிகள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்ட பின்னர் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று நிதிநிலைமைக்கேற்ப தகுதியின்



2005 ஏப்ரல் 6]

அடிப்படையில் கண்டமங்கலம் ஒன்றியத்தில் நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திப் பிரிவு ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு தொகுதி முத்தம்பாளையத்தில் கடந்த ஆண்டு ஒரு கிளை நிலையம் மருந்தகமாக தரம் உயர்த்திக் கொடுக்கப்பட்டு அந்த மருந்தகத்திற்கு இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டு கட்டடம் கட்டி திறப்பு விழா நடைபெறுகிற தருவாயில் இருக்கிறது. அதற்காக அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஈரோடு தொகுதி பெரியசேமூர் பகுதியிலுள்ள கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாக தரம் உயர்த்திக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு மருந்தகக் கிளை நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதியில்லை என்று சொன்னால், ஈரோடு தொகுதியில் இருக்கின்ற கங்காபுரம், ரகுபதிநாயக்கன்பாளையம் பகுதிகளுக்கு பகுதிநேர கிளைநிலையமாவது கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்ல ஆட்சியில் முத்தம்பாளையம் கிராமத்தில் இருந்த கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக மாற்றிக் கொடுத்து இன்று சிறப்பாக அங்கு அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. பெரியசேமூர் கிராமத்திற்கும் கால்நடை கிளை நிலையத்தை தரம் உயர்த்த வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று இந்த நிதி ஆண்டிலேயே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே இன்னும் ஐம்பது, அறுபது கால்நடை கிளை நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு

[2005 ஏப்ரல் 6

அனுமதி பெற்று நிச்சயமாக பெரியசேமூர் கால்நடை கிளை நிலையத்தை தரம் உயர்த்திக் கொடுக்க அம்மாவினுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கால்நடை மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு உடனடியாக மருத்துவர்களை நியமிப்பதற்கு ஆவன செய்வார்களா என்று உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கால்நடை மருந்தகத்தில் அல்லது கிளை நிலையத்தில் மருத்துவர் இல்லை என்று சொல்வார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று உடனடியாக அங்கு கால்நடை மருத்துவரை நியமனம் செய்ய அம்மா அவர்கள் உத்தரவிடுவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 309, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**309—**

## கால்நடை மருத்துவமனை

***41300—திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையமோ அல்லது மருந்தகமோ தற்போது இல்லாத நிலையில்



2005 ஏப்ரல் 6]

அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வழிவகை இல்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆ) எழாது.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில், அந்த ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 2,500 மாடுகளுக்குக் குறையாமல் இருக்கின்றன. அந்த ஊராட்சியையொட்டி மூன்று பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் இருக்கின்றன. அக்கரை வட்டம் ஊராட்சியில் மட்டும் ஒரு நாளைக்கு 800 லிட்டர் பால் உற்பத்தி செய்கிறார்கள். அதேபோல அதன் அருகில் உள்ள தளிகைவிடுதி ஊராட்சியில் 410 லிட்டர் பால் உற்பத்தி செய்கிறார்கள். அதற்கு அருகில் இருக்கின்ற அம்மங்குடி ஊராட்சியிலும் நாள் ஒன்றுக்கு 200 லிட்டர் பால் உற்பத்தி செய்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் வாழ்கின்ற கிராமப் பகுதி உயர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் சுய உதவிக் குழுக்களை எல்லாம் ஆரம்பித்து, சுயமாக தொழில் செய்ய வேண்டுமென்ற நிலையில் இன்றையதினம் அந்தப் பகுதியில் இருக்கின்ற ஊராட்சியில் உள்ள அனைவரும் தாங்கள் சொந்தமாகவே கறவை மாடுகளை வாங்கி அங்கே அவற்றை வளர்த்துக் கொண்டு தங்களுடைய குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இருக்கின்ற அந்த மூன்று ஊராட்சிகளிலும் சுய உதவிக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. மிகவும் பின்தங்கிய அந்தப் பகுதிகளிலிருந்து கால்நடை மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமென்று சொன்னால் 15 கிலோ மீட்டர் திருவோணத்திற்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதை மனதில் வைத்து அங்கே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் மீண்டும் மறுபரிசீலனை செய்து கிளை மருந்தகத்தைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிகப்படியான பால், சுயஉதவிக் குழுக்கள் மூலம் வருகிறது என்றும், ஆகவே, அந்த மூன்று கிராமங்களிலும் கால்நடைக் கிளை மருத்துவ நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுள்ளார்கள். நடப்பு ஆண்டில்

கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், கால்நடை மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப, தகுதியின் அடிப்படையில் திருவோணம் கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாக உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் தொடங்கிட மாநில திட்டக் குழுவால் விதிக்கப்பட்ட தடையுத்தரவு நீக்கப்பட்ட பின்னர், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப அக்கரை வட்டம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையுத்தரவு நீக்கப்பட்ட பின்னர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று செய்து கொடுப்பேன் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவோணம் ஒன்றியத்தில் இயங்கி வருகின்ற கால்நடை மருந்தகம் 20 ஊராட்சிகளுக்குத் தலைமையிடமாக இருந்து இயங்கி வருகிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் இன்றையதினம் மருந்தகங்களெல்லாம் தரம் உயர்த்தப்படுகின்றன. அந்த நிலையில், திருவோணம் ஒன்றியத்தில் இயங்கி வருகின்ற கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதையும், அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்பேரில், இங்கே 5,005 கால்நடை பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பாதுகாப்பு முகாமை, திருவோணம் ஒன்றியத்தில் இருக்கின்ற அக்கரை வட்டம் ஊராட்சியிலும், அதைச் சுற்றியுள்ள ஊராட்சிகளிலும் செயல்படுத்துவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அக்கரை வட்டம் கிராமத்தில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டில் தரம் உயர்த்திக் கொடுக்க ஆவன செய்யப்படும் என்பதையும், திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில் கடந்த சனவரி மற்றும் மார்ச் மாதங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, அங்குள்ள கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், தடுப்பூசிப் பணிகள் மற்றும் இதர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற மக்கள் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு நிதியாண்டில் 60 இலட்சம் கால்நடைகள் பயனடையும் வகையில், 5,005 முகாம்கள் நடத்திட, 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, நடப்பு நிதியாண்டிலும் திருவோணம் ஒன்றியம் அக்கரை வட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகள் பயனடையும் வகையில், அங்கு கால்நடைப் பாதுகாப்பு முகாம் நடத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, என்னுடைய தொகுதியான செஞ்சியில், தையூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரவர்கள் தொகுதிகளுக்கெல்லாம் தனித்தனியாகக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 310, திரு. டி. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**310—**

## மீனவர் பயிற்சி நிலையம்

***34899—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியிலுள்ள மீனவர் பயிற்சி நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

[2005 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் உள்ள மீனவர் பயிற்சி நிலையக் கட்டடத்தை 2005–2006 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் செலவில் பழுதுபார்ப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி நிலையக் கட்டடம், ஏற்கெனவே பழுதடைந்துள்ளதால், அந்த மாணவர்கள் தங்களுடைய பயிற்சியை நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், தற்போது 2005–2006–ல் அதைப் புதிதாகக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று, ஏற்கெனவே நீரோடி கிராமத்தில் மீனவர்களுடைய 90 வீடுகள் சூறாவளியால் அடித்துச் செல்லப்பட்டு, இன்று ஆண்டுகள் பதினைந்தைத் தாண்டிவிட்டன. அந்த நிலையில், அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட வீடுகளைக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள், பழுதடைந்துள்ள, அதாவது, சேதம் அடைந்துள்ள வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சுனாமி பேரலையின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் வீடுகளைக் கட்டுவதற்காக இப்போது திட்டங்களைத் தீட்டியிருக்கின்றார்கள். ஒவ்வொரு வீடும் 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீலே கட்டப்படும் என்றும் கூறியிருக்கின்றார்கள். தகுதியிருப்பின் அவர்களுக்கு நடப்பாண்டிலே வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சரவர்கள் நேரில் அந்த இடத்தைப் பார்வையிட்டு, உடனடியாக அந்த வீடுகளைக் கட்டுவதாகச் சொன்னார்கள். அதுபோன்றுதான் இன்றைய மாண்புமிகு



2005 ஏப்ரல் 6]

மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், இதை நேரில் கண்டறிந்தவர்கள். இன்று அவர்கள் வெறும் ஓலைக் குடிசைகளிலே குடியிருக்க வேண்டிய துர்பாக்கிய நிலையிருக்கிறது. எனவே, காலந்தாழ்த்தாமல் அந்தப் பகுதியிலே, அந்நிலையைப் போக்குவதற்கு அவர்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்கு அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கிராமத்திற்கு நடப்பாண்டிலே நிச்சயமாக வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.டி. பச்சைமால்.

**திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சைமன் காலனி பகுதியில் அமைந்துள்ள மீனவர் பயிற்சி நிலையக் கட்டடத்தை, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் குமரி மாவட்டத்திற்கு வருகை தந்தபோது பார்வையிட்டு இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக் கட்டடத்தைப் புதிதாகக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள். அதைப்போல உலக வரலாற்றிலே குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முட்டம் மீனவர் கிராமத்தில் 'Boot' திட்டத்திலே மீன்பிடித் துறைமுகம் அமைத்திட ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு குளச்சல் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். ரெங்கநாதன்.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எங்கெங்கு மீனவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன என்பதையும், அவற்றின் செயல்பாடுகள் தற்போது எவ்விதம் உள்ளன என்பது குறித்தும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 311, திரு. ப. அரசன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

[2005 ஏப்ரல் 6

**311—**

## கடல்வாழ் உணவுப் பொருள்கள்

***39295—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்கள் நலன் கருதி கடல்வாழ் உணவுப் பொருட்களை அவர்களிடமிருந்து அரசே கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்திடும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் நலன் கருதி, கடல்வாழ் உணவுப் பொருட்களை அவர்களிடமிருந்து அரசே கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மீனவர்கள் அதிகமாக கடலிலிருந்து மீன்பிடித்து வருகிறார்கள். பிடித்து வந்து விற்பனை செய்கிறபோது, அவர்களிடமிருந்து இடைத்தரகர்கள் மிகக் குறைந்த விலைக்கு வாங்கி, அதை அதிக இலாபத்திற்கு விற்கிறபோது, மீனவர்களுக்கு மிக அதிகமான இலாபம் கிடைக்க வாய்ப்பில்லை. எப்படி அரசாங்கம் ஊட்டியிலே தேயிலை உற்பத்தியாளர்களின் நலன் கருதி ஏல மையம் அமைத்ததோ, அதுபோன்று மாவட்ட முக்கியப் பகுதிகளிலே, மீனவர்கள் அதிகமாக உள்ள பகுதிகளிலே, இதுபோன்ற ஏல மையங்களை அமைத்து மீனவர் நலன் காக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் மீன்பிடி இறங்கு தளங்களை அமைத்து அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் நல்ல முறையிலே செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே மீனவர்கள், அவர்களுடைய மீன்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே மீனவர்கள்



2005 ஏப்ரல் 6]

பயன்பெறலாம். அரசுக்கு வணிக ரீதியாக முதலீடு செய்வதற்கான அமைப்பு மீன் துறையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிக்குப் பிறகு மீனவர்கள் கடலுக்குச் சென்று மீனை அதிகமாக பிடித்துவந்தாலும்கூட, அவற்றை விற்பனை செய்ய முடியாமல் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். அப்படி அவதிக்குள்ளாகியிருக்கிற மீனவர்களுடைய நலன் கருதி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மீன்களை எல்லாம் விற்பனை செய்வதற்கு என்ன நடவடிக்கையை எடுக்கவிருக்கிறார்கள்? ஏனென்றால் அதற்கான ஒரு அமைப்பு இல்லையென்று அமைச்சர் கூறுகிறார். அப்படிப்பட்ட ஒரு அமைப்பை இந்தத் துறையே உருவாக்கி, பிடிக்கின்ற மீன்களை எல்லாம் உடனடியாக அந்த மீனவர்கள் விற்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை அவைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே பதிலிலே சொல்லுகின்றபோது வணிக ரீதியாக மீன்வளத் துறை மூலமாக மீன்களை ஏற்றுமதி செய்கின்ற திட்டம் இல்லையென்பதைக் குறிப்பிட்டிருந்தேன். மீனவர்களுக்கென்று அடிப்படை வசதிகளான மீன்பிடி இறங்குதளம், மீன்பிடித் துறைமுகங்களுடைய உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல் போன்றவையெல்லாம் செய்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பாண்டிலே, திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கின்றார்கள். அதற்கென்று, பணமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக மீனவர்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

முற்பகல் *10–50*

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் மூலமாக பால் விநியோகத்தினை ஆவின் நிறுவனம் செய்வதுபோல, இப்பொழுது கடைகளிலெல்லாம் Tin fish என்று சொல்லி, பாதுகாக்கப்பட்ட மீன்கள் வெளிநாடுகளில் இருந்து, இங்கே வந்து விற்பனைக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றன;

[2005 ஏப்ரல் 6

விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. அதுபோல அரசாங்கமும் நம்முடைய அரசின் மூலமாக மீன்களைப் பதப்படுத்தி, டின்கள் மூலமாக விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு முனைந்தால் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென்று தனியார்கள் முன்வருவார்களேயானால், அரசு உதவி செய்து அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்ட சுனாமி பேரலைக்குப் பிறகு, அசைவப் பிரியர்கள் தமிழகத்திலே பெரும்பாலும் மீனை வாங்கி உண்ணுவதிலே தயக்கம் காட்டுகிறார்கள். மனித உடல்களை மீன்கள் சாப்பிட்டதனுடைய விளைவாக தொற்று நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது என்கின்ற அச்ச உணர்வு பலரிடத்திலே இருக்கிறது. அதற்கு மாறாக ஆடு, கோழிகளை சாப்பிடக்கூடிய ஒரு நிலைமை தமிழகத்திலே பரவலாக இருக்கிறது. ஆக அந்த அச்ச நிலையைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி பேரலைக்குப் பிறகு, மீன் உணவை சாப்பிடுவதற்கு பயப்படுகிறார்கள் என்ற நிலைமையைப் போக்குவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய முயற்சியினாலே, மீனவக் கல்லூரி மற்றும் பல நிறுவனங்களின் மூலமாக ஆய்வுகளெல்லாம் நடத்தப்பட்டு, அந்த மீன் உணவு சாப்பிடுவதனால் எந்தவிதமான கெடுதலும் இல்லை என்பதை இந்த 2, 3 மாதங்களுக்கு முன்பாக தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். அதனால் இந்த மீன் உணவு உண்பதால் எந்தவித ஆபத்தும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 312, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2005 ஏப்ரல் 6]

**312—**

## குடிநீர்

***67335—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோரக் கிராமங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கிட விளாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ); குழித்துறையார் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 72 கடலோரக் கிராமங்கள் மற்றும் 19 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் 8 சிறப்பு சிற்றூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குழித்துறை ஆற்றின் குறுக்கே விளாத்துறை அருகே தலைமையிடத்தில் அமைக்கப்படவுள்ள படுகை அணைக்கு பொதுப் பணித் துறையினரின் ஒப்புதலும், அதற்கான மதிப்பீடும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கோரப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினரிடமிருந்து ஒப்புதல் மற்றும் மதிப்பீடு பெற்ற பின் மேற்கண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டபின் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் கோடி கோடியாக மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டகாலக் கனவான அரசு மருத்துவக் கல்லூரியை சரித்திர சாதனையாக நிறைவேற்றித் தந்ததும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். தக்கலையில் மாவட்ட தலைமை மருத்துவமனை அமைத்துத் தந்ததும், மலையோரப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் நீண்ட காலமாகக் கிடப்பில் கிடந்த வேர்க்கிளம்பி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூபாய் 13 கோடியே 65 இலட்சம் ஒதுக்கீடு செய்ததும் மாண்புமிகு அம்மா

அவர்கள்தான். கன்னியாகுமரி மாவட்ட அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் எண்ணற்ற பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகளுக்கு விரிவாக்கக் கட்டடங்கள், இணைப்புச் சாலைகள், குடிநீர்த் திட்டங்கள், பாலங்கள் என்று கோடிக்கணக்கான ரூபாய் செலவில் இதய தெய்வம் அம்மா அவர்கள் வாரி வழங்கி வரும் சாதனைகளை சொல்லிக்கொண்டே போகலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டமானது 1952–ல் ரூபாய் 46 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஆய்வு செய்யப்பட்டதாகும். ஆனால் இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் அரை நூற்றாண்டு காலம் கிடப்பில் கிடந்த இத்திட்டத்திற்கு புத்துயிர் ஊட்டியுள்ளார்கள். குழித்துறை தாமிரபரணி ஆற்றுத் தண்ணீரை ஆதரமாகக் கொண்டு செயல் வடிவம் பெறும் விளாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் எனது பத்மநாபபுரம் தொகுதி கடும் வறட்சியில் பாதிக்கப்பட்ட கப்பியறை சிறப்பு ஊராட்சி, திக்கணங்கோடு ஊராட்சி மற்றும் கிள்ளியூர், குருந்தங்கோடு, ராஜாக்கமங்கலம், அகஸ்தீஸ்வரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உப்பு நீரால் பாதிக்கப்பட்டுள்ள 72 கடலோரக் கிராம மக்கள் பயன்பெறுகின்ற வகையில், 3 இலட்சம் மக்கள் சுத்தமான குடிநீர் வசதியைப் பெறும் விளாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு செயல்வடிவம் தந்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு குமரி மாவட்ட மக்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் தற்போது மழை இருந்தாலும், இந்த மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. ஆகையால், மேற்படி திட்டத்தினைத் துரிதப்படுத்தி, போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான இடத்தை குழித்துறையார் ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்திற்கு நாள் ஒன்றுக்குத் தேவைப்படும், 13.85 மில்லியன் லிட்டர் குடிநீரைச் சுத்திகரிப்பு செய்ய, விளவங்கோடு வட்டம், நட்டாலம் கிராமம், நல்லூர் சிறப்பு சிற்றூராட்சி, துரிச்சிகுளப்





பகுதியில் சர்வே எண் 21/8–ல் சுமார் 283 சென்ட் அரசு நிலத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு, நில மாற்றம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் குழித்துறையார் ஆற்றின் குறுக்கே விளாத்துறை அருகே தலைமைப் பணியிடத்தில் படுகை அணை கட்டுவதற்கான திட்ட ஆய்வுப் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு, மதிப்பீடு தயார் செய்ய பொதுப் பணித் துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஆய்வு மற்றும் மதிப்பீடு கட்டணமாக ரூ.13.25 இலட்சம் பொதுப் பணித் துறைக்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செலுத்தப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பெற்ற. பின்னர், இறுதி செய்து, இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதி ஆதாரம் இறுதி செய்த பின், திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மூன்று கோடி மக்கள் பயன்பெறுகின்ற வகையில், இத்திட்டத்திற்கு ரூ.50 கோடி வரை செலவாகும் என்று அந்தத் துறையிலிருந்து எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும், இந்தப் பெரிய திட்டத்திற்கு இந்த அளவில் ஏற்பாடுகளைச் செய்து, உடனடியாக குமரி மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வசதி செய்து தருவதாக அமைச்சர் உறுதி கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இந்த குழித்துறை ஆறு, அதனுடைய பெயர் என்பது தாமிரபரணி ஆறு. குழித்துறை ஆறு என்று நம்முடைய பூமி சாஸ்திரத்திலே இடம் இல்லை. எனவே, அந்த வகையிலே அதை மாற்றிக்கொள்ள வேண்டும். அந்த மாவட்டத்தினுடைய மிக முக்கியமான பகுதியாக இருக்கின்ற நாகர்கோவில் நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத ஒரு சூழ்நிலை இன்றைக்கு நிலவி வருகிறது. எனவே, இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இதன் மூலமாக நாகர்கோவில் நகரத்திற்குக்கூட, இந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை, அதேபோன்று சுத்திகரிக்கக்கூடிய, filter செய்து தரக்கூடிய தண்ணீரைத் தருவதற்காக முதல் கட்டத்திலே நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் சுத்திகரிக்கப்படுவதற்காகத்தான் நான் முன்பே கூறியதுபோல, *283* சென்ட் அரசு நிலத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அப்படித் தீர்மானிக்கப்பட்ட அந்த இடம், இடமாற்றம் செய்த பிறகு, அங்கு சுத்திகரிக்கப்பட்ட நிலையம் அமைக்கப்பட்டு, அதன் மூலமாக குடிநீரானது சுத்திகரிக்கப்பட்டு, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *313*, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**313—**

## குப்பையை அகற்றுதல்

***71961—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் நாள்தோறும் அகற்றப்படும் குப்பையின் அளவு என்ன?

(ஆ) அது எங்கே கொட்டப்படுகிறது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் நாள்தோறும் *3,000* டன் குப்பையும் மற்றும் *500* மெட்ரிக் டன் கற்கூளங்களும் அகற்றப்படுகின்றன. இவ்வாறு அகற்றப்படும் குப்பை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திலும் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திலும் கொட்டப்படுகின்றன.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத் தெருக்களில் குப்பைகளே காண முடியாத அளவுக்குக் குப்பை இல்லா நகரமாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப் பெறப்படுகின்ற குப்பைகள் தரம் பிரிக்கப்படுகின்றனவா, இந்தக் குப்பைகள் தேங்காமல் இருக்க இந்தக் குப்பைகளை மறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளும் வகையில், குப்பையிலிருந்து மின்சாரம் அல்லது எரு போன்ற வகைகள் தயாரிப்பதற்கு, பயன்பாட்டிற்கு இந்தக் குப்பைகள்



2005 ஏப்ரல் 6]

எடுத்துக்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியால் எடுக்கப்படுகின்ற குப்பையானது, மட்கும் குப்பை என்றும், மட்காத குப்பை என்றும் இனம் பிரித்து, தங்கள் வாயிலுக்குக் குப்பை சேகரிக்க வரும் மாநகராட்சிப் பணியாளர்களிடம் வழங்கவும், பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டவும், பத்திரிகைகள், வானொலி போன்ற தகவல்பரப்பு சாதனங்களின் மூலம்...

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து படிப்படியாக வரவேற்பு அதிகரித்து வருகிறது. மேலும் இக்குப்பை கொட்டும் வளாகத்தில் நாளொன்றுக்கு சுமார் *500* மெட்ரிக் டன் வரை நிலத்தினை வளப்படுத்தும் பொருளாக குப்பையினை மாற்ற தனியார் துறையின் மூலம் தொழிற்சாலை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சுமார் *106* இடங்களில் பன்முகப்படுத்தப்பட்ட முறையில் எரு தயாரிக்கிற மண்டலங்களில் கூடங்கள் கட்டப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(திரு. துரைமுருகன், திரு. பரிதி இளம்வழுதி, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோர் எழுந்துநின்று ஏதோ கேட்க முற்பட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள், வாய்ப்புத் தருகிறேன்.

[2005 ஏப்ரல் 6

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) நோக்கியா நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் தொழிற்சாலை நிறுவுதல்–மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகள் இரண்டினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும், வேலைவாய்ப்பு பெருகிடவும் அடிப்படையாக அமைவது தொழில் வளமே. இதனைக் கருத்தில் கொண்டே 'ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம்' என்று பாடிய மகாகவி பாரதியார் (மேசையைத் தட்டும் ஒலி) 'உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்' என்று கூறினார். தமிழகத்தில் பாரதியின் கனவை நனவாக்கிட வேண்டும் என்ற குறிக்கோளுடன் பல்வேறு முனைப்பான முன் முயற்சிகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது.

தொழில்நுட்பத் தகுதிகள் மிகுந்த மனித வள ஆற்றலை வெகுவாகப் பெற்றுள்ள மாநிலம் தமிழகம். இந்த ஆற்றலைப் பயன்படுத்தி பலவகைத் தொழில்களை வெற்றிகரமாக நடத்திட ஏற்றதும் வலுவானதுமான திறம் மிகுநந தொழில் கட்டமைப்பு வசதிகளை எனது அரசு உருவாக்கி உள்ளது. இதன் பயனாக தொழில் முனைவோர் விரும்பி நாடிவரும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நான் வெளியிட்ட புதிய தொழில் கொள்கையை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி இக்கொள்கையில் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மேலும் புதிதாக முதலீடுகள் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் சீர்திருத்தங்கள் பற்றியும் இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விரிவான கொள்கை அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்; போதிய அளவில் தரமான எரிசக்தி வழங்குதல்; விரிவான வரிச் சீர்திருத்தங்கள்; தொழிலாளர் சார் சீர்திருத்தங்கள்; நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது





ஆகும். 300 கோடி ரூபாய்க்கு மேற்படும் முதலீட்டுக்கு சிறப்பு ஊக்க உதவித் தொகுப்பு அளிக்கப்படும் என்றும் இத்தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொள்கை செயல்படுத்தப்படுவதன் பயனாக தமிழ்நாட்டில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புதிதாக முதலீடுகள் செய்வது தொடர்பாக மத்திய அரசிடம் ஏராளமான எண்ணிக்கையில் தாக்கல் செய்யப்படும் புதிய தொழில் முனைவோர் குறிப்பாணைகள்-- Industrial Entrepreneur Memorandum – இதற்குச் சான்று பகர்கின்றன.

செல்லிடத் தொலைத் தொடர்புத் துறையில் உலக அளவில் தலையாய நிறுவனமாகத் திகழும் நோக்கியா (NOKIA) நிறுவனம் இந்தியாவில் தன்னுடைய தயாரிப்புப் பிரிவை நிறுவ தமிழ்நாட்டில் சென்னையை இன்று தெரிவு செய்துள்ளது என்ற செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

செல்லிடத் தொலைபேசிகளின் உற்பத்தியில் உலக அளவில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களுள் NOKIA நிறுவனமும் ஒன்று. இன்றைக்கு உலகம் முழுவதும் விற்பனை ஆகும் செல்லிடத் தொலைபேசிகளுள் மூன்றில் ஒன்று NOKIA நிறுவனத்தின் தயாரிப்பு ஆகும். Finland–ஐத் தலைமையிடமாகக் கொண்ட NOKIA நிறுவனம் உலகெங்கிலும் 9 இடங்களில் தன்னுடைய உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. சென்னையில் அமைய இருக்கின்ற இந்தப் புதிய தொழிற்சாலை இந்தியாவில் தொடங்கப்படும் முதலாவது ஆலையாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) NOKIA–வின் பத்தாவது ஆலையாகவும் அமையும். உலக அளவில் NOKIA நிறுவனப் பொருட்கள் ஆண்டு ஒன்றுக்கு 29.27 பில்லியன் யூரோ, அதாவது 1,65,522 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை ஆகின்றன.

முற்பகல் 11–05

மீண்டும் சொல்கின்றேன், 1,65,522 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை ஆகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நோக்கியா நிறுவனம் செல்லிடத் தொலைபேசிக் கருவிகள் தொழிலகத் தீர்வுகள்—Enterprise Solutions; பிணையச் சாதனங்கள்–Network Equipment–முதலிய பல்வேறுபட்ட பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றது.

தமிழ்நாட்டில் நோக்கியா நிறுவனத்தின் முதலீட்டுத் திட்டங்கள் குறித்து அந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் என்னிடம் விரிவாக எடுத்துக்

கூறினர். நோக்கியா நிறுவனம் தன்னுடைய தொழிற்சாலையை நிறுவுவதற்கு ஏற்ற இடத்தைத் தெரிவு செய்வதற்காக பல மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு இடங்களில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. மிக நுணுக்கமாகவும் விரிவாகவும் ஆய்வு செய்த பிறகு நோக்கியா நிறுவனம் தன்னுடைய தொழிற்சாலையை அமைக்க சென்னையைத் தெரிவு செய்துள்ளது. சென்னையில் அமையப்பெற்றுள்ள மிகச் சிறந்த வசதிகள்; நேர்த்தியான அடிப்படைக் கட்டமைப்பு; சிறப்பான வணிக–இயற்கைச் சூழல் அமைப்பு; சிறப்பான சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு ஆகியன நோக்கியா நிறுவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

நோக்கியா நிறுவனம் தமிழ்நாட்டில் தனது தொழிற்சாலையை நிறுவிட ஸ்ரீபெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் ஓர் இடத்தைத் தெரிவு செய்துள்ளது. நோக்கியா நிறுவனம் ஏற்படுத்தவுள்ள முதன்மையான ஆலையைத் தவிர, துணைப் பாகங்களின் உற்பத்தியாளர்களும் நோக்கியா தொழிற்சாலையை ஒட்டி தமது தொழில் பிரிவுகளைத் தொடங்குவர். நோக்கியா நிறுவனத்தின் முதல்கட்ட முதலீட்டு மதிப்பு சுமார் 150 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது 675 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) துணைப் பாகங்கள் உற்பத்தியாளர்களும் 150 மில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 675 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்வர். இவ்வாறாக முதல்கட்ட மொத்த முதலீடு 300 மில்லியன் அமெரிக்க டாலர் அதாவது, 1,350 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் வாயிலாக முதற்கட்டமாக சுமார் 1,200 பேர் நேரடி வேலைவாய்ப்பைப் பெறுவர். இதோடு மேலும் 6,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும்.

ஸ்ரீபெரும்புதூரில் நோக்கியா நிறுவனமும், சார்பு நிறுவனங்களும் தங்களது தொழிற் பிரிவுகளைத் தொடங்க உள்ள இடம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்படும். தொடக்கத்தில் 2 கோடியே 40 இலட்சம் செல்லிடத் தொலைபேசிக் கருவிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இந்தத் தொழிற்சாலை அதிநவீன தொழிற்சாலையாக அமையும். இந்த உற்பத்தித் திறன் பின்னர் மேலும் விரிவுபடுத்தப்படும். இங்கு தயாரிக்கப்படும் செல்லிடத் தொலைபேசிகள் உள்நாட்டில் விற்பனை செய்யப்படுவதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.

இது தொடர்பாக, நோக்கியா நிறுவனத்தின் உத்தேச முதலீடு தமிழக அரசு அளிக்கும் வசதிகள் மற்றும் ஆதரவுத் தொகுப்புதவி ஆகியவற்றை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம்— Memorandum of Understanding— ஒன்று நோக்கியா நிறுவனத்துடன் இன்று எனது முன்னிலையில்



கையெழுத்து இடப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) பள்ளிகளில் அடிப்படை வசதிகளும், ஆய்வுக் கூட வசதிகளும் ஏற்படுத்தல் மற்றும் கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் பணியிடங்களை நிரப்புதல்–மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமுதாயத்தை நாகரிகப்படுத்துவதும்; அறிவாற்றலைப் பெருக்கி சாதனைகள் புரிந்திட வல்லமை கொடுப்பதும் கல்வியே,

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி"
"எழுமையும் ஏமாப்பு உடைத்து கல்வி"
"கண்உடையர் என்பவர் கற்றோர்"

என்றெல்லாம் கல்வியையும், கல்வி கற்றோரையும் உயர்த்திப் புகழ்ந்து பாடுகின்றார் திருவள்ளுவர். மக்களின் இதயங்களைப் பண்படுத்துவது கல்வி. அவர்கள் வாழ்க்கை முன்னேற்றம் பெற வழிவகுப்பது கல்வி. அதனால்தான் எனது அரசு கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றது. இந்த ஆண்டு, அதாவது 2005–2006 ஆம் ஆண்டுக்கு பள்ளிக் கல்விக்காக 4,348.01 கோடி ரூபாயும், உயர் கல்விக்காக 741.77 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே இதனைத் தெளிவாக எடுத்துக்காட்டும்.

மாணவ, மாணவியர் உவகையுடன் கல்வி கற்கவும்; ஆசிரியர்கள் ஊக்கத்துடன் கல்வி கற்பிக்கவும்; பள்ளிகளில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் அமைந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதனடிப்படையிலேயே அரசுப் பள்ளிகள் அனைத்திலும் போதுமான வகுப்பறைகள், குடிநீர் மற்றும் கழிவறைகள் ஆகிய அடிப்படை வசதிகளை செய்து தர எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகின்றது.

முற்பகல் 11–10

அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்புகளுக்கு 234 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 15,644

வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் 10,526 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வகுப்பறைகள் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகள் அனைத்தும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக பெற்றவையாக அமைந்திட வேண்டும் என்பதே எனது எண்ணம் ஆகும். இதன்படி, அரசுப் பள்ளிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திட நபார்டு வங்கி கடன் உதவியுடன் ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த 2002 ஆம் ஆண்டில் நான் ஆணையிட்டேன். கிராமப்புறங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் முதலான அனைத்து அடிப்படை வசதிகளும் பெற்றிட இத்திட்டம் வழி வகுத்துள்ளது. இதன்படி மொத்தம் 182.74 கோடி ரூபாய் செலவில் மூன்று கட்டங்களில், 605 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அனுமதிக்கப்பட்டு, முதல் கட்டமாக, 170 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டு அவை யாவும் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. இரண்டாவது கட்டமாக, 136 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, அவற்றை கடந்த 3–3–2005 அன்று தலைமைச் செயலகத்தில் நான் திறந்து வைத்தேன். மூன்றாவது கட்டமாக, 299 பள்ளிகளில் இப்பணிகள் மிகவும் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை யாவும் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும்.

தற்போது 232.13 கோடி ரூபாய் செலவில் மேலும் 549 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்; குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தருதல்; ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர எனது அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்காக நபார்டு வங்கியிடமிருந்து 184.90 கோடி ரூபாய் கடன் உதவி பெறப்படும். மாநில அரசு 47.23 கோடி ரூபாயை வழங்கும்.

வளர்ந்து வரும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் அறிவியல் கல்வியை மேம்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். சோதனை செயல் முறைகள் மூலம் அறிவியல் கோட்பாடுகளை மாணவ,





மாணவியர் நன்கு புரிந்து கொண்டு அறிவியல் கல்வியை ஊக்கமுடன் கற்க பள்ளிகளில் முழுமையான வசதிகளுடன் கூடிய ஆய்வுக் கூடங்கள் அமைந்திருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகும். தற்போது தமிழகத்தில் மொத்தம் உள்ள 3,539 அரசு உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் 840 பள்ளிகளில் ஆய்வுக் கூட வசதிகள் இல்லை. இந்த 840 பள்ளிகளிலும் தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வுக் கூடங்களை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன் அடிப்படையில், 71.03 கோடி ரூபாய் செலவில் இந்த ஆய்வுக் கூடங்கள் கட்டப்படும். இந்தச் செலவு தமிழ்நாடு பாட நூல் கழகத்தின் உபரி நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதன்மூலம் ஆய்வுக் கூட வசதியற்ற அரசு உயர்நிலைப் பள்ளிகளோ அல்லது அரசு மேல்நிலைப் பள்ளிகளோ தமிழகத்தில் இல்லை என்ற நிலை உருவாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் பள்ளிக் கல்விப் பணியில் இந்தியாவிலேயே முதல் இடத்தை தமிழகம் பெற்றுள்ளது என்று (மேசையைத் தட்டும் ஒலி) உலக வங்கியே சான்று அளித்துள்ளது என்ற மகிழ்ச்சியான தகவலை இந்த நேரத்தில் இந்த அவையில் மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வசிப்பிடங்களில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் அரசின் தொடக்கப் பள்ளிகள் அமைந்திருத்தல்;

அரசு தொடக்கப் பள்ளிகளுக்குத் தங்களது குழந்தைகளை அனுப்புகின்ற குடும்பங்களின் விகிதாச்சாரம்;

பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் செயல்பாடுகள் குறித்தும், பள்ளிகளில் காணப்படும் வசதிகளின் தரம் குறித்தும் பெற்றோர் மற்றும் மாணவ, மாணவியரின் மன நிறைவு; போன்ற குறியீடுகளை அளவுகோல்களாகக் கொண்டு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் அரசுப் பள்ளிக் கல்விப் பணிச் செயல்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் மேற்சொன்ன அனைத்து வகைகளிலும் திறம்படச் செயல்பட்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை எய்துதல்–Attaining the Millennium Development Goals in India –என்ற உலக வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 6

முற்பகல் 11–15

இதேபோன்று உயர் கல்வியை மேம்படுத்தும் வகையில் அரசு உறுப்புக் கல்லூரிகளிலும் அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் தற்போது காலியாக உள்ள விரிவுரையாளர்கள் பணியிடங்களைப் படிப்படியாக நிரப்ப நான் முடிவெடுத்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு உறுப்புக் கல்லூரிகளில் முதற்கட்டமாக 500 இளநிலை விரிவுரையாளர் பணியிடங்கள் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பப்படும். இவ்வாறு நியமனம் செய்யப்படும் இளநிலை விரிவுரையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் தொகுப்பு ஊதியம் வழங்கப்படும். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் இவர்களுக்கு முறையான ஊதிய விகிதம் வழங்கப்படும். இதேபோன்று தமிழகத்தில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர் காலிப் பணியிடங்களைப் படிப்படியாக நிரப்பிடவும், முதல் கட்டமாக, 300 இளநிலை விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்பிடவும் அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்புகள் தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வியும், உயர் கல்வியும் மேலும் உயர்ந்திட உறுதுணையாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவித் தொகை அளித்தல்

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஆட்சியினுடைய கவனத்தை நான் கவர விரும்புகிறேன். தமிழ்நாட்டில் இரண்டு நாட்களாக பரவலாக மழை பொழிந்ததில் வெள்ளப் பெருக்கு பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களிலே கட்டடங்கள் இடிந்து இருக்கின்றன. நேற்றைய செய்திப்படி தொலைக்காட்சியிலே கேட்டபோது 13 பேர் இறந்திருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அரசுக்கு இதுகுறித்து மேலும் தகவல் வந்திருக்கும். அப்படி வந்திருந்தால் இந்த வெள்ள நிவாரணத்திலே, ஜனங்கள் படுகின்ற கஷ்டத்திலிருந்து மீட்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



2005 ஏப்ரல் 6] [திரு. துரைமுருகன்]

இறந்து போன குடும்பங்களுக்கு ஏதாவது உதவித் தொகை அளிக்கின்ற உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா? 13 பேருக்கு மேல் இறந்திருக்கிறார்களா என்பது குறித்து அரசு ஒரு விளக்கமோ அல்லது அறிக்கையோ வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதுகுறித்து சிவபுண்ணியம் போன்றவர்கள் கவன ஈர்ப்பாக, சிறப்புக் கவன ஈர்ப்பாக என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமோ எடுத்துக்கொள்வேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஒரு அறிக்கையை வெளியிட்டுவிட்டுத்தான் இந்த அவைக்கு நான் வந்திருக்கின்றேன். இறந்தவர்களின் எண்ணிக்கை, (குறுக்கீடு) இதுவரை மாநிலம் முழுவதிலும் இறந்தவர்களின் எண்ணிக்கை @10 ஆகும். ஆங்காங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, தேவைப்படுகின்ற உதவிகளை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் செய்யுமாறு ஏற்கெனவே உத்தரவிடப்பட்டுள்ளது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இந்த மழைக்குச் சம்பந்தப்பட்ட சம்பவங்களில் காயம் அடைந்தவர்களில் தீவிரக் காயம் உள்ளவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாயும், இலேசான காயங்கள் அடைந்தவர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உரிய பதிலை இருக்கிறது. (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உரிய பதிலை நான் சொல்கிறேன். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் பிறகு முடிவு சொல்கிறேன்.

@ மாண்புமிகு முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க திருத்தப் பெற்றது.

## 5. ஒழுங்குப் பிரச்சினை

### பேரவை நடைபெறுகையில் வெளியில் அறிவிப்பு செய்தது

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை கூடியிருக்கின்ற நேரத்தில் எந்த அறிவிப்பை வெளியிடுவதாக இருந்தாலும், எந்த அறிக்கையை வெளியிடுவதாக இருந்தாலும் முதலிலே சட்டப் பேரவைக்குத்தான் தெரிவிக்கப்பட வேண்டும். உறுப்பினர்களுக்குத்தான் அந்த உரிமை உண்டு. என்றாலும் வெளியிலே நான் அந்த அறிக்கையை விட்டுவிட்டு வந்திருக்கிறேன் என்று முதலமைச்சர் இங்கே பேசியிருப்பது முறைதானா என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் செய்த அறிவிப்பில் ஒரு திருத்தம் செய்துகொள்ளவும். இதுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை 10. குடிசைகள் சேதம் 42. அது இங்கே தவறாக கூறப்பட்டது. இறந்தவர்களின் எண்ணிக்கை 10 என்று திருத்திக்கொள்ளவும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை ஒரு ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்புகின்றேன். இதுகுறித்து தங்களுடைய தீர்ப்பினை, முடிவினை எதிர்பார்க்கின்றேன். சட்டசபையிலே வெளியிடாமல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விதி ஒன்றும் இல்லை. இது ஒரு மரபுதான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றபோது இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி அறிவிப்பதும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து காயம் அடைந்தவர்களுக்கு நிதியுதவி அறிவிப்பதும் ஒரு routine matter. அது தினசரி நடக்கின்ற ஒன்று. எனவே சட்டசபையில்தான் அறிவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டசபை கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தினசரி இத்தகைய அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறோம். ஆகவே மற்ற Policy decisions–க்கு ஏற்படுகின்ற அந்த சட்ட விதிமுறைகளை இதற்கு நாம் apply செய்ய முடியாது. (குறுக்கீடு)





முற்பகல் 11–20

## 6. சட்டமன்ற நடவடிக்கைகளை எல்லா தொலைக்காட்சியினரும் படம் எடுக்க அனுமதி கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் கோபிநாத், உங்கள் கட்சியிலேதான், கோபிநாத் ஒன்று கேட்டிருக்கிறார். (குறுக்கீடு) மணி சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாடாளுமன்றத்திலேகூட, நாடாளுமன்ற நடவடிக்கைகளை படம் எடுப்பதற்கு அரசு தொலைக்காட்சி உட்பட எல்லா தொலைக்காட்சிகளும் அனுமதிக்கப்படுகிறார்கள். அதேபோல, பிற மாநிலங்களிலே அந்த நடைமுறை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) சட்டமன்ற மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடம் அலுவல் ஆய்வுக் குழுவிலே சொல்லியிருக்கிறோம். நீங்கள் பரிசீலிக்கிறேன் என்று சொன்னீர்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இதை சட்டமன்ற மானியக் கோரிக்கை வருகின்ற நேரத்திலே பேசலாம். இதைப் பற்றி விரிவாகப் பேசலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மானியக் கோரிக்கை வருகின்ற நாளுக்குப் பிறகு சட்டப் பேரவை நீண்ட நாட்களுக்கு நடைபெறப்போவதில்லை. குறுகிய நாட்கள்தான் இருக்கின்றன. எனவே, நாங்கள் இதை பலமுறை உங்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அலுவல் ஆய்வுக் குழுவிலே நாங்கள் பேசியிருக்கிறோம். இங்கே சட்டசபையில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் அவ்வப்பொழுது நேரடியாக ஒளிபரப்பப்பட்டாலொழிய, எங்களுக்கு அது சரியாக இருக்கும் என்று தோன்றவில்லை. எனவே, நேரடி ஒளிபரப்பு செய்யவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றி யோசிப்போம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மேலும், நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. கோபிநாத் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார். கோபிநாத் சொல்லிவிடுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு பிரச்சினை. இந்தப் படம் நீங்கள் இப்பொழுது எல்லா டி.வி.–க்கும் கொடுக்கவில்லையென்றால்—நீங்களே எடுக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். எல்லாருக்கும் ஒரே மாதிரி கொடுங்கள். ஏன், மற்றவர்கள் சொல்வதை cut பண்ணிவிட்டு உங்களது Read பண்ணுகிறீர்கள்? ஜெயா டி.வியிலே முழுக்கப் போடுகிறீர்கள். போடுவது போடுகிறீர்கள், எங்களைப் போன்றவர்கள் பேசுவதை ஒரு வார்த்தைகூட காட்டமாட்டேன் என்கிறீர்கள். எப்பொழுது கொஞ்சம் dull–ஆக இருக்கிறோமோ அப்பொழுது இப்படிக் காண்பிக்கிறீர்கள். அப்புறம் இப்படிக் காண்பிக்கிறீர்கள். *(சிரிப்பு)* அவர்களை மட்டும் நன்றாகத் திருப்பிக் காண்பிக்கின்றீர்கள். ஆகையினாலே நான் என்ன சொல்கிறேன் என்றால், எல்லாருக்கும் ஒன்றாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்திலே எல்லா நேரத்திலும் ஒழுங்காக இருக்க வேண்டும். சட்டமன்றத்திற்கு வந்தால் எல்லா நேரத்திலும் ஒழுங்காக இருக்க வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** எல்லா நேரத்திலும் ஒழுங்காக இருக்க முடியுமா? நியாயமில்லை இது. ஏனென்றால் suppose அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவனத்திற்குக் கொண்டுவந்து விட்டீர்கள். பார்த்துக்கொள்ளலாம். கோபிநாத்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் முதல்வர் கவனத்திற்கு எடுத்துப் போகிறேன் என்று சொன்னீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைகளை அரசு தொலைக்காட்சி மற்ற எல்லா தனியார் தொலைக்காட்சிகளும் படம் எடுப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். அதுதான்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து விட்டீர்கள். பார்க்கிறேன் அதை.



## 7. உகாதி பண்டிகைக்கு அரசு விடுமுறை அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோபிநாத், சொல்லுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** Hon' ble Speaker Sir, *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அனுமதி கேட்டார். ஆனால் என்ன சொல்கிறார் என்றே தெரியவில்லை எனக்கு. *(சிரிப்பு)*

**திரு. கே. கோபிநாத்:** *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Leave கேட்கிறார்.

**திரு. கே. கோபிநாத்:** *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி கோபிநாத், அரசுக்குச் சொல்லிவிட்டீர்கள் அவ்வளவுதான். பரிதி ஏதோ கேட்கவேண்டும் என்றீர்களே, கேளுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்)* Government Holiday வேண்டும் உகாதிக்கு. அதை declare செய்யவேண்டும். அது இதுவரையிலும் இருந்தது.

*(உறுப்பினர் தொடர்ந்து தெலுங்கில் பேசினார்.)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(தெலுங்கில் பேசினார்.) (சிரிப்பு)* சரி. calendar–லே, it is on 9th. சரி. சனி வாரமே...சனி வாரமே... சனி வாரம் already Government Holiday. *(தெலுங்கில் பேசினார்) (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கோபிநாத் பேசியதும் முதலமைச்சர் அவர்கள் பேசியதும் எங்களுக்கு என்னவென்றே தெரியவில்லை.

[2005 ஏப்ரல் 6

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே மொழிபெயர்த்து சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோபிநாத் அவர்கள் உகாதி பண்டிகையை ஒரு விடுமுறையாக அறிவிக்க வேண்டும்; அரசு விடுமுறையாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்தார். இந்த ஆண்டு உகாதி பண்டிகை வருகிற 9 ஆம் தேதியன்று வருகிறது. ஆகவே, 9 ஆம் தேதி அன்று தெலுங்கு பேசுகின்ற மக்களுக்கும், கன்னடம் பேசுகின்ற மக்களுக்கும் புத்தாண்டு, உகாதி என்பதால் அவர்களுக்கு முதலில் என் நல்வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே அரசு விடுமுறைகள் மிக அதிகமாக உள்ளன என்று பலரும் கருத்து தெரிவித்துள்ளார்கள். இந்த ஆண்டு உகாதி பண்டிகை ஒரு விடுமுறை நாளில்தான் வருகிறது. சனிக்கிழமை. ஆகவே, இந்த ஆண்டு விடுமுறை அறிவிக்க வேண்டிய அவசியமில்லை. எதிர்காலத்தில் வேண்டுமானால், Restricted Holidays என்ற ஒரு பட்டியல் உள்ளது. அரசு விடுமுறைகள் பொதுவாக அனைவருக்கும் விடுமுறை நாளாகும். Restricted Holidays பட்டியலில் குறிப்பிட்ட சில பண்டிகைகள் உள்ளன. யார் விரும்புகிறார்களோ அன்றையதினம் அவர்கள் அன்றைக்கு விடுமுறை எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, இந்த Restricted Holidays பட்டியலில் உகாதி பண்டிகை இருக்கிறதா என்று பார்க்கிறேன், இல்லையென்றால் சேர்க்கிறேன் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோபிநாத், பேசி முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** (தெலுங்கில் பேசினார்.) (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு—தொடர்ச்சி

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளை வளர்ப்பதும், அவற்றைப் பாதுகாப்பதும், அவற்றை அழிவிலிருந்து தடுப்பதும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பரிதி நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று தெரிகிறது. ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு ஒன்று கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதை எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமோ அப்போது எடுத்துக்கொள்வேன்.



2005 ஏப்ரல் 6]

**திரு. பரிதி இளம்வழுதி:** அது ஆய்வில் இருக்கிறதா, ஓய்வில் இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆய்வில்தான் இருக்கிறது. நீங்கள் ஏற்கெனவே துணைத் தலைவராக இருந்தவர். இதுபோன்ற பிரச்சினைகள் எழுப்பப்படுகிற நேரத்தில் பேரவைத் தலைவர் என்ன பதில் சொல்வாரோ அதே பதிலைத்தான் சொல்கிறேன்.

## 8. கவன ஈர்ப்பு

### (அ) கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை வட்ட அனுமன்தீர்த்தத்தை சுற்றுலா மையமாக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்திலுள்ள அனுமன்தீர்த்தத்தை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டம். ஊத்தங்கரை வட்டத்தில் உள்ள அனுமன் தீர்த்தம் இப்பகுதியின் புண்ணிய தலமாக உள்ளது. அரூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் புனித ஆறுகளில் ஒன்றான தென்பெண்ணை ஆற்றின் கரையில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. ஸ்ரீ ஆஞ்சனேயர், இங்கே அனுமந்தீசுவரர் என்னும் திருப்பெயருடன் அருளி வருகின்றார். தம் பெயரால் விளங்கும் அனுமன்தீர்த்தம் உள்ள தென்பெண்ணை ஆற்றின் வடகரையில் கூப்பிய கைகளுடன் ஸ்ரீராம ஜெபம் செய்துகொண்டு நின்ற கோலத்துடன் அருள்பாலித்து வருகிறார். இங்கே மார்கழி மாதம் வரும்

அனுமன் ஜெயந்தி விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. அருள்மிகு அனுமந்தீசுவரருக்கு சிறப்பு அபிசேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. குறிப்பாக ஆடி மாதம், தை மாதம் வரும் அமாவாசை நாட்களிலும், புரட்டாசி மாதம் வரும் மகாளய அமாவாசையன்றும், பெண்ணையாற்றில் முழுகி முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்வதால் முன்னோர்களின் ஆத்மா சாந்தி பெறுகிறது, மேன்மை அடைகிறது என்பதும் ஐதீகமாக உள்ளது.

1. சேலம் மற்றும் வேலூர் செல்லும் சுற்றுலாப் பயணிகள் அனுமன் தீர்த்தத்திற்கு வருகின்றனர். நாள்தோறும் உள்ளூர் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

2. ஓய்வுக்கூடம், குடிநீர் வசதிக்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கழிப்பிட வசதி, திருமண மண்டபம், வாகன நிறுத்துமிடம், கூடத்தில் வைத்து பழங்கால சிற்பங்களைப் பாதுகாத்தல், தீர்த்தம் வர தென்பெண்ணை ஆற்றில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டுதல், பெண்களுக்கு உடைமாற்றும் அறைகள் ஏற்படுத்துதல் போன்ற அடிப்படை வசதிகள் இத்தலத்திற்கு செய்யப்பட வேண்டியுள்ளது. அனுமன்தீர்த்தத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக 2005-2006 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து பரிசீலிக்கலாம் எனவும், சுற்றுலாத் துறை விதிமுறைகளுக்கு ஏற்ப மாவட்ட நிர்வாகம் திட்டப் பணிகளின் மதிப்பீட்டில் 50 சதவிகிதம் ஏற்றுக்கொள்ளும் என்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

3. சுற்றுலா ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அனுமன் தீர்த்தம் என்பது ஒரு மிகப் பெரிய பிரசித்தி பெற்ற ஒரு புண்ணிய தலமாக மக்கள் கருதுகிறார்கள். அது தென்பெண்ணையிலே அமைந்திருப்பதால் அங்கு பூமிக்கு அடியிலிருந்து ஆர்டிசன் சுரப்பி போன்று தானாகவே பொங்கி நீர் வழிகிற ஒரு இடமாக இருந்தது. இப்போது நின்றுவிட்டிருக்கிறது, வறட்சியின் காரணமாக. ஆனாலும் அங்கே அன்றாடம் ஏராளமான மக்கள் வந்து நீராடிவிட்டுச் செல்கிறார்கள். பண்டிகைக் காலங்களில் மிகச் சிறப்பான இடமாக அது திகழ்கிறது.





எனவே, அந்த இடத்தை ஒரு சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்களின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க சுற்றுலாத் தலங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருட்கள் பாதுகாப்பு அறை, மின் விளக்குகள், தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், அரூர் தொகுதி, தீர்த்தமலையில் 2003–2004 ஆம் ஆண்டில் தீர்த்தமலை கிராமிய சுற்றுலா வளர்ச்சி பணித் திட்டத்தின்கீழ் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தீர்த்தமலை சுற்றுப்புற மேம்பாடு, மின் வசதி, சுற்றுலாப் பயணிகளுக்கு இருக்கையுடன்கூடிய இளைப்பாறும் வசதி, புனரமைப்புப் பணிகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் குடிநீர் வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தீர்த்தமலையை சுற்றுலா மையமாக அறிவிக்க நிதி ஒதுக்கி இருப்பதையும், அதேபோன்று அனுமன்தீர்த்தத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அறிவித்திருப்பதையும், நான் மனமார வரவேற்கிறேன். இதேபோன்று எங்கள் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில், அதாவது ஒகேனக்கல் போன்ற இடங்களில் சுற்றுலா மையம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இவை அனைத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 ஏப்ரல் 6

## (ஆ) அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்டத்தில் சிவகங்கை, கீழாராங்கியம், மேலாராங்கியம் கிராமங்களைச் சேர்க்கக் கோரிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. பாரமலை அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, “சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழாராங்கியம், மேலாராங்கியம் ஆகிய கிராமங்களில் குடிநீர் மிகவும் உப்பாக உள்ளதால் பல மைல்கள் தூரம் நடந்துசென்று குடிதண்ணீர் எடுக்கும் துயரத்திற்கு ஆளாகியிருக்கும் அக்கிராம மக்களுக்கு திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்குக் குடிதண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திலிருந்து தண்ணீர் வழங்குவது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மேலாராங்கியம் மற்றும் கீழாராங்கியம் ஆகிய கிராமங்களில், மேலாராங்கியம் கிராமத்திற்கு மட்டும் திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்குச் செல்லும் குடிநீர் குழாயிலிருந்து இரண்டு பொதுக் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு, கிராமப் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கீழாராங்கியம் கிராமத்திற்குக் குடிநீர் குழாய் வழங்கிடக் கோரி ஊராட்சி மன்றத் தீர்மானம் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு அளிக்கும்பட்சத்தில், நகராட்சி மன்றத்தின் பரிந்துரையுடன் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று குடிநீர் இணைப்பு வழங்கிட இயலும். மேலும், தமிழ்நாடு குடிநீர் வாரியம் மூலமாக திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பழையனூர் கிராமம் மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கிட சுமார் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி தொடங்க உள்ளது. இத்திட்டத்தின் மூலம் கீழாராங்கியம் மற்றும் மேலாராங்கியம் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையைப் படித்தேன். திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்குச் செல்லும் குடிதண்ணீர்த் திட்டத்திலிருந்து, அது செல்கின்ற பாதையில் wayside கிராமங்களுக்கு எல்லாம் தண்ணீர் கொடுப்போம் என்று உறுதி கொடுத்துதான் அந்தத் தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது. அநேகமாக எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. இந்த மேலாராங்கியம் கிராமத்தில் 2 குடிதண்ணீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அது ரோட்டின் மேலே— சாலையின் மேல்— வழங்கப்பட்டு இருக்கிறது. அங்குள்ள கிராமம் ஏறக்குறைய 1 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. கீழாராங்கியம் கிராமமும் 1 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதால் அதற்குத் தண்ணீர் வரவில்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, அருப்புக்கோட்டை நகராட்சிக்கு தீர்மானம் அளிக்கும்பட்சத்தில் பரிசீலிக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஏற்கெனவே தண்ணீர் எடுத்துச் சென்று கொண்டு இருந்த அந்தத் திட்டத்தில் புதிதாக அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, குழாய்களைப் பெரிதாக ஆக்கி தண்ணீர் மிக அதிகமாக எடுத்துச்சென்று கொண்டு இருக்கிறார்கள். நான் கேட்பது ஒரே ஒரு கிராமம். 1000 பேர் ஜனத்தொகை உள்ள கிராமம். அதில் ஒன்றும் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படப்போவது இல்லை. ஆகவே அந்தத் தண்ணீரைப் பெறுதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் 10 நாட்கள், 15 நாட்களுக்கு முன்பு கொடுத்தேன், இந்தத் தீர்மானத்தை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒரு கேள்வி கேளுங்கள். நீங்கள் மற்ற விவரங்களை எல்லாம் சொல்லிப் பேசுவதற்கு விவாதம் இல்லை இது. திட்டம் ஆய்வில் இருக்கிறது என்று அமைச்சர் விவர அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அதுசம்பந்தமாக என்ன விவரம் என்று கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, அது அவைக்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 6

குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை எல்லாம் சொல்லவேண்டியதில்லை. குடிதண்ணீர் சம்பந்தமாக அடுத்து என்ன முயற்சி என்று கேளுங்கள்.

**திரு. க. பாரமலை:** பாதிக்கப்படுபவர்களுக்கு எல்லாம் அம்மா அவர்கள் சில உதவியை அறிவித்து இருக்கிறார்கள். அதனால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இந்த பழையனூர் கிராமத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்காக 40 இலட்சம் ரூபாய் செலவில் பணி தொடங்கப்படவிருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அது கொஞ்சம் நாள் ஆகும். அருப்புக்கோட்டைத் திட்டத்திலிருந்து விரைவில் தண்ணீர் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, விரைவாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தைப் பெற்று தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்குச் செல்லும் குடிநீர் குழாய் வடக்கு, தெற்கில் அமைந்துள்ளது. திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்குச் செல்லும் குடிநீர் குழாயில் திருப்புவனத்திலிருந்து 9 வது கிலோ மீட்டர் தூரத்தில், 2 பொது நல்லிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை குடியிருப்புகளுக்கு நீட்டித்துக் கொடுக்க 600 மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கவேண்டும். இதற்கு ரூபாய் 60 ஆயிரம் செலவாகும். மேலும், இது அருப்புக்கோட்டை நகராட்சிக்குச் செல்லும் குடிநீர்த் திட்டம். ஆதலால் இந்தக் குழாய் பதிப்பதற்கு அருப்புக்கோட்டை நகராட்சியின் ஒப்புதல் பெறவேண்டும். மேற்குறிப்பிட்ட இரண்டு கிராமங்களில் உள்ள மக்கள் தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு இப்போது அந்தப் பகுதியிலே சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அங்கே நபர் ஒருவருக்கு 40 லிட்டர் அளவுக்கு தண்ணீர் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி பெறப்பட்ட பிறகு; அனுமதி பெறப்பட்டவுடன் இந்தப் பகுதியிலே, இந்தக் குடிதண்ணீர்த் திட்டத்திலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கும் ஆவன செய்யப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். கீழாராங்கியம், மேலாராங்கியம் குடியிருப்புகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நயினார்பேட்டை, அல்லி நகரம், வெள்ளக்கரை, வெள்ளக்கரை ஆதி, பசும்பொன் நகர், மயில்சேரி போன்ற 6 குடியிருப்புகளுக்கும் சேர்த்து, தனியாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டமானது



2005 ஏப்ரல் 6] [திரு. கே. பி. அன்பழகன்]

இன்னும் 6 மாத காலத்திற்குள் முடிவடையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

*முற்பகல் 11-35*

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. நான் கேட்டுக்கொள்வது, அந்தக் குழாய்கள் போடுவதற்கு 60,000 ரூபாய்தான் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து கொடுப்பதற்குக்கூட நான் தயாராக இருக்கிறேன். ஆகவே, அதை விரைவாக அமல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நகராட்சிக்குச் செல்கின்ற குடிநீர்த் திட்டம். ஆகையால், அங்கே தேவைப்படுகின்ற தண்ணீருக்கு அதிகபட்சமாக இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உடனடியாகப் பரிசீலனை செய்து, அதற்கு உண்டான வாய்ப்பு ஏற்று, உருவாக்கிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

## 9. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 732,09,63,000/–, மூலதனக் கணக்கில் ரூ. 9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ. 1,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் *6690*, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தற்காலிக விரிவுரையாளர்களாகப் பணியாற்றும் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் *19*—ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*732,09,63,000*/—, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*9,67,78,000*/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6691*, திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தில் கம்ப்யூட்டர் சயின்ஸ் துறையில் பணியாற்றும் தற்காலிக விரிவுரையாளர்கள் பணி நிரந்தரம் ஆக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் *19*—ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*732,09,63,000*/—, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*9,67,78,000*/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3300*, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் நகரத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் *19*—ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*732,09,63,000*/—, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*9,67,78,000*/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3858*, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3957*, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2546*, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டத்தில் மகளிர் கல்லூரி ஒன்று அரசின் சார்பாக தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் *19*—ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*732,09,63,000*/—, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*9,67,78,000*/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3494*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொறியியல் சுயநிதிக் கல்லூரி நிறுவனங்களால் தமிழ்நாட்டில் கல்வி, வணிகப் பொருளாக மாற்றப்படுவதைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் *19*—ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*732,09,63,000*/—, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*9,67,78,000*/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4352*, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *4724*, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *5425*, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *5802*, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6508, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6526, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6706, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்கலைக்கழகங்களில் உள்ள பணியாளர்கள் நியமனத்தில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7172, திரு. கி. பாரிமோகன்.

*** திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7330, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் அரசு கலை அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6256, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் இல்லாமல் பல கல்லூரிகளில் மாணவர்கள் அவதிப்படுகிறார்கள். கல்லூரி விரிவுரையாளர்களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5059, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6135, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாமல்லபுரத்தில் உள்ள சிறப்பக் கல்லூரியில் பட்டயப் படிப்பு வகுப்பு ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4240, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் மகளிர் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6198, திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6871, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகவும் பிற்பட்ட தனி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் அரசு கலைக் கல்லூரி தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7241, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகரில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4585, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அந்தியூர் தொகுதிக்குட்பட்ட அம்மாபேட்டை, குருவரெட்டியூர், கொமராயனூர், அந்தியூர், அத்தானி ஆகிய பகுதிகளிலிருந்து கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் பவானி அல்லது ஈரோடு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இப்பகுதி மக்கள் உயர் கல்வி பெறும் வகையில் அந்தியூரில் அரசு கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4488, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5688, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 217, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் விளையாட்டு பல்கலைக்கழகத்தை விரைவில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19-ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6375, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரில் உள்ள அரசு, ஆண்கள் மற்றும் பெண்கள் கல்லூரியில் மாணவர்களின் நலனைக்

கருத்திற்கொண்டு அனைத்துப் பாடப் பிரிவுகளிலும் கூடுதல் இடங்கள் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 627, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்வி, ஏழை நடுத்தர மக்களுக்குக் கிடைக்கும் அளவு கட்டணத் தொகையை நிர்ணயிப்பது தொடர்பாக" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3267, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்வித் துறையில் காலியாக உள்ள விரிவுரையாளர்களின் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும், உயர் கல்வித் துறையில் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்கள் சுமார் 10 சதவீதம்கூட நிரப்பப்படாததன் காரணத்தால், அவர்களின் பணியிடங்களை சிறப்பினமாக எடுத்து நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4153, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் கல்விக் கடன் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7223, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்லூரிகளில் நிரப்பப்படாமல் உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6653, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி., (ஐ.டி.), எம்.எஸ்சி., (சி.எஸ்.), பி.எஸ்சி. (கம்ப்யூட்டர் சயின்ஸ்) போன்ற பாடப் பிரிவுகள் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6905, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

***திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்விக்கான கட்டணங்களைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4373, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுயநிதிக் கல்லூரிகளின் செயல்களை வரன்முறைப்படுத்துதல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 19–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.732,09,63,000/–, மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,67,78,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 41—பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41–பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.15,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2597, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சுற்றுப்புறச்சூழல், புகையிலை ஒழித்தல், தியானம் பற்றி சிறப்புப் பாடங்கள் கற்றுக் கொடுப்பது தொடர்பாக" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3647, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளை ஆண்டுக்கு ஒருமுறை ஆய்வுசெய்து அடிப்படை வசதிகள் போன்றவை உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4209, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு பி.எட். பட்டதாரி ஆசிரியர்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6265, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5285, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5951, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டில், அரசினர் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6258, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆசிரியைகளுக்கு, அவர்கள் கர்ப்பம் தரிக்கும் காலத்தில் பிரசவத்திற்காக வழங்கப்படும் விடுப்பின் கால அளவினை நீட்டித்து வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6422, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 7045, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7171, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7321, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய அளவிலும், உலக அளவிலும் விளையாட்டு வீரர்கள் சிறப்புப் பெற தொடக்கப் பள்ளிகளில் இருந்தே விளையாட்டில் ஆர்வம் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6754, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், தொடக்கக் கல்வி அலுவலகத்தில் இடைநிலை ஆசிரியர் மற்றும் பயிற்சி உதவி ஆசிரியர் பணியிட மாறுதல் குறித்து பெறப்பட்ட மனுக்களை காலதாமதமின்றிப் பரிசீலித்து உரிய ஆணைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3292, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் ஒன்றியம், ரிஷிவந்தியத்தில் ஒரு புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3801, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5536, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலம் கிராமத்தில் இடியும் நிலையில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3936, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4127, திரு. வி.கே. லட்சுமணன்.



**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்வித் துறையில் நவோதயா கல்வித் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4398, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6868, திரு. கே.வி. முரளிதரன்.

**• திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறுபான்மை தெலுங்கு மொழி படித்தவர்கள் அந்தந்த மாநிலங்களிலேயே எஸ்.எஸ்.எல்.சி. படித்து, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால் மட்டுமே ஆசிரியர் பணி என்று ஆந்திரா, கர்நாடகா மாநில அரசுகள் ஆணை பிறப்பித்துள்ளதுபோல நம் மாநிலத்திலும் அதேபோல அரசு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7214, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் உள்ள பழைய பழுதடைந்த பள்ளிக் கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்டித்தர வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6904*, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்டங்கள் மிகக் கடினமாக இருப்பதால் மாணவர்கள் படும் சிரமங்களைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5881*, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சிங்கோன உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தருவது குறித்தும், போதிய ஆசிரியர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7262*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் நகரில் விநாயகமுதலியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: .

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4155*, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி ஆரம்ப தொடக்கப் பள்ளிக்கு கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6687*, திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாறுதல் ஆணைப் பெற்று ஆறு மாத காலம் ஆகியும் ஆசிரியர்களுக்கு நீலகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள் உரிய ஆணை வழங்காதது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6650*, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன்

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 645, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகர்ப்புறங்களில் உள்ள பள்ளிகளைத் தகுதியின் அடிப்படையில் நிலை உயர்த்தும்போது '5 ஏக்கர் நிலப்பரப்பு இருக்க வேண்டும்' என்பதைத் தளர்த்துவது தொடர்பாக" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2337, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3249, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறப் பள்ளிகளில் மாணவர்களின் நலன் கருதி போதிய ஆசிரியர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், தொகுப்பு ஊதியத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3036, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி விஸ்தரிப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6381, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், வீரமாங்குடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத்தொகை ரூ.2,00,000/– செலுத்தி மூன்று ஆண்டுகளாகியும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படாதது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6123, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆண்டிக்குப்பம், மாம்பாக்கம் கிராமத்தில் தொடக்கப் பள்ளி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7017, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாநகராட்சியால் நடத்தப்படும் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதைப் போக்க ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5479, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை தொகுதியில், த. வடகாடு கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளிக்கு பள்ளிக்கூட அறைகள் கூடுதலாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,272,20,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,65,72,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6212, திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை.



## (இ) கோரிக்கை எண் 44-தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44—தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.38,38,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,02,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2696, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து அரசுத் துறை அலுவலகங்களிலும் கடிதத் தொடர்பு கட்டாயம் தமிழ் மொழியின் மூலம்தான் நடைபெற வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44-ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/- மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3670, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் கலைஞர்களுக்கும், சிறந்த தமிழ் எழுத்தாளர்களுக்கும் ஊக்கம் அளித்து உதவி மானியங்கள் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4204, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்தி, ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில் உள்ள அரிய நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5346, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5960, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் நடவடிக்கைகள் தமிழ் மொழியில் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6261, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6402, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6930, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்வி சார்புடைய அதிகாரிகள் மற்றும் தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் துறை அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு அமைத்து தமிழக அரசு அலுவலகங்களில் எந்த அளவுக்கு தமிழ் மொழியைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை அறிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7025, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1839, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து வணிக நிறுவனங்கள், கடைகள், வியாபார கிடங்குகள், தனியார் அலுவலகங்கள் போன்ற இடங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைத்திட உரிய தமிழ்ப் பெயர்களை விளம்பரப்படுத்தி தமிழில் எழுதிட,

தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7212, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3769, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5559, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6903, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.



**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2407, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் உள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அனைத்திலும் தமிழில் பெயர்ப் பலகை வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6096, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்தில் அனைத்துத் துறைத் தேர்வினை தமிழில் எழுதுவதற்கு வாய்ப்பளிக்கும் வண்ணம் துறை நடைமுறை நூல்கள் அனைத்தும் தமிழில் வெளிவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன் கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6859, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 90% தெலுங்கு சிறுபான்மை இன மக்கள் அதிகமாக வாழ்வதால், இம்மாவட்டத்தில் தெலுங்கு மொழியினை இரண்டாவது ஆட்சி மொழியாக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7260, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் நகரில் இசைப் பள்ளி, இசைக் கல்லூரிகளைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6214, திரு. ப. அரசன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4125, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட பின்பு தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வகை செய்ய வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4835, திரு. மு. கார்த்தி இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5465, திரு. கா. கந்தசாமி இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1461, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தின் பண்டைய கலாச்சார கலை வடிவங்களான தெருக்கூத்து, நையாண்டி, கரகாட்டம், வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற கிராமிய கலைகளைப் பாதுகாக்க, பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44–ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/– மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3247, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் மொழி உலகளாவிய வளர்ச்சியைப் பெற 'தமிழை செம்மொழியாக' அறிவித்ததன்மூலம் முடியும் என்ற நிலையை கருத்தில்கொண்டு அரசு மேற்கொள்ள வேண்டிய சிறப்புப் பணிகள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3060, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தமிழ் வளர்ச்சியை மேம்பாடு செய்ய 'உலகத் தமிழ் மாநாடு' நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 271, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குழந்தை இலக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதன் அவசியம் தொடர்பாக" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 44—ன்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,38,66,000/— மற்றும் மூலதனக் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,02,50,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி, பள்ளிக் கல்வித் துறை மற்றும் தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின் மீது விவாதம். திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அன்புத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கு— தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, தந்தை பெரியாராக, பேரறிஞர் அண்ணாவாக, வாழும் வள்ளுவனாக தலை சிறந்த அரசியல் ஞானியாகத் திகழும் எனது அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு—நன்றி கூறுகிறேன். கழகத்தின் பொதுச் செயலாளர் எதிர்க் கட்சியின் தலைவர், அண்ணன் இனமான பேராசிரியர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் தமிழகத்தையும், எங்களையும் வழிநடத்திச் செல்லவிருக்கும் எங்களுடைய இளைய தளபதி, திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இனிய அண்ணன், கழகப் பொருளாளர், அண்ணன் ஆற்காடு நா. வீராசாமி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டும், என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய திருவல்லிக்கேணி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டும், இந்தக் கல்வி மானியத்தில் பேசக்கூடிய வாய்ப்பளித்த சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றிகூறி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் . . .

---

@ 149 முதல் 290 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III-ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, துரைமுருகனை விட்டுவிட்டீர்கள்? (சிரிப்பு)

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** அதைச் சொல்லத்தான் போகிறேன். எங்களுடைய எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவருக்கும் (சிரிப்பு) எனக்கும் எந்தவித தகராறும் இல்லை. பேரவைத் தலைவர் ஒரு சிண்டுமுடித்துப் பார்க்கிறார். அதற்கும் நான் பலியாகமாட்டேன். அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு (சிரிப்பு) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைப் பதிவுசெய்ய விரும்புகிறேன். பொதுக் கல்வி என்ற தலைப்பில் வருவாய்க் கணக்கில் மட்டும் எடுத்துக்கொண்டால் நிதி ஒதுக்கீடு 1996–1997–ல் 2,396 கோடி ரூபாய் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியருக்குச் சொல்லவில்லையா? (சிரிப்பு)

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** சொல்லிவிட்டேனே (சிரிப்பு) என்மேல் கரிசனம் உள்ள பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1997-1998-ல் 2,747 கோடி ரூபாய், 1998-1999-ல் 3,674 கோடி ரூபாய், 2000–2001–ல் 4,184 கோடி ரூபாய். இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கீடு உயர்ந்தது. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் 2001-2002-ல் 4,112 கோடி ரூபாய், 2002-2003-ல் 3,953 கோடி ரூபாய் என்று குறைந்திருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டு 2004-2005-ல் பொதுக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு திட்ட மதிப்பீடு 4,739 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கப்பட்டபோதிலும், திருத்த மதிப்பீட்டில் இது 4,360 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. இதற்கான காரணத்தை கல்வி அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் விளக்கவேண்டுமென்று கேட்டுகொள்கின்றேன். அதுபோலவே இந்த ஆண்டு திட்ட மதிப்பீட்டில் கல்விக்காக ஒதுக்கியுள்ள தொகை முழுவதுமாக செலவழிக்கப்படவேண்டும். அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 31-3–2004 முடிய 347 கோடி ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டதாக கடந்த ஆண்டு சொன்னீர்கள். இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் 31–3–2004 முடிய 357.15 கோடி ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறீர்கள். இதில் எது சரி என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



முற்பகல் 11–50

பொறியியல் கல்லூரிகளில் கடந்த ஆண்டு மாணவர்கள் சேர்க்கை மொத்த இடம் 79,302 என்று இருந்தது. இந்த ஆண்டு 69,475 என்ற அளவிற்கு அதாவது சுமார் 10,000 பேர் குறைந்துவிட்டது. 10,000 பேர் குறைவு என்பது பெரிய வித்தியாசம் என்பதால் அதற்கான விளக்கத்தை அமைச்சர் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கான நிருவாகக் குழு அமைப்பதற்கு அண்ணா பல்கலைக்கழகம் வழிகாட்டுதல்களையும், நெறிமுறைகளையும் வெளியிட்டது. அந்தக் குழுவில் பல்கலைக்கழகம் மற்றும் அனைத்துப் பிரிவினரும் இடம் பெறச் செய்யப்பட்டிருந்தும் பொறியியல் கல்லூரிகளுக்கான அதிகாரப் பொறுப்பில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் –A.I.C.T.E.– சேர்ந்த ஓர் உறுப்பினர்கூட நிருவாகக் குழுவிலே இடம் பெறாமல், முழுவதுமாக விலக்கப்பட்டது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில், வெளி மாநிலங்களிலிருந்து குறிப்பாக, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தமிழ்நாட்டில் உள்ள சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் நிருவாக ஒதுக்கீட்டில் வந்து சேர்ந்தார்கள். இந்த ஆட்சியில்கூட 2 ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. அதனால் தென்னிந்தியாவில் தமிழகம் பொறியியல் கல்வி மையமாகத் திகழவும் முடிந்தது. ஆனால் கடந்த ஆண்டு வெளி மாநில மாணவர்கள் தமிழகம் வந்து சேர்வதற்கு பல தடைகள் விதிக்கப்பட்ட காரணத்தால், அவர்கள் வர இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, பல கல்லூரிகளில் காலியிடங்கள் அதிகமாக ஏற்பட நேர்ந்தது. எனவே இந்த ஆண்டு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வெளி மாநில மாணவர்கள் தமிழகத்திலே வந்து அதிக அளவில் பயில வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு தமிழக அரசுக்காக அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய நுழைவுத் தேர்வில் கேள்வித்தாள்களில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக மாறி, மாறி மூன்று முறை தகுதிப் பட்டியல் வெளியிடும் நிலை ஏற்பட்டது. இதனால் மாணவர்கள் மத்தியில் பெரும் குழப்பமும், பெற்றோர்கள் அவதிப்படும் நிலையும் ஏற்பட்டதை அனைவரும் அறிவோம். இதுகுறித்த வழக்கு நீதிமன்றம் வரை சென்று நீதிமன்றமே, நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டவிதம் குறித்து தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்ததையும் அனைவரும் அறிவார்கள். ஏதோ

நுழைவுத் தேர்வு என்ற பெயரால், மாணவர்களின் எதிர்காலத்தையும், பெற்றோர்களின் நெஞ்சத் துடிப்பையும் அதிகரிக்கச் செய்து, இந்த அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. எனவே, இந்த ஆண்டாவது மிகவும் முன்னெச்சரிக்கையோடு நுழைவுத் தேர்வை நடத்த வேண்டும், மாணவர்கள் வாழ்க்கையில் விளையாடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான குறைந்தபட்சக் கல்வித் தகுதி குறித்தும், கடந்த ஆண்டு மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டது. +2 வகுப்பிலே தேர்ச்சி பெற்றிருந்தாலே பொறியியல் வகுப்பில் சேரலாம் என்று டெல்லி, அகில இந்தியத் தொழில்நுட்பக் குழு அறிவித்திருந்தது. இதை நம்பி பல பொறியியல் கல்லூரிகள் இந்தத் தகுதியின் அடிப்படையில் மாணவர்களைச் சேர்த்துவிட்டார்கள். ஆனால் தமிழக அரசும், அண்ணா பல்கலைக்கழகமும் வகுப்புவாரியாக வெவ்வேறு தேர்ச்சி மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். வழக்கம்போல இந்தப் பிரச்சினையும் உச்ச நீதிமன்றம் வரை சென்று, உச்ச நீதிமன்றம் பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான குறைந்தபட்சக் கல்வித் தகுதி +2 வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும் என்றும், மதிப்பெண் பற்றிய பிரச்சினையில்லை என்றும் தெரிவித்தது.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறானத் தகவலைச் சொல்கின்றார்கள். தமிழக அரசு பொறியியல் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கான தகுதிகளை நிர்ணயித்திருக்கின்றது. +2 தேர்விலே பொதுப் பட்டியலிலே உள்ள அந்த மாணவர்கள் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 55 சதவீதம் பெற்றிருக்க வேண்டும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 50 சதவீதம் பெற்றிருக்க வேண்டும், ஆதிதிராவிட சமுதாயத்தினர் அந்தத் தேர்விலே வெற்றி பெற்றாலே போதும் என்ற ஒரு தகுதியை நிர்ணயித்திருக்கின்றது. இது தமிழக அரசு கடைப்பிடித்து வருகின்ற விதிமுறையாகும். இதை எதிர்த்து தனியார் சுயநிதிக் கல்லூரிகள் நீதிமன்றத்திற்குச் சென்றபோது, தமிழக அரசு இந்தப் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு விதிக்கப்பட்டிருக்கிற, நிர்ணயித்திருக்கின்ற விதிகள் சரி என்றும் அதைக் கடைப்பிடிக்கலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் தீர்ப்பு வருவதற்குள் மாணவர்கள் சேர்வதற்கான தேதி முடிந்துவிட்டது. இதன் காரணமாகவும்...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பொறியியல் கல்லூரிகளே, இலாப நோக்கோடு, அரசினுடைய விதிமுறைகளை மீறி, அவர்கள் மாணவர்களைச் சேர்த்துக் கொண்டால், அதற்கு அரசாங்கம் பொறுப்பல்ல. அந்தக் கல்லூரிகளே பொறுப்பாகுமே தவிர அரசாங்கம் அதற்கு எந்தவிதத்திலும் பொறுப்பில்லை. உச்சநீதிமன்றம் தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகும் அவர்கள் விதிமுறைகளை மீறி மாணவர்களைச் சேர்த்தால் அதற்கு அந்த நிருவாகம்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்பது ஐயன் திருவள்ளுவர் வாக்கு. கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதன் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்றது. இத்தகைய பயன்மிக்க கல்வியைப் பரவலாக அனைவருக்கும் அளிப்பதே ஒரு அரசின் குறிக்கோளாக கல்வித் துறையின் நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை நியமிப்பதில் அரசு சிக்கனம் பார்க்கக்கூடாது. இன்றைய நிலவரப்படி தொடக்கப்பள்ளிகளில் மட்டும் 52,000 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்று கூறப்படுகிறது. கிராமப்புறங்களில் 2,500 தொடக்கப் பள்ளிகளிலும் 352 நடுநிலைப் பள்ளிகளிலும் பல ஆண்டுகளாக தலைமை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கூறுகிறார்கள். எனவே, தமிழ்நாடு அரசுக்கு உட்பட்ட பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில்...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்

அனைவரும் கல்வி பெற வேண்டும், அந்தக் கல்வியை கற்றுக் கொடுக்கிற பள்ளிகளிலே ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கக்கூடாது என்பதற்காக கடந்த ஆண்டு தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை பணியிடங்களிலும் எத்தனை காலிப் பணியிடங்கள் இருக்கின்றனவோ அத்தனைப் பணியிடங்களும் நிரப்பப்படும் என்று சொல்லி 22,817 ஆசிரியர் பணியிடங்கள் காலிப் பணியிடங்கள் என்று கணக்கிடப்பட்டு அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆணையிடப்பட்டு அந்த இடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) Employment Exchange மூலமாக கிட்டத்தட்ட 12,468 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்னும் நியமிக்கப்பட வேண்டிய ஆசிரியர்கள், 396 ஆசிரியர்கள்தான் இருக்கின்றார்கள். அந்த 396 ஆசிரியர்களும் அவர்கள் சமர்ப்பித்து இருக்கின்ற அந்த Nativity Certificate, அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்களா என்று சரி பார்க்கின்ற பணிகளால்தான் அந்த 396 ஆசிரியர் பணியிடங்களும் தாமதப்பட்டிருக்கின்றன. அதேபோன்று ஆசிரியர் தேர்வு ஆணையம் மூலம் தேர்வு செய்யப்படுகின்ற அத்தனை ஆசிரியர்களும் தேர்வு செய்யப்பட்டு விட்டார்கள்; ஆங்கில ஆசிரியர்கள் தவிர. 1,767 ஆங்கில ஆசிரியர்கள்மட்டும் தேர்வு செய்யப்பட வேண்டும். அதுவும் இன்னும் 5 நாட்களுக்குள்ளாக தேர்வு செய்யப்பட்டு விடுவார்கள். ஆகவே, அம்மா அவர்கள், தமிழகத்திலே அத்தனை ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்பியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி G.O. எண் 100, பள்ளிக் கல்வித் துறை, தேதி 27–6–2003–ன்படி இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், முதுகலை பட்டதாரி ஆசிரியர் ஆகிய பணியிடங்கள் தொகுப்பு ஊதியத்தில், பகுதி நேர ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் முறையான ஊதிய விகிதத்தில் உள்ள ஆசிரியர்கள் பெறும் ஊதியத்தில் பாதி அளவுக்குத்தான் ஊதியம் பெறுகிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு, பணி நிரந்தர ஆணை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது நிதிநிலைமை சீராகி விட்டதாகக் கூறி அன்றாடம் ஒரு அறிவிப்பு செய்து கொண்டிருக்கின்றீர்கள். எனவே, தொகுப்பு ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கும் இந்த ஆசிரியர்தளையும் இந்த அரசு மதிக்க வேண்டும். ஏனென்றால் நீங்கள் இதனை செய்ய மறுத்தால் நிச்சயமாக அடுத்து வரும் எங்களுடைய தலைவர் ஆட்சியில் இது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிகளில் அந்தத் தொகுப்பு ஊதியத்திலே ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போதே; 5 ஆண்டுகள் கழித்து அவர்கள் முறையாக மற்ற regular ஆசிரியர்களாக பணியில் நியமிக்கப்படுவார்கள் என்று அந்தப் பணி நியமன உத்தரவு கொடுக்கப்படுகின்றபோதே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொன்றையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவிலே தமிழகத்திலே மட்டும்தான் முறையான கல்வித் தகுதி பெற்றிருக்கின்ற ஆசிரியர்களை இன்றைக்கு நியமித்துக் கொண்டிருக்கின்றோம். பக்கத்திலே உள்ள ஆந்திராவிலே இப்போது ஆயிரம் ரூபாயிலே Vidya Volunteers என்ற பெயரிலே Para teacher— பகுதி நேர Teacher—எந்தப் பகுதியிலே இருக்கின்றார்களோ அந்தக் கிராமத்திலே இருக்கின்றவர்கள் அந்தக் கிராமத்திலே யார் 10–வது படித்திருந்தாலும் சரி, 12–வது படித்திருந்தாலும் சரி அவர்களை 1,000 ரூபாய் கொடுத்து ஆசிரியர்களாக நியமித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோன்று West Bengal– லே Communist ஆளுகின்ற மாநிலத்திலேயும், இப்போது அந்த Para teacher–களை தொடக்கக் கல்விக்கு ஆயிரம் ரூபாய் என்றும், நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 2,000 ரூபாய் என்றும் இப்படி அந்த Para teacher–கள் முறையான தகுதியே இல்லாத ஆசிரியர்களை இப்போது நியமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தமிழகத்திலே மட்டுந்தான் அம்மா அவர்கள் ஆட்சியில் ஆரம்பப் பள்ளியிலும், நடுநிலைப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் தகுதி வாய்ந்த; அந்தத் தகுதியின் அடிப்படையில்தான் இப்போது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த மாநிலங்களிலே நிகழ்ந்த நிகழ்வுகளைச் சொல்லியிருக்கிறார்கள். முதல் மாநிலம் ஆக்க வேண்டும் என்று நீங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றீர்கள். முதல் மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற அடிப்படையில் நான் இதைச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் இடமாற்றம்; நேரடிக் கலந்தாய்வு முறையில் ஆசிரியர்கள் பணிமாற்றம் வழங்கிய நடைமுறையை இப்போது அ.தி.மு.க. அரசு மாற்றிவிட்டதாகச் சொல்கிறார்கள். இதன் காரணமாக ஆசிரியர்கள் பணிமாற்றம் செய்வதில் முறைகேடு நடப்பதாகச் சொல்லப்பட்டு . . .

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மிகப் புரட்சிகரமாக அந்த ஆசிரியர்கள் கலந்தாய்வு முறையை அறிமுகப்படுத்தி அந்த முறை இப்போதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எந்தவித முறைகேடும் இல்லை. முறையாக, அந்த ஆசிரியர்கள் பாராட்டுகின்ற வகையிலே, இந்த counselling system நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், உசேன் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) ஏதாவது கேட்க வேண்டுமென்றால் அவரைக் கேட்கச் சொல்லுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரிக்கு வரி அமைச்சர் குறுக்கிட்டுப் பதில் சொல்லிக்கொண்டேயிருந்தால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரிக்கு வரி சொல்லவில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** நாங்கள் எல்லாம் பேச வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரிக்கு வரி நாங்கள் குறுக்கிடவில்லை. அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டு என்று சொல்கின்றபோதுதான் குறுக்கிடுகின்றோமே தவிர, அவர் பொதுப்படையாகச் சொல்லியிருந்தால் நான் குறுக்கிடத் தயாராக இல்லை. இந்த அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டு என்று சொல்லும்போது, அந்தக் குற்றச்சாட்டை மறுப்பதற்காகத்தான் சொல்கிறோமே தவிர, அவர் பேச்சிலே குறுக்கிட வேண்டும் என்ற எண்ணம் இல்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** பதிலுரையின்போது நீங்கள் சொல்லவேண்டியதுதானே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன், இன்னும் இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** இன்னும் முடியவில்லை. கொஞ்சம் நேரம்தான், 2 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். தயவு செய்து எனக்கு நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 3 மணித் துளிகளாகக் கொடுக்கிறேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர தேர்வு எழுதுவதற்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் கட்டணம் செலுத்துகிறார்கள். தேர்வு எழுதிவிட்டு result வரும்போது தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்தால், 'நன்றாகத் தேர்வு எழுதினோமே, நாம் ஏன் தேர்ச்சி பெறவில்லை' என்று மறு ஆய்வு செய்யவேண்டும் என்று அவர்கள் 400 ரூபாய் பணம் கட்டுகிறார்கள். 400 ரூபாய் பணம் கட்டி, மறு ஆய்வு செய்தவுடன் அவர்கள் வெற்றி பெற்றதாகவும் அறிவிக்கப்படுகிறது. ஆனால், அவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட பிறகு, அந்த 400 ரூபாய் திருப்பித் தரப்படுவதில்லை. இப்படிப் பல கோடிக்கணக்கான ரூபாய் அண்ணா பல்கலைக்கழகத்திற்குச் சேர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கழக ஆட்சி, 1999 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதும் 10 ஆம் வகுப்புத் தேர்விலும், 12 ஆம் வகுப்புத் தேர்விலும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களது உயர்க் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று முடிவு எடுக்கப்பட்டு வழங்கப்பட்டது.

அதுபோலவே பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களில் இருந்து ஒவ்வொரு வகை தொழிற்கல்விப் பிரிவுகளில் சேரும் முதல் 10 நிலை மாணவர்களின் கல்விச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டு கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. மாணவர்களின் கல்விக் கட்டணங்கள் இந்த ஆட்சியில் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதாகப் பல முறை புகார்கள் தெரிவிக்கப்பட்டுவிட்டன. எங்கள் தலைவர் கலைஞர் அவர்களும் ஒவ்வொரு படிப்பிற்கும் இந்த ஆட்சியிலே எந்த அளவிற்குக் கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டது என்பது பற்றி பலமுறை அறிக்கை மூலமாக...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, பள்ளிக் கல்வியாகட்டும், உயர்க் கல்வியாகட்டும் எந்த நிலையிலும், எந்த நேர்விலும் இந்த நான்கு ஆண்டு காலத்திலே கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதிலும் குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்குப் பள்ளி மாணவர்கள்மீது அக்கறையாகப் பேசுகின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் 1998–லேதான் அந்தப் பள்ளிகளிலே 6 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கும், 8 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கும், 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கும் கல்விக் கட்டணத்தை உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, உங்களுடைய ஆட்சியிலேதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈ.வெ.ரா. மணியம்மை பெயரில் இரண்டு திட்டங்கள் இருக்கக் கூடாது என்று நீங்கள் யாராவது கேட்கக்கூடும். ஆனால், கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவசப் படிப்புத் திட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது. ஈ.வெரா. மணியம்மையாரையும் உங்களுக்குத் தெரியவில்லை; ஈ.வெ.ரா. நாகம்மையாரையும் உங்களுக்குத் தெரியவில்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இலவசத் திருமணத் திட்டம், இலவசப் படிப்புத் திட்டம் தெரியவில்லை. ஒரு நூலகத்தில் கடந்த ஆண்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை 34,92,326 பேர் இருந்ததாக பக்கம் 48–ல் கூறப்பட்டுள்ளது. ஒரு உறுப்பினர்கூட அதிகமாகச் சேர்க்கப்படவில்லை, அதுவும் போகட்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியிலே பேச்சை முடியுங்கள்.

பிற்பகல் 12–05

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** கடந்த ஆண்டில் இந்த நூலகங்களிலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 5,12,93,763 என்று இருக்கின்றது. இந்த ஆண்டு இந்த நூலகங்களிலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 5,12,93,763 என்றே இருக்கின்றது. இந்தக் கணக்கைப் பார்க்கும்போது, ஒன்றுகூட புதிதாகச் சேர்க்கப்படவில்லையோ என்று கேட்கத் தோன்றுகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்கலைக்கழகங்களில் முறையாகப் பொறியியல் கல்லூரித் தேர்வுகள் நடந்தன. உதாரணமாக, சென்னைப் பல்கலைக்கழகம், காமராசர் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணியம் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பொறியியல் கல்லூரிகளின் தேர்வுகள் முறையாகவே நடந்து வந்தன. தற்போது 200–க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இதில் முறையாகத் தேர்வுகள் நடைபெறவில்லை. Question papers out ஆகிவிடுகின்றன. மேலும், மாணவர்கள் எழுதுகின்ற தேர்வுத் தாள்கள் zonal, zonal–ஆகத் தேர்வு செய்யப்படுவதால், இப்படித் திருத்தப்படும் தேர்வுகளில் முறைகேடுகள் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பொத்தாம் பொதுவாக தேர்வுகளில் விடைத்தாள்கள் வெளியாகின்றன; கேள்வித்தாள்கள் வெளியாகின்றன என்று சொல்கிறார். எங்கே, எந்தக் கல்லூரியிலே அந்த முறைகேடு நடக்கிறது என்று சொன்னால், அந்தக் கல்லூரிகள்மீது நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொத்தாம் பொதுவாகக் குற்றச்சாட்டைச் சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன், வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** அதற்கான விவரங்களை நான் உடனடியாக உங்களுக்கு நாளையேகூடத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அதுமட்டுமல்ல, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன். (குறுக்கீடு) வாக்கியத்தை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** **

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற குற்றச்சாட்டு, தவறான ஒரு குற்றச்சாட்டு. அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சங்கம், அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கின்றது. அந்தக் குற்றச்சாட்டைச் சொல்கின்றவர், ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளியை நடத்திக் கொண்டிருக்கின்றார். அந்தப் பள்ளிக்கு, 10–வது, 12–வது வகுப்புத் தேர்வுகள் நடத்துவதற்கான அங்கீகாரம் கேட்டு அவர் விண்ணப்பித்திருந்தார். அவரது தவறான நடவடிக்கையின் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, அந்தத் தேர்வு மையம் இரத்து செய்யப்பட்டது. அதற்காக மீண்டும் தங்களுடைய பள்ளிக்குத் தேர்வு மையம் வேண்டுமென்று அனுமதி கேட்டு, அந்த அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாக, அந்த அதிகாரிகள்மீது தவறான ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. உசேன், அதிகாரி மேலே ஒரு தவறான குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது. தாங்கள் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. இத்தோடு முடித்துவிடுங்கள். திரு. பெ. பழனியப்பன். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



* **திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஒரேயொரு நிமிடம். ஒரேயொரு clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உசேன் அவர்கள் பேசும்போது, கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டது என்று சொன்னவுடன், திமுக. ஆட்சியிலேதான் ஆறாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளுக்கு கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் தெரிந்துகொள்ள விரும்புவது, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, அதைப்போல, Dental College, இப்படிப்பட்ட தொழில் கல்வி நிலையங்களிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்த கல்விக் கட்டணத்தைவிட, சில மடங்கு உயர்த்திய காரணத்தால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தகுதி அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டாலும்கூட, அந்தக் கட்டணத்தைச் செலுத்தமுடியாமல் இருக்கிறார்கள். எனவே, அதை இந்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்பதற்காகத்தான் அவர் அந்த வினாவைத் தொடுத்தார்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் கட்டணங்களை நிர்ணயிப்பது அரசாங்கம் இல்லை. உச்சநீதிமன்றம், T.M.A. Pai வழக்கிலே கூறிய தீர்ப்பின்படி, அந்தக் கட்டணங்களை நிர்ணயிக்கின்ற அதிகாரம், 2 குழுக்களில், ஒன்று, அந்த மாணவர்களைச் சேர்ப்பது, இன்னொரு குழு, — நீதிபதி தலைமையிலே இன்னொரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த நீதிமன்ற நீதிபதி நிர்ணயிக்கின்ற கட்டணங்களைத்தான் அந்தக் கல்லூரிகளில் வசூலிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர, இதற்குக் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு அரசுக்கு எந்தப் பங்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லிவிட்டார், விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு)

பிற்பகல் 12–10

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Pai நீதிமன்றத்திலே தனியார் கல்லூரி நிர்வாகிகள் வழக்குத் தொடர்ந்தார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, அரசு நடத்துகின்ற கல்லூரிகளைப் பற்றி. இதிலே அரசாங்கமே ஒரு முடிவு எடுக்கலாம். Pai சொல்கின்ற அந்தத் தீர்ப்பைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற

கட்டாயம் அரசாங்கத்திற்கு இல்லை. ஏனென்றால், கிராமப்புறங்களிலிருந்து படிக்க வருகின்ற ஏழை மாணவர்கள், பல மடங்குக் கட்டணத்தைச் செலுத்தி M.B.B.S. படிக்கவேண்டும், B.E. படிக்கவேண்டுமென்று சொன்னால், அவர்கள் கடன் வாங்குவதற்குக்கூட கஷ்டப்படுகிறார்கள். அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்றுதான் நான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கான கட்டணம், தனியார் கல்லூரிகளைவிட மிகக் குறைவான கட்டணங்களைத்தான் அரசு நிர்ணயித்து இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனியப்பன். (குறுக்கீடுகள்) 20 மணித் துளிகளுக்குமேல் ஆகிவிட்டது.

***திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியா, செல்வமா, வீரமா என அன்று ஒரு நாள் திருவிளையாடலை நடத்திக்காட்டிய இந்தப் பூமியில் இன்றும் சிலர் திருவிளையாடலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், எங்கள் அம்மாவின் கல்விக்கும், வீரத்திற்கும் முன்னால், இவையெல்லாம் வெறும் தெருவிளையாடல்களாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கல்விக்கு கண்ணைக் கொடுத்துவிட்டால், அகிலத்தையே கொடுத்தமாதிரி. இதை முன்னிறுத்தி அதன் மூலமாகவே நம் அன்னை பல நல்ல அறிவிப்புகளை நாள்தோறும் இந்த மண்ணிலே வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். பள்ளிக்கு நடையா? இது நடைபாதை என முடங்கிக் கிடக்கும் ஏறெடுத்துப் பார்க்காத ஏழைப் பெண்களுக்கு எழிலார்ந்த மிதிவண்டிகள். மாணவிகள் சிட்டாக கிராமத்திலே இன்றைக்கு பறந்து கொண்டிருக்கிறார்கள். கண் சிமிட்டும் நேரத்தில் இப்போது கல்விக் கூடம். களைப்பில்லை; களிப்போடு கற்கிறார்கள். புத்தகம் சுமக்க தோளிருந்தும், அதை வாங்க வழியில்லா அந்தக் குழந்தைகளுக்கு கல்வி ஒரு கரிக் கட்டை ஆகிவிடக் கூடாது என்பதற்காக அம்மா மனத்திலே ஒரு வேதனை. அதன் வெளிப்பாடுதான், பத்தாம் வகுப்புவரை அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது' என்று சொல்வார்கள். எனவேதான், நுண்மாண் நுழைபுல மதியோடு, இந்த அவையிலே இதுமாதிரி உன்னத திட்டங்களை, தன்னிகரில்லாத்



தலைவி இங்கே இன்றைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டு பள்ளிக் கல்வி, உயர் கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின்கீழ் இங்கே மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பையும், தகுதியையும் உருவாக்கிக் கொடுத்த எங்களுடைய, நாங்கள் நித்தம் நித்தம் வணங்குகிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் சமர்ப்பித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கல்வித் துறைக்கு ஆற்றியிருக்கிற சேவை என்பது, சாதனை மட்டுமல்ல, ஒரு சரித்திரம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல அரசு என்று சொன்னால், அந்த அரசு அமைந்தவுடன், இந்த நாட்டு மக்களுக்கும், ஏழையெளிய மக்களுக்கும், எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், அந்தத் துறையிலேதான் ஒரு நல்ல எண்ணம் கொண்டு, திட்டம் போட்டு, அதைச் செயல்படுத்தி வெற்றிக்கொடி நாட்டுவார்கள். அதனுடைய அடிப்படையிலேதான், இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள், கல்வித் துறையிலே ஒரு சரித்திரம் படைத்திருக்கிறார்கள்; வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கல்வித் துறையில் பேசுவதற்கு நான் பெருமைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், அனைவருக்கும் கல்வித் திட்டத்தை இன்றைக்குச் சிறப்பான முறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளிகளிலே சேர்ப்பது குறித்து இன்றைக்கு நல்ல கவனம் செலுத்தியிருக்கிறார்கள். ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்புவது, மாணவர்களுக்குச் சிறந்த கல்வியைத் தருவது. கிராமங்கள்தோறும் புதிய பள்ளிக் கூடங்களை உருவாக்குவது, தொடக்கப் பள்ளிகள் முதல் மேல்நிலைப் பள்ளிகள் வரை அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை ஆதாரங்களை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்றுதான், 1991–லிருந்து இன்றைக்கு வரை திட்டம் தீட்டிய காரணமாகத்தான் இன்றைக்கு இந்த ஆட்சிக்கு ஒரு மணிமகுடம் சூட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், கல்வித் துறைக்கு மட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ. 4,348.01 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த நிதி என்பது, ஒட்டுமொத்த நிதியிலே—இந்த ஆண்டு ஒட்டுமொத்த நிதியிலே—ஆறில் ஒரு பங்கு இந்தக் கல்வித் துறைக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலிருந்தே, கல்வித் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர்கூட, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்படி இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர் ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டார். கிட்டத்தட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அம்மா அவர்கள் ஆட்சியிலே ரூ.7,000 கோடியை அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.21,000 கோடி. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.14,000 கோடி. ஆக, 7,000 கோடி ரூபாயை இந்தக் கல்வித் துறைக்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் விரும்புகிறேன்.

பிற்பகல் 12–15

பள்ளிகளைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே எந்த கிராமத்திலும் பள்ளிகளைத் திறக்கக்கூடிய வாய்ப்பே இல்லை என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு கிராமத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவுள்ள ஒரு கிராமத்திற்கு ஒரு தொடக்கப் பள்ளி என்றும் மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கிராமங்களுக்கு ஒரு நடுநிலைப் பள்ளி என்றும் 1,112 தொடக்கப் பள்ளிகளையும், நடுநிலைப் பள்ளிகள் என்று எடுத்துக்கொண்டால் 2,106 இன்றைக்கு கிராமங்கள்தோறும் திறந்திருக்கிறார்கள். இனி வருங்காலங்களில் தமிழகத்தில் பள்ளிகள் திறக்க வேண்டுமென்ற நிலையே இல்லை என்ற நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2,506 தொடக்கப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளையும் நீங்கள் தந்தீர்கள். ஆனால் அம்மா அவர்கள் 4,450 பள்ளிகளை இன்று தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது மாண்புமிகு அம்மா அவர்கள் 2,774 பள்ளிகளை இன்றைக்கு அதிகமாக தந்திருக்கிறார்கள். ஆக இந்தக் கல்வித் துறையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வாறு நல்ல பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் நான் படிக்கிற காலத்தில் மூன்றாம் வகுப்பிலேதான் ஆங்கிலம் பாடம் இருக்கும். ஆங்கில அறிவு தமிழ் மக்களுக்கு நல்ல முறையில் வளர வேண்டுமென்பதற்காக மேற்கல்விக்குச் சேர்கிறபோது ஆங்கிலத்திலே இருக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு முதல் வகுப்பிலேயே ஆங்கிலப் பாடத்தைப் புகுத்தியவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆக ஆங்கில அறிவுத் திறன் அதிகமாக இருக்க வேண்டுமென்பதற்காக முதல் வகுப்பிலேயே அந்த ஆங்கிலக் கல்வி கற்க வேண்டுமென்று ஒரு நிலையை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய குழந்தைகள் அனைவரும் தேர்ச்சி. அனைவரும் தேர்ச்சி என்பது எதற்கு என்று சொன்னால் ஒரு சில குழந்தைகள் பள்ளியிலே படிக்கிறபோது ஒன்றாம் வகுப்போ இரண்டாம் வகுப்போ படிக்கிறபோது அந்தக் குழந்தை தேர்விலே தவறிவிட்டால் பயத்தின் காரணமாக நின்றுவிடும். அப்பேர்பட்ட குழந்தைகள்கூட பாதிக்கக் கூடாது என்பதற்காக அந்த இடைநிற்றலைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை இன்றைக்கு அனைவருக்கும் பாஸ், அனைவருக்கும் தேர்ச்சி என்ற ஒரு நல்ல திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் தமிழ். அறிவியல் தமிழ் என்று சொன்னால் இன்றைக்குப் பள்ளிக்கூடத்திலே தமிழே யாரும் படிக்காமல் இருக்கக் கூடாது என்பதற்காக ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அறிவியலைச் சார்ந்த தமிழ் வளர வேண்டுமென்பதற்காக அறிவியல் தமிழை...



185279
சென்னை-600 008

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அறிவியல் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். ஒன்றாம் வகுப்பிலிருந்து அல்ல, மழலையர் வகுப்பிலிருந்தே, எல்.கே.ஜி. முதலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவியல் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறது.*

**திரு. பெ. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியிலே பல்வேறு வகைப்பட்ட சீர்திருத்தங்களை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் செய்து வருகிறார்கள். வறுமையின் காரணமாக பள்ளிக்குச் செல்லாமல் வேலைக்குச் சென்று தன்மான உணர்வோடு உழைக்க வேண்டுமென்ற நல்ல அடிப்படையிலேதான் இன்றைக்குக் கடற்கரைப் பகுதியிலே சுண்டல் விற்றோ, நிப்போட்டை விற்றோ வியாபாரம் செய்து சிறுவர்கள் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியிலே வருகிறபோது அந்த சிறுவர்களைக் கண்டார்கள். இப்படி கல்வி பெறுகிற வயதில் படிக்கிற காலத்தில் வேலைக்காக செல்லுகிறார்களே என்று அக்கறை கொண்டுதான் அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று மனதிலே ஒரு உந்துதல் ஏற்பட்டதன் காரணமாகத்தான் அங்கே நடமாடும் பள்ளியைக் கொண்டு வந்தார்கள். இந்த சிந்தனை எந்த முதல்வருக்கும் வரவில்லை. எத்தனையோ மாநிலங்கள் இந்தியாவில் இருக்கின்றன. எத்தனையோ கடற்கரைப் பகுதிகள் இருக்கின்றன. இன்றைக்கு அரபிக் கடலோரப் பகுதி என்று எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் அங்கே குஜராத் மாநிலம் இருக்கிறது, அங்கே மகாராஷ்டிரம் இருக்கிறது. இப்படி வங்காள விரிகுடா பகுதி என்று எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் ஆந்திரா பகுதி இருக்கிறது, இந்தப் பகுதியில் ஒரிசா, மேற்கு வங்காளம் இருக்கிறது. இங்கேயும்கூட கடற்கரைப் பகுதிகள் இருக்கின்றன. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்த முதல்வர்களுக்கு எல்லாம் வராத சிந்தனை நம்முடைய முதல்வர் அம்மா அவர்களுக்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*இன்றைக்கு ஒரு மாநிலத்தை எடுத்துக்கொண்டால் பி.ஜே.பி. அரசு அங்கே ஆண்டு கொண்டிருக்கிறது. வேறு ஒரு மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆண்டு கொண்டிருக்கிறது. இவர்களை எல்லாம் தேசியத்*



*தலைவர்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த தேசியத் தலைவர்கள் என்று சொல்லுகின்ற இவர்களுக்கெல்லாம் வராத சிந்தனை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வந்திருக்கிறது என்று சொன்னால் அவரை தேசியத் தலைவர் என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–20*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தைப் பற்றி, இங்கே நம்முடைய முதல்வர் அம்மா அவர்கள் தெள்ளத் தெளிவாக பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அனைவருக்கும் கல்வித் திட்டம் என்பது, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறந்து விளங்குகிறது என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்கூட, இன்றைக்கு இதைப் பற்றிப் பாராட்டியிருக்கிறார்கள். ஐரோப்பியக் கூட்டமைப்பு மற்றும் அரசின் பிரதிநிதிகள் கொண்ட, அனைவருக்கும் கல்வித் திட்டத்தினுடைய கூட்டுக் குழு, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறந்த முறையில் அனைவருக்கும் கல்வித் திட்டம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் வேறொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். என்னவென்று சொன்னால், தமிழகத்தைப்போல, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வித் திட்டம் என்று சொன்னால், 2007–க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஐந்தாண்டுகள் பள்ளிக் கல்வியைக் கட்டாயம் அளிக்க வேண்டும். 2010–க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டாண்டுகள் பள்ளிக் கல்வியைப் புகட்ட வேண்டும். அதோடு 2010–க்குள் பள்ளி இடைநிற்றலே இல்லை என்ற நிலையை உருவாக்கிட வேண்டும். ஆனால், 1991–லே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக — அப்போது கட்டாயக் கல்வி என்று கொண்டு வந்தார்கள். இருந்தாலும்கூட — 1991–லே எடுத்த நடவடிக்கையின் காரணமாக இன்றைக்குக் கல்வித் துறை இப்பேர்ப்பட்ட*

சாதனையைப் படைத்திருக்கிறது. அன்று எடுத்த நடவடிக்கையின் தொடர்ச்சியின் காரணமாகத்தான், இன்றைக்குத் தமிழகம் இந்தியாவிலேயே, கல்வித் துறையிலே முதன்மை பெற்றிருக்கிறது என்று சொன்னால், அதிலே நாம் பெருமைப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பத்தாம் வகுப்புவரை படித்துக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கு இலவசமாக பாடப்புத்தகங்களை அறிவித்திருக்கிறார்கள். முன்பெல்லாம் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரைதான் அந்த இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பத்தாம் வகுப்புவரை வழங்கிக் கொண்டிருக்கிற இலவசப் பாடப்புத்தகங்கள், சில விதிமுறைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு விதிமுறைகளைத் தளர்த்தி, அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படும் என்ற ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் கிடையாது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும் ஒரு கிராமவாசிதான். நான் கிராமத்திலே பள்ளியிலே படித்துக்கொண்டிருக்கிற...

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, ஒன்று முதல் பத்தாம் வகுப்புவரை படிக்கின்ற அனைவருக்கும் இலவச பாடப்புத்தகங்களை வழங்கி, அதன் மூலமாக நடுவழியிலே அவர்களுடைய படிப்பை விட்டுவிடாது, நூற்றுக்கு நூறு விழுக்காடு, அனைவரும் கல்வி கற்றவர்களாக இருக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அதிலே எத்தனை பேர் பயன்பெறுகிறார்கள் என்பது, இந்தக் கொள்கை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை, அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர், ஒட்டுமொத்தமாக 97 இலட்சம் பேர், இந்த இலவசப் பாடப் புத்தகங்களைப் பெற்றுப் பயனடைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவசப் பாடப் புத்தகத்தோடு சேர்த்து, கல்வி பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒரு உதாரணத்திற்கு, ஒரு பள்ளியிலே படித்துக்கொண்டிருக்கிற மாணவனுக்கு, ஏதாவது ஒரு மாணவனுடைய பெற்றோருக்கு, திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் போனாலோ அல்லது விபத்து ஏற்பட்டாலோ, வருவாய் ஈட்டக்கூடிய தாயோ தந்தையோ தவறியிருக்கிற காலத்தில், அந்தக் குழந்தையினுடைய கல்வித் தரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, அந்தக் குழந்தை தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காக அந்தக் குழந்தையினுடைய பெயரில், 50 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள், வைப்புத் தொகையாக வைத்து, அந்தக் கல்வித் தரத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிற அந்தக் குழந்தைக்குத் தாய் இல்லை என்று சொன்னாலும், தந்தை இல்லை என்று சொன்னாலும், உங்களுக்குத் தாயாக நான் இருக்கிறேன், தந்தையாக நான் இருக்கிறேன் என்று சொல்லித்தான் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இப்படி, கல்வித் துறையிலே, பல்வேறுபட்ட சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இடைநின்றவர்களைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிற நல்ல பல நடவடிக்கைகளின் காரணமாக, தமிழகத்தில் இடைநின்றவர்களின் விகிதம் குறைந்திருக்கிறது. தொடக்கப் பள்ளியை எடுத்துக்கொண்டால், 2001–2002–ல் 16 சதவிகிதமாக இருந்தது. 2002–2003–ல் 8 சதவிகிதமாக அது குறைந்தது. இன்றைக்கு 2004–2005–ல் 6 சதவிகிதமாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 16 சதவிகிதமாக இருந்த இந்த இடைநிற்றல், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 6 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு உதாரணத்திற்கு, ஒரு பள்ளியிலே 100 மாணவர்கள் என்று சொன்னால், அதிலே சேர்கிறபோது, முதல் வகுப்பிலே சேர்கிறபோது, 100 மாணவர்கள் சேர்வார்கள். அன்றைக்கு நிலைமை என்னவென்று சொன்னால் 16 மாணவர்கள் குறைந்து இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு 6 மாணவர்கள்தான் குறைந்திருக்கின்ற ஒரு சூழ்நிலையை புரட்சித்

தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்து இருக்கிறார்கள். நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 2004–2005 ஆம் ஆண்டில் இன்றைக்கு 9 சதவிகிதமாக இடையில் நின்றவர்களுடைய விகிதம் குறைந்திருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முந்தைய 5 ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் 35 சதவிகிதமாக இருந்த இடையில் நின்றவர்கள், இன்றைக்கு 9 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது என்பதை இங்கே நான் கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12–25

அதோடு மட்டுமல்லாமல், உடனடித் தேர்வு, Instant Exam என்ற ஒரு உடனடித் தேர்வை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அது என்னவென்று சொன்னால், 10 ஆம் வகுப்பிலே ஒரு குழந்தை நன்றாகப் படித்துக் கொண்டிருக்கும். அந்த நேரத்தில், நன்கு படிக்கின்ற அந்தக் குழந்தைக்கு குடும்பத்திலே தாயோ, தந்தையோ இறந்திருப்பார்கள். அல்லது ஏதாவது உடல்நிலை சரியில்லாமல் போய் இருக்கும். அந்த நேரத்தில் அந்த நன்றாகப் படிக்கின்ற குழந்தை பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, அந்தத் தேர்வை எழுதவில்லையென்று சொன்னாலும் அல்லது எழுதி அந்தத் தேர்வில் தவறிவிட்டாலும், மீண்டும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து அந்தக் குழந்தையினுடைய வாழ்க்கைத் தரத்தை இன்றைக்கு பாதுகாக்க நான் இருக்கிறேன் என்று சொல்லி காப்பாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேர்ப்பட்ட ஒரு திட்டம் பாராட்டப்பட வேண்டுமென்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெண் குழந்தை அருகிலே இருக்கக்கூடிய பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் தன்னுடைய தந்தையை நம்பியிருக்க வேண்டும். அல்லது தன்னுடைய சகோதரனை நம்பியிருக்க வேண்டும். எப்படியாவது அந்த நேரத்திலே, தந்தையோ, சகோதரனோ சைக்கிளை ஓட்டிக் கொண்டு போகிறபோது பின்னால், பின்பக்கம்தான் அந்தக் குழந்தை உட்கார்ந்து கொண்டு செல்லும். ஆனால், அந்தக் குழந்தைக்கு தாயாக நான் இருக்கிறேன், சகோதரனாக நான் இருக்கிறேன், தந்தையாக நான் இருக்கிறேன் என்று சொல்லி, மிகுந்த தன்னம்பிக்கையோடு அந்த சைக்கிளிலே சென்று பாடம் கற்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல ஒரு தன்னம்பிக்கையை



அந்தக் குழந்தைகளுக்கு உருவாக்கிக் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 2001–லே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த பின்பு, இந்த இலவச மிதிவண்டித் திட்டம் புகுத்தப்பட்டது. அந்த நேரத்தில், ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்காக 41.14 கோடி ரூபாய் செலவில் கிட்டத்தட்ட 2,52,850 மாணவிகள் பயன்பெற்றிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் பிற்படுத்தப்பட்ட குழந்தைகளையும் அந்தக் குடும்பத்திலேயும் இப்படி வசதியில்லாமல் எவ்வளவோ பேர் இருப்பார்கள் என்று சொல்லி அவர்களுக்கும் அந்த இலவச மிதிவண்டிகளை வழங்க வேண்டுமென்பதற்காக, 2,49,789 பேர்களுக்கு இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இந்த இலவச மிதிவண்டி வழங்குகிற திட்டம் இல்லையென்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இங்கே பெருமைப்பட வேண்டும். இதற்கு முன்னாலே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார். ஆசிரியர்கள் சரியாக நியமிக்கப்படவில்லை என்று சொன்னார். இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் 36 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய அளவிலே ஆசிரியர் விகிதத்திற்கு ஒரு கணக்கை வைத்திருக்கிறார்கள். அது என்னவென்று சொன்னால், 50 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ஒரு கணக்கை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு பீகாரை எடுத்துக்கொண்டால், 80 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர், மேற்கு வங்காளத்தை எடுத்துக்கொண்டால் 70 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற கணக்கு இருக்கிறது. இப்படி பல்வேறுபட்ட மாநிலங்களில் அதிகப்படியான எண்ணிக்கையில் இருக்க, தமிழகத்தில் மட்டும்தான் 36 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்கின்ற நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல, தமிழகத்தில் ஓராசிரியர் பள்ளி என்கின்ற நிலை எங்கேயுமே கிடையாது. இப்பேர்ப்பட்ட ஒரு நல்ல நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு படித்தால் அவர்களுக்கு ஒரு தரமான கல்வியைப் போதிக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு

படித்த பட்டதாரிகளை நியமித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இந்தப் பள்ளிகளுக்கு, இடைநிலைப் பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தது கிடையாது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் 20 ஆயிரம் பேர் இருந்தார்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது போராடினார்கள்: நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம், எங்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், அந்த நேரத்தில் அவர்களுக்கு எல்லாம் செய்யவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான், பாதிக்கப்பட்ட 20 ஆயிரம் பேருக்கு மீண்டும் ஆசிரியர் பதவியினை வழங்கி இப்பொழுது அவர்கள் வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வயிற்றிலே பாலை வார்த்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஒரு நடிப்பைக் காட்டினார்கள். உங்களுக்கு நாங்கள் வாழ்க்கை கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அது மொத்த ஆசிரியர்களுடைய தேர்வு விகிதத்திலே 40 சதவிகிதம் என்று சொன்னார்கள். இன்றைக்கு பாதிக்கப்பட்ட 20 ஆயிரம் பேர் அந்த 40 சதவிகிதம் என்ற அளவிலே சென்றால், ஒரு வருடத்திற்கு 1,500 பேர் செல்வார்கள். அவர்களுக்கு 50 வயதைத் தாண்டும்போதுதான் இவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கும். அது என்னவென்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், அவர்களுடைய வாழ்க்கை கெடக் கூடாது என்பதற்காக, உடனடியாக அவர்களுக்கு இரண்டு ஆண்டு பயிற்சி கொடுத்து, இன்றைக்கு அந்த ஆசிரியர்கள் எல்லாம் பள்ளி ஆசிரியர்களாக, நம்முடைய காலத்திலேயே அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, நம்முடைய காலத்திலேயே படிக்க வைத்து, நம்முடைய காலத்திலேயே, அம்மா அவர்களுடைய காலத்திலேயே, வேலைவாய்ப்பைப் பெறுகிற ஒரு வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்கள் கர்நாடகத்திலே போய் ஆசிரியர் பயிற்சி பெறுகிறார்கள். அங்கு ஆசிரியர் பயிற்சி படிக்கின்றபோது, நம்முடைய கல்வித் தரத்திற்கும், அவர்களுடைய கல்வித் தரத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. இங்கே தரமான கல்வி போதிக்கப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இங்கே தரமான கல்வி போதிக்கப்படுகிறது. அங்கே ஆசிரியர் பயிற்சி பெறுகிறபோது, 35 மார்க் பெற்றிருந்தால் அங்கே பாஸ் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், இங்கே ஒரு தரத்தை வைத்திருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். இங்கே 50 மார்க் பெற்றால்தான் பாஸ் ஆக முடியும். அப்படி பல்லாயிரம் பேர் பாதிக்கப்பட்டிருந்தார்கள். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு யோசனை செய்தார்கள். இந்தக் குழந்தைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அவர்களுக்கெல்லாம் நீங்கள் அனைத்துப் பாடங்களையும் எழுதுங்கள். உங்களுக்கு நான் வாய்ப்பு தருகிறேன் என்று சொல்லி, இங்கே அவர்களை பரீட்சை எழுத வைத்து, அவர்கள் 50 மார்க் பெறுகிற தகுதி உள்ள ஆசிரியர்களை இன்றைக்கு நியமித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு எத்தனையோ இலட்சம் பேர் வாழ்விலே ஒளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் ஆசிரியர்களுக்கு தகுதி இல்லை என்று சொன்னார். எங்கே தகுதி இல்லை? இன்றைக்கு பீகாரை எடுத்துக்கொண்டால், 10 ஆம் வகுப்பு 9 ஆம் வகுப்பு பாஸ் என்றால்கூட ஆசிரியர் வேலைக்குப் போகிறார்கள். கர்நாடகா, ஆந்திராவை எடுத்துக்கொண்டால் அங்கும் ஆசிரியர் பயிற்சி முடிக்கவில்லை என்று சொன்னால்கூட, Para-Teacher என்ற முறையிலே ஆசிரியராக நியமிக்கிறார்கள். ஆனால் தமிழகத்தின் நிலை அப்படி இல்லை. தரமான கல்வி இருந்தால்தான் ஆசிரியராகப் போக முடியும். அப்போதுதான் அந்தக் குழந்தைகளுக்குத் தரமான கல்வியைத் தர முடியும் என்ற அடிப்படையிலேதான் தரமான கல்வியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொன்னார், நம்முடைய தமிழகத்திலே ஆசிரியர் நியமனத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய

மாண்புமிகு அம்மா அவர்கள் 46,500 ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களைவிட 4 ஆயிரம் ஆசிரியர்களை அதிகமாக நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில்கூட ஆசிரியர்களை நியமிக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி ஆசிரியர்களுக்கு எந்தவித ஒரு குறையும் இல்லாமல் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து கட்டடங்கள். கட்டடங்கள் என்று சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொடக்கப் பள்ளி முதல் நடுநிலைப் பள்ளி வரை, உயர்நிலைப் பள்ளி தொடங்கி மேல்நிலைப் பள்ளி வரை எந்தப் பள்ளிக்குமே நல்ல கட்டட வசதி இல்லாமல் இல்லை என்ற ஒரு நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்பொழுது மத்திய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிற அனைவருக்கும் கல்வித் திட்டத்தினை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டது தமிழகம்தான். கிட்டத்தட்ட 10 ஆயிரம் பள்ளிகளுக்கு நாம் கொடுத்திருக்கிறோம். 5 ஆயிரம் பள்ளிகளை உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். இப்படி அந்த அனைவருக்கும் கல்வித் திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திய மாநிலம் தமிழகம்தான் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் ஆட்சியிலேகூட பள்ளிக்கூடங்கள் வந்தன. அந்தக் காலத்தில் அரசாங்கத்திலே பள்ளிக்கூடங்கள் கட்ட மாட்டார்கள். அங்கே இருக்கக்கூடிய பெரிய மனிதர்கள், அங்கே கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பார்கள். அந்தக் கிராமத்திலே பள்ளிகளைக் கட்டிக் கொடுப்பார்கள். அந்தக் காலத்தில் ஓலைகளால் ஆன பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். அங்கே இருக்கக்கூடிய தனவந்தர்கள் அந்தக் காலத்திலே கட்டிக் கொடுத்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து கட்டடங்கள் கட்டிக் கொடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பள்ளிக்கூடக் கட்டடம் என்பது எட்டாக் கனியாக இருந்தது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இன்றைக்கு மரத்தடியிலே படிக்கிற காலம் மாறி, மாளிகை போன்ற கட்டடங்களில் படிக்கின்ற காலத்தை உருவாக்கிக்



கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பல்வேறுபட்ட நலத் திட்டங்களை இந்த நாட்டுக்காகவும், தமிழக மக்களுக்காகவும் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய மாவட்டம் தருமபுரி மாவட்டம். தருமபுரி மாவட்டத்தினுடைய நிலைமை என்ன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இராமநாதபுரம் மாவட்டம் என்று சொன்னால், ஓர் அதிகாரி ஏதாவது ஒரு தவறு செய்துவிட்டால், உன்னைத் தண்ணீர் இல்லாத காட்டிற்கு மாற்றுவேன் என்று சொல்வார்கள். அப்படி இராமநாதபுரம் மாவட்டத்தைச் சொல்வார்கள். ஆனால் இராமநாதபுர மாவட்டத்தின் நிலை இன்றைக்கு என்ன? அங்கே கால்வாய்களைத் தூர் எடுத்து, குளங்களைச் செப்பனிட்டு, அதை வறட்சி மாவட்டம் என்ற நிலையை மாற்றி ஒரு செழுமையான மாவட்டமாக உருவாக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல அழகான, தூய்மையான ஒரு மாநகரம் என்று சொன்னால், பெங்களூரைச் சொல்வார்கள். இன்றைக்கு சென்னையின் நிலைமை என்ன? ஒரு தூய, சுத்தமான, நல்ல, மாசுபடாத ஒரு மாநகரமாக இன்றைக்கு சென்னையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேதான் தருமபுரி மாவட்டத்திற்கும். தருமபுரி மாவட்டம் என்று சொன்னால், கல்வி அறிவு இல்லாத மாவட்டம் என்று சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? கல்வியுடைய புகழாரமாக இன்றைக்கு தருமபுரி மாவட்டம் இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு திரு. ஜி.கே. மணி போன்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கான ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 12–3.5

கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் மட்டும், 1,112 தொடக்கப் பள்ளிகளை வழங்கினார்கள். ஆனால், தமிழகத்தில் 30 மாவட்டங்கள் இருக்கின்றன. 30 மாவட்டங்களையும் சேர்த்து 1,112 தொடக்கப் பள்ளிகள்; தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் 160 தொடக்கப் பள்ளிகளை வழங்கியிருக்கிறார்கள். ஆக, இதன் சதவிகிதத்தைப் பார்க்கின்றபோது, 100 பள்ளிகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், 10 பள்ளிகளை தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும்

வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதேதான் நடுநிலைப் பள்ளிகளுக்கும். நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் 2106 நடுநிலைப் பள்ளிகளை வழங்கி இருக்கிறார்கள். தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு மட்டும் சேர்த்து 265 நடுநிலைப் பள்ளிகளை வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் சதவிகிதத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, 10 சதவிகிதம். அது தொடக்கப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, நடுநிலைப் பள்ளிகளாக இருந்தாலும் சரி அல்லது உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, தருமபுரி மாவட்டத்தின்மீது தனி அக்கறை கொண்டு, கல்வியிலே ஒரு புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களிடம், இங்கே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே நடந்த ஆசிரியர் தேர்வு வாரியத்தில், தருமபுரி மாவட்டத்திலே கல்வி நிலை என்ன என்பது நன்றாகத் தெரியும். 100 ஆசிரியர்கள் தேர்வு எழுதி, 100 ஆசிரியர்கள் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், 28 ஆசிரியர்கள், 100–க்கு 28 பேர் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இதற்குக் காரணம் என்ன? 1991–லிருந்து இன்றைக்கு வரை மாண்புமிகு அம்மா அவர்கள் கல்விமீது, அந்த மாவட்டத்து மக்கள்மீது காட்டுகிற அன்பின் காரணமாக, அக்கறையின் காரணமாகத்தான் இன்றைக்கு இந்த நிலையை அடைந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தின்மீது அக்கறை கொண்டு, எங்களுடைய மாவட்டத்திற்கு பல்வேறுபட்ட சிறப்பு சலுகைகளை வழங்கி வருகிறார்கள். சமீபத்திலேகூட, சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் Socio Economic Fund என்ற ஒரு நிதியை வழங்கி, தமிழகத்திலே வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத அளவுக்கு தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வழங்கி, இன்றைக்கு அதன்மூலம் வருகிற நிதியை வைத்துக் கொண்டு அங்கே இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள், அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைகள், அங்கே இருக்கக்கூடிய சின்னச் சின்ன சாலை வசதிகளை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்காக, அந்த மாவட்டத்து மக்கள் சார்பாக என்னுடைய தாய்க்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், தமிழ், தமிழ் என்று இங்கே எத்தனையோ கட்சிக்காரர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். தமிழுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று தெரியுமா? மொழிகளிலேகூட, ஆண், பெண் என்ற வித்தியாசம் இருக்கிறது. ஆண் என்று சொன்னால்—ஆணுக்கும், பெண்ணுக்கும் மொழி வாரியாகக்கூட சில பாகுபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக, Chairman என்று சொன்னால், அது ஆணைத்தான் குறிக்கும். இந்த நிலை பெண்ணிற்கு வரக்கூடாது என்பதற்காக, அதை Chair–Person என்று மாற்றியவர்தான் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

History என்று சொல்வார்கள். His என்றால் அவன் என்ற பொருள் வரும். Her–story என்று சொல்வதில்லை. History என்று சொன்னால் வரலாறு. இப்பேர்ப்பட்ட நிலைகள் எல்லாம் மாற வேண்டும் என்பதற்காகத்தான், மொழி வாரியாகக்கூட ஆணிற்கும், பெண்ணிற்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உலக மகளிர் தினம் என்று வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மகளிர் தினம் என்ற ஒன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மொழியே பெண்தான். தாய் மொழி தானே.

**திரு. பெ. பழனியப்பன்:** தாய் மொழிதான். உலக மகளிர் தினம் என்று மார்ச் 8 ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் யோசனை செய்து பார்த்தார்கள், உலக மகளிர் தினம் என்பது, ஒரு நல்ல செயலாக இருக்க வேண்டும் என்பதற்காக, நீதிக் கருத்தைச் சொல்கிற அவ்வை பிராட்டியாருக்கு அரசாங்கம் சார்பாக விழா எடுக்க வேண்டும் என்று சொல்லி, இப்போது அந்த மகளிருடைய தினத்தை போற்றத்தக்க வகையிலே நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் காப்பாற்றி வருகிறார்கள் என்பதை நான் இங்கே ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Dictionary என்று சொன்னால் ஆங்கிலம்தான் என்று சொல்வோம். Dictionary என்று சொன்னாலே, ஆங்கில Dictionary என்றுதான் சொல்வோம். ஆனால், தமிழ் அகராதிக்கே Dictionary-யை உருவாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழ்ப் புரட்சியில் ஒரு பெரிய புரட்சி. இப்படி தமிழ் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதற்காக, இந்த Dictionary-யை தமிழில், 'தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து இப்போது தமிழைக் காப்பாற்றி இருக்கிறார்கள். ஆகவே, தமிழ் வளர்ச்சி — பண்பாட்டுத் துறையாக இருந்தாலும் சரி, கல்வித் துறையாக இருந்தாலும் சரி, உயர் கல்வித் துறையாக இருந்தாலும் சரி அவற்றின் வளர்ச்சிக்கு அம்மா அவர்கள் பாடுபடுகிறார்கள்—உயர் கல்வி பற்றி இங்கே சொன்னார்கள்; Campus Selection என்று சொல்வார்கள்–கலந்தாய்வுக் கூட்டம். இன்றைக்கு தொழில் நிறுவனங்களை அந்தக் கல்லூரிக்கே அழைத்து வந்து, அங்கேயே மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பைக் கொடுக்கிற திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆக, தருமபுரி மாவட்டத்தின் மீதும், இந்தக் கல்வித் துறையின் மீதும் அக்கறை கொண்டு செயல்படுகிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த அரசுக்கு என்றும் ஆதரவு கொடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12–40*

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தருமபுரி மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்குப் பல்வேறுபட்ட திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சாலைகள் இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்றன. குடிநீர் வசதிகள் இன்று செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்தாலும் அங்கே இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு ஒரு தொழிலும் இல்லாமல் இருக்கிறது. இன்றைக்குப் பல தொழிற்சாலைகளை நீங்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். தருமபுரி மாவட்டத்திற்கு அனைத்து உதவிகளும் செய்து கொடுத்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தொழிலைச் செய்வதற்கு அங்கு ஏதாவது தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



என்னுடைய தொகுதியிலே ஈச்சம்பாடி என்ற ஊராட்சி இருக்கிறது. அந்த ஊராட்சி, தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பிரித்ததன் காரணமாக சில கிராமங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே இருக்கக்கூடிய மாணவிகள், கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிற பிள்ளைகள் பள்ளிகளுக்கு வரவேண்டுமென்று சொன்னால், மழைக் காலங்களில் வசதியில்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஈச்சம்பாடி தென்பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொண்டு, உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, மற்றும் தமிழ் வளர்ச்சி–பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துகளைப் பதிய வைப்பதில் நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன். மிகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

•**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டிற்கான உயர் கல்வி, பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்;
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறி வித்தல்'

என்று பாரதி பாடினான். அப்படிப்பட்ட புனிதமான கல்விதான் ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கும், சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கும் அடித்தளமாக அமைகிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, படிப்பது பாவம், படிப்பே நமக்குத் தேவையில்லை என்ற பழமையில் மூழ்கிக் கிடந்த மக்களிடையே, படிப்புதான் தங்களது சமூக, பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை, ஆகவே படிப்பது அவசியம் என்ற உணர்வை உருவாக்குவதில் தீவிரமாகச் செயலாற்றினார்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட காங்கிரஸ் காலத்தில் குடிசையில் பள்ளி இருந்தது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அது உண்மை. அன்று எங்களைப் போன்றவர்கள் எல்லாம் கிராமங்களில் சென்று மக்களைப் பார்த்து குழந்தைகளைப் படிக்க வைக்கவேண்டுமென்று சொன்னால் எங்களுக்கு எதற்குப் படிப்பு? எங்களுக்குத் தேவையில்லை. எங்களை வேலை செய்யவிட்டால் போதும் என்று சொல்கிற அளவிற்கு மக்களிடையே ஒரு பழமை இருந்தது. அந்தப் பழமையான உணர்வுகளை மாற்றி, படிப்பது அவசியம் என்ற உணர்வை ஏற்படுத்திய மிகப் பெரிய பொறுப்பு தலைவர் காமராஜர் அவர்களையே சாரும்.

வறுமையைப்பற்றிச் சொல்வார்கள். Poverty is a threat to prosperity everywhere. Poverty is the most important factor which is preventing the people from enjoying the fruits of scientific progress and individual development என்று கூறுவார்கள். அப்படி வறுமையின் காரணமாகக்கூடப் பள்ளிகளை குழந்தைகள் எட்டிப் பார்க்காத காலத்தில் பள்ளிக்குச் சென்று குழந்தைகளைப் படிக்கத் தூண்டும் வகையிலே மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்து, அந்தத் திட்டத்தைச் சிறப்பாக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் நிறைவேற்றினார்கள். அத்திட்டம்தான் மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் சத்துணவுத் திட்டமாக அறிவிக்கப்பட்டு, இன்றுவரை அத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

பள்ளிப் பருவத்திலேயே குழந்தைகள் மத்தியில் உயர்வு, தாழ்வு மனப்பான்மை வந்துவிடக்கூடாது என்று கருதி சீருடை வழங்கும் திட்டத்தையும் தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டுவந்தார்கள். கிராமப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பள்ளிகளை ஆரம்பித்து கல்வியில் ஒரு புரட்சியை உண்டாக்கிய பெருமை பெருந்தலைவர் காமராஜர் அவர்களையே சாரும். இதனால்தான், 'கல்விக் கண் திறந்த காமராஜர்' என்று இன்றும்கூட தமிழ் மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படி வலுவான அடித்தளம் கொண்ட அமைப்புத்தான் தமிழக கல்வி இயக்கம். இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உயர் கல்வி, பள்ளிக் கல்வி, அத்துடன் சேர்ந்த தமிழ் வளர்ச்சி ஆகிய அனைத்திற்கும் 5,129 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கல்வித் துறையின் முக்கியம் கருதி, மொத்த நிதி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய ஆறில் ஒரு பங்கு இந்தத் துறைக்கு



ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகள் விஷயத்திலே மொத்தம் 239 கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே அரசுக் கல்லூரிகள் 6; அரசு உதவி பெறும் கல்லூரிகள் 3; சுயநிதி உதவிக் கல்லூரிகள் 226; அண்ணா பல்கலைக்கழகம் 4; ஆக 239 கல்லூரிகள் இருக்கின்றன. இந்த எண்ணிக்கையைப் பார்க்கின்றபொழுது உயர் கல்வியில், பொறியியல் கல்வியிலே சுயநிதிக் கல்லூரிகளின் ஆதிக்கம்தான் மேலோங்கி நிற்கிறது.

பிற்பகல் 12–45

மாணவர்களைச் சேர்க்க நடைபெறும் நுழைவுத் தேர்வு சம்பந்தமாக ஏற்படும் குளறுபடிகள்; ஏழை நடுத்தர குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் கல்லூரிகளில் சேர முடியாத அளவுக்கு கட்டணம்; இப்படி இலாபம் ஈட்டும் தொழிலாக இன்றைக்கு அது மாறிவிட்டது. தகுதியான ஆசிரியர் நியமனம் இல்லை. உரிய கட்டமைப்பு வசதிகள் கிடையாது. ஒட்டுமொத்தமாக நான் அனைத்துக் கல்லூரிகளையும் குறிப்பிடவில்லை. ஆனால் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமனம்; தேவையான கட்டமைப்பு வசதிகள்; ஆசிரியர்களுக்கு U.G.C. விதிப்படி அடிப்படையில் சம்பளம்; தேர்ச்சியில் நல்ல முன்னேற்றம் காட்டும் ஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசு; இதுபோன்ற நல்ல முறையில் நடத்துகின்ற கல்லூரிகள் இருப்பதையும் நான் அறிந்திருக்கின்றேன். ஆகவே இப்படிப்பட்ட கல்லூரிகளில் கட்டணங்களைக் குறைத்து, ஏழை, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களும் பொறியியல் கல்லூரியில் சேருவதற்கு வசதிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

1979–லிருந்து 1985 ஆம் ஆண்டு வரை, அதாவது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆண்ட காலத்தில், தமிழகத்தில் இருக்கின்ற கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம் நடைபெற்றிருக்கின்றது. ஏறக்குறைய 600–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களை தற்காலிகமாக நியமித்திருக்கின்றார்கள். ஆனால், 1988 ஆம் ஆண்டு அவர்களையெல்லாம் பணி வரன்முறை செய்து, communal rotation கொடுத்து seniority fix செய்து நிரந்தரப் பணியாக உத்தரவிட்டார்கள் 6–11–1988–லே. ஆனால், 1990–ல் அன்றைக்கு இருந்த அரசால், உத்தரவைப் போட்டு இதிலே communal rotation தேவையில்லை; அவர்கள் temporary–யாகத்தான் வேலை செய்யவேண்டும்; அவர்கள் என்றைக்குப்

பணியில் சேர்ந்தார்களோ, அன்றிலிருந்துதான் அவர்களுக்கு seniority கொடுக்க வேண்டுமென்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதை எதிர்த்து பல போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்தப் போராட்டங்களை மனதிலே வைத்து, போராட்டங்களின் அடிப்படையில் கோரிக்கைகள் வந்தபோது, 1993-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அன்றைய முதலமைச்சராக இருந்த காலத்தில், 1988 ஆம் ஆண்டு என்ன உத்தரவு போடப்பட்டிருக்கின்றதோ, அதில் என்ன சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ அவை தொடரும் என்ற ஆணையை பிறப்பித்திருக்கின்றார்கள். ஆனால் 1996–2000 ஆண்டுகளில் Teachers Recruitment Board சார்பில் நடந்த தேர்வில் அந்த communal rotation கொடுக்கப்பட்டிருக்கின்றது; Seniority கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் திடீரென்று 2005–லே Directorate of Collegiate Education–லேயிருந்து ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு, 1990 ஆம் ஆண்டு போட்ட சட்டம் செல்லும். அதனடிப்படையில் seniority fix செய்ய வேண்டுமென்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதுகுறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பார்த்தேன். என்னுடைய பிரச்சினை என்னவென்றால், ஏதோ ஒரு பிரச்சினையை வைத்துக்கொண்டு விளம்பரம் தேடவேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது. ஆகவே இதுகுறித்து நிலையான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைத்தேன். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் அம்மா அவர்களை, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்வது, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகமாக இருக்கின்ற அந்தக் கல்லூரி ஆசிரியர்களை 1988 ஆம் ஆண்டு பணி வரன்முறை செய்து, இன சுழற்சி முறையில் வழங்கப்பட்டிருக்கின்றதே அதை மீண்டும் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் நியமனம் என்று சொல்கிறார். அதைத் திருத்திக்கொள்ளவேண்டும். அரசு கல்லூரிகளிலே விரிவுரையாளர்கள் அன்றைக்கு 1979 லிருந்து 1988 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் நியமிக்கப்பட்டவர்களை, அவர்களின் பணியை வரன்முறை செய்தபோது அன்றைக்கு முதலிலே போட்ட அரசாணையிலே இன சுழற்சி முறையிலே பணி வரன்முறை செய்யலாம் என்று போடப்பட்டது. அதற்குப் பிறகு 1990-லே, இன சுழற்சி முறையிலே பணி நிரந்தரம் செய்யக் கூடாது, அவர்கள் என்றைக்குப் பணியிலே சேர்ந்தார்களோ அன்றைய



தேதியிலிருந்து அந்த –seniority list–ஐ fix செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1990–லே அரசாணை போடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதற்குப் பிறகு வந்த அம்மாவினுடைய ஆட்சியில் அந்த ஆணை நிறைவேற்றாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நடைபெற்ற ஆசிரியர்களுடைய போராட்டத்திற்குப் பிறகு, அந்த ஆசிரியர் சங்கங்கள் அம்மா அவர்களைச் சந்தித்த பிறகு, அதிகாரிகளைச் சென்று சந்தித்து, எங்களுடைய நீண்டநாளைய கோரிக்கையான இந்த அரசாணை நிறைவேற்றாமல் வைக்கப்பட்டிருக்கின்றதே, இந்த அரசாணையை நிறைவேற்ற வேண்டுமென்று வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த ஆணையை செயல்படுத்துவதற்காக கல்வித் துறையினுடைய இயக்குநர் கடிதத்தை அனுப்பினார்கள். பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்களும் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையை, இந்த அரசாணையை, திராவிட முன்னேற்றக் கழகத்திலே போட்ட அரசாணையை, நிறுத்தி வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்த பிறகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அம்மா அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இன சுழற்சி முறையிலே அந்த ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த விரிவுரையாளர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படக் கூடாது என்பதற்காக, அவர்கள் கோரிக்கையை ஏற்று, அந்த அரசாணை இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–50*

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரே குடும்பத்தில் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்க அந்த மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் ஐம்பதாயிரம் ரூபாய் நிதி வழங்கி, அது அரசு நிறுவனங்களில் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மற்றும் முதிர்வுத் தொகையை மாணவ மாணவியர்களின் செலவுக்காகவும்,

பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அந்த அறிக்கைக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியருக்குத் தேவையான பாட நூல்களை இலவசமாக வரும் கல்வியாண்டிலே, அதாவது 2005 ஆம் ஆண்டில், வழங்கப்படும் என்ற அறிவிப்புக்கு என்னுடைய நன்றி. தனியார் நடத்தும் பள்ளியில் படிக்கும் அந்த மாணவ மாணவியர்களுக்கும் இது விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கின்றேன்.

தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான கல்வித் திட்டத்தை அமல் செய்தால் கிராமப்புற மாணவர்கள் தொழிற் கல்வி வாய்ப்புகளைப் பெறுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு என்ற ஒரு பத்திரிகை அறிவிப்பு வந்திருக்கிறது. தற்போது Matriculation, Anglo–Indian, I.C.S.E., C.B.S.E. மற்றும் மாநில கல்வித் திட்டம் என்று பல பாடத் திட்டங்கள் உள்ளன. ஆரம்பத்திலிருந்தே அரசு பாடத் திட்டத்தில் பயிலும் மாணவர்கள் தகுதிப் பட்டியலில் பின்தங்கிட நேர்கிறது; அதனால் தொழிற் கல்விகளில் 20 சதவீதம்தான் கிடைக்கின்றன; மற்ற கல்வித் திட்டத்தில் பயனடையும் மாணவர்கள் 70, 80 சதவீத இடத்தைப் பெற்றுவிடுகிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது, State Council for Higher Education என்ற அமைப்பு இருக்கிறது. நல்ல கல்வியாளர்களைக் கொண்ட அமைப்பு. அந்த அமைப்பு இதுபற்றி ஒரு பரிசீலனை செய்து ஒரே மாதிரியான கல்வித் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பிறகு, தனியார் கல்லூரிகளாகட்டும், தனியார் பள்ளிகளாகட்டும், கல்விக் கட்டணங்களை நிர்ணயிக்கின்ற அதிகாரம் அரசுக்கு இல்லை. அந்தந்த பகுதியிலே இருக்கின்ற மாணவர்களுடைய அடிப்படை வசதிகளைக் கருத்தில்கொண்டும், அவர்களுடைய வருமானத்தைக் கருத்தில்கொண்டும், அந்தக் கல்லூரியிலே கட்டணங்களை நிர்ணயித்துக்கொள்ள அதிகாரம் உண்டு என்று உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றது. அதையேதான் Matriculation பள்ளிகளை



ஆய்வு செய்வதற்கு அமைக்கப்பட்ட சிட்டிபாபு கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது, தனியார் பள்ளிகளுக்கான கட்டணங்களை நிர்ணயம் செய்கிற அதிகாரம் அரசுக்கு இல்லை என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை:** இப்போது கல்லூரி நிர்வாகங்களில் நுழைவுத் தேர்வுகளில் மாணவர்களை அனுமதிப்பதில் ஏற்படுகிற சிக்கல் காரணமாக இன்றைக்கு நீதிமன்றமே தலையிடுகிற ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அப்படிப்பட்ட கல்லூரிகளின் நிர்வாகத்திற்கும் அரசுக்கும் ஏற்படுகிற பிரச்சினைகளிலே இந்த உயர் கல்வி மன்றம் தலையிட்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நீதிமன்ற உத்தரவின்படி முப்பதாயிரம் ரூபாய் செலுத்தினால் கல்லூரியிலே சேர முடியும். சாதாரண கிராமத்தில் வாழ்கிற ஏழைகள் முப்பதாயிரம் ரூபாயை மொத்தமாக எப்போது பார்ப்பது? பார்ப்பதற்கே இயலவில்லை. ஏழைகளுக்கு அம்மா அவர்கள் 12 ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி கொடுத்திருக்கிறார்கள். அதனால் நுழைவுக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். இல்லையென்றால், அந்த பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கட்ட வேண்டிய தொகையையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு விண்ணப்பம் வந்தது. கைத்தறி நெசவு ஆசிரியர்கள் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக, 1994 ஆம் ஆண்டிலிருந்து நியமிக்கப்படுவதில்லை. ஆனால் ஓவியம், தையல், உடற் பயிற்சி, இந்த ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நெசவு, விவசாயம், தச்சு போன்ற அந்த Course–ஐப் படிப்பதற்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே அரசு கவனம் செலுத்தி சாதாரண கிராமப் பகுதிகளிலே மக்கள் பெறுகிற அந்த வாய்ப்பை அவர்களுக்குக் கொடுப்பதற்காக அவர்களுக்கு இந்தப் பணி நியமனம் செய்வதற்கு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.(குறுக்கீடு) இரண்டுமணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. க. பாரமலை:** முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதாவது அங்கீகாரம் பெறாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படித்தவர்கள் ஏறக்குறைய 20 ஆயிரம் பேருக்கு மேலே நாம் வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். படிப்பதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். தமிழகத்திலிருந்து கர்நாடகத்தில் போய் படித்து அவர்கள் வெற்றி பெற்றுவிட்டாலும் இங்கே வந்து அவர்கள் சேருவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் இங்கு இருக்கிற கல்விக்கு நாம் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து வெற்றி பெற்று, அவர்கள் ஏற்கெனவே படித்த தேதியை வைத்துக் கொண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிந்திருக்கிறார்கள். ஆனால் இங்கு படித்தவர்கள் 1985-லிருந்து படித்தவர்கள் 2000 ஆம் ஆண்டு பரீட்சை எழுதி அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஆனால் அந்த 2000 ஆம் ஆண்டுதான் அவர்கள் பதிய முடிகிறது. ஆகவே அவர்கள் seniority மிக அதிகமாக போய்க் கொண்டிருக்கிறது. 1992 என்று சொன்னால் அதற்குப் பிறகு இப்போது 10, 12 ஆண்டுகள் ஆகிவிட்டன. 12 ஆண்டுகளுக்குப் பின்னால் அவர்கள் pass செய்தாலும் அவர்களுக்கு seniority அந்த பழைய seniority கொடுக்கவில்லை என்றால் அவர்கள் அநேகமாக வேலைபெறுவதற்கு முன்னாலே ஓய்வு பெற்று விடுவார்கள். ஆகவே அரசு இதை பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். ஒரு மணித் துளியில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. க. பாரமலை:** இல்லை, கோரிக்கைதான். 15 நிமிடம்கூட பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 17 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன்.

**திரு. க. பாரமலை:** நம்முடைய கோவை, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 2, 3 தினங்களுக்கு முன்பாக வால்பாறையில் அரிசன நலத் துறை சார்பிலே ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டும்



என்று கோரிக்கை வைக்கிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்தக் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று. அங்கு உரிய இடம் கிடைக்கவில்லை, கிடைத்தால் செய்யலாம் என்று வாக்குறுதி கொடுத்தார் என்று நம்புகிறேன். இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே 15 ஏக்கர் நிலம் இருப்பதாக அரசுக்குத் தகவல் சொல்லி இருக்கிறார்கள். இதுவரை அரிசன நலத் துறை சார்பிலே ஒரு கல்லூரி ஏற்பட்டது கிடையாது. ஒரு வரலாற்றை உருவாக்குகிற வகையிலாவது தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சரிடம் கலந்து பேசி ஒரு கல்லூரியை இந்த ஆண்டிலே தொடங்குவதற்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பட்டதாரி ஆசிரியர், நடுநிலை ஆசிரியர்களுக்கெல்லாம் 4 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் கொடுக்கிறோம். அதிலே சிலர் ஒரு மாவட்டத்திலிருந்து ஒரு மாவட்டத்திற்குப் போய் வேலை செய்கிறார்கள். நான் பேச வேண்டும் என்று நினைத்த பல கருத்துகளை அந்த 110 அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். மாவட்டத்தை விட்டு மாவட்டம் சென்று அந்தத் தொகுப்பூதிய பணி செய்வதிலே அவர்களுக்கு மிகுந்த கஷ்டங்கள் இருக்கின்றன. அதிலே 200 ரூபாய் recurring deposit என்று சொல்லி அதிலிருந்து post office–லே பிடிக்கச் சொல்கிறார்களாம். அது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த R.D. Deposit–ஐ அவர்களிடமிருந்து பிடிக்க வேண்டாம் என்று அறிவுறுத்த வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்துவிடுங்கள். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) இல்லை, அவர் தேடிக் கொண்டிருக்கிறார்.

**திரு. க. பாரமலை:** இந்த ஆசிரியர் மாறுதல் போடுகிறபோது counselling முறை சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். சிறப்பாக இருக்கிறது. ஆனால் அரசுக்குத் தெரியாமலே சில இடங்களிலே தவறு நடக்கிறது. ஆனால் எல்லாவற்றையும் நான் சொல்லவில்லை. குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் மறைந்த முன்னாள் அஇஅதிமுக. M.L.A. சோலைராசு அவர்களின், மகளுக்கு முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா அவர்கள் தலைமையிலேதான் திருமணம் நடந்திருக்கிறது.

அவரது மனைவியும் அங்கேதான் ஆசிரியராகப் பணிபுரிகிறார்கள். அவர்களுடைய மகளுக்கு பதிவு செய்ததைப் போலிப் பதிவு என்று சொல்லி உத்தியோகம் கொடுக்க மறுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மாதிரி கோரிக்கையெல்லாம் கொடுத்துவிடலாம். அமைச்சரிடம் கொடுத்துவிடலாம்.

**திரு. க. பாரமலை:** இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரணை செய்து அது தவறு என்றால் அவர்களுக்கு வேலை கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. க. பாரமலை:** நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் நலன் கருதியே வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள். அந்தப் பல்கலைக்கழகம் வேகமாக நடவடிக்கை எடுத்து முழுமையான பல்கலைக்கழகமாக நடைபெறவில்லை. ஆனால் அங்கு வேலைசெய்த இரண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பேராசிரியர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறித்து அங்கு ஒரு விசாரணைக்காக நம்முடைய Assistant Commissioner of S.C. and S.T., Government of India அவர்கள் விசாரணை செய்ய அந்த இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால், அங்கிருக்கின்ற பேராசிரியர் I mean, Vice Chancellor அவர்களை விசாரணைக்கு அறையில் நுழைய அனுமதிக்கவில்லை என்று பத்திரிகை வாயிலாக செய்திகள் வந்திருக்கின்றன. அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) முடித்து விடுங்கள், பேசி முடித்து விடுங்கள்.

**திரு. க. பாரமலை:** தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அதிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடைசி பக்கத்திலே தமிழ்நாட்டில், ஆங்காங்கே மறைந்து



கிடக்கும் நலிவடைந்த பாரம்பரியக் கலைகளைப் பொதுமக்கள் அனைவரும் அறியும் வண்ணம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, இக்கலைகளில் ஆர்வத்தை ஊட்டும் வண்ணம் கலை–பண்பாட்டுத் துறை, பல்வேறு நிலைகளில;

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வைர வரிகளுக்கேற்ப முனைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த நடவடிக்கையை வேகமாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நாடு ஜவகர் சிறுமன்றம் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வளாகத்திலே ஒன்று இருக்கிறது. அது பழுதடைந்த கட்டடமாக, பார்ப்பதற்கே ரொம்ப மோசமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதில் சிறப்புக் கவனம் செலுத்தி அதற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கும், செயல்பாடுகள் சிறப்பாக அமைவதற்கும் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூரிலேயிருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகத்திலே, நியமனங்களிலே ஒதுக்கீடு கடைபிடிக்கப்படுவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கின்றது. அதை கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைப் பிறகு எழுதிக்கொடுங்கள். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி. மற்றதை எழுதிக் கொடுங்கள். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) கோரிக்கையெல்லாம் எழுதிக் கொடுங்கள். எவ்வளவு நேரம் ? மற்றக் கோரிக்கையை எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) எத்தனை ஒரு நிமிடம் ?

**திரு. க. பாரமலை:** ஒரே நிமிடம். தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்கள், அனைத்துத் துறைகள், ஆகியவற்றின் நியமனங்களில், தாழ்த்தப்பட்ட S.C., S.T.–களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கொடுத்து, தேர்விலே சரியான பங்களிப்பை அளிக்கச் செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005--2006 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை மற்றும் தமிழ் வளர்ச்சி--பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

"கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்உடையர் கல்லா தவர்"

என்றும், அதைப்போல,

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்றும் வள்ளுவர் கல்வியினுடைய பெருமைகளைப் பற்றி அழகாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே, அந்த வகையிலே ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சிக்கு, சமூக வளர்ச்சிக்கு, பொருளாதார மேம்பாட்டிற்கு, ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு கல்வி மிக முக்கியமானது. எந்த நாடு கல்வியில் தலை சிறந்து விளங்குகிறதோ அந்த நாடு முன்னேறிய நாடாகக் கருதப்படுகிறது. ஆகவேதான், இந்தக் கல்வித் துறையிலே, இன்று நடைமுறையிலேயிருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்லுகின்ற காரணத்தினாலே, அது களையப்படவேண்டும், நிவர்த்தி செய்யப்படவேண்டுமென்ற அந்த நல்ல நோக்கத்தின் அடிப்படையிலே சில கருத்துகளை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கல்வித் துறையில் பேசுவதற்கு முன்பு, இங்கே தமிழ் வளர்ச்சி-பண்பாட்டைப் பற்றி சுருக்கமாக நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய தமிழினத்திற்கு பெருமை சேர்ப்பது மொழி. ஆகவே, மொழியும், மொழியில் அடங்கியிருக்கிற இசையும், நம்முடைய பண்பாட்டினுடைய சின்னங்களாக விளங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட தன்னிகரற்ற தமிழ் மொழி வளர்ச்சிக்கு கடந்த காலங்களிலே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், அதைப்போல உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என்று வாழ்ந்த தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார், அதைப்போலவே, மறைமலையடிகள், தாளமுத்து நடராசன் போன்றவர்களும்,



மரியாதைக்குரிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் செயற்கரிய காரியங்களையெல்லாம் செய்திருக்கிறார்கள். அதைப்போல, இன்றைய முதலமைச்சர் அவர்கள்கூட எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே தமிழ் வளர்ச்சிக்காக ஒரு புதிய முழக்கத்தையும் வைத்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவுக்கு தமிழை வளர்த்தெடுக்க வேண்டும்; தமிழை சிதைவு இல்லாமல் பாதுகாக்க வேண்டுமென்று பல்வேறு கால கட்டங்களிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, நாங்கள் ஒரு சிறிய கட்சி. ஏதோ தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கிற நேரத்திலே இங்கே ஆளுங்கட்சித் தரப்பிலே பல்வேறு நேரங்களிலே அவரவர்கள் பேசுகின்ற நேரத்திலே எள்ளி நகையாடுவது என்பதை மிக வருத்தத்தோடு, வேதனையோடு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, உங்களுக்கு அக்கறை இருக்குமென்று சொன்னால், எங்களைப் போன்றவர்கள் செய்யக்கூடிய பணிக்கு ஒத்துழைக்க வேண்டும். ஒத்துழைக்கவில்லையென்று சொன்னால், அமைதி காக்க வேண்டுமே தவிர, ஒவ்வொரு உறுப்பினரும் பேசுகின்ற நேரத்திலே, 'சில கட்சிகள் தமிழ் வளர்ச்சி' என்று சொன்னால், அப்போது உங்கள் கட்சிக்கு அக்கறை இல்லையா என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

ஆகவே, தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழ் வளர்ச்சிக்கு அரசியலுக்கு அப்பாற்பட்டு எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, தமிழ் வளர்ச்சியிலே அரசாங்கத்திற்கு, ஆளுகின்ற கட்சிக்கு முக்கிய பங்கு இருக்கிறது. அதைப்போல, ஒவ்வொரு தமிழனும், தமிழ்நாட்டிலே வாழக்கூடிய அத்துணை மக்களும் ஒன்றுபட்டால்தான் தமிழ் வளர்ச்சி இன்று சிதைவின்றி முன்னேற்றம் அடையும் என்ற காரணத்தினாலே உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இனி இந்த அவையிலே மட்டும் அல்ல, யார் தமிழுக்கு பாடுபட்டாலும்கூட வாழ்த்த வேண்டும். வாழ்த்தவில்லையென்று சொன்னால், வம்படிக்காமல் இருக்க வேண்டுமே தவிர, அதை வம்புக்கு இழுக்க வேண்டாம் என்று நான் இங்கே மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று நம்முடைய தமிழிசை சிதைந்துகொண்டிருக்கிறது. தமிழிசை என்று சொன்னால், உலகத்திலே இருக்கிற இசைகளுக்கு ஆதி இசை தமிழிசை. அந்த தமிழிசை சிதைந்துவிடக் கூடாது. இன்று நம்முடைய தமிழர்கள், அதிலும் குறிப்பாக, இளைஞர்களும், தாய்மார்களும் வேற்று மொழி இசைக்கு ஈர்க்கப்பட்டு, பிற மொழி இசைக்கு ஆளாக்கப்பட்டு நம்முடைய தமிழிசையை மறந்துகொண்டிருக்கிறார்கள். இன்னொன்றுகூட சொல்கிறேன். நம்முடைய தமிழ் வளர்ச்சியிலே இயல், இசை, நாடகம் மிக முக்கியமானது. அதிலே நடுநாயகமாக இருப்பது இசை. இந்த இசையைப் பற்றிச் சொல்கின்ற நேரத்திலே தமிழிசையிலே சிந்தைக்கும், செவிக்கும் மட்டுமல்லாமல், ஆன்மாவிற்கும் இனிக்கும் தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம், திருவாசகம், சமரச சன்மார்க்கத்தை உணர்த்திய வேத நூலாக கருதக்கூடிய திருவருட்பா போன்றவை நம்முடைய அபூர்வ பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் நாம் சிதைந்துவிடாமல் பாதுகாக்க வேண்டுமென்ற அந்த உயர்ந்த நோக்கத்திற்காகத்தான் எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் ஐயா அவர்கள், தமிழ்நாடு முழுவதும் தமிழ் இசையை, விழாக்களை நடத்தினார்கள். பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளையின் சார்பிலே வரக்கூடிய 9, 10 தேதிகளிலேகூட மும்பை நகரத்திலே நடத்தவிருக்கிறார்கள். ஆகவே, இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், வேற்று மொழி இசையை நாம் பின்பற்றாமல் தமிழிசைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்படி இந்த நோக்கத்தை குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், தமிழிசையை வளர்ப்பதனாலே மனிதனுடைய மனம் பண்படுத்தப்படும். இங்கே மனம் நிலை நிறுத்தப்படும். ஆகவே, அந்த வகையிலே மனித ஆற்றலுக்கு, மனித வளத்திற்கு மேம்படக்கூடிய தமிழிசையை வளர்த்தெடுக்க வேண்டுமென்று நான் இங்கே மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல, பேச்சு வழக்கிலே இன்று தமிழ் சிதைந்துகொண்டிருக்கிறது. பேச்சு வழக்கு என்று சொன்னால், அது யாராக இருந்தாலும், நான் உட்பட சொல்லிக்கொள்கிறேன். 10 வார்த்தைகளிலே 6 வார்த்தைகள், 5 வார்த்தைகள், 4 வார்த்தைகள் என்று சொல்லி பிற மொழி சொற்களைக் கலந்து பேசுகிறோம். ஆகவே, அப்படிக் கலப்பில்லாமல் பேசக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். நம்முடைய தாய் மொழி உயர்திணைச் செம்மொழி சிதைந்துவிடக்



கூடாது என்பதற்காகத்தான் பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்கிறோம். அந்த வகையிலே, இங்கே இந்த அரசாங்கத்திற்கு நான் கோரிக்கையாக வைக்கிறேன். அதைப் போல, தமிழர்களையெல்லாம் நான் வேண்டி விரும்பி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதை அரசும் செய்ய வேண்டும், அதைப் போல, பொது மக்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்ற வகையிலே சில கோரிக்கைகளை நான் இங்கே முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1. அன்னைத் தமிழை பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் அனைவருக்கும் 10 ஆம் வகுப்பு வரையில் பாகுபாடில்லா ஒரே தரமான கட்டாய இலவசக் கல்வி கொடுக்கப்பட வேண்டும்.

2. ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை தமிழ் வழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழ் வழிக் கல்வி பயின்றோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

3. 1956-ல் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை அனைத்துத் துறைகளிலும் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

4. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கோவில்களிலும் அன்னைத் தமிழை வழிபாட்டு மொழியாக நடைமுறைப்படுத்திட விரைவாக சட்டம் இயற்றப்பட வேண்டும்.

பிற்பகல் 1-10

5. வணிக நிறுவனங்கள், கடைகள், தொழிற்சாலைகள், உணவு விடுதிகள் போன்றவற்றின் பெயர் மற்றும் விளம்பரப் பலகைகள், அன்னைத் தமிழுக்கு முதன்மையான இடம் அளித்துள்ள வகையில், தமிழக அரசு பிறப்பித்திருக்கிற ஆணைகளை உடனடியாக நிறைவேற்றவேண்டும்.

6. தொலைக்காட்சி, வானொலி, இணைய தளங்கள், திரைப்படங்கள் போன்ற அனைத்து ஊடகங்களிலும், அன்னைத் தமிழ் மற்றும் தமிழர் பண்புகளைப் பாதுகாத்திடும் வகையிலே இந்த அரசு இணைந்து செயலாற்ற வேண்டும்.

7. அதைப் போல திருமண விழா, காதணி விழா, குழந்தைகள் வழிபாடு, ஈமக்கடன் போன்ற இல்லற வாழ்வுகளில் ஊடுருவும் பண்பாட்டுச் சிதைவுகளிலிருந்து, அன்னைத் தமிழ் மற்றும் தமிழ் மரபுகளைப் பாதுகாத்திட அரசும், பொதுமக்களும் இணைந்து செயலாற்றிட வேண்டும்.

8. அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் கலைச் சொற்களை உருவாக்கி பொறியியல் மற்றும் மருத்துவம் உள்ளிட்ட உயர் கல்வியினை அன்னைத் தமிழில் வழங்கிட ஆவன செய்ய வேண்டும்.

9. சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றக் கிளை மதுரை ஆகியவற்றில் வாதிடுதல், தீர்ப்பளித்தல், நடவடிக்கைகள் போன்ற அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டும். இதற்குச் சட்டத்திலே வாய்ப்பு இருக்கிறது. உதாரணத்திற்கு மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம் போன்ற அந்த மாநிலங்களினுடைய உயர் நீதிமன்றங்களிலே நடைமுறையிலே இருக்கிறது. அதைப் பின்பற்ற வேண்டும்.

10. பேச்சு வழக்கில், பிற மொழிச் சொற்கள் கலப்பில்லாமல், தமிழில் பேசப்பட உரிய முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்ற இந்த 10 கோரிக்கைகளையும் அரசுக்கு நான் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், நேரத்தினுடைய அருமை கருதி சில கோரிக்கைகளை நான் முன் வைக்க விரும்புகிறேன். இன்று ஆரம்பப் பள்ளிகளிலே, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் நியமனங்கள், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனங்கள், கல்லூரிகளிலே ஆசிரியர் நியமனங்கள் இப்போது தொகுப்பூதியத்தின் அடிப்படையிலே நியமிக்கப்பட்டு வருகின்றன. நிதிநிலை சீரடைந்துவிட்ட இந்த நேரத்திலே சம வேலைக்கு சம ஊதியம் என்ற அளவிலே காலமுறை ஊதியம் வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர் மாறுதலிலே கலந்தாய்வு முறை கடந்த ஆண்டுகளிலே பின்பற்றப்பட்டு வந்தது. இப்போது நீங்கள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டாலும்கூட, பேச்சளவிலே சொல்லிக்கொள்ளலாமே தவிர, முழுமையான கலந்தாய்வு முறை பின்பற்றப்படவில்லை. இது ஆசிரியர் பெருமக்கள் மத்தியிலே மிகப் பெரிய மனக் குறையாக இருக்கிறது. ஆகவே ஆசிரியப் பெருமக்களுடைய வேண்டுகோளை ஏற்று இந்த அரசு கலந்தாய்வு முறையை மாறுதலிலே கட்டாயம் பின்பற்றவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இடைநிலை



ஆசிரியர் பணியிடங்களில் பணியாற்றிக்கொண்டிருக்கிற இளநிலை பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் பதவி உயர்வு தகுதியின் அடிப்படையிலே வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியப் பெருமக்கள் பாதிக்கப்படக்கூடிய வகையிலே இருக்கிற எஸ்மா சட்டம், டெஸ்மா சட்டங்களைத் திரும்பப் பெறவேண்டும். கடந்த காலங்களிலே ஆசிரியப் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த அந்த போனஸ் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தமிழ்ப் புத்தாண்டில் வழங்கவேண்டும் என்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். அகவிலைப்படியில் 50 விழுக்காடு அடிப்படை ஊதியத்துடன் இணைத்து மத்திய அரசு வழங்குவதைப் போல தமிழக அரசும் வழங்கவேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்கிறேன். 30 ஆண்டு பணிக்காலத்திற்கு முழு ஓய்வூதியம்; பணி நிறைவுபெறும்போது பெறுகிற கடைசி மாத ஊதியத்தினை, முழு ஓய்வூதியத்திற்குக் கணக்கிடும் முந்தைய நிலைமை மீண்டும் அமலாக்கப்படவேண்டும். அதைப்போல கடந்த காலங்களில் பணியாற்றி வந்த கணினி ஆசிரியர்கள் இப்போது பணியிலே இல்லாமல் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலமாக இங்கே ஊதியம் வழங்கப்படுகிறது. அந்த நிலையைப் போக்கி அவர்களுக்கு நியமன ஆணை வழங்கி அவர்களைப் பணி நியமனம் செய்யவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். அப்புறம் (குறுக்கீடு). . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** விடைத் தாள்கள் திருத்தக்கூடிய நேரம். விடைத்தாள்கள் திருத்தக்கூடிய மையங்களிலே அடிப்படை வசதிகள் இல்லையென்றுகூட ஆசிரியர் பெருமக்கள் குறைபட்டுக்கொள்கிறார்கள். குடிநீர் வசதி இல்லை; இருக்கை வசதி சரியாக இல்லை; அதைப்போல மின்சார வசதி இல்லை; மின் விளக்கு வசதி இல்லை என்று எல்லாம் சொல்கிறார்கள். அக்குறைகள் போக்கப்படவேண்டும். ஒரு விடைத்தாளுக்கு ரூ. 3.25 என்று சொல்லப்படுகிறது. காலச் சூழ்நிலைக்கு ஏற்ப அதை ரூ. 5 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று மிக முக்கியமான கோரிக்கை. இப்போது 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலே, குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள்

வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கக்கூடியது. ஒரு மேல்நிலைப் பள்ளியிலே 10 ஆம் வகுப்பு மாணவனும் படிக்கிறான். 11, 12-வது வகுப்பு மாணவர்களும் அங்கேயே படிக்கிறார்கள். ஆகவே மாணவர் பருவத்திலே இப்படிப்பட்ட குழப்பங்கள், மன உளைச்சல்கள் குழந்தைகளுக்கு வந்துவிடக்கூடாது என்கிற காரணத்தினால்தான், 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் அந்த இலவச பாடப் புத்தகங்களை வழங்கவேண்டும் என்று நான் அரசையும், முதலமைச்சர் அவர்களையும் இங்கே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

இன்னொன்று, மிக முக்கியமான பிரச்சினை. இப்போது கல்வி அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கின்ற நேரத்திலே, எங்களுடைய தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறது. குறைந்த விழுக்காடு, 59.23 விழுக்காடு தான் இருக்கிறது. அதிலே ஆண்கள் 68.82 விழுக்காடு, பெண்கள் 49.10 விழுக்காடு. இப்படி குறைந்த கல்வி எண்ணிக்கை. இப்படிப் பார்க்கின்ற நேரத்திலே, தமிழ்நாடு முழுவதிலும், தருமபுரி, விழுப்புரம், பெரம்பலூர், சேலம், திருவண்ணாமலை, கடலூர் போன்ற தமிழகத்தினுடைய வட மாவட்டங்கள், கல்வி அறிவு பெற்றவர்களுடைய எண்ணிக்கையினுடைய விகிதத்திலே மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவே, சுதந்திரம் பெற்று 57 ஆண்டுகாலம் ஆகியும்கூட, ஒரே மாநிலத்தில் வட மாவட்டங்கள் இப்படி இருக்கின்றன என்று சொன்னால், அந்த மக்களுடைய பொருளாதாரச் சூழ்நிலை, சமூகச் சூழ்நிலை, வறுமையாக இருந்தாலும்கூட, அதைப் போக்க வேண்டியது இந்த அரசினுடைய கடமை. இன்னும் இங்கே அதற்குப் பல்வேறு காரணங்களைச் சொன்னாலும்கூட, அதனைப் போக்க வேண்டும். இப்போது கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களிலே 88.11 விழுக்காடு. கன்னியாகுமரி 88.11 விழுக்காடு; தூத்துக்குடி 81.96 விழுக்காடு. இதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட தென் மாவட்டங்கள் கல்வியிலே உயர்வு பெற்றிருப்பது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய அம்சம். நான் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் வட மாவட்டங்கள் இந்த நிலைக்கு வர வேண்டுமா, வேண்டாமா? இதற்கு என்னைப் பொறுத்தவரையிலே, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, அந்த மாவட்டங்களிலே, கல்வி நிறுவனங்கள் அதிகமாக இருக்கின்றன. அது பள்ளிகளாக இருந்தாலும், கல்லூரிகளாக இருந்தாலும், அதிக அளவிலே இருந்துகொண்டிருக்கின்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இரண்டு மணித் துளிகள். இன்னும் இரண்டு மணித் துளிகள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, இன்னும் நான் உரைக்கே வரவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் எல்லாம் முடிந்துவிட்டது. மணி, இன்னும் இரண்டு மணித் துளியிலே உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் 1-30 மணிக்கு உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இன்னொரு உறுப்பினர் இருக்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வித் துறைக்கு 2 நாட்கள் விவாதம் வைக்க வேண்டும். கொஞ்சம் எனக்கு 1-30 மணி வரைக்கும் நேரம் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** 1-30 மணி வரைக்கும் கொடுங்கள். ஆகவே, அந்த வகையிலே, இங்கே வட மாவட்டங்களில், கல்வி அறிவு பெற்றவர்கள் எண்ணிக்கையிலே குறைவாக இருப்பதற்கு, இந்த அரசை நான் குற்றம் சாட்டவில்லை என்று சொன்னாலும்கூட . . .

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வாழைப் பழத்திலே ஊசியை ஏற்றுவதைப்போல, தென் மாவட்டங்களிலே கல்வியைத் தருவதைப் போலவும், வட மாவட்டங்களிலே, அவர் சார்ந்திருக்கின்ற, அந்த இயக்கத்தைச் சார்ந்த ஒரு சாராருக்குக் கல்வி கிடைக்கவில்லை என்பதைப் போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க, இங்கே அந்தக் கருத்தைப் பதிய வைக்க விரும்புகின்றார். அது தவறான ஒரு குற்றச்சாட்டு. முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, இந்தியாவிலேயே கல்வித் துறையிலே, முதன்மை மாநிலமாக இருக்கின்ற மாநிலம், தமிழகம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உலக வங்கியே தன்னுடைய ஆய்விலே தெரிவித்திருக்கின்றது.

அது மட்டுமல்லாமல், கடந்த காலத்தில், ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு, 16 சதவீதமாக இருந்த அந்த drop outs, இன்றைக்கு 6 சதவீதமாக ஆரம்பக் கல்வியிலும், நடுநிலைப் பள்ளிகளில் 9 சதவீதமாகவும் குறைந்திருக்கிறது.

அது மட்டுமல்லாமல், அவர் இருக்கின்ற அந்த தருமபுரி மாவட்டத்திற்கு—1,112 தொடக்கப் பள்ளிகளிலே, 10 சதவீதம் பள்ளிகள், இன்றைக்கு தருமபுரி மாவட்டத்திற்கு—கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று 2,106 நடுநிலைப் பள்ளிகளிலே இன்றைக்கு 200 பள்ளிகள், அதாவது, 10 சதவீதம் பள்ளிகள் தருமபுரி மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி, இன்றைக்கு வட மாவட்டங்கள் என்றும், தென் மாவட்டங்கள் என்றும், மேற்கு மாவட்டங்கள் என்றும் தரம் பிரித்துப் பார்ப்பதில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய மாணவர்கள், தமிழகத்தின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கு என்று பார்க்கிறார்கள். அதனால் தமிழகம் இன்றைக்கு கல்வித் துறையிலே மிகச் சிறந்து விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இயக்கத்தை வளர்ப்பதற்காக நான் சொல்லவில்லை. இதைப் பேசுவதனாலே இயக்கம் வளர்ந்துவிடாது. ஆனால், இருக்கிற புள்ளிவிவரங்களைச் சொல்லிவிடுகிறேன். அரசால், இது நீங்கள் கொடுத்த புள்ளிவிவரம். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயம். இல்லை, ஒரு வரிதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திலே ஒரே ஒரு தகவல் தெரிந்துகொள்ள விரும்புவது, நீங்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பின் அடிப்படையிலே கல்வி வளர்ச்சி விகிதம், அறிவு வளர்ச்சி குறைவாக இருக்கிற மாவட்டங்கள் என்று பட்டியலிட்டதிலே 59 சதவீதமாக இருப்பது தருமபுரி மாவட்டம். மாநிலத்திலேயே இருக்கிற மாவட்டங்களில் கடைசி மாவட்டம் என்று பட்டியலிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் சொல்கின்றோம், கொடுக்கப்பட்ட பள்ளிகளிலே 10 சதவீதம் பள்ளிகள் தருமபுரி மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை கல்லூரிகள் அந்த மாவட்டங்களிலே இருக்கின்றன? பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள் அந்த மாவட்டங்களிலே எத்தனை இருக்கின்றன? வட மாவட்டங்களிலே, நீங்கள் பட்டியலை எடுத்துப் பாருங்கள், நான் இன்னொன்றும் சொல்கிறேன். அவர் சொன்னதற்காகச் சொல்கிறேன். இடை நிற்றலைப் பற்றிச் சொன்னார்கள். கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே— நான் அதையெல்லாம் சொல்ல விரும்பவில்லை—100 பக்கங்களுக்கு மேலே இருந்தது. ஆனால், இந்த ஆண்டு ரொம்ப குறைந்து விட்டது. அந்தப் புள்ளிவிவரம் 20 தலைப்புகளில் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு ஏன் கொடுக்கவில்லை?—அந்த இடை நிற்றல்— அதெல்லாம் இருந்தால், எங்களுக்கும் தெரியும், எல்லாருக்கும் தெரியும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இந்த 4 ஆண்டு காலத்திலே இந்த drop outs பள்ளி மாணவர்களை, 5,60,000 மாணவர்களை இந்த 4 ஆண்டு காலத்திலே முறையான பள்ளிகளிலே சேர்த்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–20

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிற்றலில், இன்னொன்று சொல்கிறேன். 12–வது வகுப்பு படித்து முடித்தவுடனே, உயர் கல்வியை மாணவர்கள் தொடருகிறார்கள். அதிலே 64% மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர முடியாத நிலை. இதற்கு யார் பொறுப்பு? அரசு பொறுப்பு என்று நான் சொல்ல வரவில்லை. அங்கே இருக்கக்கூடிய வறுமை. பொருளாதார சூழ்நிலை. இதையெல்லாம் மாற்றி அவர்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். உங்கள்மேல் குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்றால், சொல்லிக் கொண்டே இருக்கலாம். ஏதோ குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல.

இப்படி கல்வித்தரம் இருக்கிறதே என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று. நம்முடைய கல்வித் துறை அமைச்சருக்குச் சொல்கிறேன். நீங்கள் 2,011 பள்ளிக்கூடங்களை, தொடக்கப் பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தியிருக்கிறீர்கள். நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த வேண்டும் என்று சொன்னால், ஆசிரியர்கள் வேண்டுமா, வேண்டாமா? இன்றைக்கு 676 நடுநிலைப் பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர் நியமனம் என்று சொல்லி, இன்னும் யாருமே போகவில்லை. அப்பொழுது எப்படி பள்ளிக்கூடம் நடக்கும்? 6, 7, 8 வகுப்புகள் இருக்கின்றன. தலைமை ஆசிரியர் வேண்டும். தமிழ் ஆசிரியர் வேண்டும். ஆங்கிலப் பாடத்திற்கு ஆசிரியர், கணித ஆசிரியர், அறிவியல் ஆசிரியர், சமூகப் பாடத்திற்கு ஆசிரியர், தொழில் பாடத்திற்கு ஆசிரியர், உடற் கல்வி ஆசிரியர் என்று எங்கே இருக்கிறார்கள்? அப்பொழுது தரம் எப்படி இருக்கும்? இதிலே ஆசிரியர்களே இல்லை. தலைமையாசிரியரே இல்லை. இரண்டு ஆண்டு காலம் இல்லாமல் இருக்கிறது. எப்படி பள்ளிக்கூடங்களின் நிர்வாகம் சரியாக இருக்கும்? ஆகவே, இப்படி பள்ளிக்கூடங்களிலே தலைமை ஆசிரியர் இல்லாத நிலை.

இன்னொன்று, நீங்கள் இப்போது சொல்லியிருக்கிறீர்கள். ஒரு வகுப்பு ஒரு ஆசிரியர் என்று சொன்னீர்கள். முடியவில்லை. இப்பொழுது குறைந்தபட்சம் 2 ஆசிரியர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்கிறோம். இருந்தாலும்கூட, அது போதாது. மொத்தம் 27 புத்தகங்கள் இருக்கின்றன. 647 பாடங்கள். அதிலே இருக்கிற பயிற்சிகள் 1,200. எப்படி இரண்டு ஆசிரியரால் முடியும்? ஆகவே, ஒரு பள்ளிக்கு குறைந்தபட்சம் தலைமையாசிரியர் உட்பட 3 ஆசிரியர்களை நீங்கள் தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கு நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு உயர்நிலைப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்துகிறீர்கள். நான் இன்னொன்றைக்கூட மகிழ்ச்சியாகச் சொல்கிறேன். புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே ஒரு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தினால், 10 ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்திருந்தார்கள். ஆனால், இப்பொழுது நீங்கள் என்ன



பண்ணியிருக்கிறீர்கள் என்று சொன்னால், 5 ஆசிரியர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். சரி 5 ஆசிரியர்கள். ஒரு தலைமை ஆசிரியர். மொழிப் பாடத்திற்கு ஆசிரியரே இல்லை. தமிழ் ஆசிரியர் ஒருவர் இருக்க வேண்டும். ஆங்கில ஆசிரியர் ஒருவர் இருக்க வேண்டும். ஆனால், நிலைமை என்ன என்றால், தமிழ் ஆசிரியர் நியமனம் பண்ணினால், ஆங்கிலப் பாடத்திற்கு ஆசிரியர் இல்லை. ஆங்கில ஆசிரியர் நியமனம் பண்ணினால், தமிழுக்கு ஆசிரியர் இல்லை. அப்பொழுது தமிழ் ஆசிரியர் ஆங்கிலத்தை எடுக்க முடியுமா? அல்லது ஆங்கில ஆசிரியர் தமிழை எடுக்க முடியுமா? இப்படிப்பட்ட நிலை மேல்நிலைப் பள்ளிகளில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கணிதத்திற்கு ஆசிரியர் இல்லை. மொத்தம் இருக்கக்கூடிய எல்லா பாடங்களுக்கும் 5 ஆசிரியர் என்று சொன்னால், அங்கே கல்வித் தரம் எப்படி இருக்கும்? இதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, இந்த நிலைமையை நீங்கள் கட்டாயம் மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எல்லா பள்ளிக்கூடங்களிலும் இதே நிலைமைதான்.

இன்னொன்று, ரொம்ப வருத்தமான செய்தி. தமிழ், ஆங்கிலம். இப்பொழுது நாம் தமிழ் கட்டாயம் படிக்க வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கு இந்த அரசு எல்லா நிலைகளிலும் உதவுவதாகச் சொல்கிறீர்கள். ஒரு வாரத்திலே 7 நாட்கள்; பாட வகுப்பு என்று சொன்னால், தமிழுக்கு 4 வகுப்புகள்தான் இருக்கின்றன. இரண்டு தாள்கள் இருக்கின்றன. முதல் தாள், இரண்டாம் தாள். 4 வகுப்புகளை வைத்துக் கொண்டு, பாட வேளை—அதாவது வகுப்பு என்றால் 4 பாட வேளை. 4 பாட வேளையிலே, எப்படி தமிழ் இரண்டு தாள்கள் சொல்லிக் கொடுக்க முடியும்? அதைப்போல ஆங்கிலம். ஆங்கிலத்திற்கு மொழிப் பாடம் நான்கே பாட வேளை. 4 பாட வேளையில் எப்படி இரண்டு தாள்கள் சொல்லிக் கொடுக்க முடியும்? கற்றுத் தர முடியாது. ஆகவே, தமிழுக்கு இரண்டு ஆசிரியர்கள். ஆங்கிலத்திற்கு இரண்டு ஆசிரியர்கள் என்று நியமித்து தமிழையும் ஆங்கிலத்தையும் நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

உதாரணத்திற்கு எம்.ஏ. படிக்கிறான். முதுகலைப் பட்டப் படிப்பு முடித்தவுடனேயே, அவனை, ஆங்கிலத்திலே இரண்டு வாக்கியங்கள் எழுத வேண்டும், ஒரு பக்கம் எழுது, பேசு என்று சொன்னால், முடியாது. ஆகவே, இப்படி ஆங்கில ஆசிரியர் மேல்நிலைப் பள்ளிகளிலே, உயர்நிலைப்

பள்ளிகளிலே இல்லாத காரணத்தினாலேதான் அங்கே ஆங்கிலக் கல்வி தரம் இல்லாமல் இருக்கிறது.

அதைப் போலவே நம்முடைய தாய் மொழிக் கல்வியும் அவர்கள் முழுமையாகப் படிக்க இயலாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நீங்கள் ஆசிரியர்களைக் கட்டாயம் நியமிக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–25*

அதேபோல, இன்றைக்கு கல்லூரி நிலை. கல்லூரி நிலையைப் பார்த்தோம் என்று சொன்னால், மொத்தம் அரசுக் கலைக் கல்லூரி, அறிவியல் கல்லூரி 60. கல்வியியல் கல்லூரி 7. மொத்தம் 67 கல்லூரிகளிலே ஆசிரியர் பணியிடங்கள், ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 5,100. அதிலே இப்பொழுது இருக்கக்கூடிய ஆசிரியர்கள் எண்ணிக்கை 3,200. அங்கே காலியிடமாக இருப்பது 1,900. இந்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களை உடனடியாக நிரப்பவேண்டும். ஒப்பளிக்கப்படவேண்டிய இடங்கள் 400 இருக்கிறது. அதையும் நீங்கள் உடனடியாக ஒப்பளிக்க வேண்டும் என்று சொல்லி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பதவி உயர்வு வழங்குகிற நேரத்திலே 50% என்று சொல்கிறீர்கள், அது நடைமுறையில் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, நேரடி நியமனங்கள் 50 விழுக்காடு, பதவி உயர்வு 50 விழுக்காடு என்ற அந்த நிலையை உயர்த்த வேண்டும். அப்புறம், நீங்கள் பகுதிநேர விரிவுரையாளர் Guest Lecturer என்று சொல்கிறீர்கள். ரொம்ப அடிமை நிலைமை. இதையெல்லாம் மாற்றவேண்டும். அதற்கு நிரந்தர விரிவுரையாளர்களை நியமிக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுகொள்கிறேன்.

அடுத்து இந்த சுயநிதிக் கல்வி நிறுவனங்கள். இன்றைக்கு ஆரம்ப மெட்ரிக் பள்ளியில் L.K.G, U.K.G–யிலிருந்து எவ்வளவு படித்தாலும் சரி, இந்த இலவசக் கல்வியை, கட்டாயக் கல்வியைச் சிதைக்கக்கூடியது இந்தத் தனியார் கல்வி நிறுவனங்கள். ஆகவே, தனியார் கல்வி நிறுவனங்களை அரசு ஊக்குவிக்கின்ற காரணத்தினால் ஏழைகளுக்கு எட்டாக்கனியாக ஆரம்பக் கல்வியிலிருந்து உயர் கல்வி வரையிலும் போய்க்கொண்டிருக்கிறது. நான் ரொம்ப வருத்தமாக, பொதுவாக சொல்லிக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு மெட்ரிக் பள்ளிகளில்



இரண்டாம் வகுப்பு படிக்கிற ஒரு மாணவனையும், அரசு பள்ளிகளில் 10 ஆம் வகுப்புப் படிக்கிற ஒரு மாணவனையும் அழைத்து நீங்கள் வினாக்களைக் கேட்டீர்களென்றால், மெட்ரிக் பள்ளியில் படித்த இரண்டாம் வகுப்பு மாணவனுக்கு இணையாக, இந்த அரசு பள்ளியில் படிக்கிற 10 ஆம் வகுப்பு மாணவன் சொல்லமுடியாது. ஆகவே, அந்த அளவிற்கு அங்கே தரம் இருக்கிறது என்று சொல்லி கிராமப்புறத்திலே இருக்கிற ஏழையெளியவர்களெல்லாம்கூட மெட்ரிக்...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பள்ளிகளிலே தரம் குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றார். நடந்து முடிந்த கடந்த ஆண்டினுடைய பொதுத் தேர்விலே தமிழகத்திலே இருக்கின்ற மெட்ரிக் பள்ளிகளாகட்டும், அரசு பள்ளிகளாகட்டும், நடைபெற்றத் தேர்விலே தமிழகத்திலே முதல் மாணவனாக வந்தவன் அரசு பள்ளியிலே படித்த மாணவன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாணவன் வருகிறான் என்று சொன்னால் அந்த மாணவனுடைய பின்னணி, அங்கே இரவு நேரம், மாலை நேரத்திலே தனியாக வகுப்பு நடத்துகிறார்கள். நீங்கள் ஒட்டுமொத்தமாகப் பாருங்கள். அதாவது மொத்தம் எத்தனை இலட்சம் பேர் தேர்வு எழுதுகிறார்கள், அவர்களுடைய மதிப்பெண் பட்டியலை வரிசைப்படுத்திப் பாருங்கள். அந்த கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழையெளிய குழந்தைகள் அந்த அளவிற்குத் தரமான கல்வி பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தனியார் கல்வி நிறுவனங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தனியார் கல்வி நிறுவனங்களை தயவுசெய்து ஊக்குவிக்கக்கூடாது. இன்னொன்றையும்கூட நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இங்கே சொன்னேன். தனியார் கல்வி நிறுவனம் குறிப்பாக பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் இவையெல்லாம் ஏலம் போட்டு விற்கிற அளவுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக இந்த

நிகர்நிலைப் பல்கலைக்கழகம். இந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்பது நாட்டிலே அறவே கூடாத ஒன்று. அது அரசாங்கத்திற்கு சம்பந்தப்படாத ஒன்றாக, வேந்தரோ, இணை வேந்தரோ, துணை வேந்தரோ யாரும் இல்லை. எல்லாம் அவர்களே. அவர்கள் விருப்பத்திற்கேற்ப, (குறுக்கீடு) இல்லை. அவர்கள் எல்லாம் இங்கே எதற்கு? இல்லை, இல்லை நீங்கள்தான்...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கின்றார். அவர் கருத்தை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். தமிழகத்திலே Deemed University நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பதை, அவர் சொல்கின்ற கருத்தை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், தமிழகத்திலே நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களே அனுமதிக்கக்கூடாது என்று, அதற்கு தமிழக அரசிடத்திலே N.O.C. கேட்டபோது அந்த நிறுவனங்களுக்கு நாங்கள் அனுமதி மறுத்தோம். ஆனால், இவர்கள் அங்கம்வகித்துக் கொண்டிருக்கின்ற மத்திய அரசாங்கம் அன்றைக்கு தமிழகத்தில் புதிதாக இரண்டு நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு, 10 நாட்களுக்கு முன்னால் அனுமதி கொடுத்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய கட்சியைச் சார்ந்த, அவர்களுடைய கூட்டணியைச் சார்ந்தவர்களிடம் டெல்லியிலே சென்று, டெல்லியில் இருக்கின்ற மனிதவள மேம்பாட்டுத் துறையினரிடம் சென்று தமிழகத்திலிருக்கின்ற மாநில அரசாங்கத்தினுடைய கருத்தைக் கேட்காமல் அந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பதை நீங்கள் வலியுறுத்தவேண்டுமேதவிர இங்கே அதைச் சொல்லக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு அந்தக் கல்லூரிகளிலே, பொறியியல் கல்லூரிகளிலே அதிகமான மாணவர்கள் காலியிடங்கள் இருக்கின்றன என்ற ஒரு கருத்தைக் கூறுகின்றார்கள். அதற்குக் காரணம் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற அந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் வரைமுறை இல்லாமல் 30 மாணவர்களைச் சேர்க்கின்ற இடத்திலே 500 மாணவர்கள் என்றும், 1000 மாணவர்கள் என்றும் சேர்த்துக்கொண்டிருப்பதுதான் இந்த ஆண்டு அந்த காலியிடங்கள் அதிகமாக இருப்பதற்குக் காரணம். ஆகவே, இதற்கு



எந்த ஒரு வரைமுறையையும் மத்திய அரசாங்கம் இதுவரை தெரிவிக்கவில்லை. மாநில அரசாங்கத்தினுடைய கருத்தையும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கருத்தை மத்திய அரசிடத்திலே நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட மாநில அரசு, மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமா? வேண்டாமா? நீங்கள்தான் ஆட்சிப் பொறுப்பை . . .

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. அந்த நிறுவனங்கள் எங்களுக்கு தமிழக அரசாங்கத்திற்கு மனு செய்தபோது, அந்த மனுவிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம். இந்த நிறுவனங்களுக்கு ஒரு Deemed University-க்கான தகுதியே இல்லை என்ற காரணத்தை வைத்து இதற்கு அனுமதி மறுக்கப்பட வேண்டுமென்று மிகத் தெளிவாக . . .

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. மணி, பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல இந்தத் தனியார் பொறியியல் கல்லூரிகளிலே — அரசாங்கம் என்ன சொல்கிறது என்று சொன்னால், நாங்கள் கட்டணத்தை நிர்ணயிப்பதில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இரண்டு மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** கட்டணத்தை நாங்கள் நிர்ணயிப்பதில்லை; குழு போடப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த அரசாங்கம், இராமன் கமிட்டி, சுப்பிரமணியம் கமிட்டி என்று சொல்லி இரண்டு கமிட்டிகளை நியமித்தது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே நியமித்தது அரசு. (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறானத் தகவலைச் சொல்கிறார். உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின், ஆணையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட அமைப்புகள் அவை. மாநில அரசுக்கும் அதற்கும் தொடர்பில்லை.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பின்படிதான் இந்த நீதிபதிகள் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தீர்ப்பைச் சொல்கின்றபோதே பாராளுமன்றத்திலே இதற்குச் சட்டம் இயற்றுகின்ற வரை, இந்தக் குழு அமையும், இருக்கும் என்று சொல்லியிருக்கின்றது. ஆனால் மத்திய அரசாங்கத்திலே அன்றைக்கும் அவர்கள் ஆட்சியில் இருந்தார்கள், இன்றைக்கும் ஆட்சியில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். மத்திய அரசாங்கம் இன்றையவரை அதற்கு ஒரு சட்டத்தை இயற்றவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்தேன், கவிழ்த்தேன் என்று மத்திய அரசாங்கத்தின் மேலே குறை சொல்லக்கூடாது. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றம் சொன்னதைத்தான் சொல்கிறேன். குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்குகின்றபோது இந்தக் குழுக்களை நீங்கள் நியமிக்க வேண்டும், பாராளுமன்றத்திலே ஒரு சட்டம் இயற்றப்படுகின்ற வரை, இந்தக் குழுக்கள் செயல்படும் என்று சொன்னதைத்தான் சொன்னேனே தவிர நான் மத்திய அரசாங்கத்தை குற்றம் சொல்லவில்லை. மத்திய அரசாங்கத்தினால் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றுதான் சொல்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலே சொல்லப்பட்டது உண்மை. ஆனால் உச்ச நீதிமன்றம் குழுக்களை அமைக்க வேண்டும், மாணவர்கள் சேர்க்கைக்கும்,



கட்டண விகிதத்திற்கும் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னது உச்ச நீதிமன்றம். அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே அந்தக் குழுவை அமைத்தது மாநில அரசு. இந்த மாநில அரசு அமைத்தக் குழுவிலே சமூக நீதியிலே அக்கறை உள்ளவர்களை, ஏழையெளிய மாணவர்களின் நலனில் அக்கறையுள்ளவர்களை நியமித்திருந்தால், கட்டண விகிதமும் சேர்க்கை விகிதமும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டிருக்கும். (மணியடிக்கப்பெற்றது) அது இல்லாத காரணத்தினால்தான் இந்தக் குறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ஒரு வாக்கியத்தோடு பேச்சை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேச்சை முடித்துவிடுகிறேன், பேச்சை முடித்துவிடுகிறேன். அது இல்லாத காரணத்தினால்தான் இந்தக் குறை. (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. பக்கத்தில் இருக்கிற கர்நாடக மாநிலம். அந்த மாநிலத்திலே குழு போட்டிருக்கிறார்கள். அங்கே கட்டண விகிதம் 12,000 ரூபாய். தமிழ்நாட்டிலே 30,000 ரூபாய். என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசு மீது ஏதோ குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமென்ற நோக்கோடு சொல்கிறார். இது மிகவும் தவறான ஒன்று. உச்ச நீதிமன்றம் குழுவைப் போட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் குழு போடப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் வரையறுத்த வரையறைகளுக்குட்பட்டு, அந்தக் குழு தன்னுடைய தீர்ப்பை வழங்குகிறது. அரசுக்கும் அதற்கும் அணுவளவும் தொடர்பில்லை. உச்ச நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்திற்குட்பட்ட குழு. அரசு மீது வீண் பழியைப் போடக்கூடாது. அவர்களைப் பார்த்து நீங்களும் முயற்சி செய்யுங்கள். கட்டணத்தைக் குறைத்தால் நாங்களும் சந்தோஷப்படுவோம், மக்களும் சந்தோஷப்படுவார்கள். அதற்குத்தான் பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து, பாராளுமன்றம் முடிவு செய்து, அதன்படி, இந்த fees என்னவென்று நிர்ணயம் செய்யப்பட

வேண்டுமென்று, அந்த ஆலோசனையையும் உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு கல்வி அமைச்சர் சொல்கிறார். பாராளுமன்றம் விரைவிலே அதற்கொரு முடிவு சொல்ல வேண்டும். அதற்கான முயற்சியை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உச்ச நீதிமன்ற ஆணையின்படிதான் குழு அமைக்கப்பட்டிருக்கிறது, அதை ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. சொல்கிறேன். குழு போட்டது மாநில அரசுதானே.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுவை நாங்கள்தான் அந்த நீதிபதியைப் போட்டதாக வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அமல்படுத்தியிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) அதுமட்டுமல்லாமல், இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அத்தனைக் கேள்விகளுக்கும் உச்ச நீதிமன்றம் 7 Member Bench அதனுடைய விசாரணை—அத்தனைக் கேள்விகளுக்கும்— இன்றைக்கு விசாரிக்கப்பட்டு, தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. தீர்ப்பு வந்த பிறகு, அந்தத் தீர்ப்பின்பேரிலே முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே *11* நீதிபதிகளைக் கொண்ட Bench–கூட தீர்ப்பு வழங்கியிருக்கிறது. பிறகு முறையீடு செய்து அதை *13* நீதிபதிகளைக் கொண்ட Bench –ஆக உருவாக்கி, நல்ல தீர்ப்பெல்லாம் வந்திருக்கிறது. அரசாங்கம் இன்னும் கொஞ்சம்...



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள், உண்மைக்கு மாறான ஒன்றை, ஆதாரமற்ற ஒன்றை, அரசுக்கு எதிராகச் சொல்ல வேண்டுமென்பதற்காகவே தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அகில இந்தியாவுக்கும், அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான தீர்ப்பு. தமிழகத்திற்கு மட்டும் உரித்தான தீர்ப்பு அல்ல என்பதனையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, ஒரு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) பேச்சை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** கர்நாடக மாநிலத்திலே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையென்றால் நானே நிறைவு செய்கிறேன். (குறுக்கீடு) இல்லை, பேச்சை முடியுங்கள்.

பிற்பகல் *1–35*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருந்த ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஜி.கே. மணியினுடைய பேச்சு நிறைவு பெற்றது. விவாதம் நாளை தொடரும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

# 10. அரசினர் தீர்மானம்

## விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (7–4–2005) வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 7–4–2005 வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (7–4–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (07–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





# 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

101. தமிழ்நாடு 2003 ஆம் ஆண்டு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத் தேர்தல் விதிகள் இயற்றியது குறித்து பொதுப் பணித் (W2) துறையின் 12–1–2004 ஆம் நாளிட்ட 14 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 2000 ஆம் ஆண்டு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2001) 50 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

102. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

193. தொழிலாளர். மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

194. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

195. மானியக் கோரிக்கை எண் 19 – உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

196. மானியக் கோரிக்கை எண் 41 – பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

197. மானியக் கோரிக்கை எண் 44 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

198. தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை கொள்கை என்கிற சிறுநூல். (தமிழ், ஆங்கிலம்)

# இணைப்பு I

*(85 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 19

## உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### முன்னுரை

உயர் கல்வித் துறையில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாகத் திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அவாவிற்கேற்ப உயர் கல்விக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

1.2 கோரிக்கை எண் 19 உயர் கல்வியின்கீழ் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.741.77 கோடிகளாகும். பொறியியற் கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வசதி கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. பொறியியற் கல்லூரிகளில் மொத்த இடங்கள் 69,475 ஆகும். பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் மொத்த இடங்கள் 58,089 ஆகும்.

1.3 புதிய கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை வெறுமனே உயர்த்துவதைவிட இருக்கின்ற நிறுவனங்களில் உள்ள வசதிகளை நிலைப்படுத்தி அவற்றின் தரத்தை உயர்த்துவதே இவ்வரசின் கொள்கையாக உள்ளது. இக்கொள்கையையொட்டி ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தை ஓர் இணைப்புவகை பல்கலைக்கழகமாக அரசு மாற்றியமைத்துள்ளது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலும், சந்தையின் தேவைக்கேற்பவும் பொறியியற் கல்வி பாடத் திட்டத்தை மேம்படுத்த, இப்பல்கலைக்கழகம் முனைந்து வருகிறது. தொழில் நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் ஒன்றுக்கொன்று பயன்பெறும் வகையில் கலந்து செயலாற்ற பெரிதும் ஊக்கம் அளிக்கப்படும்.

1.4 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், வேலைவாய்ப்புள்ள பாடப் பிரிவுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

1.5 தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் தரமதிப்பீடு பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன. பல்கலைக்கழகங்கள் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகள் தேசிய மதிப்பீடு மற்றும் ஏற்பளிப்புக் குழுவின் (NAAC) தரமதிப்பீட்டைப் பெறவும், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் தேசிய ஏற்பளிப்புக் குழுவின் (NBA) தரமதிப்பீட்டைப் பெறவும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிப்பதை அரசு தன் கொள்கையாகக் கொண்டுள்ளது. பாடத் திட்டங்களை மேம்படுத்தவும், கல்வி பயிற்றுவித்தல், பயிலுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்தவும் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

1.6 அனைத்துத் தரப்பு மக்களும், உயர் கல்வி பெறத்தக்க வகையில், சென்னையில் "தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்", *2002–2003* ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, பல்வேறு பாடப் பிரிவுகளில் *20,000* மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை—19, உயர் கல்வித் துறை என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.741.77 கோடி ஆகும். இதில் ரூ.62.04 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ.679.73 கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

### நிதி ஒதுக்கீடு 2005–2006

| | கணக்குத் தலைப்பு (1) | திட்டப் பணி (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | பொதுப் பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | — | 957.00 | 957.00 |
| 2075 | இதர பொதுப் பணிகள் | — | 5.10 | 5.10 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 234.51 | 54017.33 | 54251.84 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 4172.15 | 12411.15 | 16583.30 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும் | 618.93 | — | 618.93 |
| 2205 | கலையும் பண்பாடும் | 6.55 | 341.28 | 347.83 |
| 104 | ஆவணக்காப்பகங்கள் | | | |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | — | 46.60 | 46.60 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூக நலப்பணிகள் | — | 170.60 | 170.60 |
| 2551 | மலைப்பகுதிகள் | 33.00 | - - | 33.00 |
| 3425 | இதர அறிவியல் ஆராய்ச்சி | 171.51 | - - | 171.51 |
| 3454 | மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரம் | | | |
| 110 | விவரச் சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் | — | 23.83 | 23.83 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 967.77 | 0.01 | 967.78 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | — | 0.01 | 0.01 |
| | மொத்தம் | 6204.42 | 67972.91 | 74177.33 |

[2005 ஏப்ரல் 6

## 2005–2006 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டப் பணிகள்

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலை செலவு | 2005–2006–ல் செலவு |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| | **கல்லூரிக் கல்வி** | | |
| 1 | தன்னாட்சிக் கல்லூரிகள் 5–ல் (அரசு கலைக் கல்லூரி கோயம்புத்தூர், பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி, திருச்சி, அருள்மிகு மீனாட்சி மகளிர் கல்லூரி, மதுரை, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி, தஞ்சாவூர் மற்றும் பாரதி மகளிர் கல்லூரி, சென்னை) கணினிமயமாக்கப்பட்ட (டிஜிட்டல்) நூலகங்கள் ஏற்படுத்தல். | 21.00 | 21.00 |
| 2 | பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, கூடலூர் மற்றும் நிலக்கோட்டை அரசு உறுப்புக் கல்லூரிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல். | 150.00 | 60.00 |
| 3 | 67 அரசு உறுப்புக் கல்லூரிகளில் கல்விக்கான செயற்கைக்கோள் தொடர்பு வசதி ஏற்படுத்துதல். | 25.00 | 25.00 |
| 4 | அரசு உறுப்புக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்காக தர மேம்பாட்டுத் திட்டங்கள் (50 திட்டங்கள்) நடத்துதல். | 20.00 | 20.00 |
| | **தொழில்நுட்பக் கல்வி** | | |
| 5 | 19 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்காக கணினிகள் மற்றும் ஏனைய துணை பாகங்கள் வாங்குதல். | 100.00 | 100.00 |
| 6 | எட்டயபுரம், பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் கூடுதல் கட்டடத் தொகுதி (வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள்) கட்டுதல். | 110.00 | 40.00 |



2005 ஏப்ரல் 6]

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலை செலவு | 2005–2006–ல் செலவு |
|---|---|---|---|
| 7 | மதுரை, அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் அறைகலன்கள் வசதி செய்து கொடுப்பதுடன் வகுப்பறைகள் மற்றும் ஒரு வரைகூடம் ஆகியவை கட்டுதல். | 100.00 | 40.00 |
| 8 | கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பவியல் கல்லூரியில் உயிரி தொழில்நுட்பவியல் கட்டடத் தொகுதி கட்டுதல். | 80.00 | 30.00 |
| 9 | திருநெல்வேலி, அரசு பொறியியல் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் கட்டடத் தொகுதி கட்டுதல். | 80.00 | 30.00 |
| 10 | காரைக்குடி, அழகப்ப செட்டியார் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரியில் 100 மாணவியருக்காக இல்லக் கட்டடம் (அறைகலன்கள் உணவுக் கூடம் மற்றும் நீராவி சமையல் சாதனத்துடன்கூடிய சமையற் கூடம் ஆகியவை உட்பட) கட்டுதல். | 80.00 | 30.00 |
| 11 | கோயம்புத்தூர், அரசு தொழில்நுட்பவியல் கல்லூரியில் கட்டுமானப் பொறியியல் துறையின் கட்டமைப்பு இயக்கவியல் ஆய்வுக் கூடம் அமைத்தல். | 30.00 | 10.00 |
| 12 | சேலம், அரசு பொறியியல் கல்லூரியில் உள்ள மின்னணுவியல் தகவல் தொடர்புத் துறைக்காக முதல் தளம் கட்டுதல். | 70.00 | 30.00 |
| 13 | பர்கூர், அரசு பொறியியல் கல்லூரியில் நூலகக் கட்டடம் கட்டுதல். (1000 சதுர அடி) | 80.00 | 20.00 |
| | **தமிழ்நாடு ஆவணக்காப்பகம்** | | |
| 14 | தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் ஏழு வைப்பான்களுக்கு சீர்வளி வசதி செய்து கொடுத்தல். | 15.00 | 15.00 |
| 15 | தமிழ்நாடு ஆவணக்காப்பகங்களில் பாதுகாப்பு ஏற்பாட்டு நடவடிக்கைகள். | 5.00 | 5.00 |
| 16 | கோயம்புத்தூர் மாவட்ட பதிவுரு மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல். | 56.00 | 22.40 |

[2005 ஏப்ரல் 6

**அண்ணா பல்கலைக்கழகம்**

| | | | |
|---|---|---|---|
| 17 | நுண்பொருள் தொழில் நுட்பவியலுக்குத் தேவையான வெண் ஒளி உமிழ் டயோடு உள்ளிட்ட கடத்திப் பொருள் மற்றும் சாதனங்கள் கொண்ட தேசிய அளவிலான வசதியினை, மாநில அரசின் முன்முயற்சி கொண்டு அண்ணா பல்கலைக்கழகத்தில் உருவாக்குவதற்கு அரசு அளிக்கும் தொடக்க நிதியுதவி. | 50.00 | 50.00 |
| | **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்** | | |
| 18 | 15 கே.வி.ஏ. திறன் கொண்ட தடையற்ற மின்சாரம் வழங்கும் சாதனம் வழங்குதல். | 6.00 | 6.00 |
| 19 | அறிவியல் பூங்கா, போக்குவரத்துப் பூங்கா மற்றும் சுற்றுச்சூழல் பூங்கா முதலியவற்றை மேம்படுத்துதல். | 5.00 | 5.00 |
| | **சென்னைப் பல்கலைக்கழகம்** | | |
| 20 | சேப்பாக்கம் வளாகம், பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் தற்போதுள்ள மைய சீர்வளி சாதனங்களை மாற்றி புதிய சாதனங்கள் அமைத்தல். | 120.00 | 120.00 |
| | **அழகப்பா பல்கலைக்கழகம்** | | |
| 21 | அழகப்பா பல்கலைக்கழகத்தில் பல்நோக்கு அரங்கம் கட்டுதல். | 80.00 | 40.00 |
| | மொத்தம் | 1283.00 | 719.40 |

## 2. கல்லூரிக் கல்வி

2.1 உயர் கல்வியை தனியாக நிர்வகிப்பதற்காக பொதுக் கல்வி இயக்ககத்திலிருந்து 1965 ஆம் ஆண்டு கல்லூரிக் கல்வி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. உயர் கல்வித் துறையில் மிகவும் முன்னேற்றமடைந்த மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்கிறது.



2005 ஏப்ரல் 6]

2.2 தற்போது 503 கல்லூரிகள், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | கல்லூரிகள் வகை | அரசு உறுப்புக் கல்லூரிகள் | தனியார் கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | உதவிபெறும் கல்லூரிகள் | சுயநிதிக் கல்லூரிகள் | |
| 1 | கலை மற்றும் அறிவியல் | 60 | 133 | 251 | 444 |
| 2 | உடற்கல்வி | — | 3 | 1 | 4 |
| 3 | கீழ்த்திசை | — | 10 | — | 10 |
| 4 | சமூகப்பணிப் பள்ளி | — | 2 | — | 2 |
| 5 | கல்வியியல் | 7 | 14 | 22 | 43 |
| | மொத்தம் | 67 | 162 | 274 | 503 |

**புதிய பாட வகுப்புகள் தொடங்குதல்**

2.3 2003–2004 ஆம் ஆண்டில் புதிய வேலை வாய்ப்புள்ள இளங்கலை மற்றும் முதுகலை பாடப் பிரிவுகள் சுயநிதி அடிப்படையில் தொடங்கப்பட்டன. தற்பொழுது அரசு உறுப்புக் கல்லூரிகளில் 41 புதிய இளங்கலை/அறிவியல் பாடப் பிரிவுகள் மற்றும் 68 முதுகலை/ அறிவியல் பாடப் பிரிவுகள் சுயநிதி அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்புள்ள பாடப் பிரிவுகள் தொடங்கப்படும்போது, மாணவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் உடனடியாக வேலைவாய்ப்புக் கிடைக்கும். வேலைவாய்ப்புள்ள 26 பாடப் பிரிவுகள் 28 கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் கல்லூரிகளின் தர நிர்ணயம் (NAAC)**

2.4 தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் கல்வி நிலையங்கள் தேசியத் தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இதுவரை 134 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகள் தேசியத் தர நிர்ணயக் குழுவால் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 6

**மாநிலத்தில் தன்னாட்சிக் கல்லூரிகளின் பங்கு**

2.5 கல்லூரிகளுக்கு தன்னாட்சித் தகுதி வழங்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. தற்சமயம் தமிழ்நாட்டில் 15 அரசு உறுப்புக் கல்லூரிகள், 45 அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் ஏழு சுயநிதிக் கல்லூரிகள், ஆக மொத்தம் 67 கல்லூரிகளுக்கு தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டுள்ளது. கல்வித் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் கல்வித் திட்டத்தில் புதுமையையும், ஆக்கப்பூர்வமான புதிய முயற்சிகளையும் மேற்கொள்ள தன்னாட்சித் தகுதி, இக்கல்வி நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்கிறது. தன்னாட்சித் தகுதி பெற்ற கல்லூரிகள், தாங்களாகவே பாடத் திட்டங்களை வகுத்துக் கொள்ளவும், தேர்வுகளை நடத்தவும், அதன் மூலம் மாணவர்களை மதிப்பிடவும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்குதல், தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்டவற்றை இதன்மூலம் அடைந்த சாதனைகளாகக் குறிப்பிடலாம்:–

(1) தமிழ்நாட்டில் பெரும்பாலான தன்னாட்சிக் கல்லூரிகள் இன்றைய தேவைக்கேற்ப பாடத்திட்டத்தை மாற்றிக் கொண்டுள்ளன.

(2) தமிழ்நாட்டில் சில தன்னாட்சிக் கல்லூரிகளில் மாணவர்கள் தாங்கள் விரும்பும் பாடப் பிரிவுகளைத் தேர்வு செய்து அவற்றில் மதிப்பீடு பெறும் முறை (Choice Based Credit System) செயல்படுத்தப்பட்டுள்ளது.

(3) பெரும்பாலான தன்னாட்சிக் கல்லூரிகள், அவர்களுடைய மாணவர்களை மதிப்பாய்வு செய்ய தொடர் உள் மதிப்பீடு முறையை (Continuous Internal Assessment) அறிமுகப்படுத்தியுள்ளன.

(4) தொடர் உள்மதிப்பீட்டு முறையின்கீழ் காலமுறை தேர்வு, குறிப்புகள், பலவித கருத்தரங்குகள் மற்றும் குழு விவாதங்கள் போன்றவை ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன.

**ஆசிரியர் பயிற்சி**

2.6 தமிழ்நாட்டில் தற்பொழுது 43 கல்வியியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் ஏழு கல்லூரிகள் அரசு உறுப்புக் கல்லூரிகளாகும். இவற்றுடன் 14 அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளும், 22 சுய நிதிக் கல்வியியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. ஏழு அரசு உறுப்புக்



2005 ஏப்ரல் 6]

கல்வியியல் கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகள் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன. ஆசிரியர் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் தமிழக அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது.

2.7 தமிழ்நாட்டிலுள்ள இரண்டு கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் ஐந்து கல்வியியல் கல்லூரிகளுக்கு 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ.236.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

2.8 மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் (DIET) பணிபுரியும் ஆசிரியர்கள், மேல்நிலை மற்றும் உயர் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களால் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்லூரிகள் மற்றும் பள்ளிகளின் கல்வித்தரம் உயர்வதற்கு இப்பணியிடைப் பயிற்சி மிகவும் பயனுள்ளதாகவுள்ளது.

**அரசு உறுப்புக் கல்லூரிகளில் சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள்**

2.9 சென்ற ஆண்டினைப் போன்றே, 2004–2005 ஆம் நிதி ஆண்டிலும் அரசு உறுப்புக் கல்லூரிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள், தொழில்நுட்பக் கல்வி கண்காணிப்புப் பொறியாளர், சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் மற்றும் அரசு உறுப்புக் கல்லூரி முதல்வர்கள் கலந்து கொண்ட கலந்தாய்வுக் கூட்டத்தின் வாயிலாக இறுதி செய்யப்பட்டது. தீயணைப்பான்கள் வைக்க முன்னுரிமை அளிக்கப்பட்டது. 2005–2006 ஆம் நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளுக்கு 67 அரசு உறுப்புக் கல்லூரிகளுக்கும் ரூ.5,72,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நாட்டு நலப் பணித் திட்டம் (N.S.S.)**

2.10 தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2003–2004 ஆம் ஆண்டில் 2,30,000 ஆக இருந்த மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2004–2005 ஆம் கல்வியாண்டில்

2,53,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இவர்களுள் 1,26,500 தொண்டர்கள் 2004–2005 ஆம் ஆண்டில் சிறப்பு முகாமில் கலந்து கொண்டனர். தற்போது நாட்டு நலப்பணித் திட்டத்தைச் செயல்படுத்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 1,815 அலகுகளும், மேல்நிலைப் பள்ளிகளில் 1,430 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன.

**மகளிர் திறனேற்றம்**

**இந்திய ஆட்சிப் பணி / இந்திய காவல் பணி தேர்வுகளில் பங்குபெற பெண்களுக்கான இலவசப் பயிற்சி**

2.11 அகில இந்திய அளவில் நடைபெறும் இந்திய ஆட்சிப் பணி/ இந்திய காவல் பணி தேர்வுகளில் பெண்கள் சிறப்பாகப் பங்குபெறும் பொருட்டு இராணி மேரிக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை மற்றும் அருள்மிகு மீனாட்சி மகளிர் (தன்னாட்சி) கல்லூரி, மதுரை ஆகிய இரு பயிற்சி மையங்களில் பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும், 60 மாணவிகள் இந்திய ஆட்சிப் பணி/ இந்திய காவல் பணி தேர்வு எழுத இலவசப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டச் செயல்பாட்டிற்கென அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**படிப்புதவித் தொகைத் திட்டங்கள்**

2.12 கல்லூரிக் கல்வி இயக்ககத்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன:—

1. தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் (மத்திய அரசு திட்டம்)
2. பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்கான மாநில படிப்புதவித் தொகை
3. மாநில தகுதி படிப்புதவித் தொகை
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தனித்தகுதி மானியம்
5. மாநில கல்லூரிக் கல்விப் படிப்புதவித் தொகை
6. புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக் கல்வி பயிலும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை





7. டேராடூன் இராஷ்டிரிய இந்திய மிலிடரி அகடமியில் படிக்கும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை
8. பூனா கடக்வாசலாவில் உள்ள தேசியப் பாதுகாப்பு அகடமியில் பயிலும் தமிழ்நாட்டு மாணவ மாணவிகளுக்கு படிப்புதவித் தொகை
9. இராணுவத்தில் பணிபுரிவோர் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள்
10. முன்னாள் படைவீரர் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள்
11. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் முழுநேர ஆராய்ச்சிப் படிப்புப் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு பயிற்சிக்கால உதவித் தொகை வழங்கும் திட்டம்.

**ஆராய்ச்சி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை**

2.13 2005–2006 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தில் ஆராய்ச்சி மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க ரூ.20.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**ஏழை மாணவிகளுக்கு இலவசக் கல்வி (பெரியார் ஈ.வெ.ரா. மணியம்மை திட்டம்)**

2.14 இந்நலத் திட்டத்தில் சாதி, இனப் பாகுபாடின்றி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பட்டப் படிப்புப் பயிலும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஏழை மாணவிகள் இலவசக் கல்வி பெறுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் பயன் பெறும் மாணவிகளின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும். 2005–2006 ஆம் ஆண்டிற்கென இத்திட்டத்திற்காக ரூ.6.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆசிரியர்களின் கல்வித்தகுதி மேம்பாட்டுத் திட்டம்**

2.15 கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஆராய்ச்சிப் பணியை ஊக்குவிக்கும் வகையிலும் ஆசிரியர்கள் தங்கள் அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ளும் வகையிலும் பல்கலைக்கழக நிதியுதவியுடன் கல்லூரி ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் படிப்பில் சேர்ந்து பயன் பெற அனுமதிக்கப்படுகின்றனர். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தின்கீழ் 82 விரிவுரையாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[2005 ஏப்ரல் 6

**தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.**

2.16 அரசு உறுப்புக் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களில் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவர்களை மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காக சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம்**

2.17 அரசு உறுப்புக் கல்லூரிகளில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களில் மாணவர் நலன் கருதி கௌரவ விரிவுரையாளர்கள் ஆண்டுதோறும் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர். 2004–2005 ஆம் கல்வியாண்டில் 1,250 கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

**3. பல்கலைக்கழகக் கல்வி**

உயர் கல்வித் துறையின் ஆளுகையில் கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:–

1. அண்ணா பல்கலைக்கழகம்
2. சென்னைப் பல்கலைக்கழகம்
3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
4. பாரதியார் பல்கலைக்கழகம்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6. அழகப்பா பல்கலைக்கழகம்
7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9. பெரியார் பல்கலைக்கழகம்



2005 ஏப்ரல் 6]

10. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
11. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
12. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
13. அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம் – நிகர்நிலைப் பல்கலைக்கழகம்.

**சென்னைப் பல்கலைக்கழகம்**

3.1 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் உயர் கல்வித் துறையில் அரும்பெரும் பணியாற்றியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லை சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் 122 கல்லூரிகள் இணைந்துள்ளன.

**பாடத்திட்டக் குழுக்களை மாற்றியமைத்தல்**

3.2 உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யும் படிப்புகளை உருவாக்க வேண்டிய தேவையைக் கருத்திற் கொண்டு பாடத்திட்டங்களை மாற்றியமைக்க அனைத்துத் துறைகளிலும் பாடத் திட்டக் குழுக்களை பல்கலைக்கழகம் மறுசீரமைப்புச் செய்துள்ளது. இக்குழுக்களில் தொழில் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சார்ந்த நிபுணர்களும் இடம் பெற்றிருக்கின்றனர்.

**வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்ட பட்டயப் படிப்புகளைப் பட்ட மற்றும் பட்ட மேற்படிப்புகளுடன் இணையாக அறிமுகப்படுத்துதல்.**

3.3 பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திட்டத்தின்கீழ், இளநிலை பட்டப் படிப்புப் பயிலும் மாணவர்கள் கூடுதலாக வேலைவாய்ப்பு மிக்க ஒரு பட்டயப் படிப்பினைப் படிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

3.4 பல்கலைக்கழகத்தில் பயிலும் முதுநிலை பட்டப் படிப்பு மாணவர்களுக்காக, வேலைவாய்ப்பு மிகுந்த பட்டயப் படிப்புகளை 2005-2006 ஆம் ஆண்டு முதல் இப்பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தவுள்ளது. முதுநிலை பட்டப் படிப்பு பயிலும் இரண்டாண்டு காலத்திற்குள்ளேயே, அவர்கள் கூடுதலாக ஒரு பட்டயம் பெறவும் இது வழி வகுக்கும்.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

3.5 1966–ல் நிறுவப்பட்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில், 72 துறைகளை உள்ளடக்கிய 18 புலங்கள் உள்ளன. ஒன்பது தன்னாட்சிக் கல்லூரிகள், இரண்டு பல்கலைக்கழகக் கல்லூரிகள், 16 அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏழு மாலை நேரக் கல்லூரிகள் உள்பட மொத்தம் 59 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்ககம் சுமார் 1.10 இலட்சம் மாணவர்களைக் கொண்டுள்ளது. தொலைதூரக் கல்வி இயக்ககம் ஒன்பது கல்விச் சேர்க்கை மையங்களைத் தமிழ்நாட்டிலும், 46 மையங்களைப் பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் கொண்டுள்ளது.

3.6 கிராமப்புற ஏழை மாணவர்களின் நன்மைக்காகவும், மேம்பாட்டுக்காகவும் 2002 ஆம் ஆண்டு ஆண்டிப்பட்டியில் துவக்கப்பட்ட பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி தற்போது ஆயிரத்துக்கும் மேலான மாணவர்களைக் கொண்டுள்ளது.

3.7 பல்கலைக்கழகம் அதன் அனைத்து இணைப்புக் கல்லூரிகளின் வளர்ச்சியிலும் அவற்றின்மூலம் தரமான கல்வியை வழங்குவதிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. காலத்தின் தேவையைக் கருத்தில்கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 52 புதிய படிப்புகளின் பாடத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் வேலை வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில், பல்கலைக்கழக மானியக் குழு கண்டறிந்துள்ள 42 புதிய வேலைவாய்ப்பு மிக்க படிப்புகளை வழங்கிட கல்லூரிகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

## பாரதியார் பல்கலைக்கழகம்

3.8 மகாகவியும், விடுதலைப் போராட்ட வீரருமான பாரதியாரின் பெயரில் பாரதியார் பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசால் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் கோயம்புத்தூரில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லையில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் உள்ளன. பாரதியார் பல்கலைக்கழகம் 85 இணைப்புக் கல்லூரிகளைக் கொண்டுள்ளது.

3.9 அயல்நாடுகளில் இந்திய உயர் கல்வியைப் பரப்புதல் என்ற பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டத்தின் அடிப்படையில், பாரதியார் பல்கலைக்கழகமானது அயல்நாட்டு மாணவர்களுக்கு உயர் கல்வியைப் புகட்டும் தகுதி பெற்றுள்ளது என்று பல்கலைக்கழக மானியக் குழுவால் கண்டறியப்பட்டுள்ளது.



3.10 வேதியியல், பொருளியல் மற்றும் மொழியியல் துறைகளை, சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்து பல்கலைக்கழக மானியக் குழு ரூ.101.10 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

## பாரதிதாசன் பல்கலைக்கழகம்

3.11 பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் தோற்றுவிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஏழு மாவட்டங்கள் இப்பல்கலைக்கழக ஆட்சி எல்லையில் அடங்கியுள்ளன. இப்பல்கலைக்கழகத்தோடு 15 தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் உட்பட 111 கல்லூரிகள் மற்றும் 25 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

3.12 இப்பல்கலைக்கழகம் மாணவர்கள் தாங்கள் விரும்பும் பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்து அவற்றில் மதிப்பீடு பெறும் முறையினை நடைமுறைப்படுத்தி வருகிறது. 2004–2005ஆம் ஆண்டில் பல வேலைவாய்ப்பு மிக்க பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

3.13 பத்தாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் UGC-INFONET PROJECT என்ற திட்டத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகம், முதல் 50 பல்கலைக்கழக நூலகங்களில் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## அழகப்பா பல்கலைக்கழகம்

3.14 அழகப்பா பல்கலைக்கழகம் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அமையப் பெற்றுள்ளது. வள்ளல் டாக்டர் ஆர்.எம். அழகப்பச் செட்டியார் அவர்களால் காரைக்குடியில் உருவாக்கப்பட்ட பல்வேறு கல்வி நிலையங்களைத் தன்னகத்தே கொண்டு இப்பல்கலைக்கழகம் உருவானது.

3.15 இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 14 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் ஏழு அரசு கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. உயிரி தொழில்நுட்பவியல், இயற்பியல், தொழில்வேதியியல், கணிதவியல், கணினியியல், வணிக மேலாண்மையியல், வங்கி மேலாண்மையியல், பன்னாட்டு வணிகவியல், நிறுமச் செயலரியல், தமிழ், மகளிரியல்,

கல்வியியல், உடற்கல்வியியல், கடலியல் மற்றும் கடலோரவியல் ஆகிய துறைகளில் முதுகலை, ஆய்வு நிறைஞர் மற்றும் முனைவர் பட்டங்கள் பெறுவதற்கான பாடப் பிரிவுகள் இப்பல்கலைக்கழகத்தில் நடத்தப்படுகின்றன.

**தொலைதூரக் கல்வி**

3.16 பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, முதுநிலை பட்டயப் படிப்பு மற்றும் ஆய்வு நிலைகளில் 51 பாடப் பிரிவுகளை தொலைதூரக் கல்வி இயக்ககம் நடத்தி வருகிறது. இக்கல்வித் திட்டம் நாடு முழுவதும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கல்வித் திட்டம் மத்திய கிழக்கு மற்றும் தென் கிழக்கு நாடுகளிலும் அளிக்கப்பட்டு வருகிறது.

3.17 2004–2005 ஆம் ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 45,000 ஆக உள்ளது. மேலும் மருத்துவ நிர்வாகத்தில் பட்டப் படிப்பும் மற்றும் முதுகலை பட்டய படிப்பும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. லண்டன், சிங்கப்பூர், மலேசியா, துபாய், பஉற்ரைன், ரியாத் ஆகிய இடங்களில் அயல்நாட்டு மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

**அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்**

3.18 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 1984 ஆம் ஆண்டில் கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிரியல் கல்வியை மேம்படுத்துதல், மகளிரியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிர் நல மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஆலோசனை நல்குதல், கண்காணித்தல் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் முக்கியப் பணிகளாகும்.

3.19 பெண்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை உயர்த்தும் நோக்குடன், இப்பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வியை அளித்து வருகிறது. சென்னை மற்றும் மதுரையில் ஆய்வு மற்றும் விரிவாக்க மையங்களை இப்பல்கலைக்கழகம் ஏற்படுத்தியுள்ளது.

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

3.20 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மூன்று தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக 1990 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி மாவட்டத்தில் அபிஷேகப்பட்டி என்னும் ஊரில் அமையப் பெற்றுள்ளது. பாளையங்கோட்டை, ஆழ்வார்குறிச்சி மற்றும் இராஜாக்கமங்கலம் ஆகிய





இடங்களில் இப்பல்கலைக்கழகத்தின் துணை வளாகங்கள் உள்ளன. மேலும் இப்பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்விமுறை மூலமாகவும், கல்விப்பணி ஆற்றி வருகிறது.

3.21 இப்பல்கலைக்கழகம் 17 துறைகளையும், 38 இணைப்புக் கல்லூரிகளையும் கொண்டுள்ளது. முதுநிலை பட்ட வகுப்புகளில் மாணவர்கள் தாங்கள் விரும்பும் பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்து அவற்றில் மதிப்பீடு பெறும் முறையும், விடைத்தாள் திருத்தும் முறையில் 100 சதவிகித அக மதிப்பீட்டு முறையும் 2003–2004 கல்வியாண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

3.22 ஆராய்ச்சி மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், பல்கலைக்கழகம் ஆய்வு உதவித் தொகையினை வழங்கி வருகிறது. தேர்வு செய்யப்பட்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆய்வுத் தொகை ரூ.1500/– வழங்குவதோடு, இதரவகைச் செலவினங்களுக்காக ஆண்டொன்றுக்கு ரூ.3000/–ம் வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகை 17 மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

3.23 மேல்நிலை பள்ளிக் கல்வியை நிறைவு செய்த, 25 வயதிற்குட்பட்ட கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தகுதியை அதிகரிப்பதற்கு இப்பல்கலைக்கழகம் சமுதாயக் கல்லூரிகள் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் 34 சமுதாயக் கல்லூரிகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இக்கல்லூரிகளின்மூலம் 20 வேலைவாய்ப்பு மற்றும் திறன் அடிப்படையிலான படிப்புகள் நடத்தப்பட்டு பட்டயங்கள் வழங்கப்படுகின்றன.

**பெரியார் பல்கலைக்கழகம்**

3.24 பெரியார் பல்கலைக்கழகம் 1997ஆம் ஆண்டில் சேலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் 117 இணைப்புக் கல்லூரிகள் உள்ளன. இப்பல்கலைக்கழக ஆளுகையின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் அடங்கியுள்ளன.

3.25 தற்பொழுது இப்பல்கலைக்கழகம் 223 பாடப்பிரிவுகளை இணைவு பெற்ற கல்லூரிகளில் நடத்தி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் தமிழ், வணிகவியல், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் மண்ணியல் ஆகிய ஆறு துறைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. ஆசிரியர்கள் நவம்பர் 2004–ல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வருடாந்திர பாடப் பிரிவுகள் இத்துறைகளில் 31–1–2005 முதல்

[2005 ஏப்ரல் 6

தொடங்கப்பட்டுள்ளன. 15 புதிய பாடத் திட்டங்களை 2005–2006 ஆம் ஆண்டிலிருந்து தொடங்குவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. தொலைதூர திட்டத்தின் வழியாக இரண்டு பட்டப் படிப்புகளை ஒரே நேரத்தில் படிக்கும் முறையை இப்பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தினால் முறையான பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர்கள் தொலைதூர கல்வியின்மூலமாக மற்றொரு பட்டப் படிப்பை ஒரே நேரத்தில் படிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3.26 பெரியார் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி நிறுவனம் (PRIDE) 2001–2002 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இந்த திட்டம் தற்பொழுது 11 கல்வி மையங்களில் நடைபெறுகிறது. அவற்றுள் துபாய் மற்றும் குவைத்திலுள்ள மையங்களும் அடங்கும்.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

3.27 வேலூரில் 2002 ஆம் ஆண்டில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு வேலூர், கோட்டை வளாகத்தில் தற்பொழுது செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கென சொந்த நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 53 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. நடப்புக் கல்வியாண்டில் மேலும் மூன்று கல்லூரிகள் புதிதாக இணைவு பெற்றுள்ளன. தற்போதுள்ள கல்லூரிகளில் புதிய பாடத்திட்டங்களுக்கு ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது.

3.28 விழுப்புரம், கடலூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உயிர் தொழில்நுட்பவியல் அடிப்படையில் உணவு மற்றும் சத்துணவுப் பாதுகாப்பு பற்றி ஆய்வு நடத்த மைய அரசின் உயிர் தொழில்நுட்பவியல் துறையிடமிருந்து ரூ.15 இலட்சம் மானியமாகப் பெறப்பட்டு உள்ளது.

3.29 உணவு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் கூடம் அமைப்பதற்கும், பல்கலைக்கழகத்தின் உணவியல் மற்றும் சத்துணவுத் துறைக்கான ஒரு மாதிரி முன்னோடி தொழிற்கூடம் அமைப்பதற்கும் ரூ.33 இலட்சம் நிதியுதவியினை பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. மேலும், உணவு ஆராய்ச்சி மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம், நவீனக் கருவிகளைக் கொண்டுள்ளது. வேலைவாய்ப்பளிக்கும் பாடப் பிரிவுகளை தொடங்கும் நோக்கத்தோடு, பல்கலைக்கழகம் உணவியல் மற்றும் தொழில்நுட்பம்,



2005 ஏப்ரல் 6]

சுற்றுச்சூழலியல், தாவர இயல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் மருந்தியல் ஆகிய நான்கு புதிய துறைகளை தொடங்கவுள்ளது.

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

3.30 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. உயர் கல்வியைப் பெற இயலாதவர்களுக்கு உயர் கல்வியை வழங்கவேண்டும் என்ற உயரிய நோக்கோடு கிராமப்புற மற்றும் பின் தங்கிய பகுதியைச் சார்ந்தவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் இப்பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த செலவில், மரபுசாரா வழியில் சமூகத்திற்கு இயைபுடையதாகவும், வட்டாரச் சூழலுக்கு உகந்த வகையிலுமான உயர் கல்வியை அவரவர் இல்லத்திற்கே எடுத்துச் சென்று வழங்கவேண்டும் என்பதே இப்பல்கலைக்கழகத்தின் முதன்மையான நோக்கமாகும். தற்போது இப்பல்கலைக்கழகம் கிண்டியில் உள்ள தொழில்நுட்பக் கல்வி இயக்கக வளாகத்தில் இயங்கி வருகிறது.

3.31 மிகக் குறைந்த செலவில் மாணவர்களை எளிதில் சென்றடையும்பொருட்டு அனைத்து மாவட்ட தலைநகரங்கள் உள்ளிட்ட 34 கல்வி மற்றும் ஆலோசனை மையங்களையும், தமிழகம் முழுவதும் வட்ட அளவில் 360 தகவல் மையங்களையும் நிறுவியுள்ளது.

3.32 இப்பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே நான்கு புதுமையான சமூகப் பயன்பாடுடைய சான்றிதழ் படிப்புகளுடன் மரபுசார்ந்த பத்து வகையான பட்ட மற்றும் பட்ட மேற்படிப்புப் பிரிவுகளையும் தொடங்கியது. இரண்டாவது ஆண்டில் மேலும் 22 பட்ட, முதுகலைப் பட்டம் மற்றும் சான்றிதழ் படிப்புகளைத் தொடங்கியுள்ளது. தற்போது மொத்தம் 36 பாடத்திட்டங்கள் உள்ளன. இதில் நகர்ப்புற மற்றும் ஊரக ஏழை, எளிய இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறவும் அல்லது சுயவேலைவாய்ப்பினைத் தேடிக் கொள்ளவும் வகை செய்யும் ஆறு தொழிற்கல்விச் சான்றிதழ் படிப்புகளும் அடங்கும்.

3.33 தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தில் இணைந்த நிறுவனங்களில் மூன்றாண்டு சமையல் தொழில்நுட்ப (Catering Technology) பட்டயப் படிப்பு படிக்கும் மாணவர்கள் இரட்டைப் படிப்பு மூலம் B.Sc., விருந்தோம்பல் மற்றும் ஹோட்டல் நிர்வாகம் (Hospitality and Hotel Administration) பட்டப் படிப்புப் படிப்பதற்கான

வாய்ப்பினை வழங்கும் புதுமையான திட்டத்தினையும் செயல்படுத்தி வருகிறது. பணியில் இருக்கும் ஆசிரியர்கள் தொலைதூரக் கல்வி மூலம் பயில பி.எட். பட்டப் படிப்பினைத் தொடங்கியது இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் மற்றுமொரு மைல் கல்லாகும். தற்போது இந்தப் பல்கலைக்கழகத்தில் 20,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

### அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

3.34 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டு, உறைவிடத்துடன் கூடிய உயர் நிலைக் கல்வி நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் தற்போது கலை, அறிவியல், இந்திய மொழிகள், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், கல்வி, நுண்கலைகள், வேளாண்மை, பல் மருத்துவம் மற்றும் பொது மருத்துவம் ஆகிய புலங்களின்கீழ் 48 துறைகளில் 18,500–க்கும் மேலான மாணவர்கள் முழுநேரக் கல்வி பயின்று வருகின்றனர். பல்கலைக்கழக மானியக் குழுவின் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரக் குழு 2000 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்திற்கு நான்கு நட்சத்திரத் தகுதியை வழங்கியுள்ளது.

3.35 தொலைதூரக் கல்வி முறையின்கீழ் 303 பல்வேறு பாடப் பிரிவுகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகிறது. தொலைதூரக் கல்வி வழிமூலம் 2.6 இலட்சம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாணவர்களுக்கு உதவும்பொருட்டு சுமார் 71 தொலைதூரக் கல்வி மையங்கள் நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்பல்கலைக்கழகம் சிங்கப்பூர், மலேசியா, கத்தார், அபுதாபி, துபாய், மொரீஷியஸ், தாய்லாந்து மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் தொலைதூரக் கல்வி அளித்து வருகிறது.

### அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர் கல்வி நிறுவனம்

3.36 கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம் 1988 ஆம் ஆண்டில் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிலையைப் பெற்றது.

3.37 2004–2005 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட படிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது:



**பட்டப் படிப்புப் பயிலும்போது கூடுதலாகப் படிக்கக்கூடிய பட்டயப் படிப்புகள்**

1. உயிர் தகவல் தொழில்நுட்பம்
2. வரைகலை மற்றும் பல்ஊடக தொழில்நுட்பம்
3. ஆடை தயாரித்தல்.

**பட்டப் படிப்புப் பயிலும்போது கூடுதலாகப் படிக்கக்கூடிய சான்றிதழ் படிப்புகள்**

மின்னணுவியல்

**பட்டயப் படிப்பு**

கண்ணியல் தொழில்நுட்பம்

**இளநிலை பட்டப் படிப்பு**

இளநிலை அறிவியல் - பார்வை ஊடக தொடர்பியல்

**வேலைவாய்ப்பு அளிக்கும் படிப்புகள் (2005–2006)**

1. ஜவுளி மற்றும் ஆடைகள்
2. மகளிரியல்
3. இணைய தளம் வடிவமைத்தல்
4. தகவல் தொடர்பியல் சார்ந்த சேவை
5. மின்னியல் வெளியீடு.

## 4. தொழில்நுட்பக் கல்வி

### தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சி

4.1 சென்னையில் 1794–ல் கிழக்கிந்திய குழுமம் நிறுவிய நில அளவியல் பள்ளி, நமது நாட்டிலேயே முதன்முதலாக தோற்றுவிக்கப்பட்ட பொறியியல் கல்வி நிறுவனம் என்பது தமிழ்நாட்டுக்குப் பெருமையளிப்பதாகும்.

4.2 தொழில்நுட்பக் கல்வித் துறையில் பீடுநடைபோட்டு, தமிழகம் இன்று முன்னிலை வகிக்கிறது. 239 பொறியியற் கல்லூரிகளில் பொறியியல்

[2005 ஏப்ரல் 6

பட்டப் படிப்பில் உள்ள இடங்களின் எண்ணிக்கை 69,475 மற்றும் 209 பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் உள்ள இடங்களின் எண்ணிக்கை 58,089.

**வயது வரம்பு மற்றும் கூடுதல் முயற்சிகளை நீக்குதல்**

4.3 2004–2005 ஆம் கல்வி ஆண்டு முதல் கிராமப்புற மாணவர்கள் பயனடைவதற்காக, பி.இ./பி.டெக். பட்டப் படிப்புகளில் மாணவர்கள் சேர்க்கையின்போது கடைப்பிடிக்கப்பட்டு வந்த வயதுவரம்பு மற்றும் கூடுதல் முயற்சிகள் எண்ணிக்கை குறித்த வரம்பு நீக்கப்பட்டுவிட்டது.

**பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கு நிதியுதவி**

4.4 மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தகுதிபெற்ற, முதன்மையான மாணவர்களுக்கும் மற்றும் குறைந்த வருவாய் பிரிவிலிருந்து பயிலும் மாணவர்களுக்கும், அவர்கள் உயர் கல்வி பெறும்வகையில் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. 2004–2005 ஆம் கல்வியாண்டில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 72 மாணவர்கள் தலா ரூ.25,000/– நிதியுதவியாகப் பெற்றுள்ளனர்.

**பட்டய வகுப்புகளில் மாணவர் சேர்க்கைக்கு வயது வரம்பு தளர்த்தல்**

4.5 2004–2005 ஆம் கல்வி ஆண்டு முதல் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு சேர்க்கைக்கு வயது உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது.

**பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒப்பந்தம்**

4.6 இம்மாநிலத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஆங்கிலத்தில் நல்ல முறையில் பேசவும், எழுதவும் ஆற்றல் மிக்கவர்களாக ஆக்கும்பொருட்டு பயிற்சி அளிப்பதற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், பிரிட்டிஷ் கவுன்சிலுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் பிரிட்டிஷ் துணை ஹை கமிஷனர் முன்னிலையில் 25–8–2004 அன்று சென்னையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memorandum of Understanding) கையொப்பமிட்டுள்ளது. வர்த்தக ஆங்கிலக் கல்விச் சான்றிதழ் தேர்வு பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் உள்ளூர் தேர்வுக் குழு மூலமாக சான்றிதழ்கள் வழங்கப்படும்.



2005 ஏப்ரல் 6]

**தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம்**

4.7 உலக வங்கி நிதியுதவியுடன் இந்திய அரசு, பொறியியல் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில், தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டம் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில், இரண்டாவது கட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஏழு மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தில் பங்குபெறும் கல்லூரிகளுக்கு (ஐந்து அரசினர் பொறியியற் கல்லூரிகள், மூன்று அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்லூரிகள் மற்றும் மூன்று அரசினர் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்) முதற்கட்டமாக ரூ.63.21 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**5. அண்ணா பல்கலைக்கழகம்**

5.1 அண்ணா பல்கலைக்கழகம் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 ஆம் தேதி ஒருமை வகை பல்கலைக்கழகமாகத் தொடங்கப்பட்டு, நாட்டின் முன்னணி தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. 2001 ஆம் ஆண்டிலிருந்து இணைப்பு வகைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள 226 சுயநிதி பொறியியல் கல்லூரிகளையும், மூன்று அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகளையும், ஆறு அரசு பொறியியல் கல்லூரிகளையும் தன்னகத்தே இணைத்து ஒரு மிகப் பெரிய பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது.

5.2 தமிழகம் முழுவதும் 284 மையங்களில் சுமார் 1.50 இலட்சம் மாணவர்களுக்கு தமிழ்நாடு தொழில்நுட்பப் பொறியியல் நுழைவுத் தேர்வை நடத்தி வருகிறது. தமிழ்நாடு தொழில்நுட்பப் பொறியியல் சேர்க்கைக்கான கலந்தாய்வுகளை தமிழகத்தின் பல மையங்களில் கணினி இணைப்பின் வழியே ஒரே நேரத்தில் நடத்தி வருகிறது.

5.3 இப் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும் தேர்வு நடத்துவது ஒரு மாபெரும் பணியாகும். 2004 ஆம் ஆண்டு சுமார் 2.20 இலட்சம் இளநிலை மாணவர்களும், 10,000 முதுநிலை மாணவர்களும், 37 இளநிலை பாடப் பிரிவுகள் மற்றும் 47 முதுநிலை பாடப் பிரிவுகளில் சுமார் 1,500 பாடங்களில் தேர்வுகளை எழுதியுள்ளனர். 6,000 தேர்வாளர்கள் 10 மண்டல மையங்களில் 1.5 இலட்சம் விடைத் தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டனர்.

5.4 தன்னுடன் இணைந்துள்ள கல்லூரிகளுக்கு மிகத் தரம் வாய்ந்த விரிவுரைகள் அளிப்பதற்கு, கல்விக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள எடூசாட் (Edusat) எனப்படும் செயற்கைக் கோளை அண்ணா பல்கலைக்கழகம் பயன்படுத்தி வருகிறது.

5.5 முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற வட்டார மையங்களுக்கு வரவழைத்து, அந்நிறுவனங்களில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை அண்ணா பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது. பிரபலம் பெறாத கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் கூட இதனால் பயனடைந்துள்ளனர்.

## 6. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

6.1 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், நகர மற்றும் கிராமப்புற மக்களிடம் குறிப்பாக மாணவச் சமுதாயத்தினரிடம் அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் எட்டு அறிவியல் காட்சிக் கூடங்களும், அறிவியல் பூங்காவும், பி.எம். பிர்லா கோளரங்கமும் அமைக்கப்பட்டுள்ளன. பார்வையாளர்களே கையாண்டு புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட 600 காட்சிப் பொருட்கள் இக்காட்சிக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

6.2 அறிவியல் தொழில்நுட்பத்தினை மிகச் சிறப்பாகப் புரிந்து கொள்ள ரூ.14 இலட்சம் செலவில் முப்பரிமாண இயங்குபட அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. ஜப்பான் அரசின் நிதியுதவியினைக் கொண்டு, கணினியுதவியுடன் கூடிய கல்விச் சாதனம் ஒன்று ரூ.80 இலட்சம் செலவில் 2005–2006–ல் அமைக்கப்படவுள்ளது.

6.3 2004 ஆம் ஆண்டு அறிவியல் விழிப்புணர்வு ஆண்டு என சிறப்பாகக் கொண்டாடப்பட்டது போன்றே, 2005 ஆம் ஆண்டு இயற்பியல் ஆண்டு என மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

6.4 2005–2006 ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா அறிவியல் மையத்தில் சுற்றுப்புறச்சூழல் காட்சிக் கூடம் அமைக்கப்பட்டு அப்பகுதியின் நலனுக்காக அர்ப்பணிக்கப்படும்.



6.5 வேலூரில், மாவட்ட அறிவியல் மையம் நிறுவ, அரசு ரூ.228 இலட்சம் அனுமதித்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வரின் 15 அம்சத் திட்டத்தில் கூறியுள்ளபடி பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் பயனளிக்கும் பல்வேறு அறிவியல் நிகழ்ச்சிகளை இம்மையம் ஆண்டு முழுவதும் நடத்தி வருகிறது. ஆசிரியர்களுக்கான அறிவியல் பயிற்சி வகுப்புகளும், மாணவர்களுக்கான அறிவியல் முகாம்களும், வானியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. மேலும் மருத்துவருடன் நேர்முகம், அறிவியல் அறிஞருடன் நேர்முகம், நேரடி அறிவியல் செயல்முறை விளக்கம், பொம்மலாட்டம் மூலம் அறிவியல் தகவல் தொடர்பு, அறிவியல் கண்காட்சிகள், இரவு வான் நோக்குதல், திறன் தேர்வுப் போட்டிகள், வானியல் போட்டிகள், குறைந்த செலவில் அறிவியல் பயிற்சிக் கருவிகள் செய்தல், மாநில அளவிலான வினாடி வினா போட்டி, குறுகிய கால வானியல் பயிற்சி மற்றும் கணிப்பொறி பயிற்சி வகுப்புகள் நடத்துதல், தேசிய அறிவியல் தினம், தேசிய தொழில்நுட்ப தினம் கொண்டாடுதல் ஆகியவை இம்மையத்தின் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

## 7. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

7.1 அறிவியல் தொழில்நுட்பத்தை மக்கள் மற்றும் இளைஞர்களிடையே பரப்பி அவர்களிடம் அறிவியல் உணர்வை உருவாக்குவதும், அறிவியல் தொழில்நுட்பத்தில் ஆய்வுகளை ஊக்குவிப்பதும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் குறிக்கோள்களாகும்.

7.2 2004–2005 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் செவ்வனே நிறைவேற்றியுள்ளது:

### அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்கள்

7.3 இந்தத் திட்டத்தின்மூலம் வேளாண்மை, சுற்றுச்சூழல் அறிவியல், இயற்பியல், உயிரியல், கால்நடை மருத்துவவியல், மருத்துவவியல், சமூகவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பிரிவுகளில் நம் மாநிலத்திலுள்ள தகுதி வாய்ந்த அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நமது மாநிலத்திற்குப் பயனுள்ள முக்கியமான, சமுதாயத்திற்குத் தேவையான திட்டங்களில் ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை ஆராய்ச்சி செய்வதற்கு ரூ.3 இலட்சம் நிதி உதவி வழங்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 6

**மாணவர் ஆய்வுத் திட்டம்**

7.4 இத்திட்டத்தின்கீழ், தொழில்நுட்பவியல், மருத்துவயியல், வேளாண்மையியல், கால்நடை மருத்துவயியல் போன்ற துறைகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கு சமூக சம்பந்தமுள்ள ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு அதிகபட்சமாக ரூ. 10,000/– வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

**இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல் (YSFS)**

7.5 35 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு தெரிந்துகொள்வதற்காக, அவர்களை நம் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஏதாவது ஒன்றில் ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும் நுண் கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் ஊக்கப்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி தாங்கள் பணிபுரியும் தாயக நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக மாதம் ரூ.3,000/– அவர்களுக்கு ஆதரவு ஊதியமாக இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும்.

**இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண உதவித் திட்டம்**

7.6 இத்திட்டத்தின்கீழ், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகள் / ஆராய்ச்சி மையங்களில் பணிபுரிந்து வரும் இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொண்டு தங்களுடைய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிக்கச் செல்வதற்குத் தேவையான விமானப் பயணத் தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000/– வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய உள்நாட்டு மாநாடுகளில் பங்குகொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக் கட்டணமும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 6]

**தமிழக அறிவியலறிஞர்கள் விருது (TANSA)**

7.7 இத்திட்டத்தின்படி, ஒவ்வொ[illegible]ண்டும் (1) வேளாண்மை (2) உயிரியல் (3) வேதியியல் (4) பொறியிய[illegible]தொழில்நுட்பம் (5) சுற்றுப்புறச் சூழலியல் (6) மருத்துவம் (7) கணிதவிய[illegible] (8) இயற்பியல் (9) சமூகவியல் (10) கால்நடை மருத்துவயியல் போன்ற 10 துறைகளைச் சார்ந்த சிறந்த அறிவியலறிஞர்களுக்கு தமிழக அறிவியலறிஞர்கள் என்ற பெயரில் விருதுகள், அவர்களை ஊக்குவித்து பெருமைப்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றன. இந்த விருதுக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய துறையில் அவர்களுடைய செயல்திறமை மற்றும் ஆராய்ச்சியின் வாயிலாக தமிழகத்தின் அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டுக்காக முக்கிய பங்காற்றியிருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியலறிஞர்களுக்கு ரூ.10,000/– ரொக்கமும், தாமிரப் பட்டயமும், சான்றிதழும் வழங்கப்படுகிறது.

**இளம் மாணவ அறிவியலறிஞர்கள் திட்டம்**

7.8 நமது மாநிலத்தில் எட்டாவது வகுப்பு பயின்று வரும் அறிவியலில் திறமை வாய்ந்த இளம் மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றிய அறிவூட்டி அவர்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை தங்கள் தொழிலாகத் தேர்ந்தெடுப்பதற்குரிய ஆர்வத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கு நுழைவுத் தேர்வுமூலம் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாணவர்களுக்கு அவர்கள் பத்தாவது வகுப்பு முடிக்கும் வரை பெயர் பெற்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் மே திங்களில் ஒரு மாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்**

7.9 அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், தொண்டு நிறுவனங்கள் போன்ற அமைப்புகள் அறிவியல் கண்காட்சிகள், ஆசிரியர் பயிற்சி முகாம்கள், பொது விரிவுரைகள், கண்ணொலி ஒளிக்காட்சி, காட்சி வில்லைகள், வினாடி வினா போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 6

**கருத்தரங்கு, அறிவியல் முகாம் நடத்துவதற்கு நிதியுதவி அளித்தல்**

7.10 இத்திட்டம் அறிவியலறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொண்டு கருத்தரங்குகள், அறிவியல் முகாம்கள் நடத்தி அறிவியல் அறிவுப் பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள அமைப்புகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்**

7.11 அறிவியல் தொழில்நுட்பம் பற்றிய தகவல்களை பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே பரப்புவதற்காக குறிப்பாக தன்னார்வ அமைப்புகள் தமிழில் வெளிக்கொணரும் அறிவியல் வெளியீடுகளுக்கு நிதி உதவி வழங்குவதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

## 8. அறிவியல் நகரம்

8.1 சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் அறுபதுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), அறிவியல் மையம் போன்ற நிறுவனங்கள் உட்பட மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களும் அமைந்த இப்பகுதி அறிவியல் நகரம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவியல் நகரத்தின் நோக்கம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வளர்ப்பதாகும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்காக அறிவியல் நகரம் பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

8.2 கீழ்க்கண்ட திட்டங்கள் 2004–2005–ல் செயல்படுத்தப்பட்டன :

**விவர தளம் உருவாக்குதல்**

8.3 அறிவியல் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு, விவர தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 6]

**செய்தி மடல்**

8.4 அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள சமீபகால முன்னேற்றங்கள் அறிவியல் நகரத்தின் செய்தி மடலில் தொகுத்து வழங்கப்படுகிறது. தலைச்சிறந்த அறிவியல் நிபுணர்களின் செய்தியும், சமீபகாலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய கட்டுரைகளும் இச்செய்தி மடலில் இடம் பெறுகின்றன.

**அறிவியலை பிரபலப்படுத்துதல்**

8.5 அறிவியல் சார்ந்த விரிவுரைகள், அறிவியல் நிபுணர்களைச் சந்தித்தல், அறிவியல் நகர உறுப்பினர் நிறுவனங்களுடன் சேர்ந்து அறிவியல் கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள் நடத்துதல், அறிவியல் அறிவியல் கண்காட்சிகள், பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் மன்ற விருதுகள் வழங்குதல் மற்றும் அறிவியல் முகாம்கள் நடத்துதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும்.

**பெண்கள் முன்னேற்றம்**

8.6 பெண்களின் ஆற்றலை மேம்படுத்துதல் தமிழக அரசின் செயல் திட்டத்தின் முக்கியமானதொரு அம்சமாகும். தொழில்முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சிகள்மூலம் பெண்களிடம் உள்ள செயல்திறனை வெளிக்கொணர்ந்து தற்சார்புடன் செயல்பட்டு தன் சொந்தக் கால்களில் நிற்பதற்கு அறிவியல் நகரம் வழிவகுக்கிறது. பெண் அறிவியல் நிபுணர்களின் நிலையைக் கண்டறிய மாநிலம் முழுவதும் உள்ள பெண் நிபுணர்கள் குறித்த புள்ளி விவரங்களை அறிவியல் நகரம் சேகரிக்கிறது. பெண் அறிவியல் நிபுணர்களை ஊக்குவிப்பதற்காக அறிவியல் நகரம் இளம்பெண் விஞ்ஞானி விருது மற்றும் வாழ்நாள் பெண் சாதனையாளர் விருது ஆகிய விருதுகளை வழங்குகிறது.

## 9. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

9.1 தலைமைச் செயலகம் மற்றும் இதர சில துறைகள் சார்ந்த 30 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆவணங்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் காப்பகமாகவும், ஐந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட தலைமைச் செயலகம் சார்ந்த ஆவணங்களின் இடைநிலைக் காப்பகமாகவும், இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல் தொகுதிகளைக் கொண்டிருக்கும் நூலகமாகவும் ஆவணக் காப்பகம் விளங்குகிறது.

9.2 பழமை வாய்ந்த, வரலாற்று முக்கியத்துவமுள்ள ஆவணங்களை முறையாகப் பாதுகாப்பதுடன், தேவைப்படும்போது ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் அரசுத் துறைகளுக்கும் ஆவணக் காப்பகம் அவற்றை வழங்கி வருகிறது. சிப்பாய் கலகத்திற்கு முற்பட்ட ஆவணங்களை நுண்புகைப்படம் எடுக்கும் பணி 60 விழுக்காடுகள் தற்போது முடிவடைந்து மேலும் தொடர்ந்து நடைபெறுகிறது.

9.3 கோவை மாவட்ட ஆவணக் காப்பகத்திற்குக் கட்டடம் கட்டவும், சிப்பாய் கலகத்திற்கு முந்தைய 1670–1857 ஆம் ஆண்டுகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் ஆவணங்களைக் கொண்ட ஆவண அறையில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

## 10. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

10.1 மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்தவும், உயர் கல்விக்கான பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவுடன் திட்டங்களை ஒருங்கிணைந்து செயல்படவும் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1992 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட சட்ட வாயிலாக உருவாக்கப்பட்டது. அரசின் நிதியுதவியுடன் இம்மன்றம் தன் செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

10.2 உயர் கல்வி மற்றும் ஆய்வு தொடர்பாக அரசு, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவை அணுகும்போது அவற்றுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குதல், உயர் கல்வி மேம்பாட்டிற்கான தகுந்த திட்டங்களை மாநில அளவில் உருவாக்குதல், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கிணங்க உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில் அவற்றின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு உருவாக்கிடவும் அவற்றை நிறைவேற்றவும் உதவி செய்தல், மாநில அளவில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டங்களைத் தெரிவு செய்து மன்றத்தின் குறிப்பு மற்றும் பரிந்துரையுடன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்கு அனுப்புதல் மற்றும் திட்டப் பணிகளின் செயலாக்கத்தைக் கண்காணித்தல், உயர் கல்வி நிறுவனங்களிடையே பணிகளில் செயலாக்கத்தைக் கண்காணித்தல், ஒத்துழைப்பினை உயர்த்துதல்,



ஒருங்கிணைத்தலை மேம்படுத்துதல் மற்றும் அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்புகொள்வதற்கான வசதி வாய்ப்புகளைக் கண்டறிதல், மாநிலத்தில் உயர் கல்விக்கென கூடுதல் நிதி ஆதாரங்களை ஏற்படுத்தும் வழிவகை குறித்து அறிவுரை நல்குதல், உயர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டத்தைச் செழுமைப்படுத்தவும், காலத்திற்கேற்ற வகையில் கல்வித் தரத்தைச் சீரமைக்க உதவுதல், கல்வித் தரத்தை நிர்ணயிக்க பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்குத் தேவையான உதவி புரிதல் ஆகியவை இம்மன்றத்தின் முக்கியப் பணிகளாகும்.

10.3 இம்மன்றம் கீழ்க்காணும் செயல்களைத் துவக்கவும் / தொடரவும் திட்டமிட்டுள்ளது:–

1. ஆசிரியர் பணியிடைப் பயிற்சிக் கல்லூரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
2. பாடத் திட்டத்தினை மேம்படுத்த பல்கலைக்கழகங்களுக்கு உதவிடுதல்
3. தேர்வு முறையினை மேம்படுத்த பல்கலைக்கழகங்களுக்கு உதவிடுதல்
4. திட்டக் கருத்துருக்கள் தயாரிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்
5. மாநிலத்திலுள்ள பல்கலைக்கழக நூலகங்களை இணைத்தல்.

[2005 ஏப்ரல் 6

## தொழில்நுட்பக் கல்வி

### அட்டவணை - 1

### மாநிலத்திலுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை

| ஆண்டு | அரசு | அரசு மானியம் | சுய நிதி | இணைப்புப் பயிலகங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1997-1998 | 21 | 35 | 112 | 5 | 173 |
| 1998-1999 | 21 | 35 | 143 | 5 | 204 |
| 1999-2000 | 22 | 35 | 145 | 5 | 207 |
| 2000-2001 | 22 | 35 | 148 | 5 | 210 |
| 2001-2002 | 22 | 35 | 146 | 5 | 208 |
| 2002-2003 | 22 | 35 | 146 | 5 | 208 |
| 2003-2004 | 22 | 34 | 147 | 4 | 207 |
| 2004-2005 | 22 | 34 | 150 | 3 | 209 |

### அட்டவணை - 2

### மாநிலத்திலுள்ள பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை

| வருடம் | அரசு | அரசு மானியம் | சுய நிதி | அண்ணா பல்கலைக் கழகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1997–1998 | 7 | 3 | 76 | 4 | 90 |
| 1998–1999 | 7 | 3 | 106 | 4 | 120 |
| 1999–2000 | 7 | 3 | 113 | 4 | 127 |
| 2000–2001 | 7 | 3 | 143 | 4 | 157 |
| 2001–2002 | 7 | 3 | 207 | 4 | 221 |
| 2002–2003 | 7 | 3 | 224 | 4 | 238 |
| 2003–2004 | 6 | 3 | 226 | 4 | 239 |
| 2004–2005 | 6 | 3 | 226 | 4 | 239 |



2005 ஏப்ரல் 6]

## கல்லூரிக் கல்வித் துறை

### அட்டவணை - 3

### கல்லூரிகளின் எண்ணிக்கை விவரம் (இன வாரியாக)

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 60 |
| உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 133 |
| சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 251 |
| அரசு கல்வியியல் கல்லூரிகள் | 7 |
| உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள் | 14 |
| சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் | 22 |
| உதவிபெறும் கீழ்திசை மொழி கல்லூரிகள் | 10 |
| உதவிபெறும் உடற்கல்வியியல் கல்லூரிகள் | 3 |
| சுயநிதி உடற்கல்வியியல் கல்லூரிகள் | 1 |
| உதவிபெறும் சமூகப் பணி பள்ளிகள் | 2 |
| **மொத்தம்** | **503** |

## அட்டவணை – 4

**2004–2005 ஆம் கல்வியாண்டில் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை விவரம்**

| பாடங்களின் பெயர் | அரசுக் கல்லூரிகள் | | உதவி பெறும் கல்லூரிகள் | | உதவி பெறும் கல்லூரிகள் (சுயநிதி பாடங்கள்) | | சுயநிதி கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | |
| இளநிலை பட்ட வகுப்புகள் | | | | | | | | | |
| பி.ஏ. | 16029 | 20264 | 27640 | 29838 | 2592 | 2716 | 1841 | 5177 | 106097 |
| பி.எஸ்.சி. | 19018 | 24887 | 37664 | 39912 | 8639 | 9373 | 20708 | 28285 | 188486 |
| பி.சி.ஏ. | 0 | 0 | 62 | 40 | 2832 | 2028 | 5724 | 4666 | 15352 |
| பி.காம். | 5293 | 5466 | 15331 | 12794 | 11727 | 9474 | 14516 | 19204 | 93805 |
| பி.பி.ஏ. | 233 | 467 | 1490 | 892 | 2448 | 1758 | 4775 | 4046 | 16109 |
| பி.பி.எம். | 101 | 21 | 309 | 432 | 946 | 1200 | 3088 | 2301 | 8398 |
| பி.லிட். | 0 | 0 | 403 | 1354 | 92 | 236 | 164 | 438 | 2687 |
| முதுநிலை பட்ட வகுப்புகள் | | | | | | | | | |
| எம்.ஏ. | 1028 | 1590 | 3839 | 4598 | 625 | 889 | 276 | 498 | 113343 |
| எம்.எஸ்.சி. | 776 | 1437 | 4184 | 5276 | 3918 | 4315 | 3704 | 5714 | 29324 |
| எம்.சி.ஏ. | 322 | 324 | 1902 | 1837 | 515 | 899 | 821 | 1452 | 8072 |
| எம்.காம். | 223 | 250 | 649 | 184 | 2552 | 1938 | 3186 | 2362 | 11344 |
| எம்.பி.ஏ. | 60 | 60 | 31 | 82 | 747 | 745 | 2286 | 1362 | 5373 |
| பிஜிடிசிஏ | 0 | 0 | 9 | 24 | 233 | 267 | 8 | 30 | 571 |
| ஆராய்ச்சி பட்ட வகுப்புகள் | | | | | | | | | |
| எம்.பில். | 136 | 193 | 557 | 761 | 374 | 507 | 48 | 182 | 2758 |
| பி.எச்.டி. | 34 | 33 | 75 | 110 | 151 | 117 | 40 | 28 | 588 |
| பி.எட். | 447 | 521 | 417 | 1311 | 0 | 14 | 550 | 650 | 4010 |
| எம்.எட். | 25 | 0 | 28 | 82 | 0 | 33 | 550 | 650 | 1368 |
| பி.ப்பி.எட். | 0 | 0 | 410 | 97 | 0 | 0 | 24 | 12 | 543 |
| எம்.ப்பி.எட். | 0 | 0 | 98 | 61 | 0 | 0 | 0 | 0 | 159 |
| இதர பிரிவுகள் | 11 | 238 | 839 | 730 | 1851 | 1432 | 7400 | 5848 | 18349 |
| மொத்தம் | 43736 | 55751 | 95937 | 100415 | 40242 | 37941 | 69159 | 82255 | 525436 |

# இணைப்பு II

(85 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 41

## பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

—திருவள்ளுவர்

ஒரு நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி மிகவும் இன்றியமையாததாகிறது. கல்வியின் மகத்துவத்தை உணர்ந்து, அரசு கல்விக்கு நிதி ஒதுக்குவதில் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது எழுச்சிமிகு தலைமையின்கீழ் கடந்த ஆண்டுகளில் கல்வித் திட்டங்களைச் சீராக நிறைவேற்றுவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. பள்ளிக் கல்வித் துறை கீழ்க்காணும் கொள்கைகளை வகுத்து செயலாற்றி வருகிறது:

- மக்கள் தொகை 300–க்கு அதிகமாகவும், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் பள்ளிகளே இல்லாத அனைத்து குடியிருப்புகளிலும், தொடக்கப் பள்ளி வசதியை ஏற்படுத்துதல்
- அனைத்து குடியிருப்புகளிலும் 3 கி.மீ. தூரத்திற்குள் நடுநிலைப் பள்ளி வசதியை ஏற்படுத்துதல



- 5 கி.மீ. தூரத்திற்குள் உயர்நிலைப் பள்ளி மற்றும் 8 கி.மீ. தூரத்திற்குள் மேல்நிலைப் பள்ளி வசதி ஏற்படுத்துதல்
- பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்
- 2007–க்குள் அனைத்து குழந்தைகளுக்கும் ஐந்து ஆண்டுகள் கல்வியை அளிக்கச் செய்தல்
- 2010–க்குள் அனைத்து குழந்தைகளுக்கும் எட்டு ஆண்டுகள் கல்வியை அளிக்கச் செய்தல்
- 2010–க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே தடுத்தல்
- பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
- பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துதல்
- பள்ளிகளில் பாலர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை தரம் உயர்த்துதல்
- குறைந்தபட்சக் கல்வி கற்றலை உறுதி செய்தல்
- ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்
- கல்லாமையை இல்லாமை ஆக்குதல்
- எழுத்தறிவு மற்றும் பள்ளிச் சேர்க்கையில் பாலியல் இடைவெளியை நீக்குதல்
- எழுத்துத் தேர்வு மூலம் தரமான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல்
- கிராமங்களில் நூல் நிலையங்களை ஏற்படுத்துதல்
- பள்ளிகளில் உடல் நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்
- பள்ளிகளின் நிருவாகத்தில் பெற்றோர்களை ஈடுபடச் செய்தல்
- பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல்வி அளித்து தமிழகத்தின்வருங்கால சமுதாயத்தை கணினி அறிவு மிக்க சமுதாயமாக மாற்றுதல்

இக்கொள்கைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், அனைவர்க்கும் கல்விக்கான மாநில திட்ட இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், பள்ளிசாராக் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகம், அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திட பாடுபடுகின்றன.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 41–பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2005–2006 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4,348.01 கோடி ஆகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ரூ.377.63 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 பொதுப் பணிகள் – அரசுப் பள்ளிகள் கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | – | 1530.07 | 1530.07 |
| 2202 பொதுக் கல்வி | | | |
| 01 தொடக்கக் கல்வி | 16529.64 | 199108.27 | 215637.91 |
| 02 இடைநிலைக் கல்வி | 6801.21 | 191378.44 | 198179.65 |
| 04 முதியோர் கல்வி | 43.00 | 57.97 | 100.97 |
| 05 மொழி வளர்ச்சி | 3.00 | 414.75 | 417.75 |
| 80 பொதுவானவை–ஏனைய செலவு | 0.01 | — | 0.01 |
| மொத்தம் | 23376.86 | 390959.43 | 414336.29 |



| | | | | |
|---|---|---|---|---|
| 2204. | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | 236.57 | 101.77 | 338.34 |
| 2205. | கலையும் பண்பாடும் – பொது நூலகங்கள் | — | 1502.28 | 1502.28 |
| 2225. | ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் | 1795.91 | 20.42 | 1816.33 |
| 2235. | சமூகப் பாதுகாப்பும், நலனும் | — | 185.51 | 185.51 |
| 2251. | தலைமைச் செயலகம் – சமூகப் பணிகள் | — | 223.69 | 223.69 |
| 2505. | ஊரக வேலைவாய்ப்பு | 4787.69 | — | 4787.69 |
| 4202. | கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 7565.72 | — | 7565.72 |
| 7610. | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | — | 15.00 | 15.00 |
| 7615. | பல்வகைக் கடன்கள் | — | 0.50 | 0.50 |
| | சேர்க்க – திருப்பி வசூலிக்கப்பட்டவை | — | — | 2500.00 |
| | பெருமொத்தம் | 37762.75 | 394538.67 | 434801.42 |

[2005 ஏப்ரல் 6

## 2005–2006 ஆம் ஆண்டிற்கான பகுதி–II–புதிய திட்டங்கள்

| வ. எண் | திட்டங்களின் வகை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது |
| 1 | 100 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு ஒன்றுக்கு ரூ.50,000/– என்ற வீதத்தில் கணினி வழங்குதல் | — | 50.00 |
| 2 | தொடக்கக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கும் 15 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கும் 16 ஜெராக்ஸ் எந்திரங்கள் வழங்குதல் | — | 15.00 |
| 3 | தொடக்கக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலுள்ள 3 அதிகாரிகளுக்கு அலுவலகப் பயன்பாட்டுக்கு கணினி வழங்குதல் | — | 1.50 |
| 4 | தொடக்கக் கல்வி இயக்குநரகத்தில் EPABX தொலைபேசி இணைப்பக வசதி ஏற்படுத்துதல் | — | 1.56 |
| 5 | நான்கு மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் (கட்டடம் ஒன்றிற்கு ரூ.7.68 இலட்சம்) | 30.72 | — |
| 6 | ஐந்து உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் (கட்டடம் ஒன்றிற்கு ரூ.7.00 இலட்சம்) | 35.00 | — |
| 7 | 60 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | 157.76 | — |
| 8 | 90 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | — | 167.63 |
| 9 | பள்ளிக் கல்வி இயக்ககத்தைக் கணினிமயமாக்கல் | — | 10.00 |
| 10 | அலுவலகம் ஒன்றிற்கு ரூ.55,000/– செலவில், 30 மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகங்களையும் கணினிமயமாக்கல் | — | 16.50 |



2005 ஏப்ரல் 6]

| | | | |
|---|---|---|---|
| 11 | பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு 2 ஜெராக்ஸ் மற்றும் ஒரு நிகரி எந்திரங்களை வழங்குதல் | — | 2.50 |
| 12 | பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் EPABX தொலைபேசி இணைப்பக வசதியை மாற்றியமைத்தல் | — | 2.00 |
| 13 | 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் சாதனங்கள் வழங்குதல் | 90.00 | — |
| 14 | 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பாடம் கற்பிப்பதற்கான கற்பிப்பு துணை கருவிகள் அளித்தல் | 30.00 | — |
| 15 | 96 மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 130 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதியை அதிகரித்தல் | 37.50 | — |
| 16 | 200 மேல்நிலைப் பள்ளிகளிலும், 100 உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கில மொழிப் பயிற்று ஆய்வகங்களை ஏற்படுத்துதல் | 150.00 | — |
| 17 | 90 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்விக்கு வகை செய்தல் | 200.00 | — |
| 18 | இடைநிலை/ மேல்நிலை ஆசிரியர்களுக்கான பணியிடை புத்தாக்கப் பயிற்சித் திட்டம் | 50.00 | — |
| 19 | 80 மேல்நிலைப் பள்ளிகளில் புதிய பாடத் திட்டங்களை கற்பிப்பதற்கான கருவிகளை வழங்குதல் | 96.00 | — |
| 20 | மேல்நிலைப் பள்ளி தலைமைக் கண்காணிப்பாளர்களுக்கும் தலைமைத் தேர்வாளர்களுக்கும் வினாக்கள் தயாரித்தல், பயிற்சி நடத்துதல் ஆகியவற்றில் அனுபவம் பெற மதிப்பீட்டுப் பயிற்சித் திட்டம் | 10.00 | — |
| 21 | கல்வியறிவு நிலையில் பின்தங்கிய 43 வட்டாரங்களில் பெண்களுக்கான சிறப்புக் கல்வித் திட்டம் | 43.00 | — |

[2005 ஏப்ரல் 6

| | | | |
|---|---|---|---|
| 22 | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகத்தை கணினிமயமாக்கல் | — | 8.44 |
| 23 | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகத்திற்கு டிவிடி, விசிடி, ஒலிபெருக்கி, தொலைக்காட்சிப் பெட்டி போன்ற சாதனங்களை வாங்குதல் | — | 4.00 |
| 24 | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அலுவலகத்திற்குக் கல்வி தொலைக்காட்சி படப்பிடிப்பு நிலையத்திற்கான கணினி வன்பொருள் | — | 31.50 |
| 25 | தொலைக்காட்சி வழி கல்வி தயாரிப்பதற்கான மென்பொருள் | — | 24.36 |
| 26 | மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களுக்கு வீடியோ நிகழ்ச்சிகளை நகல் எடுத்து வழங்குதல் | — | 6.00 |
| 27 | மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் தரத்தை உறுதி செய்வதற்குப் பள்ளித் தலைவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல் | — | 7.00 |
| 28 | மெட்ரிகுலேஷன்/ மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 9 ஆம் வகுப்பு ஆசிரியர்களுக்கு திருத்திய பாடத் திட்டத்தில் புத்தாக்கப் பயிற்சி அளித்தல் | — | 25.00 |
| | மொத்தம் | 772.22 | 530.75 |
| | | | 1302.97 |



2005 ஏப்ரல் 6]

## 2001–2005 ஆம் ஆண்டுகளில் முக்கிய சாதனைகள்

❖ தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவர்க்கும் அடிப்படைக் கல்வி வழங்கிட ஒரு பெரும் இயக்கமாக "அனைவர்க்கும் கல்வித் திட்டம்" 2001–2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.1649 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

❖ அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 31–3–2004 முடிய ரூ.357.15 கோடி செலவிடப்பட்டு புதிய பள்ளிகள் தொடங்குதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், வட்டார, கள ஆய்வு மையங்கள் கட்டுதல், ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல், பள்ளிகளுக்குக் குடிநீர், கழிப்பிட மற்றும் பள்ளி கட்டட பராமரிப்புப் பணிகள் போன்ற பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 449.04 கோடி செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

❖ 2001–2005 ஆண்டுகளில், 1112 தொடக்கப் பள்ளிகள், 2106 நடுநிலைப் பள்ளிகள், 295 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 335 மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், தொடக்கப் பள்ளி வசதி மற்றும் நடுநிலைப் பள்ளி வசதி செய்து கொடுத்தல் என்ற இலக்கு 100 விழுக்காடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

❖ முதல் முறையாக கல்வித் துறைக்காக 'நபார்டு' வங்கியிடம் நிதியுதவி பெற்று மூன்று கட்டங்களாக 605 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.182.74 கோடி செலவில் பணிகள் துவக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன. மேலும் 549 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.232.10 கோடி செலவில் இத்திட்டப் பணிகளை நிறைவேற்ற நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

❖ ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 6

- அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட சுமார் 20,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது 15,670 மாணவர்கள் பயிற்சியினை முடித்துள்ளனர். அடுத்தகட்டமாக 3576 மாணவர்கள் 2004–2005 ஆம் ஆண்டில் பயிற்சியினை மேற்கொண்டு வருகின்றனர்.
- பள்ளி ஆண்டுத் தேர்வில் 6–12 வகுப்புகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்கள் வரை தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறு தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.
- பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த 6,7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பி.எட். தகுதி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்பட்டு அவ்வாறே நியமிக்கப்படுகின்றனர்.
- 2001–2005 ஆம் ஆண்டுவரை 46,494 ஆசிரியர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ளது.
- பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பகம் மூலம் நியமிக்கப்படும் இடைநிலை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர் நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பினையும் அரசு நீக்கியுள்ளது.
- மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டு அப்பள்ளிகள் வரையறுக்கப்பட்டுள்ள வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
- 867 கிராமப்புற நூலகங்கள் துவக்கப்பட்டுள்ளன. சென்னையில் கன்னிமாரா நூலகத்தில் நிரந்தர புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இசை, கலை, பேச்சுத்திறன் போன்றவற்றில் திறமையுள்ள மாணவர்களைக் கண்டறிந்து, அதனை வெளிக்கொணர இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 6]

- தமிழ்நாட்டில் பயிலும் எந்தவொரு மாணவ, மாணவியும் பள்ளிப் படிப்பை முடித்துச் செல்லும்போது தமிழ் கற்காமல் செல்லக்கூடாது என்பதை உறுதி செய்யும் நோக்குடன் அறிவியல் தமிழ் என்ற பாடத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆணையிட்டார்கள்.
- உலக அளவில் பெருமளவில் பயன்படுத்தப்படும் மொழியாக ஆங்கிலம் உள்ளது. கணினியை பயன்படுத்தி வேலைவாய்ப்பு அதிக அளவில் பெறுவதற்கும் ஆங்கிலம் இன்றியமையாததாக உள்ளது. இதனை உணர்ந்து மாநிலப் பாடத் திட்டப் பள்ளிகளில் முதலாம் வகுப்பிலிருந்தே ஆங்கில மொழியை கற்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் கல்வி ஆண்டிலிருந்து முதலாம் வகுப்பில் ஆங்கிலம் கற்றுத் தரப்படுகிறது.
- பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்த பல்வேறு வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு தனி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- பள்ளிகளில் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கில பாடத்தில் தோல்வியுறுவதை அறிந்து ஆங்கிலத்தில் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2003–2004 முதல் புதியதொரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 600 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பயிற்சி ஆய்வுக் கூடங்கள் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் மேலும் 300 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.
- குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும்போது அவர்களின் பெயருக்கு முன்பாக அவர்களுடைய தந்தையின் பெயரின் முதல் எழுத்து மட்டுமே தலைப்பெழுத்தாக குறிப்பிட்டு வந்த நடைமுறையினை மாற்றி, அக்குழந்தையின் பெற்றோர்களின் விருப்பப்படி அக்குழந்தையின் பெயருக்கு முன்பாக, தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும், அதனையடுத்து தந்தையின் பெயரில் உள்ள

முதல் எழுத்தையும் அல்லது தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ தலைப்பெழுத்தாக பயன்படுத்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

❖ தேக்கமின்றி தேர்ச்சி என்ற கொள்கைக்கு அரசு ஏற்பளித்து 2004–2005 முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 75 விழுக்காடு வருகைப்பதிவு இருக்கும்பட்சத்தில் தேக்கமின்றி தேர்ச்சி அளிக்கப்படும். அதே நேரத்தில் தொடக்கக் கல்வியின் தரமும் உறுதி செய்யப்படுகிறது.

❖ பள்ளிகளில் சேராத குழந்தைகள், ஆதரவற்றோர், தெருவோரக் குழந்தைகள், எய்ட்ஸ்/ எச்.ஐ.வி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் மற்றும் பாலியல் சுரண்டலால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளை, பிறப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவற்றினை வற்புறுத்தாமல் பள்ளிகளில் எந்த நேரத்திலும் சேர்ப்பதற்காக சேர்க்கை விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

❖ தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் 2001–2002 ஆம் ஆண்டில் 16 விழுக்காடு என்ற நிலையிலிருந்து 2003–2004 ஆம் ஆண்டில் 8 விழுக்காடாகக் குறைந்தது. 2004–2005 ஆம் ஆண்டில் இது 6 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதே போன்று நடுநிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதமும் 2004–2005 ஆம் ஆண்டில் 9 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

## 1. தொடக்கக் கல்வி

இந்திய அரசியலமைப்புச் சட்டம், கூறு 21–Aன்படி, ஆறு முதல் பதினான்கு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அரசு அளிக்க வேண்டும். பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேரச் செய்வதற்காக கட்டாய ஆரம்ப கல்விச் சட்டம், 1994 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. "அனைவர்க்கும் கல்வி" என்ற இலக்கினை அடைய மாநில அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாநில அரசின் பல்வேறு நலத் திட்டங்களின் செயல்பாட்டினால், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையிலும்



மற்றும் மாணவர்களை பள்ளிகளில் தக்கவைத்துக் கொள்வதிலும் மட்டுமல்லாமல், இடைநிற்றலைக் குறைப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

### 1.1. குறிக்கோள்

- பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்.
- பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் அனைவரையும், 8–வது வகுப்பு முடிக்கும்வரை தொடர்ந்து பயிலச் செய்தல்
- இடைநிற்றல் என்ற நிலையே இல்லாமல் செய்தல்
- தரமான கல்வியை வழங்குதல்
- குறைந்தபட்ச கல்வித்திறன்களை அனைத்து மாணவர்களும் பெறுவதை உறுதி செய்தல்
- ஈடுபாட்டுடனான சமுதாயப் பங்கேற்பு வாயிலாக கல்வி மேலாண்மையைப் பரவலாக்குதல்.

### 1.2. புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தொடங்குதல்

வீட்டுக்கு அருகில் பள்ளி அமைந்திருத்தல் நூறு விழுக்காடு சேர்க்கையை உறுதிப்படுத்துகிறது. 2001–2005 ஆண்டுகளில் 1112 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 2106 நடுநிலைப் பள்ளிகளும் தொடங்கப் பட்டுள்ளன. இதன் மூலம் குடியிருப்புப் பகுதிகளில் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் தொடக்கப் பள்ளி வசதி 2003–2004 ஆம் ஆண்டில் 100 விழுக்காடு எட்டப்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதிகளில் மூன்று கிலோ மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப்பள்ளி வசதி 2004–2005–ல் 100 விழுக்காடு எட்டப்பட்டுள்ளது.

### 1.3. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள்

துறையின் அனுமதியுடன் தற்போது சுமார் 3111 மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் (Nursery and Primary schools) செயல்பட்டு வருகின்றன. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் அனுமதிக்கான விதிமுறைகளின்படி இப்பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 6

கும்பகோணம் தீ விபத்து துயர நிகழ்வினையடுத்து, அனைத்து பள்ளிக் கட்டடங்களிலும் பாதுகாப்புக்கு ஏதுவாக பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஓலையால் வேயப்பட்ட மேற்கூரைகளை உடைய மதிய உணவு மையங்கள் உட்பட அனைத்துப் பள்ளிகளையும் ஆய்வு செய்து அவ்வோலைக் கூரைகளை அகற்றி அதற்குப் பதிலாக தீப்பற்றாத மேற்கூரைகளை அமைக்க மாவட்ட ஆட்சியரின் கண்காணிப்பின்கீழ் குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி அனைத்து ஓலைக்கூரைகளும் அகற்றப்பட்டன. இதனைத் தவிர பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தீ விபத்து தடுப்பு சம்பந்தமாக தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையிடமிருந்து அனைத்துப் பள்ளிகளும் தடையின்மைச் சான்றிதழ் பெற வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தீ விபத்து தடுப்பு குறித்து அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி முகாம் நடத்தப்பட்டுள்ளது.

கும்பகோணம் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலையை விசாரிப்பதற்காக, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு. கே. சம்பத் அவர்கள் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது. இவ்வகையான நிகழ்வு மீண்டும் ஏற்படாமலிருப்பதை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகளை இக்குழு பரிந்துரை செய்யும். இவ்விசாரணைக்கு உதவிகரமாக வல்லுநர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### 1.4. கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்

கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக 1–8 வகுப்புகளை கையாளும் அனைத்து ஆசிரியர்களுக்கும், அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின்கீழ், ஒவ்வோர் ஆண்டும் குறைந்தபட்சம் 20 நாட்கள் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வகுப்பறை கற்பித்தலை, குழந்தையை மையமாகக் கொண்டு கற்றலில் இனிமை ஏற்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு செய்முறைகள் மூலம் நடத்த, கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் தயாரிப்பதற்காக ஒவ்வொரு ஆசிரியருக்கும் உதவித் தொகையாக ரூ.500/– ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 6]

### 1.5. தேக்கமின்றி தேர்ச்சி திட்டம்

தேர்வில் தோல்வி என்பது, இளம் உள்ளங்களின் தன்னம்பிக்கையைத் தகர்ப்பதுடன் அவர்களை படிப்பிலிருந்து இடைநிற்றலுக்கு வழிவகுக்கவும், அவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக மாறவும் வழிவகுக்கிறது. இதனால் அனைவர்க்கும் கல்வி என்ற இலக்கினை எய்தவியலாத நிலை உருவாகிறது. எனவே தேக்கமின்றி தேர்ச்சி என்ற கொள்கைக்கு அரசு ஏற்பளித்து 2004-2005 முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 75 விழுக்காடு வருகைப்பதிவு இருக்கும்பட்சத்தில் தேக்கமின்றி தேர்ச்சி அளிக்கப்படும். அதே நேரத்தில் தொடக்கக் கல்வியின் தரமும் உறுதி செய்யப்பட்டுவருகிறது.

### 1.6. பள்ளிகளில் அடிப்படை வசதிகள்

பள்ளி வயதுக் குழந்தைகளை முழுமையாக பள்ளியில் சேர்த்தல் மற்றும் அவர்களை பள்ளியில் தக்க வைத்தல் ஆகியவற்றை எய்துவதற்கு ஒரு பள்ளியானது, போதுமான அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கவேண்டும். அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2003–2004 வரை 5601 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் கட்டப்படும் 10043 வகுப்பறைகள் ஜூன் 2005–ல் பயன்பாட்டிற்கு வரும். இவை தவிர, மேசை, நாற்காலி, அலமாரி போன்றவை வாங்குவதற்கு பள்ளி உதவித் தொகையும், வெள்ளையடித்தல், கதவுகள், சாளரங்கள் மற்றும் தரை பழுது பார்ப்பது போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு பராமரிப்பு உதவித்தொகையும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2004–2005–ல் பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1452 கிராம தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.4.00 கோடி செலவில் இரும்பு பெஞ்சுகள் மற்றும் மேசைகள் வழங்கப்பட உள்ளன.

### 1.7. நலத் திட்டங்கள்

பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதால், பெரும்பாலான பள்ளி வயதுக் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்பட்டு, இடைநிற்றலும் குறைக்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 1982–ல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1985–1986 முதல் மதிய உணவுத் திட்டத்தில் பயன் பெறும் 1–8 வகுப்பு மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு

[2005 ஏப்ரல் 6

வருகிறது. 1986 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் அனைத்து குழந்தைகளுக்கும், 6 முதல் 8 வகுப்பு வரை சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தற்போது 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற, மாணவ, மாணவியர் அனைவருக்கும் இலவசமாகப் பாட நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அதேபோல் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு சில வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோலின்படி இலவசமாகப் பாட நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தொடர்ந்து கல்வி பயில உற்சாகம் அளித்து அவர்களது பெற்றோருடைய கல்விச் செலவின் பளுவைக் குறைத்து, தமிழகத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் 10 ஆம் வகுப்பு வரையிலான இடைநிலைக் கல்வி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், சில வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோலின்படி, இலவசப் பாட நூல்கள் வழங்கப்படுவதை மாற்றி அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவசமாகப் பாட நூல்கள் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். **இதன்படி, 1 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் தேவையான பாட நூல்கள் அனைத்தும் இலவசமாக வரும் கல்வி ஆண்டு முதலே அதாவது, 2005–2006 ஆம் ஆண்டில் இருந்தே செயல்படுத்தப்படும்.**

ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய், விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியைத் தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படுகிறது. அவ்வாறான சூழ்நிலைகளில் அத்தகைய குழந்தைகள் தங்களது கல்வியை இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கல்வி கற்கும் வகையில், அவர்களது கல்விப் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்தப் புதிய திட்டத்தின்படி, **அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம்**



2005 ஏப்ரல் 6]

**வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும்.** இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும்.

### 1.8. அறிவியல் தமிழ்

தமிழ்நாட்டில் பயிலும் எந்தவொரு மாணவ, மாணவியும் பள்ளிப் படிப்பை முடித்துச் செல்லும்போது தமிழ் கற்காமல் செல்லக்கூடாது என்பதை உறுதிசெய்யும் நோக்குடன் அறிவியல் தமிழ் என்ற பாடத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆணையிட்டார்கள். அனைத்துப் பள்ளிகளிலும் மழலையர் வகுப்பிலிருந்து மேல்நிலை வகுப்பு வரை அறிவியல் தமிழ் என்ற பாடத்தை ஒரு பாடமாக அறிமுகப்படுத்தியதால், அனைத்து மாணவ, மாணவிகளும் தற்போது தமிழ் பயில்கின்றனர். 2003–2004 ஆம் ஆண்டில் ரூ. 5.42 கோடி செலவிலும், 2004–2005 ஆம் ஆண்டில் ரூ. 4.70 கோடி செலவிலும் அறிவியல் தமிழ் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

### 1.9. அனைவருக்கும் கல்வி இயக்கம்

அனைவர்க்கும் கல்வித் திட்டம் என்பது அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை அளிப்பதற்கு ஒருங்கிணைந்த முழுமையான திட்டம் ஆகும். தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் அனைத்துப் பள்ளிகளிலும் 1–8 வகுப்புகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002-2007) ரூ.1649 கோடி அளவுக்கு திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. இச்செலவினத்தை மைய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கும்.

[2005 ஏப்ரல் 6

## 1.10. அனைவர்க்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோள்கள்

- அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்
- 2007–க்குள் அனைத்து குழந்தைகளுக்கும் ஐந்தாண்டுகள் பள்ளிக் கல்வியை அளிக்கச் செய்தல்
- 2010–க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டாண்டுகள் பள்ளிக் கல்வியை அளிக்கச் செய்தல்
- தரமான ஆரம்பக் கல்வியை வழங்குதல்
- 2010–க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே தடுத்தல்

## 1.11. 2001–2004 ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ரூ.357.15 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:

**புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள்**

- 1112 புதிய தொடக்கப் பள்ளிகள்; 2224 ஆசிரியர் பணியிடங்கள்; தொடக்கப் பள்ளி வசதியில் 100 விழுக்காடு சாதனை.
- 1075 தொடக்கப் பள்ளிகள் 1948 ஆசிரியர் பணியிடங்களுடன் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன.
- பள்ளி வசதி இல்லாத குடியிருப்புகளில் 249 கல்வி உறுதியளிப்பு மையங்கள் நடத்தப்பட்டன. இதனால் 7525 குழந்தைகள் பயன் பெற்றனர்.

**மழலையர் முன்பருவ நலக் கல்வி**

- 10000 அங்கன்வாடிகள் மழலையர் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டன. இதனால் 4.66 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.
- அங்கன்வாடி இல்லாத குடியிருப்புகளில் 573 குழந்தைகள் நலம் மற்றும் கல்வி மையங்கள்.
- 5573 ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டப் பணியாளர்களுக்குப் பயிற்சி.



2005 ஏப்ரல் 6]

- 5573 ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு திட்ட மையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

**பள்ளியில் சேராத குழந்தைகள்**

- 5366 இணைப்புப் பள்ளிகள் மற்றும் 22 உறைவிட முகாம்கள் நடத்தப்பட்டன. 3.63 இலட்சம் குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

**வட்டார வள மையங்கள், தொகுப்பு வள மையங்கள், கிராம கல்விக் குழுக்கள்**

- 385 வட்டார வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; 3930 தொகுப்பு வள மையங்கள் திறக்கப்பட்டுள்ளன; 385 மேற்பார்வையாளர்கள் மற்றும் 2695 வட்டார வள மைய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.
- 42828 பள்ளி அளவிலான கிராம கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**உதவித்தொகைகள்**

- 161080 ஆசிரியர்களுக்கு கற்றல் கற்பித்தல் சாதனங்கள் வாங்கிட ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ.500/– உதவித்தொகை.
- 32608 பள்ளிகளுக்கு ரூ.5000/– வீதம் பள்ளிக் கட்டடம் பராமரிப்பிற்கென உதவித்தொகை.
- 37251 பள்ளிகளுக்கு, பள்ளிக்கு ரூ.2000/– வீதம் பள்ளி உதவித்தொகை.
- 1112 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு பள்ளிக்கு ரூ.10000/– வீதமும் 1075 புதிய நடுநிலைப் பள்ளிகளுக்கு பள்ளிக்கு ரூ.50000/– வீதம் கற்றல் கற்பித்தல் கருவிகள் வாங்கிட உதவித்தொகை.

**ஊனமுற்றோருக்கான ஒருங்கிணைந்த கல்வி**

- 52 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வாயிலாக 56939 ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்.

[2005 ஏப்ரல் 6

**பயிற்சி**

- 150241 ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி
- 39795 கிராமக் கல்வி உறுப்பினர்களுக்கு மற்றும் 7860 தொகுப்பு வள மைய ஒருங்கிணைப்பாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி
- 12657 ஆசிரியர்களுக்கு பல்வகை தொழில் திறனில் தொழில் திறன் பயிற்சி
- உயர் தொடக்க வகுப்புகளில் 9.12 இலட்சம் மாணவிகளுக்கு தொழிற்பயிற்சி
- 11520 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுனர்களுக்கு கணினிக் கல்வியில் பயிற்சி
- 8473 அரசு பள்ளிகளிலுள்ள 15.29 இலட்சம் குழந்தைகளுக்கு கணினிக் கல்வித் திட்டம்
- 6.45 இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குழந்தைகளுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள்

**கட்டடப் பணிகள்**

- 168 வட்டார வள மைய கட்டடங்கள்; 482 தொகுப்பு வள மைய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 5601 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 4804 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி மற்றும் 5571 பள்ளிகளுக்கு கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டன.

**தேசிய தொடக்க நிலை பெண் கல்வித் திட்டம்**

- 8 மாவட்டங்களிலுள்ள 13 வட்டாரங்களில் தேசிய பெண்கள் கல்வித் திட்டம் செயல்படுத்துதல்
- 144 மாதிரி தொகுப்புப் பள்ளிகள்; 13 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள்;



2005 ஏப்ரல் 6]

- 13 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்கு, பள்ளிக்கு ரூ. 30000/– வீதம் கற்றல் கற்பித்தல் கருவிகளுக்கான உதவித்தொகை.
- 107818 மாணவிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.150/– வீதம் கற்றல் துணை சாதனங்கள் வாங்கிட உதவித்தொகை.

**1.12. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.449.04 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் ஆண்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான செயல்பாடுகளின் விவரம் வருமாறு:**

**புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள்**

- 1031 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டு 1031 பட்டதாரி தர ஆசிரியர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு அனைத்து குடியிருப்புப் பகுதிகளுக்கும் 3 கி.மீ. தொலைவுக்குள் ஒரு நடுநிலைப் பள்ளி வசதி அளிக்கப்பட்டு 100 விழுக்காடு சாதனை எய்தப்பட்டுள்ளது. 878 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- பள்ளி வசதி இல்லாத சிற்றூர்களில் 363 கல்வி உறுதி மையங்கள் தொடங்கப்பட்டு 8045 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.

**மழலையர் முன்பருவ நலக் கல்வி**

- 10000 அங்கன்வாடி மையங்களை மழலையர் பள்ளிகளாக நிலை உயர்த்துதல். ஆக 20000 அங்கன்வாடி மையங்கள் மழலையர் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன.
- தரம் உயர்த்தப்பட்ட மழலையர் பள்ளிகளுக்கும் ஒரு பள்ளிக்கு ரூ.1725 என்ற மதிப்பில் விளையாட்டு உபகரணங்கள்.
- ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டப் பணியாளர்களுக்குப் பயிற்சி.
- அங்கன்வாடி இல்லாத குடியிருப்புகளில் 147 புதிய அங்கன்வாடி மையங்கள்.

[2005 ஏப்ரல் 6

**பள்ளியில் சேராத குழந்தைகள்**

- 389 தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் பள்ளியில் சேராத 2.79 இலட்சம் குழந்தைகளுக்கான 6531 இணைப்பு மையங்கள் மற்றும் 170 உறைவிடப் பள்ளி முகாம்கள்.
- பள்ளியில் சேர்வதற்கான தடைகளை நீக்கி, பள்ளி சேராத குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும்போது பிறப்பு சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ் எதுவும் கோராமல் பள்ளியில் எந்த நேரத்திலும் சேர்ப்பதற்கான அரசாணை.

**உதவித்தொகைகள்**

- 1.85 இலட்சம் ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.500/– வீதம் கற்றல் கற்பித்தல் சாதனங்களுக்கான உதவித்தொகை
- 49347 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 6, 7, 8 வகுப்புகள் கொண்ட பள்ளிகளுக்கு ரூ.2000/– வீதம் பள்ளி உதவித்தொகை.
- 39915 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 6,7,8 வகுப்புகள் கொண்ட பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.5000/– வீதம் பராமரிப்பு உதவித்தொகை.
- 1225 நடுநிலைப் பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் கருவிகள் வாங்க உதவித்தொகை

**ஊனமுற்றோருக்கான ஒருங்கிணைந்த கல்வி**

- 71204 ஊனமுற்ற குழந்தைகளுக்கான திட்டம். 59,560 குழந்தைகளை முறையான பள்ளியில் சேர்ப்பதற்கு மிகப் பெரிய முயற்சி.
- 13000 ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவிச் சாதனங்கள்.
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான புதிய வள மையங்கள் ஒவ்வொரு வட்டார வள மையத்திலும் ஏற்படுத்துதல்.



2005 ஏப்ரல் 6]

**பயிற்சி**

- 1.86 இலட்சம் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி. நெருக்கடி/ பேரழிவு மேலாண்மை, செயல்பாடுகளின் மூலம் கற்றல் போன்ற பல புதிய பயிற்சிகளில் ஆசிரியர்களுக்கான பயிற்சி
- 1.40 இலட்சம் கிராம கல்விக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி
- 12657 ஆசிரியர்களுக்கு பல்வேறு வகையான தொழில் பயிற்சி
- 9.12 இலட்சம் மாணவிகளுக்கு தொழில் திறன் பயிற்சி
- 8.50 இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி

**கட்டடப் பணிகள்**

- 77 வட்டார வள மைய கட்டடங்கள்; 407 தொகுப்பு வள மைய கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டன
- 10043 வகுப்பறைகள்
- 1758 பள்ளிகளுக்கு கழிப்பிட வசதி
- 1675 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி
- அனைத்து கட்டுமானங்களும் ஊனமுற்றோருக்கு உகந்ததாக இருத்தல்

**தேசிய தொடக்க நிலை பெண் கல்வித் திட்டம்**

- 10 மாவட்டங்களில் 28 வட்டாரங்களில் தேசிய தொடக்க நிலை பெண்களுக்கான கல்வி திட்டம்; 151 மாதிரி தொகுப்பு நிலை பள்ளிகள்
- 67 வகுப்பறைக் கட்டடங்கள்; 67 மாதிரி தொகுப்பு பள்ளிகளுக்கு பள்ளிக்கு ரூ.30000/– வீதம் கற்றல் கற்பித்தல் சாதனங்கள்
- 1,22,220 மாணவிகளுக்கு தலா ரூ.150/– வீதம் கற்றல் துணை சாதனங்கள் உதவித்தொகை

[2005 ஏப்ரல் 6

**1.13. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.500.42 கோடி அளவில் அனைவர்க்கும் கல்வித் திட்ட செயல்பாடுகள் தொடரப்படும்.**

**1.14. மாணவர் சேர்க்கை விதிகளைத் தளர்த்துதல்**

பள்ளியில் சேராத குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் நோக்கத்துடன் அக்குழந்தைகளுக்காக பள்ளி சேர்க்கை விதிகளை அரசு தளர்த்தி உள்ளது. இதன் மூலம் பள்ளியில் சேராத குழந்தைகளை பிறப்பு சான்றிதழ் போன்ற சான்றிதழ்கள் கேட்டு வற்புறுத்தாமல் கல்வி ஆண்டின் எந்த நேரத்திலும் பள்ளியில் சேர்ப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆதரவற்றோர், தெருவோரக் குழந்தைகள், எய்ட்ஸ்/ எச்.ஐ.வி. ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் மற்றும் பாலியல் சுரண்டலால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளுக்கும் இச்சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**1.15. அனைவர்க்கும் கல்வி இயக்க கூட்டு ஆய்வுக் குழு**

அனைவர்க்கும் கல்வித் திட்டத்தினை முறையாக செயல்படுத்துவதில் மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரி மாநிலமாக நமது மாநிலம் திகழ்வதாக மத்திய அரசு பாராட்டியுள்ளது. உலக வங்கி, ஐரோப்பிய கூட்டமைப்பு மற்றும் மைய அரசின் பிரதிநிதிகள் அடங்கிய அனைவர்க்கும் கல்வி இயக்கத்தின் முதல் கூட்டு ஆய்வுக் குழு இவ்வாண்டு (2005) ஜனவரி – பிப்ரவரி மாதங்களில் அனைவர்க்கும் கல்வித் திட்ட செயலாக்கத்தைப் பார்வையிட்டு கீழ்க்கண்டவாறு பாராட்டியுள்ளது.

**“அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பள்ளி வசதி ஏற்படுத்தித் தருவதிலும், அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதிலும் தமிழ்நாடு தொடர்ந்து சீரான முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. தமிழ்நாட்டின் திட்டச் செயல்பாடுகளின் வேகம் மற்றும் தரம் நன்றாக உள்ளது. எனவே அனைவர்க்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோள்களை இம்மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு முன்னராகவே அடைந்துவிடும்”**



2005 ஏப்ரல் 6]

**2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி**

அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற இலக்கினை எட்டுவதும் இவ்வரசின் குறிக்கோளாகும்.

**2.1. குறிக்கோள்**

- 10 ஆம் வகுப்பு வரை குழந்தைகளின் சேர்க்கை மற்றும் தக்க வைத்தலில் நூறு விழுக்காடு அடைதல்
- தரமான கல்வியை வழங்குதல்

**2.2. புதிய உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்குதல்**

ஐந்து கி.மீ. தொலைவில் உயர்நிலைப் பள்ளிகள் எதுவுமே இல்லாமல் இருந்து அந்த எல்லைக்குள் செயல்படும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் 50 மாணவர்கள் கல்வி பயின்று வருவார்களாயின், அத்தகைய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், எட்டு கி.மீ.–க்குள் மேல்நிலைப் பள்ளிகள் எதுவுமே இல்லாமல் இருந்து அந்த எல்லைக்குள் செயல்படும் அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் 100 மாணவர்கள் கல்வி பயின்று வருவார்களாயின் அத்தகைய உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துவது அரசின் கொள்கையாகும். இதன்படி, கடந்த நான்காண்டுகளில் 295 உயர்நிலைப் பள்ளிகளும் 335 மேல்நிலைப் பள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன. **2005–2006 ஆம் ஆண்டில் 90 அரசு உயர்நிலைப் பள்ளிகளும் 60 அரசு மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்படும்.**

**2.3. தனியார் நிர்வாகத்தின்கீழ் சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்குதல்**

அரசிடமிருந்து நிதி உதவி கோரமாட்டோம் என்ற அடிப்படையில் 1.6.1991 முதல் தனியார் நிர்வாகத்தின்கீழ், சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் துவக்க அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

**2.4. மாணவர்கள் சேர்க்கைக்குச் சிறப்புத் திட்டங்கள்**

பள்ளிகளில் மாணவ மாணவியர்களின் சேர்க்கை மற்றும் தக்க வைத்தலை அதிகரிக்கும் நோக்கத்துடன் இலவசச் சீருடை, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவச மதிய உணவு, இலவசப் பேருந்து பயணச்

[2005 ஏப்ரல் 6

சலுகை மற்றும் உதவித்தொகை அளிப்பது போன்ற அரசின் நன்மை பயக்கும் திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2.5. பெண் கல்வி**

6,7,8 வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவிகளுக்கும், அனைவர்க்கும் கல்வி திட்டத்தின்கீழ், தொழில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பெண் கல்வி விகிதத்தில் தேசிய சராசரியை விட குறைவாகவும், எழுத்தறிவில் பாலியல் வேறுபாடு தேசிய சராசரியை விட அதிகமாகவும் உள்ள 10 மாவட்டங்களிலுள்ள 28 வட்டாரங்களில் தொடக்கக் கல்வி நிலையில் பெண் கல்விக்கான தேசியத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதிரி தொகுப்பு பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவிக்கும் ரூ.150 மதிப்பிலான சொல்லகராதி, உலக வரைபடங்கள், கணித வடிவியல் கருவிகள் போன்ற கற்றலுக்கான துணைக் கருவிகள் வழங்கப்படுகின்றன.

கிராமப்புற பெண் கல்வி விகிதத்தில் தேசிய சராசரியை விட குறைவாகவும் எழுத்தறிவில் பாலியல் வேறுபாடு தேசிய சராசரியை விட அதிகமாகவும் உள்ள **10 மாவட்டங்களிலுள்ள 28 வட்டாரங்களில் "கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் ரூ.8.59 கோடி செலவில் 37 உறைவிடப் பள்ளிகள் பள்ளியிலிருந்து இடைநின்ற மாணவியருக்கு அமைக்கப்படும்.**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவிகளுக்கு இலவச இருசக்கர மிதிவண்டி வழங்கப்படுகிறது.

**2.6. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி**

வகுப்பு 8 முதல் 12 வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு உதவும் பொருட்டு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாலையில் பள்ளி நேரத்திற்குப்பிறகு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் இச்சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது இத்திட்டம் 625 உயர்நிலைப் பள்ளிகளிலும், 375 மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



2005 ஏப்ரல் 6]

மேலும் 6–8 வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு, அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின்கீழ் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2.7. அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் நியமனம்**

கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பள்ளிக் கல்வியின் தரம் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று பள்ளிகளில் ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்பியதாகும். கடும் நிதி நெருக்கடியில்கூட ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு தடையேதும் விதிக்கவில்லை. 2001–2002 முதல் 2004–2005 வரை 46,494 ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதித்துள்ளது. 2003–2004 வரை அனுமதிக்கப்பட்ட 23,677 பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. அரசுப் பள்ளிகளில் 1–6–2004 அன்றைய நிலையில் காலியாக இருந்த 22,817 ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

**2.8. புதிய பாடத் திட்டம்**

மாநில அளவில் பள்ளிக்கல்வி இயக்குநர் தலைமையில் அமைக்கப்பட்ட கல்வியாளர்கள் அடங்கிய வல்லுநர் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், திருத்திய பாடத் திட்டம் 2003–2004 ஆண்டு முதல் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| ஆண்டு | வகுப்புகள் |
|---|---|
| 2003–2004 | 6, 9 அனைத்துப் பாடங்கள், 10 ஆம் வகுப்புத் தமிழ்ப் பாடம் மட்டும் (ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது) |
| 2004–2005 | 7, 11 அனைத்துப் பாடங்கள் 10 ஆம் வகுப்புத் தமிழ்ப் பாடம் தவிர மற்ற பாடங்கள் அனைத்தும் (ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டது) |
| 2005–2006 | 8 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான அனைத்துப் பாடங்களும் |

[2005 ஏப்ரல் 6

## 2.9. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

நவீன காலத்திற்கேற்ப மாணவர்கள் தங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்ளுதலின் பொருட்டும் மற்றும் கணினித் துறையில் அதிக அளவில் வேலைவாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டும், 1,197 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 490 மேல்நிலைப் பள்ளிகளிலும், 500 உயர்நிலைப் பள்ளிகளிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

## 2.10. அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

அரசு உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளான வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளை செய்துதர இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. இதற்காக நபார்டு வங்கி நிதியுதவியுடன் திட்டங்கள் வகுக்கப்பட்டது. ரூ. 1,82.74 கோடி செலவில் மூன்று கட்டங்களில் 605 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதி செய்து தரப்பட்டுள்ளது. **நான்காவது மற்றும் ஐந்தாவது கட்டங்களில் ரூ.232.10 கோடி செலவில் 549 பள்ளிகளில் வகுப்பறைக்கட்டடங்கள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.** இவை தவிர அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின்கீழ் வகுப்பறைகள், கழிப்பிட வசதிகள், குடிநீர் வசதிகள் செய்து தரப்படுகின்றன. இவ்வடிப்படை வசதிகள், பெற்றோர் ஆசிரியர் கழகம், சட்டமன்ற உறுப்பினர்/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி/ உள்ளூர் மேம்பாட்டு நிதி மூலமாகவும் செய்து தரப்படுகிறது.

## 2.11. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்

அறிவியல் கல்வி என்பது கலைத் திட்டத்தில் ஓர் முக்கிய பகுதியாகும். சோதனைச் செயல்முறைகள் மூலம் புத்தக அறிவினை வலுவாக்கிக் கொள்ள ஆய்வுக்கூட வசதி அளிப்பது இன்றியமையாததாகிறது. எனவே, அத்தகைய வசதிகளை ஏற்படுத்த மாநிலத் திட்டம் மற்றும் நபார்டு வங்கி நிதியுதவி மூலமாக அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. 155 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 91 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வுக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2003–2005 ஆம் ஆண்டுகளில் மாநிலத் திட்டத்தின்கீழ் 125 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 150 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வுக்கூட சாதனங்களும், 200 உயர்நிலைப்



2005 ஏப்ரல் 6]

பள்ளிகளுக்கும் 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கற்பித்தல் சாதனங்களும் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 2005-2006ஆம் ஆண்டில் 50 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட சாதனங்களும், 50 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கு கற்பித்தல் சாதனங்களும் வழங்கப்பட உள்ளன

## 2.12. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்துதல்

கல்வி கற்றல் என்பது வாழ்நாள் முழுவதும் கற்கும் ஒரு தொடர் நிகழ்வாகும். வகுப்பறைகளில் பாடநூல்கள் மூலம் கற்பதோடு நூலகப் படிப்பு மாணவர்களின் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள உறுதுணையாக விளங்குகிறது. இதுவரை 626 பள்ளிகள் இவ்வசதியைப் பெற்றுள்ளன. மேலும் அந்தந்தப் பகுதியில் உள்ள பொது நூலகங்களையும் பள்ளிகளுடன் இணைத்து மாணவர்களுக்குத் தரமான நூல்கள் வழங்கப்படுகிறது. 2005–2006 ஆம் கல்வியாண்டில் 226 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 37.50 இலட்சம் செலவில் நூலக வசதி ஏற்படுத்தப்படும்.

## 2.13. ஆங்கில மொழி கற்பித்தலை மேம்படுத்துதல்

மாணவர்களுக்கு பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்புப் பெறுவதற்காக ஆங்கில மொழியில் சிறப்பாகப் பேசுதல் மற்றும் எழுதும் திறன் தேவைப்படுவதால், ஆங்கில மொழியை கற்பிப்பதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. 600 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் மேலும் 300 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும்.

## 2.14. தேசிய மாணவர்படை, நாட்டு நலப் பணித் திட்டம், சாரணர்—சாரணியர் இயக்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்

- பள்ளி அளவில் தேசிய மாணவர் படையில் விமான, கப்பல் மற்றும் தரைப் படைப் பிரிவுகள் அடங்கிய 732 இளநிலைப் பிரிவுகள் செயல்படுகின்றன. பெண்களுக்கென ஒரு தனிப் பிரிவு உள்ளது.

- தலைமை ஏற்று நடத்தும் ஆற்றல், தன்னம்பிக்கை, தேசப்பற்று, தன்னார்வத் தொண்டு, சமூக சேவை செய்யும் மனப்பான்மை போன்ற அரிய பண்புகளை மாணவர்கள் அடையச் செய்வது நாட்டு நலப் பணித் திட்டத்தின் நோக்கமாகும். மாநிலத்தில் தற்சமயம் 1,430 பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.
- சாரணர்–சாரணியர் இயக்கத்தின் வாயிலாக கோவில்களைச் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல், போக்குவரத்தைச் சீர்படுத்துதல், முதலுதவி செய்தல் போன்ற சமூக நலச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 5,379 பள்ளிகளில் சாரணர்–சாரணியர் இயக்கம் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த சாரணர் சாரணியருக்கு ராஜ்ய புரஸ்கார் என்ற விருது வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாட்டில் 4,614 பள்ளிகளில் இளநிலை செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## 2.15. தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

ஆசிரியர் நல தேசிய நிறுவனம் 1962ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் உதவியுடன் ஆசிரியர் நலனுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மருத்துவச் செலவினை ஈடுகட்டும் தொகையாக அதிகபட்சம் ரூ. 50,000/– அல்லது செலவு செய்த தொகையில் 75 சதவிகிதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை.
- பணியில் இருக்கும்போது இயற்கை எய்திடும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு அவர்கள் படிப்பினை முடிக்க உதவியாக ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ. 6,000/–.
- ஆசிரியர்களின் உடல் ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உதவித்தொகையாக ரூ. 10,000/ –.
- ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு படிக்க ரூ. 50,000/– கடன்; கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்கு ரூ. 10,000/– கடன்.



- தொழிற்படிப்பிற்கு ஆண்டுக்கு ரூ. 5,000/- மற்றும் பட்டப் படிப்பிற்கு ரூ. 2,500/– படிப்புதவித் தொகை.

## 2.16. ஆசிரியர்களுக்கான மாநில நல்லாசிரியர் விருது

1960–லிருந்து நல்லாசிரியர்களுக்கு ஆண்டுதோறும் **"டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது என்னும் நல்லாசிரியர் விருது"** செப்டம்பர் 5ஆம் தேதியன்று ஆசிரியர் தினவிழாவில் வழங்கப்பட்டு வருகிறது.

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை, மெட்ரிக், ஆங்கிலோ–இந்தியன் மற்றும் சமூகப் பாதுகாப்பு பள்ளிகளில் பணியாற்றும் 344 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு இவ்விருது வழங்கப்படுகிறது. விருது பெறும் ஆசிரியர்களுக்கு பரிசுத்தொகையாக ரூ.2,000/–மும், தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மேலும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணியாற்றும் 6 சிறந்த ஆசிரியர்களுக்கும் நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது.

## 2.17. ஆசிரியர்களுக்கான தேசிய விருது

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை, நாடு முழுவதுமுள்ள ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியர்களை ஆண்டு தோறும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தேசிய விருது வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை மற்றும் சிறப்பு வகைப் பள்ளிகளுக்கான 25 ஆசிரியர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

தேசிய விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பரிசுத் தொகையாக ரூ. 25,000/–மும் வெள்ளிப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதுடன், இரயில் பயண போக்குவரத்துப் படியும் வழங்கப்படுகிறது. மேலும் தேசிய விருது பெற்ற ஆசிரியர் அவரது மனைவி/கணவருடன் இரயில் பயணத்தில் 3 Tier A/C சலுகை கட்டணத்தில் அகில இந்தியச் சுற்றுலா சென்றுவரப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 6

## 2.18. பெற்றோர் ஆசிரியர் கழகம்

பெற்றோர் ஆசிரியரிடையே தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு கல்வி நிறுவன வளர்ச்சிக்கு இன்றியமையாதது. பள்ளி வயது எய்திய அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தோர் படிப்பைக் கைவிடாமல் தொடர்ந்து பள்ளியிலேயே படிக்கச் செய்தல் மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் போன்ற பணிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆசிரியர்களுடன் இணைந்து செயல்படுவதுடன் பள்ளியின் வளர்ச்சிப் பணிகளுக்கான நன்கொடைகளை பொதுமக்களிடம் திரட்டும் நோக்குடனும் செயல்படுகிறது.

பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துவதில் முக்கிய பங்காற்றி அனைத்து அரசு உயர் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவு செய்வதற்கு வகை செய்கின்றன.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி புரவலர் திட்டத்தின்கீழ் பொது மக்களிடம் குறைந்தது ரூ. 1,000/– நன்கொடை பெற்று அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து பள்ளிக்கு தேவையான வசதிகளும் செய்து தரப்படுகிறது.

## 3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் யாவும் ஆங்கில பயிற்று மொழி சுய நிதிப் பள்ளிகள் ஆகும். ஆரம்ப காலத்தில் இப்பள்ளிகள் சென்னை மற்றும் மதுரை பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பெற்றிருந்தன. 1976–ஆம் ஆண்டிலிருந்து இப்பள்ளிகள் பள்ளிக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, தற்போது 4–12–2001 முதல் தனி இயக்ககமாக ஏற்படுத்தப்பட்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் உள்ளன. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் தலைமையிலான மெட்ரிகுலேஷன் கல்வி வாரியம் நிர்ணயிக்கும் கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தை இப்பள்ளிகள் பின்பற்றி வருகின்றன. தற்போதுள்ள 3,386 மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட 10 மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வாளர்கள் செயலாற்றி வருகின்றனர்.



2005 ஏப்ரல் 6]

### 3.1. மெட்ரிகுலேஷன் பள்ளிகளை முறைப்படுத்துதல்

முனைவர் எஸ்.வி.சிட்டிபாபு தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளை அங்கீகரிப்பதற்கு, அரசு குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை நிர்ணயித்துள்ளது.

### 3.2. மெட்ரிகுலேஷன் பள்ளி கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டம் மாற்றியமைத்தல்

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மாற்றியமைக்கப்படவுள்ள பாடத் திட்டம் பின்வரும் கால அட்டவணைப்படி நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

| ஆண்டு | வகுப்புகள் |
|---|---|
| 2005–2006 | எல்.கே.ஜி, யு.கே.ஜி, 1, 2, 6 மற்றும் 9 |
| 2006–2007 | 3, 4, 7 மற்றும் 10 |
| 2007–2008 | 5 மற்றும் 8 |

தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவின் முன்னாள் தலைவரும், பாண்டிச்சேரி மைய பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான முனைவர் எ. ஞானம் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவால் தயாரிக்கப்பட்டு மெட்ரிகுலேஷன் கல்வி வாரியத்தால் ஏற்பளிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டம் 12–01–2005 அன்று பிரசுரிக்கப்பட்டது.

### 3.3. பயிற்சித் திட்டம்

மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் ஆசிரியர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, 2005–2006 ஆம் ஆண்டில், ரூ.32.00 இலட்சம் செலவில் பயிற்சி நடத்தப்படும்.

## 4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

நல்ல தரமான ஆசிரியர்களை உருவாக்குவதும், அவர்கள் பணியில் சேர்ந்தபின் பணியிடைப் பயிற்சி அளிப்பதுமே இந்த இயக்கத்தின் நோக்கங்களாகும்.

[2005 ஏப்ரல் 6

## 4.1. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்

மாநிலத்தில் 297 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களில் ஆண்டொன்றுக்கு மாணவர் சேர்க்கை 19,490 ஆகும். 2001–2002 ஆம் கல்வியாண்டு முதல் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் ஒற்றைச் சாளர முறையில் நிரப்பப்படுகின்றன. நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் ஒதுக்கப்பட்ட இடங்களை நிர்வாகமே நிரப்பிக் கொள்கின்றன.

அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் நிகழ்வில் மனிதாபிமானத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தேசிய ஆசிரியர் குழுமத்தின் ஒப்புதலுடன் 15,670 மாணவர்களுக்குக் கூடுதல் சேர்க்கை இடமளிக்கப்பட்டு இரண்டாண்டு பயிற்சி நிறைவடைந்துள்ளது. அடுத்தகட்ட 3,576 மாணவர்களுக்கு, 2004–2005–லிருந்து இரண்டாண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இறுதிக்கட்டமாக 3,000 பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 2005–2006 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படும்.

## 4.2. அனைவர்க்கும் கல்வி இயக்கம்

தமிழகத்தில் தற்போது அனைவர்க்கும் கல்வி இயக்கமானது அனைத்து மாவட்டங்களிலும் 2001–2002 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நோக்கத்தினை அடைய ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கான பொறுப்பு, ஆசிரியர் கல்வி இயக்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான பணியிடைப்பயிற்சி மூன்று நிலைகளை உள்ளடக்கியது ஆகும். முதலாவது, மாநில அளவில் முதன்மை வள ஆசிரியர்களுக்கு பயிற்சி, இரண்டாவது, மாவட்ட அளவில் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன ஆசிரியர்கள் மூலம் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு பயிற்சி மற்றும் மூன்றாவது, வட்டார அளவில் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு பயிற்சி ஆகும். இப்பயிற்சிக்காக வட்டாரம் தோறும் வட்டார வள மைய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மூலம் 1–8 வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிராமம் தோறும் கிராமக் கல்விக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அக்குழுவின் உறுப்பினர்களுக்கு, அனைவர்க்கும் கல்வி குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 6]

## 4.3. கல்வி தொலைக்காட்சி படப்பதிவு நிலையம்

பாடங்கள் தொடர்பான விளக்கம் தரக்கூடிய ஒலி–ஒளி நிகழ்ச்சியைத் தயாரிப்பதே கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும். தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், பள்ளி மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் ஒளி நாடாக்கள் தயாரிக்கப்பட்டு சென்னைத் தொலைக்காட்சியில் காண்போம்—கற்போம் கல்வி நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. மேலும், இதன் ஒளிநாடாக்கள் 29 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களிலும் மற்றும் வட்டார வள மையங்கள் மூலமாக ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சியின் போதும் பயன்படுத்தப்படுகின்றன.

## 4.4. தமிழ்நாட்டில் பள்ளிகளில் எடுசாட்–செயற்கைக் கோளின் பயன்பாடு

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்கென எடுசாட் "EDUSAT" எனும் செயற்கைக் கோள் ஒன்றை விண்வெளியில் 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நிறுவி அர்ப்பணித்துள்ளது. இச்செயற்கைக் கோளினை நிறுவியதன் மூலமாக ஒலிகளும், காட்சி தரும் விவரங்களும் ஓரிடத்திலிருந்து இந்நாட்டிலுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் கணினி மூலம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இச்செயற்கை கோளினை பயன்படுத்தி பள்ளி மாணவர்களுக்கு குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்கப்படும். மாநிலத்தில் உள்ள பள்ளி ஆசிரியர்களுக்கு, தரமான பணியிடைப்பயிற்சியினை அளிப்பதற்கும் வகை செய்கிறது. 2004–2005 ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக் கழக படப்பதிவு தளத்தில் இருந்து எடுசாட் செயற்கை கோள் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. எடுசாட் செயற்கைக் கோள் முறையாக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு கோளை முறையாக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு செயலாக்கத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. செயற்கைக் கோள் மூலம் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பெற்று பயனடையும் பொருட்டு 29 மாவட்ட ஆசிரியர் கல்வி நிறுவனங்கள், 385 வட்டார வள மையங்கள், 215 நகர்புற தொகுப்பு வள மையங்கள் மற்றும் 2,000 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான கருவிகளை படிப்படியாக வழங்க திட்டமிட்டு மைய அரசின் உதவி கோரப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 6

## 5. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

அனைவர்க்கும் ஆரம்பக் கல்வி என்ற இலக்கினை அடைய, பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி முக்கியமான கல்வியியல் வழிமுறைகளாக விளங்குகிறது. பள்ளிசாரா கல்விமுறை, அனைவர்க்கும் கல்வித் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வயது வந்தோரிடையே (15–35) எழுத்தறிவின்மையைப் போக்கி எழுத்தறிவு பெற்றவர்களாக்குவதே வயதுவந்தோர் கல்வி இயக்ககத்தின் முக்கியநோக்கமாகும். இதற்கென மாநில அளவில் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின்கீழ் மாவட்ட எழுத்தறிவு குழுமமானது செயல்பட்டு வருகிறது.

### 5.1. குறிக்கோள்

- வளர் கல்வித் திட்டத்தில் 100 விழுக்காடு வயதுவந்தோர் சேர்க்கை செய்தல்
- முழு எழுத்தறிவை எய்துதல்
- வயதுவந்தோர் பள்ளிப் படிப்பில் இடைநின்றோர் மற்றும் பள்ளிப்படிப்பைத் தொடங்காதவர் அனைவருக்கும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துதல்.
- எழுத்தறிவில் பாலியல் இடைவெளியைக் குறைத்தல்

### 5.2. எழுத்தறிவு விகிதம்

2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, எழுத்தறிவு விகிதத்தை அகில இந்திய அளவுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தின் நிலை வருமாறு:

| | ஆண் | பெண் | சராசரி விகிதம் |
|---|---|---|---|
| இந்திய அளவில் | 75.85 | 54.16 | 65.38 |
| தமிழகம் | 82.33 | 64.55 | 73.47 |



2005 ஏப்ரல் 6]

### 5.3. வளர் கல்வி

1999-ல் முழு எழுத்தறிவு இயக்கமும், 2001-ல் தொடர் கல்வி இயக்கமும் நிறைவுற்றதையடுத்து மூன்றாம் கட்டமாக வளர் கல்வித் திட்டம் மைய அரசின் உதவியுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. முழு எழுத்தறிவு மற்றும் தொடர் கல்வி இயக்கங்கள் மூலமாக எழுத்தறிவுத் திறன் பெற்றவர்கள், அத்திறனை வளர் கல்வி மையங்கள் மூலம் நிலை நிறுத்திக் கொள்ள இயலும்.

இத்திட்டம் 27 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இதற்கென இந்திய அரசு இதுவரை ரூ.50.82 கோடி நிதியை விடுவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 11,528 வளர்கல்வி மையங்களும், 1,355 வளர் கல்வி ஒருங்கிணைப்பு மையங்களும் செயல்படுகின்றன. வளர் கல்வி திட்டத்தினால் பயன்பெற்ற 54.28 இலட்சம் பயனாளிகளில் 23.44 இலட்சம் ஆண்களும், 30.84 இலட்சம் பெண்களும் அடங்குவர்.

### 5.4. பெண்கள் எழுத்தறிவுக்கான சிறப்புத் திட்டம்

முழு எழுத்தறிவு இயக்கம், தொடர்கல்வித் திட்டம் மற்றும் வளர்கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட பின்னரும், சில மாவட்டங்களில் பெண்கள் எழுத்தறிவு விகிதம் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. எனவே, 2004–2005 ஆம் ஆண்டில் சிறப்பு மகளிர் எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் கல்வியில் பின்தங்கியுள்ள 43 வட்டாரங்களில் உள்ள எழுத்தறிவு இல்லாத பெண்களுக்கு எழுத்தறிவுத் திறனை ஆறு மாதகாலத்திற்குள் அளிக்கும் நோக்கத்துடன் 2005–2006 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6. அரசுத் தேர்வுகள்

குறித்த காலத்தில் தேர்வுகளை நடத்துவதும், தேர்வு முடிவுகளை வெளியிடுவதும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் முக்கிய பொறுப்பு ஆகும். 39 வகையான அரசுத் தேர்வுகளை இவ்வியக்ககம் நடத்துகிறது. அவற்றுள் பள்ளிக் கல்வி தேர்வுகளான, மேல்நிலைப் பள்ளித் தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேஷன் தேர்வுகள் ஆகியவை மிக முக்கியமானவை ஆகும்.

ஆசிரியர் கல்வி பயிற்சிக்கான பட்டயத் தேர்வும், இசை, ஓவியம் மற்றும் தையற்கலை போன்ற பாடங்களில் தொழில்நுட்பச் சான்றிதழ் தேர்வும் வழக்கம்போல் நடத்தப்படுகின்றன. மார்ச்சு/ஏப்ரல் மாத அரசு பொதுத் தேர்வில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்களில் தோல்வியடைந்தவர்கள் ஒரு முழு கல்வி ஆண்டை வீணாக்காமல் உடனடியாக உயர் கல்வியில் சேருவதற்கு ஏதுவாக சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது. இதன்மூலம், கடந்த ஜூன் 2004 சிறப்பு துணைப் பொதுத் தேர்வில் 94,298 மாணவர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

**6.1. மார்ச்சு / ஏப்ரல் 2004 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்வு முடிவுகளின் ஆய்வு:**

| தேர்வுகள் | தேர்வெழுதியோர் எண்ணிக்கை | தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | தேர்ச்சி சதவிகிதம் |
|---|---|---|---|
| மேல்நிலை (+2) | 5,06,754 | 3,86,653 | 76.30 |
| எஸ்.எஸ்.எல்.சி | 6,64,900 | 5,14,391 | 77.40 |
| மெட்ரிகுலேஷன் | 85,998 | 77,360 | 90.00 |
| ஆங்கிலோ இந்தியன் | 4,787 | 4,528 | 94.60 |

**6.2. பொதுத் தேர்வுகளில் ரகசியத் தன்மையை பாதுகாத்து, வெளிப்படையை உறுதிசெய்து நடத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

- மைய மதிப்பீடு முறை செயலாக்குதல்
- மேல்நிலைப் பள்ளி பொதுத் தேர்வில் விடைத் தாள்களுக்கு இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், கணிதம், வணிகவியல், கணக்குப் பதிவியல் பாடங்களுக்கும் தொழிற் பாடங்களில் பொறியியல் தொடர்புடைய பாடங்களுக்கும் மாற்று எண் வழங்கப்படுதல். மெட்ரிகுலேஷன் பொதுத் தேர்வில் அனைத்துப் பாடங்களுக்குமான விடைத் தாள்களுக்கு மாற்று எண் வழங்கப்படுதல்.
- மாணவர்கள், தங்களது விடைத் தாள்களின் மதிப்பீடு குறித்து மறு கூட்டலுக்கு விண்ணப்பித்தல் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வில், இயற்பியல், வேதியியல், கணிதம், உயிரியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய பாடங்களில் மாணவர்கள் எழுதிய விடைத் தாட்களுக்கான நகல்கள் பெறுதல். ஐயப்பாடு ஏற்படும்போது, அவர்கள் விரும்பினால் உரிய கட்டணத்தைச் செலுத்தி மறு மதிப்பீடு கோருதல்.



**6.3. போலிச் சான்றிதழ் தடுத்தல்**

போலி மதிப்பெண் சான்றிதழ்களின் புழக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கையாக, மதிப்பெண் சான்றிதழ்களில், நவீன லேசர் தொழில்நுட்பத்தால், பாதுகாப்பு ரகசிய குறியீடுகள் அமைத்து அச்சிடப்படுவது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, மதிப்பெண் சான்றிதழ்களின் பின்பக்கத்தில், "இம்மதிப்பெண் சான்றிதழ் இப்பள்ளியின் மூலமாக விநியோகிக்கப்பட்டது" என்று அப்பள்ளியின் தலைமையாசிரியரின் மேலொப்பத்துடன் வழங்கப்படுகிறது.

**6.4. இயக்ககத்திற்கான இணைய தளம்**

அரசுத் தேர்வுத் துறைக்கென தனியாக ஒரு இணையம், www.tn.gov.in/dge என்ற இணைய முகவரியில் அமைக்கப்பட்டு, அதனில் தேர்வுகள் பற்றிய கால அட்டவணைகள், விண்ணப்பப் படிவங்கள், கட்டண விகிதங்கள், மதிப்பெண் சான்றிதழின் இரண்டாம் படி மற்றும் சான்றிட்ட நகல்கள் பெறுவதற்கான விண்ணப்பிக்கும் முறைகள் பற்றிய தகவல்களை அளித்து வருகிறது. பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு ஒரு வரவேற்பு மையமும் இயக்ககத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 6.5. திறனாய்வுத் தேர்வுகள்

9 ஆம் வகுப்பு முடித்த மாணவர்களிடையே அகில இந்திய அளவிலான தேசிய திறனாய்வு முதலாம் கட்டத் தேர்வை அரசுத் தேர்வுகள் இயக்ககம் நடத்தி, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் இரண்டாம் நிலைத் தேர்வு எழுத மாணவர்களை தேர்வு செய்து வருகிறது. 2004 ஆம் ஆண்டு 290 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வியக்ககம் தமிழக அரசின் ஊரகப் பகுதிகளில் மாணவர்களின் அறிவாற்றலைக் கண்டறிதல் என்னும் திட்டத்தின்கீழ், 8 ஆம் வகுப்பு மாணவர்களிடையே திறனாய்வுத் தேர்வினை நடத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவிகளைத் தேர்ந்தெடுத்து வருகிறது. தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.1,000 +2 படிக்கும் வரை அளிக்கப்படுகிறது.

### 6.6. பயிற்சித் திட்டம்

+2 வகுப்பில், 25 பொதுக் கல்வி பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, வினாத் தாள் தயாரிப்பு மற்றும் மதிப்பீடு பணி குறித்து 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

தகுதியும், திறமையும், பணியில் ஆர்வமும் மிக்க ஆசிரியர்களை வெளிப்படையான எழுத்துப் போட்டித் தேர்வின்மூலம் தேர்வு செய்வதற்கென ஒரு சிறப்பு நிறுவனமாக ஆசிரியர் தேர்வு வாரியம் 1988 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது.



### 7.1. 2001–2002 முதல் 2004–2005 வரை தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:

| பதவியின் பெயர் | | | ஆண்டு | |
|---|---|---|---|---|
| | 2001–2002 | 2002–2003 | 2003–2004 | 2004–2005 |
| தொழிற்பயிற்சி ஆசிரியர்கள் (வேளாண்மை) | 100 | — | — | — |
| வட்டார வள மைய ஆசிரியர்கள் | — | 3,480 | | — |
| மதிய உணவுத் திட்ட பணி அமைப்பாளர்களிலிருந்து இளநிலை பட்டதாரி ஆசிரியர்கள் | — | — | 218 | — |
| பட்டதாரி ஆசிரியர், மொழி ஆசிரியர் உட்பட | 773 | 809 | 14 (சிறுபான்மை மொழி) 5,529 | 272 (பணி நீக்கம் செய்யப்பட்ட இளநிலை விரிவுரையாளர்களிலிருந்து தெரிவு செய்யப் பட்டவர்கள்) 7,655 |
| முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் | 611 | 488 | 1,387 | 368 |
| முதுநிலை விரிவுரையாளர்கள் | — | — | — | — |
| விரிவுரையாளர்கள் | — | — | — | — |
| இளநிலை விரிவுரையாளர்கள் | — | 444 | 211 | — |
| மொத்தம் | 1,484 | 5,221 | 7,377 | 8,295 |

[2005 ஏப்ரல் 6

## 7.2. தேர்வு முறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதுமைகள்

ஆசிரியர் தேர்வு வாரியம் 2001-லிருந்து கணினி அமைப்பு வாயிலாக தேர்வு நடத்துதல் மற்றும் தெரிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறியீடுகளைப் பகுத்துணரும் தன்மையுள்ள (Intelligence Character Recognition System) விண்ணப்பப் படிவங்களை அறிமுகப்படுத்தியதன்மூலம் புள்ளிவிவரங்களை விரைவாக சரிபார்ப்பதற்கும், ஒட்டுமொத்த புள்ளிவிவரத் தொகுப்பினை உருவாக்குவதற்கும் ஏதுவாகிறது. எழுத்துத் தேர்வுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம், கொள்குறி வினா முறையினையும், OMR விடைத் தாட்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியம் அதற்கென http://trb.tn.nic.in., என்ற இணைய தளத்தினை உருவாக்கி அதன்மூலம், காலிப் பணியிட விவரங்கள், தேர்வுக்கான அட்டவணைகள், அனைத்து தேர்வர்களின் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்த்தலில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் இறுதித் தேர்ச்சிப் பட்டியல் ஆகியவற்றை பொதுமக்கள் அறியும் வண்ணம் வெளியிடுகிறது. மேலும் இவ்வாரியம் Home Page என்ற பக்கத்தை இணையதளத்தில் தொடங்கியுள்ளது. இதன்மூலம் ஆண்டு முழுவதும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து முக்கிய சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் அட்டவணைகள் ஆகியவற்றை அறிந்துகொள்ள இயலும்.

# 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

## 8.1. பாடநூல்கள் அச்சடிப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1970 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகம் கீழ்க்குறிப்பிட்ட பாடநூல்கள் மற்றும் கையேடுகளை அச்சடித்து வழங்கி வருகிறது:

- மாநிலப் பாடத் திட்டப் பள்ளிகளில் 1-12 வகுப்புகளுக்கான பாடநூல்கள்
- மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்பு பாட நூல்கள்



2005 ஏப்ரல் 6]

- சிறுபான்மை மொழி பயிலும் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடநூல்கள்; +1, +2 மாணவர்களுக்கு மொழி நூல்கள்; 12 ஆம் வகுப்பு வரை குறிப்பு நூல்கள்
- எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான அறிவியல் தமிழ் பாடநூல்கள்
- ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகள்மூலம் நடத்தப்பெறும் பள்ளிகளில் 10 மற்றும் +2 வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள்
- தொழிற்படிப்பு நுழைவுத் தேர்வுக்கு வினா வங்கி, மாதிரி வினா ஏடு, கையேடு
- ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பிற்கான வழிகாட்டி நூல்கள்

## 8.2. பாடநூல்களின் விநியோகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் 21 வட்டார அலுவலகங்கள் மூலம் இலவச மற்றும் விற்பனை பாடநூல்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. கல்வித் துறை மற்றும் பல்வேறு நலத் துறைகளுக்கான பாடநூல்கள் வட்டார அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பள்ளிகள் திறக்கும் முன்னரே வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுவதால், பள்ளிகள் திறந்தவுடன் மாணவர்களுக்கு பாடநூல்கள் எளிதாக கிடைக்கின்றன. விற்பனைப் பிரதிகளைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ்நாட்டிலுள்ள 42 மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக மொத்த விற்பனையும், 2,000 தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் சில்லறை விற்பனையும் செய்கிறது. இதனால், அனைத்துப் பள்ளிகளும், பள்ளிகள் திறக்கும் முன்னரே மாணவர்களுக்குத் தேவையான அனைத்துப் பாடநூல்களையும் பெறுவது உறுதிப்படுத்தப்படுகிறது.

சென்னையில் உள்ள நிர்வாக அலுவலகத்தில் சிறப்பு விற்பனை நிலையம், அனைத்து வேலை நாட்களிலும் செயல்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 6

### 8.3. இலவசப் பாடநூல்கள்

தற்போது ஊராட்சி ஒன்றிய, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், 6, 7, 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மதிய உணவு உண்ணும் மாணவர்களுக்கும், இலவசப் பாடநூல்களை பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்கி வருகிறது. இப்பாடநூல்களுக்கான உற்பத்தி செலவு தமிழ்நாடு அரசால் ஈடு செய்யப்படுகிறது. இது தவிர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் போன்ற துறைகள்மூலமும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 2005-2006 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

### 8.4. குறிப்பேடுகள்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், அரசுத் துறைகளுக்காகவும், மற்றும் வெளிச் சந்தை விற்பனைக்காகவும் குறிப்பேடுகளைத் தயாரித்து வெளியிடுகிறது. வெளிச்சந்தை விற்பனைக்கென வழக்கமான குறிப்பேடுகளைத் தயாரிப்பதுடன், மலிவு விலையில் நல்ல தரமான தாளில் லேமினேஷன் செய்யப்பட்டு, பல வண்ணங்களையுடைய மென்மையான மேல் அட்டைகளைக் கொண்ட குறிப்பேடுகளையும் தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம் விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளது.

## 9. பொது நூலகங்கள்

### 9.1. புதிய நூலகங்கள் திறத்தல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மைய நூலகம் உள்ளது. மக்கள்தொகை 5,000–க்கும் அதிகமாக உள்ள கிராமங்களில் கிளை நூலகங்கள் திறக்கப்படுகின்றன. மக்கள்தொகை 1000–5000 உள்ள கிராமங்களில் கிராமப்புற நூலகங்கள் திறக்கப்படுகின்றன. மக்கள்தொகை 1,000–க்கும் குறைவாக உள்ள கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் திறக்கப்படுகின்றன.



2005 ஏப்ரல் 6]

**தமிழ்நாட்டில் உள்ள நூலகங்கள்:**

| | எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| மாநில மைய நூலகம் | 1 | | |
| மாவட்ட மைய நூலகங்கள் | 29 | | |
| கிளை நூலகங்கள் | 1,568 | உறுப்பினர்களின் எண்ணிக்கை | 34,92,326 |
| நடமாடும் நூலகங்கள் | 12 | புத்தகங்கள் எண்ணிக்கை | 5,12,93,763 |
| கிராமப்புற நூலகங்கள் | 1,492 | வாசகர்கள் எண்ணிக்கை | 4,55,94,704 |
| பகுதி நேர நூலகங்கள் | 649 | | |
| மொத்தம் | 3,751 | | |

### 9.2. கன்னிமாரா பொது நூலகம், சென்னை

கன்னிமாரா பொது நூலகம் மாநில மைய நூலகமாகும். இந்தியாவில் வெளிடப்படும் அனைத்து நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ ஏடுகள் ஒவ்வொன்றையும் இலவசமாகப் பெறும் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் இந்நூலகமும் ஒன்றாகும். யுனெஸ்கோ, ஆசிய வளர்ச்சி வங்கி வெளியீடுகளின் தகவல் மையமாகவும் இந்நூலகம் செயல்பட்டு வருகிறது. கன்னிமாரா பொது நூலக சேவை முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளதுடன், இந்நூலகத்தைப் பற்றிய விவரங்கள் அடங்கிய தொடுதிரைக் கணினி வசதி மற்றும் இணையதள வசதி ஆகியவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கன்னிமாரா பொது நூலகம் 2003 ஆம் ஆண்டின் சிறந்த மாநில மைய நூலகமாக கொல்கத்தாவில் உள்ள இராசாராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளையால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 6

**9.3. இராசாராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி பெறுதல்**

கொல்கத்தாவில் உள்ள இராசாராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளை, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும், பொது நூலக வளர்ச்சிக்கு நிதியுதவி அளித்து வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அறக்கட்டளையிடமிருந்து பெறப்பட்ட இணை மானியம் வருமாறு:

| ஆண்டு | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 2001 – 2002 | 100.00 |
| 2002 – 2003 | 150.00 |
| 2003 – 2004 | 150.00 |
| 2004 – 2005 | 200.00 |

**9.4. நூலக வரி வசூல்**

உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கும் சொத்து வரியில் ரூபாய்க்கு பத்து பைசா வீதம் நூலக வரி வசூலிக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நூலக வரி விவரம் வருமாறு:

| ஆண்டு | ரூபாய் கோடியில் |
|---|---|
| 2001 – 2002 | 16.31 |
| 2002 – 2003 | 22.48 |
| 2003 – 2004 | 38.28 |

**9.5. நூல்கள் வாங்குதல்**

பொதுமக்கள், சமீபத்திய அறிவியல் முன்னேற்றங்களை அறியவும் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் செலவிடவும், ஆண்டுதோறும் சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் நூலகங்களில் சேர்க்கப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில், ரூ. 8.53 கோடிக்கு 3,994 தலைப்புகளில் தமிழ் நூல்களும், ரூ.2.44 கோடிக்கு 2,411 தலைப்புகளில் ஆங்கில நூல்களும் வாங்கப்பட்டுள்ளன.



2005 ஏப்ரல் 6]

**9.6. செய்திமடல்**

பொது நூலகத் துறை சார்பாக 'பொது நூலகச் செய்திமடல்' என்ற காலாண்டு இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் பொது நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் நூலக இயக்கம் தொடர்பான செய்திகள் இடம்பெறுகின்றன. இவ்விதழ் வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

**9.7. வாசகர் வட்டம்**

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் கொண்ட வாசகர் வட்டம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாசகர் வட்டம் மூலம், நூல்கள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு உள்ளிட்ட பல பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**9.8. குடிமைப் பணி கல்வி மையங்கள்**

வங்கித் தேர்வாணையம், இரயில்வே தேர்வாணையம், மத்திய பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பயன்பெறும் வகையில் "குடிமைப் பணி கல்வி மையங்கள்" என்ற பிரிவு, மாவட்ட மைய நூலகங்களிலும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள 150 நூலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**9.9. நூலகக் கட்டடங்கள் கட்டுதல்**

நூலகங்களுக்குப் படிக்க வரும் வாசகர்கள், காற்றோட்டமான பரந்த இட வசதியுடன்கூடிய கட்டடங்களில் அமர்ந்து படிக்க ஏதுவாக வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மொத்தமுள்ள 3,751 நூலகங்களில், 1,340 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 349 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும், 2,062 நூலகங்கள் வாடகையில்லாக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 40 நூலகங்களுக்குக் கட்டடங்கள் ரூ.264 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

### 9.10 கணினிமயமாக்கல்

நவீன தொழில்நுட்ப உதவியுடன் நூலகப் பணியினை திறனுடனும், விரைவாகவும், பொதுமக்களுக்கு சேவையாற்ற அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் கணினி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாமக்கல், காஞ்சிபுரம், தருமபுரி, சேலம், ஈரோடு மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 10 பெரிய நூலகங்களுக்கு இராசா ராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவியின்மூலம் மொத்தம் ரூ.20.00 இலட்சம் செலவில் கணிப்பொறிகள் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதிகளிலுள்ள 100 பொது நூலகங்களுக்கு 2005–2006 ஆம் ஆண்டில் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்மூலம் இணையதள வசதி ஏற்படுத்தப்படும்.

### 9.11. புத்தகக் கண்காட்சி

பொதுமக்களிடம் நூல்கள் வாங்கும் பழக்கம் மற்றும் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்க சென்னையில் கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 10. சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரண உதவிகள்

- சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவ மாணவியருக்கு இரண்டு ஜோடி சீருடை மற்றும் இலவச பாடப் புத்தகம் வழங்குதல்.

- சுனாமிப் பேரலையில் கல்விச் சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு அரசு தேர்வுகள் இயக்குநரகம் வழங்கும் இரண்டாம்படி சான்றிதழ்களை கட்டணமின்றி வழங்குதல். இதன்படி, 263 மாணவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. இரண்டாம்படி சான்றிதழ்களும், 150 மாணவர்களுக்கு +2 இரண்டாம்படி சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.



- சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட +2 மாணவர்களின் செய்முறைக் கையேடுகள் தொலைந்தோ அல்லது சேதமடைந்திருக்கும் பட்சத்தில், புதிய செய்முறைக் கையேடுகள் சமர்ப்பிப்பதிலிருந்து விலக்களித்து, அதற்குண்டான 20 மதிப்பெண்களை வழங்குதல்.

- சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குத் தனியாக பள்ளி இறுதித் தேர்வு/ மெட்ரிகுலேசன்/ஆங்கிலோ இந்தியன் மற்றும் +2 வகுப்பு பொதுத் தேர்வு நடத்துதல். இத்தனித் தேர்வின்கீழ் 10,181 மாணவர்கள் மேல்நிலைப் பள்ளித் தேர்வினையும், 16,564 மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வினையும், 126 மாணவர்கள் மெட்ரிகுலேஷன் தேர்வினையும் எழுதுவர்.

- சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர்கள் ஜனவரி, 2005 முதல் செலுத்தவேண்டிய கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு வழங்குதல். இதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கான சிறப்புக் கட்டணம், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம், அரசு உதவி பெறும் மற்றும் உதவி பெறாத கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் ஆகிய கல்வி நிறுனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் ஆகிய கட்டணங்களை அரசே செலுத்தும். மேலும், இம்மாணவ, மாணவியர் தாங்கள் எழுதுகின்ற பொதுத் தேர்வுகளுக்குச் செலுத்தவேண்டிய தேர்வுக் கட்டணத்திலிருந்து முழுவதுமாக விலக்கு அளிக்கப்படும். இந்த உதவிகள் 2005–2006 ஆம் கல்வி ஆண்டிலும் வழங்கப்படும்.

**1. எழுத்தறிவு விகிதம் 1901 முதல் 2001 (சதவீதத்தில்)**

| ஆண்டு | அகில இந்திய அளவில் | | | தமிழ்நாடு அளவில் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | நபர் | ஆண் | பெண் | நபர் |
| 1901 | 9.80 | 0.60 | 5.30 | 14.10 | 1.00 | 7.60 |
| 1911 | 10.60 | 1.10 | 5.90 | 17.10 | 1.50 | 9.20 |
| 1921 | 12.20 | 1.80 | 7.20 | 18.60 | 2.40 | 10.40 |
| 1931 | 15.60 | 2.90 | 9.50 | 20.00 | 2.90 | 11.30 |
| 1941 | 24.90 | 7.30 | 16.10 | 25.60 | 6.90 | 16.20 |
| 1951 | 27.16 | 8.86 | 18.33 | 31.70 | 10.10 | 20.80 |
| 1961 | 40.40 | 15.34 | 28.31 | 51.59 | 21.06 | 36.39 |
| 1971 | 45.95 | 21.97 | 34.45 | 59.54 | 30.92 | 45.40 |
| 1981 | 56.37 | 29.75 | 43.56 | 68.05 | 40.43 | 54.39 |
| 1991 | 64.13 | 39.29 | 52.21 | 73.05 | 51.33 | 62.66 |
| 2001 | 75.85 | 54.16 | 65.38 | 82.33 | 64.55 | 73.47 |

குறிப்பு—1961 மற்றும் 1971 விகிதமானது 5 வயது அதற்கு மேற்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்புக்கு உட்பட்டதாகும். 1981–லிருந்து 2001 வரையிலான விகிதமானது, 7 வயது அதற்கு மேற்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்புக்கு உட்பட்டதாகும்.

ஆதாரம்—அகில இந்திய மக்கட்தொகை கணக்கெடுப்பு அறிக்கை 2001.



**2. எழுத்தறிவு விகிதம் 2001**

**(மாவட்டங்களின் நிலை)**

| மாவட்டம் | | எழுத்தறிவு விகிதம் | | |
|---|---|---|---|---|
| | | நபர் | ஆண் | பெண் |
| மாநில எழுத்தறிவு விகிதம் | | 73.47 | 82.33 | 64.55 |
| 1. | கன்னியாகுமரி | 88.11 | 90.88 | 85.38 |
| 2. | தூத்துக்குடி | 81.96 | 88.66 | 75.64 |
| 3. | சென்னை | 80.14 | 84.71 | 75.32 |
| 4. | நீலகிரி | 81.44 | 89.63 | 73.39 |
| 5. | திருச்சிராப்பள்ளி | 79.16 | 87.16 | 71.19 |
| 6. | காஞ்சிபுரம் | 77.61 | 84.82 | 70.21 |
| 7. | மதுரை | 78.65 | 87.24 | 69.93 |
| 8. | கோயம்புத்தூர் | 76.95 | 83.82 | 69.80 |
| 9. | திருநெல்வேலி | 76.97 | 85.89 | 68.50 |
| 10. | திருவாரூர் | 76.90 | 85.59 | 68.36 |
| 11. | நாகப்பட்டினம் | 76.89 | 85.61 | 68.35 |
| 12. | திருவள்ளூர் | 76.54 | 84.62 | 68.23 |
| 13. | தஞ்சாவூர் | 76.07 | 85.45 | 66.95 |
| 14. | விருதுநகர் | 74.23 | 84.56 | 64.09 |
| 15. | இராமநாதபுரம் | 73.05 | 82.96 | 63.55 |
| 16. | வேலூர் | 73.07 | 82.67 | 63.53 |
| 17. | சிவகங்கை | 72.66 | 83.70 | 62.12 |
| 18. | தேனி | 72.01 | 82.50 | 61.41 |

[2005 ஏப்ரல் 6

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | புதுக்கோட்டை | 71.96 | 83.22 | 60.94 |
| 20. | கடலூர் | 71.85 | 82.76 | 60.85 |
| 21. | திண்டுக்கல் | 69.83 | 80.29 | 59.30 |
| 22. | கரூர் | 68.74 | 80.42 | 57.30 |
| 23. | நாமக்கல் | 67.66 | 78.02 | 57.04 |
| 24. | திருவண்ணாமலை | 68.22 | 80.14 | 56.31 |
| 25. | சேலம் | 65.72 | 75.25 | 55.61 |
| 26. | ஈரோடு | 65.51 | 75.49 | 55.26 |
| 27. | பெரம்பலூர் | 65.88 | 77.68 | 54.26 |
| 28. | விழுப்புரம் | 64.68 | 76.02 | 53.16 |
| 29. | தருமபுரி | 59.23 | 68.82 | 49.10 |



2005 ஏப்ரல் 6]

**3. பள்ளிகள் எண்ணிக்கை**

**2004–2005 (நிர்வாக வகைப்படி)**

| நிர்வாகம் | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் | மேல்நிலைப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அரசு | 1558 | 345 | 1963 | 1576 | 5442 |
| நகராட்சி / மாநகராட்சி | 912 | 435 | 110 | 93 | 1550 |
| ஊராட்சி ஒன்றியம் | 22613 | 4615 | .. | .. | 27228 |
| **அரசு மொத்தம்** | **25083** | **5395** | **2073** | **1669** | **34220** |
| தனியார்–உதவிபெறுபவை | 5102 | 1656 | 646 | 909 | 8313 |
| தனியார்–உதவிபெறாதவை | 174 | 60 | 222 | 149 | 605 |
| நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் | 3111 | .. | .. | .. | 3111 |
| ஆங்கிலோ இந்தியன் | .. | .. | 12 | 29 | 41 |
| மெட்ரிகுலேஷன் | .. | .. | 1999 | 1387 | 3386 |
| மைய அரசு | .. | .. | 52 | 87 | 139 |
| **மொத்தம்** | **33470** | **7111** | **5004** | **4230** | **49815** |

**4. பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விவரம்**
**2004–2005**

| வயது தொகுதி | மாணவர் சேர்க்கை (இலட்சங்களில்) | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் |
| 6–11 | 33.21 | 30.82 | 64.03 |
| 11–14 | 19.34 | 17.64 | 36.98 |
| 14–16 | 9.98 | 9.01 | 18.99 |
| 16–18 | 5.24 | 5.30 | 10.54 |
| 6–18 | 67.77 | 62.77 | 130.54 |

# இணைப்பு III

*(85 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 44

## தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

## தமிழ் வளர்ச்சி பண்பாடு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

–பாரதியார்

"கடல் போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்"

–பாரதிதாசன்

மொழி என்பது கருத்துப்புலப்பாட்டுக் கருவி மட்டுமன்று. அது மனித குலத்தின் நாகரிகச் சின்னமும் ஆகும். மொழியின் வழியாகவே மொழி பேசும் மக்களின் அறிவாற்றலும், நாகரிகமும், பண்பாடும் வெளிப்படுகின்றன. "ஒரு நாட்டுச் செல்வங்களுள் மொழியும் ஒன்றாகும். மொழித் துணையின்றி ஒரு நாட்டார் நாகரிகமாகவும் வசதியாகவும் வாழ்வதரிது. முன்னோர் அரும்பாடுபட்டு ஈட்டிய அறிவுச் செல்வமெல்லாம் மொழி வாயிலாகவே போற்றப்பட்டு வருகிறது" என்பார் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர். மொழி எந்த அளவுக்குப் போற்றப்படுகிறதோ அந்த அளவு அம்மொழி பேசும் மக்களுக்கும் பெருமை ஏற்படுகிறது. மொழிகளுள் உயர்வு தாழ்வு என்பது இல்லை. அவரவர்க்கு அவரவர் மொழி உயர்ந்ததாகும். அதனால்தான் உலகெங்கும் வாழும் மக்கள் தத்தம் மொழியைத் 'தாய் மொழி' எனப் போற்றுகின்றனர். "தாய் மொழி என்னும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்தத் தகுதியையும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும்



நமது தமிழ் மொழி, நமது தாய் மொழி என்பதால் மட்டுமன்று, வளமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத் தக்கதாகிறது. அங்கே வளம் கெடாமலும் மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு வழிகாட்டியுள்ளார்கள். எந்த மொழியும் பிறந்தபோதே வளர்ந்த மொழியாக இருந்திருக்க முடியாது. காலந் தோறும் தேவைக்கேற்ப மொழியை வளப்படுத்த வேண்டியது அம்மொழி பேசும் மக்களின் கடமையாகும். அப்போதுதான் மொழி என்பது வாழும் மொழியாகவும் வளரும் மொழியாகவும் திகழ முடியும்.

தமிழ் மொழியின் சிறப்பை உலகினர் அறியும் வண்ணம், 1995 ஆம் ஆண்டில் தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சீரும் சிறப்புமாக நடத்தித் தமிழுக்குப் பெருமை சேர்த்தார்கள். அந்த மாநாட்டில், "1981 ஆம் ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதியில் முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று முழங்கினார்கள். சீரிய முறையில் நடைபெற்ற இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாகத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புதிய பரிமாணத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதை நிரந்தரமாக்கிடவும், 'அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ்' என்பதை உணர்த்திடவும் 'இன்றும் தமிழ், என்றும் தமிழ்' என்ற புதிய முழக்கத்தை இந்த மாநாட்டின் எழுச்சி முழக்கமாக அறிவிப்பதில் நான் பெருமிதமும் பேருவகையும் அடைகிறேன்" என்று எழுச்சி முழக்கமிட்டார்கள். அது மட்டுமன்று, "புதிய மாற்றங்களை ஒரு மொழியினால் ஏற்க முடியாமல் போனால் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் அந்த மொழியின் வலிமையைக் குறைத்துவிடும். வளமார்ந்த மொழியாக, வழக்கில் என்றென்றும் இருக்கும் மொழியாக மாறவேண்டுமென்றால் நிலைத்த பழமையும், வளரும் புதுமையும் இரண்டறக் கலந்து இரண்டின் தன்மைகளையும் உள்ளடக்கியதாக அந்த மொழி வளர்ந்து வர வேண்டும்" என்று மொழி வளர்ச்சிக்கு உரிய பாதையையும் தெள்ளத் தெளிவாக வகுத்துக் காட்டியுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க, தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் துறை தகை சான்ற பணிகளை ஆற்றி வருகிறது. பன்முகத் தமிழ் வளர்ச்சி காணவும் பைந்தமிழ்ப் பண்பாடு பேணவும் பல்வேறு சீரிய பணிகளை இத்துறை தொடர்ந்து மேற்கொண்டு

[2005 ஏப்ரல் 6

வருகிறது. தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் எனும் முத்திறத்தால் முத்தமிழ் வளர்க்கும் இத்துறையின் அலுவலகங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

**தமிழ் நலம் பேணுவன**

1. தமிழ் வளர்ச்சி இயக்ககம்
2. மொழிபெயர்ப்புப் பிரிவு
3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
4. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
5. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

**தொன் மரபு காப்பன**

6. தொல்லியல் துறை
7. அருங்காட்சியகங்கள்

**வளர்கலை ஊக்குவன**

8. கலை – பண்பாட்டு இயக்ககம்
9. மண்டலக் கலை–பண்பாட்டு மையங்கள்
10. அரசு இசைக் கல்லூரிகள், இசைப் பள்ளிகள்
11. அரசு கவின் கலைக் கல்லூரிகள்
12. அரசு கட்டட– சிற்பக் கலைக் கல்லூரி
13. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
14. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு
15. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்



2005 ஏப்ரல் 6]

**2005–2006 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
| **வருவாய்ப் பகுதி** | | | |
| **2059 பொதுப் பணிகள்** | | | |
| 01 அலுவலகக் கட்டடங்கள் | | | |
| 053 பராமரித்தலும் செப்பனிடுதலும் | --- | 68,93 | 68,93 |
| **2202 பொதுக் கல்வி** | | | |
| 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | | | |
| 102 பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | --- | 4,25,00 | 4,25,00 |
| **05 மொழி வளர்ச்சி** | | | |
| 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 17,54 | 2,56,12 | 2,73,66 |
| 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 2 | 54,00 | 54,02 |
| 800 ஏனைய செலவு | 44,83 | 9,01,48 | 9,46,31 |
| **2205 00 கலையும் பண்பாடும்** | | | |
| 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 2,50 | 61,66 | 64,16 |
| 101 நுண்கலைக் கல்வி | 2,55,86 | 3,75,06 | 6,30,92 |
| 102 கலை–பண்பாட்டை வளர்த்தல் | 68,94 | 3,26,39 | 3,95,33 |
| 103 தொல் பொருளியல் ஆய்வு | 46,04 | 2,76,64 | 3,22,68 |
| 105 பொது நூலகங்கள் | 1,27 | 33,74 | 35,01 |
| 107 அரும் பொருட்காட்சியகங்கள் | 16,53 | 3,68,95 | 3,85,48 |
| **2251 00 தலைமைச் செயலகம்–சமூகப் பணிகள்** | | | |
| 090 தலைமைச் செயலகம் | -- | 2,37,16 | 2,37,16 |

[2005 ஏப்ரல் 6

மூலதனப் பகுதி

4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை–பண்பாடு குறித்த மூலதனச் செலவு

| | | | |
|---|---|---|---|
| 04 கலையும் பண்பாடும் | | | |
| 101 நுண்கலைக் கல்வி | — | — | — |
| 106 அருங்காட்சியகங்கள் | 40,00 | — | 40,00 |
| VI. மத்திய மாநில அரசுகள் பொறுப் பேற்கும் திட்டங்கள் | 62,50 | — | 62,50 |
| மொத்தம் – நிகரக் கோரிக்கை | | | |
| கூட்டுக – திருப்பி வசூலிப்பவை | — | — | — |
| மானியக் கோரிக்கை எண் 44 | 5,56,03 | 33,85,13 | 39,41,16 |

## 2005-2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

| வ.எண் | திட்டங்களின் விவரங்கள் | 2005-2006-ல் செலவு | | |
|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |

(ரூபாய் இலட்சத்தில்)

**தலைமைச்செயலகம் – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை**

| | | | | |
|---|---|---|---|---|
| | திட்டத்தில் சேராதது | | | |
| 1. | தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறையைக் கணினிமயமாக்குதல். | 0.00 | 7.50 | 7.50 |
| | கலை–பண்பாட்டு இயக்ககம் | | | |
| | திட்டத்தில் சேராதது | | | |
| 2. | கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் உள்ள கட்டடங்களைப் பழுதுபார்த்து பராமரித்தல். | 0.00 | 5.00 | 5.00 |



2005 ஏப்ரல் 6]

| | | | | |
|---|---|---|---|---|
| | பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் | | | |
| 3. | திருநெல்வேலி, சேலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள கலை–பண்பாட்டு மையத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம் (Xerox Machine) வாங்குதல். | 0.00 | 2.00 | 2.00 |
| 4. | மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு இசைக் கல்லூரிகளுக்குக் கணினிகள் வாங்குதல். | 0.00 | 1.50 | 1.50 |
| 5. | திருவையாறு, அரசு இசைக் கல்லூரியில் வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல். | 0.00 | 25.00 | 25.00 |
| 6. | மதுரை மற்றும் கோயம்புத்தூர், அரசு இசைக் கல்லூரிகளில் ஒலி, ஒளி நூலகம் ஏற்படுத்தல். | 0.00 | 2.00 | 2.00 |
| 7. | சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு, அரசு இசைக் கல்லூரிகளுக்கு இசைக் கருவிகள் வாங்குதல். | 0.00 | 4.00 | 4.00 |
| 8. | இசைக் கருவிகளை வைப்பதற்கு இரும்பு அலமாரி வாங்குதல். | 0.00 | 2.50 | 2.50 |
| 9. | மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் ஒலி–ஒளி நூலகம் ஏற்படுத்தல். | 0.00 | 8.50 | 8.50 |
| 10. | 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வாங்குதல். | 0.00 | 8.50 | 8.50 |
| 11. | 8 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்கு இசைக் கருவிகள் வாங்குதல். | 0.00 | 8.00 | 8.00 |
| 12. | மாணவர்களின் கலைக் கண்காட்சி அமைத்தல் | 1.00 | 0.00 | 1.00 |
| 13. | நீர்மப் படிமக் காட்சிப் பெருக்கிகள் இரண்டு வாங்குதல் | 0.00 | 4.00 | 4.00 |
| 14. | கணினிகள் மற்றும் துணைப் பாகங்கள் வாங்குதல் | 0.00 | 5.00 | 5.00 |
| 15. | மாமல்லபுரம், அரசு கட்டட–சிற்பக் கலைக் கல்லூரியில் ஒலி–ஒளி நூலகம் ஏற்படுத்தல். | 0.00 | 2.00 | 2.00 |
| 16. | கணினி மையம் ஏற்படுத்தல் மற்றும் கணினிகள் வாங்குதல் | 0.00 | 5.00 | 5.00 |
| | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | | | |
| | பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் | | | |
| 17. | இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் கலைக் கூடத்தைக் கட்டி முடித்தல். | 0.00 | 10.00 | 10.00 |
| 18. | ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புப் பணியாளர் பதவியை ஏற்படுத்துதல். | 0.36 | 0.00 | 0.36 |

[2005 ஏப்ரல் 6

| | | | |
|---|---|---|---|
| 19. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவில் இளம் கலைஞர்கள் முகாம் நடத்துதல். | 0.00 | 1.00 | 1.00 |
| 20. சென்னையிலும் வட்டார மையங்களிலும் கோடைக்கால முகாம்கள் நடத்துதல் (5 முகாம்கள்) | 3.00 | 0.00 | 3.00 |
| 21. சவகர் சிறுவர் இல்லத்திற்கு ஜெராக்ஸ் மற்றும் நிகரி சாதனம் வாங்குதல். | 0.00 | 1.00 | 1.00 |
| 22. தமிழ் இலக்கியத்திலுள்ள அரிய முக்கியமான நிகழ்வுகள் குறித்து நாட்டிய நாடகம் தயாரித்து நடத்துதல். | 0.00 | 1.00 | 1.00 |
| **தொல்லியல் துறை** | | | |
| **பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | | | |
| 23. மரபுச் சின்னங்களைப் பாதுகாத்தல் | 0.00 | 20.00 | 20.00 |
| 24. விழுப்புரம் மாவட்டம், மரக்காணம், திருவள்ளூர் மாவட்டம் பரிக்குளம் ஆகிய வரலாற்றுச் சிறப்பிடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்துதல். | 0.00 | 5.00 | 5.00 |
| 25. கங்கைகொண்டசோழபுரத்திலுள்ள தொல்லியல் அருங்காட்சியகத்தை மேம்படுத்தல். | 0.00 | 1.00 | 1.00 |
| 26. கங்கைகொண்டசோழபுரம் மற்றும் பூண்டி அருங்காட்சியகங்களுக்கு வழிகாட்டிப் புத்தகங்களை வெளியிடுதல். | 0.00 | 0.50 | 0.50 |
| 27. அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தின் வெளியிடப்படாத ஓலைச் சுவடிகளைப் படியெடுத்து வெளியிடுதல். | 0.00 | 0.67 | 0.67 |
| 28. அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையத்திற்குக் கணினி வாங்குதல். | 0.00 | 0.60 | 0.60 |
| 29. தஞ்சாவூரிலுள்ள வட்டார அலுவலகத்திற்கு கணினி, மேசை மற்றும் நாற்காலியுடன் வாங்குதல். | 0.00 | 0.70 | 0.70 |
| 30. இரு தனி நூல்களை வெளியிடுதல், அதாவது, திருச்செந்துறை, அழகர்கோவில். | 0.00 | 0.50 | 0.50 |
| 31. உதகையிலுள்ள கல்வெட்டுப் படிகளை டிஜிட்டல் முறையில் பாதுகாத்தல். | 0.00 | 1.00 | 1.00 |
| 32. மதுரை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் தொல்லியல் வழிகாட்டிக் குறிப்புகள் வெளியிடுதல். | 0.00 | 0.80 | 0.80 |
| 33. தமிழ் பிராமி எழுத்துகள் மற்றும் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் குறித்து ஆராய்ச்சித் தனி நூல் வெளியிடுதல். | 0.00 | 1.50 | 1.50 |



2005 ஏப்ரல் 6]

| | | | |
|---|---|---|---|
| 34. கல்வெட்டியல் நிறுவனத்தில் பயிற்சி பெற்ற, வேலையற்ற மாணவர்களைத் தெரிந்தெடுத்துக் கல்வெட்டுகளைப் படியெடுத்தல். | 0.00 | 5.00 | 5.00 |
| **அரசு அருங்காட்சியகங்கள்** | | | |
| **பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | 0.00 | 40.00 | 40.00 |
| 35. மானிடவியல் கட்டடத்தைச் சீரமைத்து அதன் கூடங்களைப் புதுப்பித்தல். | 0.00 | 40.00 | 40.00 |
| 36. 5 மாவட்ட அருங்காட்சியகங்களில் (வேலூர், சேலம், மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி) உள்ள கூடங்களை மேம்படுத்தல். | 0.00 | 10.00 | 10.00 |
| 37. புதிய மற்றும் பழைய அருங்காட்சியக வெளியீடுகள், வண்ணப்பட அட்டைகள் முதலியவற்றை மீண்டும் வெளியிடுதல். | 0.00 | 5.00 | 5.00 |
| **தமிழ் வளர்ச்சி இயக்ககம்** | | | |
| **திட்டத்தில் சேராதது** | | | |
| 38. இயக்ககத்திற்கு அறைகலன்கள் வாங்குதல் | 0.00 | 1.00 | 1.00 |
| 39. தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு ஜெராக்ஸ் சாதனம் வாங்குதல். | 0.00 | 0.90 | 0.90 |
| 40. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆராய்ச்சிக் கருத்தரங்கம் நடத்துவதற்குச் சிறப்பு மானியம் வழங்குதல். | 0.00 | 1.00 | 1.00 |
| **பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | | | |
| 41. இந்திய மற்றும் ஏனைய நாடுகளின் சிறந்த இலக்கியங்களை மொழிபெயர்த்து வெளியிடுதல். | 0.00 | 10.00 | 10.00 |
| 42. தமிழ் இலக்கியத்தை இந்தியில் மொழிபெயர்த்தல். | 0.00 | 5.00 | 5.00 |
| 43. தமிழ் வளர்ச்சித் துறையின் மண்டல, மாவட்ட அலுவலகங்களைக் கணினிமயமாக்குதல் (16 அலுவலகங்கள்) . | 0.40 | 8.00 | 8.40 |

[2005 ஏப்ரல் 6

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்**

**பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்**

| | | | |
|---|---|---|---|
| 44. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தின் 6 பகுதிகளை வெளியிடுதல். | 0.00 | 12.00 | 12.00 |
| 45. அகராதியின் எஞ்சிய 7 பகுதிகளைத் தொகுத்து, கணினி ஒளி அச்சிடுவதற்கு (DTP) 180 நாட்களுக்குப் பயிலரங்கம் நடத்துதல். | 0.00 | 5.04 | 5.04 |
| 46. கணினி எழுதுபொருள்கள் வாங்குதல் | 0.50 | 0.00 | 0.50 |
| மொத்தம் | 5.26 | 238.71 | 243.97 |

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சித் துறையின் தலையாய பணிகள் இரண்டாகும். ஒன்று ஆட்சிமொழிச் செயலாக்கப் பணி. மற்றொன்று தமிழ் வளர்ச்சிப் பணி. இப்பணிகளை எல்லா மட்டத்திலும் தொய்வின்றித் தொடர்ந்து ஆற்றி வர இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

### ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம்

### ஆய்வு

அரசு நிருவாகத்தில் தமிழ் மொழி முழுமையாகப் பயன்படுத்தப்பட, தமிழ் வளர்ச்சித் துறை பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்பில் அரசு அலுவலகங்கள் ஆட்சிமொழிச் செயலாக்கம் தொடர்பில் ஆய்வு செய்யப்படுகின்றன. தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசுச் செயலாளர் அவர்களால் தலைமைச் செயலகத் துறைகளும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களால் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவையும், மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் மற்றும் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களால் மாவட்டங்களிலுள்ள மண்டல நிலை மற்றும் மாவட்ட நிலை, சார்நிலை அலுவலகங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன.



2005 ஏப்ரல் 6]

### சிறப்பாய்வுத் திட்டம்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் மேலும் செவ்வனே அமையும் பொருட்டுச் 'சிறப்பாய்வுத் திட்டம்' 2003 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தலைமைச் செயலகத் துறையும் அத்துறையின்கீழ் இயங்கும் அனைத்துத் துறைத் தலைமை அலுவலகங்களும் அவற்றின் சார்நிலை அலுவலகங்களும் இத்திட்டத்தின்படி ஒரே காலத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன.

### ஆட்சி மொழிக் கருத்தரங்குகள்

அரசு அலுவலர்கள்–பணியாளர்களிடையே ஆட்சி மொழித் திட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படும் வகையிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படுவதனை ஊக்குவிக்கும் நோக்கிலும் ஆண்டுதோறும் மாவட்டங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன.

### ஆட்சிச் சொல் அகராதி, சிறப்புச் சொல் துணை அகராதிகள்

ஆங்கிலத்திலுள்ள நிருவாகச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கொண்ட ஆட்சிச் சொல் அகராதி நூல்களும், சிறப்புச் சொல் துணை அகராதி நூல்களும் தயாரிக்கப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### மொழி பெயர்ப்புப் பணிகள்

நிருவாக நடைமுறைகளில் தமிழ் மொழி முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்குத் துணைபுரியும் வகையில் படிவங்கள், பதிவேடுகள், விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் முதலியன தமிழில் மொழி பெயர்த்து அளிக்கப்படுகின்றன.

### தமிழ் வளர்ச்சித் திட்டங்கள்

### நூல் வெளியிட நிதியுதவி

மொழி வளர்ச்சியில் நூல்களின் பங்கு இன்றியமையாததாகும். எனவே, தமிழ் மொழியில் நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் நோக்கில் நிதியுதவி வழங்கப்படுகிறது. தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு நூலிற்கும் பெரும் அளவாக, நூலாக்கச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ.25,000 இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக அளிக்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 6

## சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

துறைதோறும் நூல்கள் வெளிவருவது தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் என்பதால், தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில், 31 வகைப்பாடுகளில், ஒவ்வொரு வகைப்பாட்டின்கீழும் சிறந்த நூலொன்றுக்கு ரூ.10,000 வீதம் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசு பெறும் நூலைப் பதிப்பித்த ஒவ்வொரு பதிப்பகத்தாருக்கும் ரூ.2000 வீதம் பரிசு வழங்கப்படுகிறது.

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

தமிழுக்குத் தொண்டாற்றியும் திங்கள் வருமானம் ரூ.400-க்கு மேற்படாமலும், 58 அகவை முடிந்தும் உள்ள தகுதியுடைய தமிழறிஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் ரூ.500 வீதம் வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்கப்பெற்று வருகிறது. 2004-2005ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 9 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

## தமிழ் மொழி, பண்பாட்டைப் பேணி வளர்க்கப் பாடுபட்ட தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

இத்திட்டத்தின்கீழ், தகுதியுடையோருக்குத் திங்கள்தோறும் ரூ.3000 நிதியுதவியும், ரூ.15 மருத்துவப்படியும் வழங்கப்படுகிறது. இவர்களின் மறைவுக்குப் பின் மரபுரிமையருக்குத் திங்கள்தோறும் ரூ.1500 நிதியுதவியும், ரூ.15 மருத்துவப்படியும் வழங்கப்படுகிறது. அத்துடன், இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது. மேலும், சிலருக்கு ஒட்டுமொத்த நல்கைத் தொகையாக ரூ.10,000-மும், மரபுரிமையருக்கு ஒட்டுமொத்த நல்கைத் தொகையாக ரூ.5,000-மும் வழங்கப்பட்டுள்ளது.

## விருதுகள்

சிறந்த முறையில் தமிழ் பணியாற்றும் தமிழறிஞர்களுக்குத் திருவள்ளுவர், திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. ஆகிய தமிழ்ச் சான்றோர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருது ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் கொண்டதாகும்.



2005 ஏப்ரல் 6]

## குறள் பரிசு

திருக்குறள் முற்றோதல் செய்த செல்வி சிவராஜி, செல்வி இரா. அருள்ஜோதி, செல்வி அ. செல்வபாரதி, செல்வன் அ. எழிலரசன், செல்வன் அ. பழனிமுத்து ஆகியோருக்கு ஒவ்வொருவருக்கும் பரிசுத் தொகையாக ரூ.5000 வீதம் வழங்கப்பட்டுள்ளது.

## பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல்/பட்டய வகுப்பு நடத்துதல் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மானியம் / நிதியுதவி

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றைப் பரப்பிடவும், பிற மாநிலங்களிலுள்ள மக்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டும், பிற மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழிருக்கை நிறுவுவதற்கும், தமிழில் பட்டய வகுப்பு நடத்துவதற்கும் மானியம்/நிதியுதவி வழங்கப்பெறுகிறது. இவ்வகையில், புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை நிறுவ 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் நல்கை வழங்கப்பட்டுள்ளது.

வாரணாசியில் உள்ள பனாரசு இந்து பல்கலைக்கழகத்தில் மகாகவி பாரதியார் தமிழிருக்கை மீண்டும் பொலிவுடன் செயற்பட விரிவுரையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## விழாக்கள்

தமிழுக்குத் தொண்டாற்றியுள்ள பெருமக்களைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழா நடத்தப்படுகிறது. தமிழறிஞர்களின் நூற்றாண்டு விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. 'தமிழ்த் தாத்தா' டாக்டர் உ.வே.சா.அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவரின் பிறந்த நாளான பிப்ரவரி 19 ஆம் நாளன்றும், பெண்குலத்திற்குப் பெருமை சேர்த்த ஔவைப் பெருமாட்டியின் திருவுருவச் சிலைக்கு உலக மகளிர் தினமான மார்ச் 8 ஆம் நாளன்றும் ஆண்டுதோறும் மாலையணிவித்துச் சிறப்பு செய்யப்படுகிறது.

## நூல்கள் நாட்டுடைமையாக்கம்

சிறந்த தமிழறிஞர்களின் நூல்கள் எளிதில் மக்களைச் சென்று சேர வேண்டியது இன்றியமையாததாகும். இச்சீரிய நோக்கில் அரசு அவ்வப்போது தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி வருகிறது. இவ்வகையில் 2003-2004 ஆம் ஆண்டில் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், திரு. க.நா. சுப்பிரமணியம் மற்றும் திரு.ந.பிச்சமூர்த்தி

ஆகியோரின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்களின் குடும்பத்தாருக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.15.00 இலட்சம் பரிவுத் தொகையை அரசு ஒப்பளிப்பு செய்து வழங்கியுள்ளது. இத்தொகை, மேற்படி குடும்பத்தாருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01–03–2005 அன்று வழங்கப்பட்டது.

**நூல்கள் தயாரிப்பு**

ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பயன்படும் வகையிலான நூல்கள் இத்துறையால் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு வரலாற்று நூல் தொகுதிகள், இ.ஆ.ப., தேர்வுக் கருவி நூல்கள், தமிழ் நூல் விவர அட்டவணை, புதிய தமிழ் இலக்கிய வரலாறு, திருக்குறள் கலைக் களஞ்சியம், கலைச் சொற் களஞ்சியம், பல்துறைக் கலைக் களஞ்சியம், இலக்கியச் சொல்லடைவு ஆகிய நூல்களைத் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சொல் வங்கி**

தமிழில் வழங்கிவரும் பிற மொழிச் சொற்களுக்கு நிகராகத் தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்ளவும், பழைய தமிழ்ச் சொற்களை இன்றைய தேவைக்கேற்ப புதுப்பித்துக் கொள்ளவும், மக்களிடையே புழக்கத்தில் உள்ள சொற்களைத் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளவும் உரிய ஓர் அமைப்பாகச் 'சொல் வங்கி' எனும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது. திங்கள்தோறும் பல்துறை வல்லுநர்கள் கூடி, புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்குகின்றனர். இச்சொற்களை அனைவரும் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தமிழ் மன்றம்**

மாணவர்களின் தமிழ்ப் படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும் வளர்க்கும் வண்ணம் மாவட்டந்தோறும் பள்ளிகளில் தமிழ் மன்றங்கள் அமைத்து 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், ஒவ்வொரு மாவட்டத்திலும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் மாணவர்கள் விருப்புடன் ஈடுபடவும் மாணவப் பருவத்திலேயே மனதில் தாய்மொழிப்பற்றை விதைக்கவும் அரசு வழி வகுத்துள்ளது. மாவட்டந்தோறும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிலும் முதல் பரிசு, இரண்டாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசு ரூ. 1000, இரண்டாம் பரிசு ரூ.500 என வழங்கப்படுகிறது.



2003–2004 ஆம் ஆண்டு முதல் மாநில அளவிலும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாவட்டத்தில் முதல் பரிசு பெற்றவர்கள் மட்டும் கலந்து கொள்ளும் மாநிலப் போட்டியில் வெற்றி பெறுகிறவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றுக்கும் மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல்பரிசு ரூ.5,000, இரண்டாம் பரிசு ரூ. 3,000, மூன்றாம் பரிசு ரூ. 2,000 ஆகும்.

**கல்லூரி மாணவர்களுக்குப் போட்டிகள்**

2003–2004 ஆம் ஆண்டு முதல் கல்லூரி மாணவர்களுக்கும் மாவட்ட, மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட நிலையில் நடைபெறும் ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசு மட்டும் ரூ.1000 வழங்கப்படுகிறது. மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி என்ற ஒவ்வொன்றுக்கும் முதல் பரிசு ரூ.5,000, இரண்டாம் பரிசு ரூ.3,000, மூன்றாம் பரிசு ரூ.2,000 என வழங்கப்படுகிறது.

**தமிழ் வளர்ச்சி வளாகம்**

சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தினுள், தமிழ் வளர்ச்சித் துறைக்கெனவும் மற்றும் தமிழ் வளர்ச்சி–பண்பாடு சார்ந்த துறைகளின் அலுவலகங்கள் அமைந்திடவும் ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் ஏழு அடுக்கு மாடிகளுடன் உருவாக்கப்படும் தமிழ் வளர்ச்சி வளாகத்தின் முதற்கட்டப் பணியாக ரூ.2.00 கோடி செலவில் தரைக்குள் தளம், தரைத்தளம், முதல் தளம் ஆகியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தரைக்குள் தளம் 3,751 சதுர அடி, தரைத்தளம் 9,611 சதுர அடி, முதல் தளம் 9,775 சதுர அடி என மொத்தம் 23,137 சதுரஅடிப் பரப்பில் தற்போது இக்கட்டடம் அமைந்துள்ளது. அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புடனும் இந்தப் புதிய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 3-3-2005 அன்று இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள்.

இதனையடுத்து, சென்னை, குறளகம் கட்டடத்தில் ரூ.55,198 மாத வாடகையில் இயங்கி வந்த தமிழ் வளர்ச்சி இயக்கக அலுவலகம், தற்போது தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தப் புதிய கட்டடத்தில் தரைக்குள் தளத்தில் தொல்லியல் துறையின் அச்சகப்

பிரிவும், தரைத்தளத்தில் தொல்லியல் துறை அலுவலகமும், முதல் தளத்தில் தமிழ் வளர்ச்சி இயக்ககமும் செயல்பட்டு வருகின்றன.

**பிற பணிகள்**

2004–2005 ஆம் ஆண்டில், தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் நூலகம் அமைத்தல், தமிழகம் ஊரும் சீரும் குறுந்தகடுகள் தயாரித்தல், தமிழில் மென்பொருள் தயாரித்தல், மின் அகராதி தயாரித்தல், கிளவியாக்கம் தயாரித்தல், மொழித்திறம் தயாரித்தல், ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**புதிய திட்டங்கள்**

2005–2006 ஆம் ஆண்டில், பகுதி–II திட்டத்தின்கீழ், நம் நாடு மட்டுமல்லாது ஏனைய நாடுகளின் சிறந்த இலக்கியங்களை மொழிபெயர்த்து வெளியிடுதல், தமிழ் இலக்கியத்தை இந்தியில் மொழிபெயர்த்தல், இயக்ககத்திற்கு அறைகலன்கள் மற்றும் படிபெருக்கிச் சாதனம் (ஜெராக்ஸ்) வாங்குதல், தமிழ் வளர்ச்சித் துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலகங்களைக் கணினிமயமாக்குதல் ஆகிய திட்டங்களை மொத்தம் ரூ.25.30 இலட்சம் செலவில் நிறைவேற்ற அரசு முடிவெடுத்துள்ளது.

**மொழிபெயர்ப்புப் பிரிவு**

தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் பல பிரிவுகளில் ஒன்றான மொழிபெயர்ப்புப் பிரிவு, அரசின் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தில் அரும்பணியாற்றி வருகிறது. இப்பிரிவில், வழக்கமாக, தமிழ்நாடு அரசிதழ்களிலும், அனைத்து மாவட்ட அரசிதழ்களிலும் வெளியிடப்படும் அரசு அறிவிக்கைகள், சுற்றோட்டக் குறிப்புகள், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும் துறை வாரியான கொள்கை விளக்கக் குறிப்புகள், அரசு பொது நிறுவனங்கள் மற்றும் பொதுக் கணக்குக் குழுக்களின் அறிக்கைகள், காவல் துறை மற்றும் சிறைத் துறையின் சிறப்புப் பதக்கங்களுக்கான தகுதியுரைகள், விழிப்புப் பணி ஆணையத்தின் ஆண்டறிக்கை, "காஃபிபோசா சட்டத்தின்"கீழ் பிறப்பிக்கப்படும் தடுப்புக்காவல் ஆணைகள், அமைச்சரவைக் குறிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், பத்திரிகைச் செய்திகள் முதலியவற்றுக்குத் தமிழாக்கம் அளிக்கப்படுகிறது. மேற்சொன்ன வாலாயமான பணிகளோடு, இந்த ஆண்டில், பொதுத் (தேர்தல்) துறை வெளியிட்ட கையேடுகள், மின் அணு எந்திரம் மூலமான வாக்குப் பதிவு



குறித்த வழிகாட்டி நூல், மகளிருக்கான உரிமைகளை விளக்கும் புத்தகம், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு அறிக்கைகள், நதிநீர் இணைப்பு குறித்த சிற்றேடு, மனித உரிமைகள் ஆணைய அறிக்கைகள் ஆகியவை மொழிபெயர்க்கப்பட்டன.

மேலும், மத்திய அரசிடமிருந்து இந்தி மொழியில் வரப்பெறுகின்ற கடிதங்கள் முதலானவற்றிற்கும் மொழிபெயர்ப்புப் பிரிவானது ஆங்கில மொழியாக்கம் அளிக்கிறது.

இவை தவிர, ஒவ்வோராண்டும் நிதித் துறைக்கு உதவி இயக்குநர் ஒருவர் தலைமையில் பிரிவு அலுவலர் ஒருவர், உதவிப் பிரிவு அலுவலர்கள் மூவர் அடங்கிய மொழிபெயர்ப்புக் குழு ஒன்று முகமையில் அனுப்பப்படுகிறது. இக்குழு ஆளுநர் உரை, வரவு–செலவுத் திட்ட உரை, வரவு–செலவுத் திட்டம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் துணை மானியக் கோரிக்கைகள் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொள்கிறது. தவிரவும், ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின் போதும் உதவிப் பிரிவு அலுவலர் ஒருவர் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர், சட்டமன்றக் கூட்டம் தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்கிறார். அதுபோலவே, மாவட்ட ஆட்சியர், காவல் துறை அதிகாரிகளின் மாநாடு நடைபெறும்போது, அது தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக இப்பிரிவில் இருந்து ஒரு குழு பொதுத் (மரபு) துறைக்கு அனுப்பப்படுகிறது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்விற்காக, 1970 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில், தற்போது, இலக்கியம்–சுவடிப் புலம், தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம் மற்றும் அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகிய நான்கு புலங்கள் உள்ளன.

இந்நிறுவனத்தில் தமிழியல் தொடர்பான திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல், நூல்கள் வெளியிடுதல், வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் மொழி பயிற்றுவித்தல், தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் ஆய்வியல் நிறைஞர் மற்றும் தமிழ் முதுகலைப் பட்ட வகுப்புகள்

நடத்துதல், சுவடியியல், மொழிபெயர்ப்பியல் பட்டய வகுப்புகள் நடத்துதல், கருத்தரங்குகள்–பயிலரங்குகள் நடத்துதல், செய்திக்கதிர், தமிழியல் ஆய்விதழ் வெளியிடுதல், பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிறுவனக் கல்விசார் அலுவலர்கள், தமிழியல் தொடர்பான பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் செய்து வருகின்றனர். இவை இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழி கற்பித்தல், வரலாறு, சமூகவியல், பண்பாடு, நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பு தொடர்பானவை என அமைகின்றன.

இந்நிறுவனம் இதுவரையிலும் 531 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இங்குள்ள கல்விசார் அலுவலர்களின் திட்டப் பணிகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், அரியநூல் மறுபதிப்புகள், பிற தமிழறிஞர்களின் படைப்புகள் ஆகியவற்றைக் கொண்ட வெளியீடுகளாக அமைகின்றன. தமிழ் வளர்ச்சித் துறையின் அரிய நூல்கள் / சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதி பெற்றும் இந்நிறுவனம், பல நூல்களை வெளியிட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மட்டும் 48 நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்நிறுவனம் தனியாகவும், பிற நிறுவனங்களோடு இணைந்தும் பல கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. மைய அரசு பண்பாட்டுத் துறை நிதியுதவியுடன் மூன்று நாள் 'திராவிட மொழிக் கவிதைக் கருத்தரங்கு' 2004, மார்ச் திங்களில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிறுவனத்தில் 'இலக்கிய மேடை' தொடங்கப்பட்டு, இதற்கான தொடக்க விழா 03-11-2004 அன்று நடைபெற்றது. 'இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 36-வது கருத்தரங்கினை' உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முற்றிலும் தன்னார்வ நன்கொடையுடன் 2004, மே திங்களில் இரு தினங்களில் சிறப்பாக நடத்தியது.

தமிழுக்குப் பெருந்தொண்டாற்றிச் சிறப்பு சேர்த்து அமரத்துவம் பெற்ற தமிழறிஞர்களை நாட்டுக்கும் தமிழுலகத்திற்கும் அறிமுகப்படுத்தும் வகையில், பல்வேறு தமிழறிஞர்கள் பெயரில் தமிழறிஞர் வரிசைத் திங்கள் தொடர் கருத்தரங்குகளை நடத்தி, அன்னாரது தொண்டு பற்றி நாடறியச் செய்யும் வகையில், அக்கருத்தரங்கில் அறிஞர்கள் படிக்கும் கட்டுரையை



நூலாக்கம் செய்து வெளியிடும் திட்டம் தொடங்கப்பெற்றுள்ளது. இவ்வரிசையில் முதல் சுற்றில் 16 கருத்தரங்குகள் நிறைவு பெற்றுள்ளன. தற்போது, இதன் இரண்டாம் சுற்று தொடங்கப்பட்டுள்ளது. 2004, மார்ச் முதல் இவ்வகைப்பாட்டில், 10 கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன. இக்கருத்தரங்கக் கட்டுரைகள் அந்தந்த அறிஞர் பெயரில் நூலாக்கம் பெறுதற்கான பணிகள் முடுக்கிவிடப்பெற்று, இதுவரை, ஒன்பது நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வாளர்களுக்கும் ஆய்வு அலுவலர்களுக்கும் ஊக்கமூட்டும் வகையிலும், ஆய்வை மேம்படுத்தும் வகையிலும், '20 ஆம் நூற்றாண்டுக் கவிஞர்கள்' என்ற பொதுத் தலைப்பில் 2004–2005 ஆம் ஆண்டில், 29 வெள்ளிக்கிழமைக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் நூலாக்கம் பெறுதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கெனத் திங்கள்தோறும் ஆய்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்று வருகின்றன. இதுவரை, 9 கருத்தரங்குகள் திங்கள் கருத்தரங்குகளாக 2004–2005 ஆம் ஆண்டில் நடத்தப்பெற்றுள்ளன.

இந்நிறுவனத்தில் புலமைமிக்க தமிழறிஞர்கள் பெயரில் தற்போது 29 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. இவ்வறக்கட்டளைப் பொறுப்புகள் கல்விசார் அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, அறக்கட்டளைப் பொழிவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அறக்கட்டளைப் பொழிவு நிகழும்போதும், பொழிவுகள் நூல்களாக வெளியிடப்படுகின்றன. 2004, மார்ச் முதல் 2005, சனவரி வரை 14 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன.

2004–2005 ஆம் ஆண்டுப் பருவத்தில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் பெயரில், ரூ.25,000 முகமதிப்பில் புதிதாக அறக்கட்டளையொன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் உள்ள நூலகத்தில், தற்போது 82,000 நூல்கள் உள்ளன. 'தினத்தந்தி' அதிபர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள் வழங்கிய ரூ.9.50 இலட்சம் முழு நன்கொடைத் தொகையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்துக்குப் படிப்பறையும், புதிய கருத்தரங்க அறையும் 2003–2004-ல் பொதுப் பணித் துறை வழி கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 6

இந்நிறுவன நூலகத்துக்கு, இரும்பு அடுக்குகள் வாங்க அரசு வழங்கிய சிறப்பு நல்கை ரூ.1,67,600–க்கு 63 இரும்பு அடுக்குகள் வாங்கிப் பொருத்தப்பெற்றுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1971 ஆம் ஆண்டு முதல் 'தமிழியல்' என்னும் இருமொழி ஆய்விதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. 1987 ஆம் ஆண்டு முதல் 'செய்திக்கதிர்' எனும் காலாண்டிதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இவ்விதழ்வழி நிறுவனத்தின் நடப்புகளை உலகறியச் செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்விதழைத் திங்களிதழாக வெளிக் கொணர முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்று, இரண்டு இதழ்கள் வெளியிடப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியதற்கிணங்க, 2004 ஆம் ஆண்டில், இந்நிறுவனத்தில், தமிழ் ஆய்வியல் நிறைஞர், தமிழ் முதுகலை (இலக்கியம்) மற்றும் தமிழ் முதுகலை (பயன்பாட்டுத் தமிழ்) ஆகிய வகுப்புகள் தொடங்கப் பெற்றுள்ளன.

இவ்வகுப்பு தொடர்பான உட்கட்டமைப்பிற்கு, சிறப்பு நல்கையாக அரசு ரூ.2.00 இலட்சம் வழங்கியுள்ளது. ஆய்வியல் நிறைஞர் வகுப்பில் 25 மாணவர்களும், முதுகலைப் பட்ட வகுப்புகளில் 7 மாணவர்களும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர். முனைவர் பட்ட ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் இவ்வகுப்பு நடைபெற்று வருகிறது. 2004 ஆம் ஆண்டில், 13 பேர் முழுநேர முனைவர் பட்ட ஆய்வுக்குச் சேர்ந்துள்ளனர்.

**புதிய திட்டங்கள்**

2005–2006 ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின்கீழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு, சிறப்பு மானியமாக வழங்கப்படும் ரூ.1.00 இலட்சம் நிதியைக் கொண்டு ஆராய்ச்சிக் கருத்தரங்கம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் உயர்தனிச் செம்மொழியான தமிழ் மொழிக்கென, பல்வேறு ஆய்வுத் திட்டப் பணிகள்மூலம் தமிழ் மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்காக, உயர்நிலையில் ஆய்வு செய்யும்



2005 ஏப்ரல் 6]

நிறுவனமாக, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9 / 1982) கீழ் உருவாக்கப்பெற்றது. இத்தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு கூறுகளான கலை, பண்பாடு, சிற்பம், கட்டடக்கலை, இலக்கியம், மொழியியல், வரலாறு, ஓலைச்சுவடி, கல்வெட்டியல், தத்துவம், நில அறிவியல், சித்த மருத்துவம், தொல்லறிவியல் போன்ற துறைகளை ஆய்ந்து வரைமுறைப்படுத்தும் பணியை 1981 ஆம் ஆண்டு முதல் தொடங்கிப் பல அரிய ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டு வருகின்றது.

இப்பல்கலைக்கழகம் கலை, மொழி, சுவடி, வளர்தமிழ், அறிவியல் என 5 புலங்களையும், அவற்றின்கீழ் 23 தனித் துறைகளையும் மற்றும் அச்சகம், பதிப்புத் துறை, நூலகம், அருங்காட்சியகம், கலைக்களஞ்சியம் மற்றும் அகராதி ஆகிய துறைகளையும் தன்னகத்தே கொண்டு செயல்பட்டு வருகின்றது.

2002–2004 ஆம் கல்வியாண்டில், முதுகலைப் பட்ட வகுப்பில் 119 மாணவர்கள் அதாவது, 96 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளனர். 2003–2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 6 சான்றிதழ் பயிற்சி வகுப்பில் 49 மாணவர்கள் பயின்று தேர்ச்சி பெற்றுள்ளனர். 2004–2005 ஆம் ஆண்டில் இந்திய மொழிகள் பள்ளியில், தெலுங்கு மொழியில் முதுகலையில் பட்டயப் படிப்பு தொடங்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

மாணவர்கட்கான காப்பீடு செய்ய உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில், 17 துறைகளில் 194 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் சேர்ந்தனர். முனைவர் பட்டப் படிப்பில் சென்ற ஆண்டு உள்ள ஆய்வாளர்களில் 605 பேர் தங்கள் ஆய்வினை இவ்வாண்டும் தொடர்கின்றனர். புதியதாக 75 ஆய்வாளர்கள் இவ்வாண்டு பதிவுசெய்ய உள்ளனர்.

இந்திய மொழிகள் பள்ளி வாயிலாகத் தகுதிகாண் பருவத்திலுள்ள இந்திய ஆட்சிப் பணி, காவல் பணி, வனத் துறைப் பணி (இ.ஆ.ப., இகா.ப., இவ.ப.) அலுவலர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சி வகுப்புகளும் அரசின் உதவியோடு நடத்தப் பெற்று வருகின்றன.

கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பயனுக்காகப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்திடப் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் இசைவும், நிதியுதவியும் கோரப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 6

சென்ற ஆண்டைப் போலவே இவ்வாண்டிலும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நிறுவப் பெற்றுள்ள அறக்கட்டளைகளின் சார்பில் கருத்தரங்குகள் / சொற்பொழிவுகள் நடத்தப்படவுள்ளன. பல்கலைக்கழகத் துறைகளில் காலமுறைப்படி, ஆசிரியர் மாணவர்கட்கான திரையரங்கம், பயிலரங்கம், மொழியரங்கம் முதலானவை நடத்தப்பட்டன. வரும் ஆண்டிலும் இது தொடர்ந்து நடத்தப்படும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், ரூ.225.00 இலட்சம் நிதியுதவி அளிக்க ஏற்பளித்து இதுவரை ரூ.135.00 இலட்சம் நல்கையினை, பல்கலைக்கழக நல்கைக் குழு விடுவித்துள்ளது. இந்நல்கையினைப் பயன்படுத்தித் துறைகளுக்குக் கருவிகளும், பல்கலைக்கழக நூலகத்திற்கும், துறைகளுக்கும் தேவையான நூல்களும் வாங்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையத்தில் தஞ்சை "மனவளக்கலை மன்றத்துடன்" இணைந்து பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் யோகா மையம் அமைக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில், இம்மையத்தில், மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்களின் பயனுக்காக யோகாப் பயிற்சியில் முதுகலைப் பட்டயப் படிப்பு, குறுகிய காலச் சான்றிதழ் வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கலைச் சொற்களஞ்சியம் தயாரிக்கும் பணியினைத் தமிழக அரசு, தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்து, இப்பணியினை மேற்கொள்வதற்கு ரூ.3,79,000/–ஐ வழங்கியுள்ளது. கலைச் சொற்களஞ்சியம் தயாரிக்கும் பணி தொடர்பாக வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றினைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தற்போது அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் கலைச் சொற்களஞ்சியம் உருவாக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், நூல்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.10.00 இலட்சத்தில் ரூ.5.00 இலட்சத்திற்கான நூல்கள் 2004 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டுள்ளன. மீதத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கான நூல்கள், 2005–2006 ஆம் ஆண்டில் வாங்கப்படும். பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் நூலகத்தில் எர்நெட் அமைப்பு 2004 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 6]

2005–2006 ஆம் ஆண்டில் 25 நூல்கள் வரை அச்சிட்டு வெளியிடப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.24,14,224/– மதிப்பிலான நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தமிழ்ப் புத்தாண்டு, பல்கலைக்கழக ஆண்டு விழா நாள் போன்ற சிறப்பு நாட்களை முன்னிட்டுச் சிறப்புத் தள்ளுபடி விற்பனை, முகவர் மூலம் விற்பனை, தஞ்சாவூரைத் தவிரவும் பிற இடங்களில் நூல்காட்சிகளில் விற்பனை எனத் தொடர்ந்து சென்ற ஆண்டைப் போலவே விற்பனையைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்திமலர் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது.

**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**

மதுரையில், உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கும் பணி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம், தமிழக அரசால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பெருந்திட்டக் கட்டட மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல், வடிகால் அமைத்தல், வளாகக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், முதற்கட்டப் பணிகளுக்காகப் பெறப்பட்ட ரூ.10.00 இலட்சத்தில் 2005 ஆம் ஆண்டில் கருத்தரங்கு நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழக அரசின் பெரும் உதவியோடு தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் மரபு ஆகியவற்றின் வளர்ச்சிக்கான மேம்பாட்டுப் பணிகளில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

தமிழ் மொழி வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் அடிப்படையான பணிகளில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி தொகுத்து வெளியிடுதலும் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கிறது. விரிவான சொற்பிறப்பியல் அகரமுதலியைப் பன்மடலங்களில் தொகுத்து வெளியிடுவதே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் ஆக்கமும் நோக்கமும் ஆகும். இருமொழிப் பேரகராதியான இந்நூல் எல்லோர்க்கும் பயன்படும் பொதுவகை அகராதியாகவும், குறிப்பாகத் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்தரும் சிறந்த கருவி நூலாகவும் திகழுவது தனிச் சிறப்புக்குரியதாகும். தமிழ் மொழி வளத்தை நன்கு புலப்படுத்துவதோடு

மட்டுமன்றி, தனித் தமிழார்வலர்களுக்குப் பயன்படும் வகையிலும் இப்பேரகரமுதலியில் தமிழ்ச் சொற்களும் அயற்சொற்களும் பிரித்துக் காட்டப்படுகின்றன. தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், இலக்கணம் மற்றும் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களும், சான்றுகளும், தேவையான இடங்களில் பட விளக்கங்களும் இடம் பெற்றிருப்பது இப்பேரகரமுதலிக்கு அணிசேர்க்கும் சிறப்புக் கூறுகளுள் சிலவாகும்.

இந்திய மொழிகளிலேயே விரிவான மற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி இவ்வியக்ககத்தால் வெளியிடப் பெறுகிறது. இவ்வியக்ககம் வெளியிடத் திட்டமிட்டுள்ள 31 பகுதிகளில், ஏற்கெனவே வெளிவந்துள்ள 6 பகுதிகள் தவிர்த்து, எஞ்சிய 25 பகுதிகள் நான்காண்டு கால வரம்பெல்லைக்குள் தொகுத்து முடிக்கப் பெறும் என்ற அரசின் அறிவிப்புக்கிணங்க, இலக்கினை எய்திடும் நோக்கில், பணி முடுக்கி விடப்பட்டதன் விளைவாய், 2002–2003 ஆம் ஆண்டில் 6 பகுதிகளும், 2003–2004 ஆம் ஆண்டில் அடுத்த 6 பகுதிகளும், அதனைத் தொடர்ந்து 2004–2005 ஆம் ஆண்டில் அதற்கடுத்த 6 பகுதிகளும் ஆக மொத்தம் 18 பகுதிகள் அச்சுக்கு அணியமாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இவற்றுள் 6 பகுதிகள் அச்சீட்டுப் பணி நிறைவு பெற்று விட்டது. 6 பகுதிகள் அச்சில் உள்ளன. அடுத்த 6 பகுதிகள் அச்சீட்டுப் பணி 2005–2006 ஆம் ஆண்டில் தொடங்கப் பெறும்.

2005–2006 ஆம் ஆண்டில், எஞ்சிய கடைசி 7 பகுதிகளின் தொகுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப் பெறும்.

**புதிய திட்டங்கள்**

2005–2006 ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின்கீழ், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் 6 பகுதிகள் அச்சீட்டுப் பணி செய்தல், எஞ்சிய கடைசி 7 பகுதிகள் தொகுப்பு மற்றும் கணினியச்சுப் பணிப்பட்டறை 180 நாட்கள் நடத்துதல், கணினி எழுது பொருள் வாங்குதல் போன்ற திட்டங்களை மொத்தம் ரூ.17.54 இலட்சம் செலவில் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது.

**தொல்லியல் துறை**

தொல்லியல் துறையானது 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. தமிழகத்திலுள்ள நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் சீரமைத்துப் பாதுகாப்பதையும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வுப் பணி செய்வதையும் முக்கியக்



குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப் பெற்ற இத்துறையில், அகழாய்வுப் பிரிவுடன், கல்வெட்டுப் பிரிவு, அச்சுப் பிரிவு, மாவட்ட அகழ்வைப்பகங்கள், இரசாயனப் பிரிவு, நிழற்படப் பிரிவு, தொல்கலைப் பொருட்கள் பதிவு எனப் பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

சமயம் சார்ந்த மற்றும் சமயஞ்சாராத கட்டடங்கள் உட்பட இதுவரை 88 வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன. பதினோராவது நிதிக் குழுவின்கீழ் மரபுச் சின்னங்கள் பாதுகாப்பிற்கு மற்றும் ஓவியங்கள் பராமரிப்பிற்கு ரூ.447.31 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

ஆண்டுதோறும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழாய்வுப் பணி நடத்தப்படுகிறது. இதுகாறும், 25 இடங்களில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு அரிய தொல்கலைப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு, அவை மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள 14 அகழ்வைப்பகங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ், 2004–2005 ஆம் ஆண்டில் 1. திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், ஆண்டிப்பட்டி மற்றும் 2. தருமபுரி மாவட்டம், மோதூர் ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுப் பணி நடைபெற்று வருகிறது.

2005–2006 ஆம் ஆண்டில், விழுப்புரம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊரான மரக்காணம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால வாழ்விடமாக விளங்கிய பூண்டி அருகிலுள்ள பரிக்குளம் ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அகழாய்வுப் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆணையரகத்தில் செயல்பட்டுவரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் கல்வெட்டு மற்றும் தொல்லியல் முதுநிலைப் பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகம், தற்போது இத்துறையினை முனைவர் பட்டம் பெறுவதற்கான ஆய்வு மேற்கொள்ள ஆய்வு மையமாக அங்கீகரித்துள்ளது.

தமிழகக் கல்வெட்டுகளை ஊர் வாரியாகப் படியெடுக்கும் திட்டத்தின்கீழ் மதுரை, தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி, நாகப்பட்டினம்,

[2005 ஏப்ரல் 6

திருவாரூர், தஞ்சாவூர், தருமபுரி, கிருட்டிணகிரி மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி 2004–2005 ஆம் ஆண்டில் நிறைவு பெற்றுள்ளது. கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற வேலையில்லாத மாணவர்களைக் கொண்டு, கல்வெட்டுகளைப் படியெடுத்திடவும் இத்துறையால் திட்டமிடப்பட்டுள்ளது. ஊர் வாரியாகக் கல்வெட்டுப் படியெடுக்கும் திட்டத்தின்கீழ், 2005–2006 ஆம் ஆண்டில் விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கரூர், திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுத்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் வைக்கப்பட்டுள்ள கல்வெட்டுப் படிகளை டிஜிடல் கேமரா மூலம் படமெடுத்துப் பாதுகாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது,

தமிழகக் கல்வெட்டுகளை அச்சிட்டு வெளியிடும் திட்டத்தின்கீழ், 2004–2005 ஆம் ஆண்டில், "பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதியும்" மற்றும் "தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் 2004" ஆகிய இரண்டு நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், அகழாய்வு அறிக்கைகள், தமிழகக் கல்வெட்டுகள், அகழ்வைப்பகங்கள் பற்றிய விளக்கக் கையேடு, கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களின் இரண்டு ஆய்வேடுகள், மாவட்டத் தொல்லியல் வழிகாட்டி நூல்கள், தமிழ் பிராமி மற்றும் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வு நூல்கள் எனப் பன்னிரெண்டு புத்தகங்கள் அச்சிட்டு வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

'1972ஆம் ஆண்டு தொல்கலைப் பொருட்கள் பதிவுச் சட்டத்தினை' நடைமுறைப்படுத்த, சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இரு பதிவு அலுவலர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொல்கலைப் பொருட்கள் இவ்வலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 2004, டிசம்பர் வரை, 40,866 தொல்கலைப் பொருட்கள் பதிவு செய்யப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் செயலாற்றி வருகிறது. இந்நூலகத்தில், மருத்துவம், கணிதம், சோதிடம், வானசாத்திரம் மற்றும் இலக்கியம் தொடர்பான 72,300 க்கும் மேற்பட்ட சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



2005 ஏப்ரல் 6]

2004–2005 ஆம் ஆண்டில், இத்துறையின் வலைதளம் ஒன்று ரூ.5.00 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

## புதிய திட்டங்கள்

2005–2006 ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின்கீழ், வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல், விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பரிக்குளம் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளுதல், கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தை மேம்படுத்துதல், கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் பூண்டி அகழ்வைப்பகங்களுக்கு வழிகாட்டி நூல்கள் அச்சிடல், அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் உள்ள அச்சிடப்படாத ஓலைச் சுவடிகளை நூல்களாக வெளியிடல், அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மையத்திற்குக் கணினி வாங்குதல், தஞ்சாவூர் வட்டார அலுவலகத்திற்குக் கணினி வாங்குதல், திருச்செந்துறை மற்றும் அழகர்கோவில் ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களின் வரலாறு, கோயிற்கலைகள் பற்றிய இரண்டு ஆய்வு நூல்களை வெளியிடல், கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களது ஆய்வு நூல்கள் அச்சிடல், உதகை வட்டார அலுவலகக் கல்வெட்டுப்படிகளைப் படியெடுத்து டிஜிட்டல் முறையில் பாதுகாத்தல், மதுரை மற்றும் தருமபுரி மாவட்டத் தொல்லியல் வழிகாட்டி நூல்கள் அச்சிடல், தமிழ் பிராமி மற்றும் தமிழ்க் கல்வெட்டு ஆராய்ச்சி நூல்கள் அச்சிடல் மற்றும் துறையின் கல்வெட்டு நிறுவனத்தில் படித்து வேலையில்லாத மாணவர்களைக் கொண்டு கல்வெட்டுப்படி எடுத்தல் போன்ற திட்டங்களை ரூ.37.27 இலட்சம் செலவில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## அரசு அருங்காட்சியகங்கள்

அரசு அருங்காட்சியகத் துறையின்கீழ், சென்னை அருங்காட்சியகமும், புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருட்டிணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய 20 இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்களும் இயங்கி வருகின்றன. இவற்றில், புதுக்கோட்டை அருங்காட்சியகம், புதுக்கோட்டை மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. மற்ற அருங்காட்சியகங்கள் அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவை.

[2005 ஏப்ரல் 6

1851 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை, அருங்காட்சியகம் மதிப்புமிக்க தென்னிந்திய படிமங்கள் மற்றும் வரலாற்றுக்கு முற்பட்ட முதன்மையான தொல்பொருட்களையும் கொண்டது. அவற்றில், குறிப்பாக ராபர்ட் புரூஸ்புட் சேகரிப்புகளையும், ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால சேகரிப்புகளையும், புத்த, சமண மற்றும் இந்து சிற்பங்களான அமராவதி சிற்பங்களையும் குறிப்பிடலாம். மேலும், பல மதிப்புமிக்க அரிய விலங்கியல் மற்றும் தாவரவியல் சேகரிப்புகளும் உள்ளன. தொல்பொருட்களையும், கலைப் பொருட்களையும் சீர் செய்து பாதுகாக்க, முதன்மையான சிறப்பு மிக்க வேதியல் பாதுகாப்பு மற்றும் ஆய்வுக் கூடமும் இங்கு அமைந்துள்ளது.

பொது மக்களுக்கும் மாணவ சமுதாயத்திற்கும் பயன்படும் விரிவாக்க கல்வி மையங்களாக மாவட்ட அருங்காட்சியகங்கள் செயல்படுகின்றன.

பொதுவாக, இயற்கை உலகினையும், வரலாறு மற்றும் கலைப் பண்புகளையும், அறிவியல், தொழில்நுட்ப சாதனைகளையும் பொதுமக்கள் அறிந்து கொண்டு பாராட்டும் வகையில் அருங்காட்சியகங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. அறிவியல், கலைநயம் வாய்ந்த அல்லது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் அருங்காட்சியகங்களில் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. அவற்றைப் பற்றி ஆய்வு செய்து, மக்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் அவை காட்சிப்படுத்தப்படுகின்றன. பல்வேறு காலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் திறன்களை அறிந்து ஆய்வு செய்ய வாய்ப்பளிக்கும் கல்வி நிறுவனங்களாகவும் இவ்வருங்காட்சியகங்கள் செயல்படுகின்றன. மேலும், அருங்காட்சியகங்கள் உள்ளூர் மக்களின் சமுதாய, பண்பாட்டு வாழ்க்கை நெறியை விளக்குவதற்கும் அவர்கள் பார்வையிடுவதற்கும் ஏற்ற இடங்களாகத் திகழ்கின்றன.

அருங்காட்சியகத் துறையில் கீழ்க்கண்ட செயல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

- அரும்பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்தல்.
- காட்சிப் பொருட்களை அறிவியல் பூர்வமாகப் பாதுகாத்து, கலைநயம்மிக்க வகையில் பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்துதல்.



2005 ஏப்ரல் 6]

- ஆய்வாளர்கள், சேகரிப்புகளை ஆய்வு செய்வதற்கான உதவிகள் அளித்தல், தனித்து அல்லது மற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல்.
- சேகரிப்புகளின் விவரங்கள் தயாரித்தல், பெயர்ப்பட்டியல் தயாரித்தல், புத்தகங்கள் மற்றும் மலர்கள் வெளியிடுதல்.
- கல்விப் பணிகளின் ஒரு பகுதியாக சிறப்புக் கண்காட்சிகள் நடத்துதல், வல்லுநர்களின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- வேதியல் பாதுகாப்பு மற்றும் ஆய்வுக் கூடத்தின் வாயிலாக, அருங்காட்சியகத்தின் சேமிப்பு மற்றும் புத்தாக்கத் திறனை மேம்படுத்துதல்.
- தேசியச் சுவடிகள் சேவையகம் ஆதரவு பெற்ற சுவடிகள் பாதுகாப்பு மையத்தின் வாயிலாக கையெழுத்துப்படிகள் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற 151 ஆவது ஆண்டு விழாவையொட்டி, சென்னை அருங்காட்சியகம் சீரமைக்கப்பட்டுப் பொலிவூட்டப்பட்டது. இவ்வருங்காட்சியக வளாகத்தின் சுற்றுச்சூழல் மேம்படுத்தப்பட்டதுடன், படிமங்கள் கூடமும், வளர்கலைக் கூடமும் பன்னாட்டுத் தரத்திற்கு மேம்படுத்தப்பட்டன.

அருங்காட்சியகங்களைப் பற்றிய அரசின் கொள்கையில் மேற்குறிப்பிட்டுள்ள முக்கியமான செயல் நடவடிக்கைகள் அனைத்தும் அடங்கும். இனி வருங்காலங்களில் முக்கியமான சுற்றுலா மையங்களில் அருங்காட்சியகங்கள் அமைத்தல், தன்னாட்சி திறந்தவெளி அருங்காட்சியகங்கள் மூலம் பொது மற்றும் தனியார் மேலாண்மைப்படுத்தி வருவாய் உயர்த்துதல், பொது மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து இத்துறையின் நோக்கங்களைச் சீரமைத்துத் தலைசிறந்த நிறுவனமாக மாற்றுதல் ஆகிய பணிகளில் இத்துறை ஈடுபடுத்தப்படும்.

**புதிய திட்டங்கள்**

2005–2006 ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ், சென்னை, அரசு அருங்காட்சியகத்தின் மானிடவியல் கட்டடத்தைச் சீரமைத்து அதன்

[2005 ஏப்ரல் 6

கூடங்களைப் புதுப்பித்தல், வேலூர், சேலம், மதுரை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள அருங்காட்சியகக் கூடங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய மற்றும் பழைய அருங்காட்சியக வெளியீடுகள், வண்ணப்பட அட்டைகள் முதலியவற்றை வெளியிடுதல் போன்ற திட்டங்களை மொத்தம் ரூ.55.00 இலட்சம் செலவில் நிறைவேற்ற இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

**கலை – பண்பாட்டு இயக்ககம்**

கலைக் கல்வி நிறுவனங்களையும், கலை அமைப்புகளையும் தனியே ஒரு குடையின்கீழ் கொணர்ந்து, கலை–பண்பாட்டு இயக்ககம் எனும் தனி இயக்கக்ம் டிசம்பர், 1991-ல் அரசால் உருவாக்கப்பட்டது. கலை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதே கலை–பண்பாட்டு இயக்ககத்தின் இன்றியமையாத நோக்கமாகும். இவ்வியக்கக அமைப்பைப் பணியாட்சி அலுவலகங்கள், கலைக்கல்வி நிறுவனங்கள், கலை வளர்ச்சி நிறுவனங்கள் என மூன்றாக வகைப்படுத்தலாம். பணியாட்சி அலுவலகங்களான கலை–பண்பாட்டு இயக்ககம் சென்னையிலும், மண்டலக் கலை– பண்பாட்டு மையங்கள் தமிழ்நாட்டில் ஆறு இடங்களிலும் இயங்கி வருகின்றன. கலை–பண்பாட்டு மையங்கள் கலைப் பணிகளை மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து வழிகாட்டி, ஆய்வு செய்து, அரசின் கொள்கைகளை நிறைவேற்றத் துணை செய்கின்றன.

இசை, நாட்டியம், கருவி இசை, நாட்டுப்புறக்கலை ஆகியவற்றை கற்பிக்கும் வகையில், அரசு இசைக் கல்லூரிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு இடங்களிலும், மாலை நேர இசைக் கல்லூரி மையங்கள் சென்னையில் 2 மையங்களிலும், மதுரையில் ஒரு மையத்திலும், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 17 இடங்களிலும் இயங்கி வருகின்றன. சிற்பக்கலை, ஓவியக்கலை மற்றும் பிற கவின் கலைகளைக் கற்பிக்கும் வகையில், அரசு கவின்கலைக் கல்லூரிகள் சென்னை, கும்பகோணம் ஆகிய இரு இடங்களிலும், அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி மாமல்லபுரத்திலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ஆகியவை சென்னையிலும், தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்கள் மாநிலத்தில் 35 இடங்களிலும் மற்றும்



2005 ஏப்ரல் 6]

மாவட்டங்கள்தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் கிருட்டிணகிரியில் ஒரு சவகர் சிறுவர் மன்றம் தொடங்கிட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**மண்டலக் கலை – பண்பாட்டு மையங்கள்**

தமிழ்நாட்டில், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆறு மண்டலக் கலை–பண்பாட்டு மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், சவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றின் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து, அரசின் கொள்கைகளைச் செம்மையாக மாவட்ட அளவில் நிறைவேற்றி வருகின்றன. உதவி இயக்குநர்கள் தலைமையில் இயங்கும் மண்டலக் கலை–பண்பாட்டு மையங்கள் கலை–பண்பாட்டுத் துறை சார்பாகத் தனித்தும், மாவட்டக் கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் இயங்கும் தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்தும் கலை விழாக்களையும், கலைப் பயிற்சிகளையும் அளித்து வருகின்றன. தமிழ்நாட்டில் பாரம்பரியப் பண்பாடு குறித்த விழிப்புணர்வையும், ஆர்வத்தையும் ஏற்படுத்துவதற்கும், தெரு நாடகங்கள் உள்ளிட்ட பண்பாட்டு மரபுகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கும், மாவட்டக் கலை மன்றங்கள் மற்றும் இதர கலை நிறுவனங்களுடன் இணைந்து மண்டலக் கலை–பண்பாட்டு மையங்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. இப்பணிகளுக்காக, அரசு 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.8.50 இலட்சமும், 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.62.99 இலட்சமும், 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.8.00 இலட்சமும் மற்றும் 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.12.00 இலட்சமும் நிதி வழங்கியுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு ரூ.15.00 இலட்சம் நிதி வழங்கப்படவுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில், கலை–பண்பாட்டு இயக்ககத்திற்கு ரூ.0.80 இலட்சத்திற்கு மின் அஞ்சல் பொறி இயந்திரம் மற்றும் ரூ.3.20 இலட்சத்திற்குக் கணினிகள் வாங்கப்பெற்றுள்ளன.

**மாவட்டக் கலை மன்றங்கள்**

நமது தொன்மைமிக்க கலை வடிவங்களை மேம்படுத்தி, தமிழ்நாடு முழுவதும் பரப்புவதற்கும், அரிய கலைச் செல்வங்களைப் பேணிக் காக்கவும் மற்றும் திறன் படைத்த கலைஞர்களைக் கண்டறிந்து

[2005 ஏப்ரல் 6

ஊக்குவிக்கவும், மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில், அலுவல் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்டு, மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**மாவட்ட அளவிலான விருதுகள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறமைமிக்க 5 கலைஞர்களுக்கு அவர்களது அகவைக்கும் கலைப் புலமைக்கும் ஏற்ப விருதுகள் வழங்கும் திட்டம், 2002–2003 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று, ஆண்டுதோறும் இத்திட்டத்தின்கீழ் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| 18 அகவை மற்றும் அதற்குட்பட்ட அகவைப் பிரிவினர் | – 'கலை இளமணி' விருது |
| 19–35 அகவைப் பிரிவினர் | – 'கலைவளர்மணி' விருது |
| 36–50 அகவைப் பிரிவினர் | – 'கலைச்சுடர்மணி' விருது |
| 51–60 அகவைப் பிரிவினர் | – 'கலை நன்மணி' விருது |
| 61 அகவை மற்றும் அதற்கு மேற்பட்ட அகவைப் பிரிவினர் | – 'கலைமுதுமணி' விருது |

விருது பெறுவதற்கான கலைஞர்களைத் தெரிவு செய்ய, மாவட்ட ஆட்சியர் தலைமையில் தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. விருதுக்குத் தெரிவு செய்யப்படும் கலைஞர்களுக்கு ரூ.2000/– தொகையில் பொற்கிழியும், ரூ.500/– தொகையில் பாராட்டிதழ் மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்திற்கு ரூ.11.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.3.75 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

**அடையாள அட்டைகள்**

2002–2003 ஆம் ஆண்டில் தமிழக அரசால் தொடங்கப்பட்ட அடையாள அட்டைகள் பல்வேறு கலைஞர்களுக்கு வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 15,564 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசிடமிருந்து உதவியைப் பெறுதல்,



2005 ஏப்ரல் 6]

அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்குக் கலைஞர்களைத் தெரிவு செய்தல் மற்றும் பயணச் சலுகை துய்த்தல் ஆகிய பயன்களைப் பெற கலைஞர்களுக்கு இந்த அடையாள அட்டைகள் பயன்பட்டு வருகின்றன.

**கலைக் கல்வி நிறுவனங்கள்**

**1. அரசு இசைக் கல்லூரி, சென்னை**

இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், பரதநாட்டியம், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், குரலிசையில் முதுகலை ஈராண்டுப் பட்டயப் படிப்பும், நட்டுவாங்கத்தில் ஈராண்டுப் பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டுப் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2004–2005 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் 420 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**2. அரசு இசைக் கல்லூரி, மதுரை**

இக்கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக்கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டுப் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2004–2005 ஆம் கல்வியாண்டில், இக்கல்லூரியில் 223 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**3. அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்**

இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டுப் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2004–2005 ஆம் கல்வியாண்டில், இக்கல்லூரியில் 123 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**4. அரசு இசைக் கல்லூரி, திருவையாறு**

இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், குரல் இசையில் மூன்றாண்டு இளங்கலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2004–2005 ஆம் கல்வியாண்டில், இக்கல்லூரியில் 133 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

[2005 ஏப்ரல் 6

## 5. மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள்

சென்னையில் இரண்டு மாலை நேர இசைக் கல்லூரி மையங்களும், மதுரையில் ஒரு மாலை நேர இசைக் கல்லூரி மையமும் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னையில் உள்ள தியாகராய நகர் மையத்தில் குரலிசை, வீணை, வயலின் ஆகியவற்றிலும், மயிலாப்பூர் மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவற்றிலும், மதுரை மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகியவற்றிலும் ஈராண்டுச் சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2004–2005 ஆம் கல்வியாண்டில், இம்மாலை நேர மையங்களில் 142 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

2004–2005 ஆம் ஆண்டில் சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் மாணவ மாணவியர்களின் பயன்பாட்டிற்கு அறைகலன்கள் வாங்கப்பெற, ரூ.1.00 இலட்சமும், மாணவியர் விடுதிக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் அறைகலன்கள் வாங்கிட ரூ.1.85 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மதுரை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.10.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு இசைக் கருவிகள், இசை நூல்கள் வாங்கப்பெற ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்லூரிக்குக் கட்டடம் கட்டப்பெற ரூ.10.66 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, 10.67 ஏக்கர் நிலம் தஞ்சாவூர், சத்திரம் நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

### மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்

திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை, திருவாரூர், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருட்டிணகிரி, சீர்காழி, கரூர், ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய 17 இடங்களில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம் ஆகிய பாடப் பிரிவுகளில் மூன்றாண்டுச் சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2004–2005 ஆம் கல்வியாண்டில், மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் மொத்தம் 1187 மாணவ மாணவியர் இசைக்கல்வி பயின்று வருகின்றனர். 2004–2005 ஆம் ஆண்டில், மாவட்ட



2005 ஏப்ரல் 6]

அரசு இசைப் பள்ளிகளுக்கு இசைக் கருவிகள் வாங்கிட ரூ.2.50 இலட்சமும், இசை நூல்கள் மற்றும் அலமாரிகள் வாங்கிட ரூ.1.70 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இசைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் கல்வி நலன் கருதி கலை வல்லுநர்களைக் கொண்டு சொற்பொழிவு மற்றும் செயல்முறை விளக்க நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.1.70 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் பாடத்திட்டத்தினை ஒட்டிப் பாடநூல் தயாரித்திட ரூ.1.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### அரசு கவின்கலைக் கல்லூரிகள்

### 1. அரசு கவின்கலைக் கல்லூரி, சென்னை

இக்கல்லூரியில் பின்வரும் பிரிவுகளில் நான்காண்டுகால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டுகால முதுகலைப் பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**இளங்கலைப் பட்டப் படிப்பு:**

1) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு
2) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு
3) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
4) வண்ணக்கலை
5) சிற்பக்கலை
6) பதிப்போவியம்

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

1) வண்ணக்கலை
2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
3) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு
4) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு

[2005 ஏப்ரல் 6

இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்சக் கல்வித்தகுதி பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சியாகும். இக்கல்லூரி, 154 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பெருமைக்குரியதாகும். இக்கல்லூரியின் பாடத்திட்டங்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும். 2004–2005 ஆம் கல்வியாண்டில், இக்கல்லூரியில் 512 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

## 2. அரசு கவின்கலைக் கல்லூரி, கும்பகோணம்

இக்கல்லூரியில் பின்வரும் பிரிவுகளில் நான்காண்டுகால இளங்கலைப் பட்டப்படிப்பும், இரண்டாண்டுகால முதுகலைப் பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**இளங்கலைப் பட்டப் படிப்பு:**

1) வண்ணக்கலை

2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு

3) சிற்பக்கலை

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

1) வண்ணக்கலை

2) சிற்பக்கலை

இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சியாகும். இக்கல்லூரியின் பாடத்திட்டங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும். 2004–2005 ஆம் கல்வியாண்டில், இக்கல்லூரியில் 304 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

2004–2005 ஆம் ஆண்டில், சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் கல்வி நலன் கருதி, கணினிகள் வாங்கப்பெற ரூ.10.40 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரிக்கு இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வாங்கப்பெற ரூ.5.00 இலட்சமும், இளநுண்கலை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவச



2005 ஏப்ரல் 6]

வரைபடப் பொருட்கள் வாங்கப்பெற ரூ.4.00 இலட்சமும், இக்கல்லூரியின் கட்டடத்தைச் சீரமைக்கவும் மற்றும் பழுதுபார்க்கவும் சிறப்பு நிலையாக ரூ.10.00 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கும்பகோணம், அரசு கவின்கலைக் கல்லூரியின் புகைப்படப் பிரிவினை நவீனமயமாக்கிட, புகைப்படக் கருவிகள் வாங்க ரூ.2.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

மாமல்லபுரத்தில், அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில், 2000–2001 ஆம் ஆண்டு முதல் நான்காண்டுப் பட்டப்படிப்பு தொடங்கப் பெற்றுப் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. மரபு கட்டடக்கலைப் பிரிவில் தொழில்நுட்பவியல் இளங்கலைப் பட்டமும், மரபு சிற்பக்கலை, மரபு ஓவியக்கலை–வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின்கலை இளங்கலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. 2004–2005 ஆம் கல்வியாண்டில், இக்கல்லூரியில் 142 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

2004–2005 ஆம் ஆண்டில், மாமல்லபுரம், அரசு கட்டட சிற்பக்கலைக் கல்லூரி மாணவ மாணவியர்களின் கல்வி நலனுக்காகக் கணினிகள் வாங்கப்பெற ரூ.6.40 இலட்சமும், அறைகலன்கள் வாங்கப்பெற ரூ.2.00 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளியில் உள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அரசு நிதியுதவி பெறும் தனியார் கல்லூரியாகும். இக்கல்லூரியின் நிருவாகம், 2000–2001 ஆம் கல்வி ஆண்டு முதல் கலை–பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்கான நிதியுதவி கல்லூரிக் கல்வி இயக்ககம் மூலம் வழங்கப்படுகிறது.

இக்கல்லூரியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இளநுண்கலைப் பட்டப்படிப்புகள், மூன்றாண்டுப் பட்டப்படிப்புகள், இரண்டாண்டு முதுகலை பட்டப்படிப்புகள் ஆகியவை பின்வரும் பாடப் பிரிவுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

[2005 ஏப்ரல் 6

**ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இளநுண்கலைப் பட்டப் படிப்பு:**

1) பரதநாட்டியம்
2) குரலிசை
3) வயலின்
4) வீணை
5) மிருதங்கம்

இப்பிரிவில் பட்டம் பெற, குறைந்தபட்சக் கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சியாகும்.

**மூன்றாண்டுப் பட்டப் படிப்பு:**

1) பரதநாட்டியம்
2) குரலிசை
3) வயலின்
4) வீணை
5) மிருதங்கம்

இப்பட்டப் படிப்பிற்குக் குறைந்தபட்சக் கல்வித் தகுதி பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சியாகும்.

**இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்பு :**

1) பரதநாட்டியம்
2) குரலிசை
3) வயலின்
4) வீணை
5) மிருதங்கம்

இதைத் தவிர, பரதநாட்டியத்திலும், இசையிலும் முழு நேர, பகுதி நேர முனைவர் பட்டப்படிப்பும் உள்ளது. 2004–2005 ஆம் கல்வியாண்டில், இக்கல்லூரியில் 257 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.



2005 ஏப்ரல் 6]

**இராக ஆராய்ச்சி மையம்**

இசையின் இராகங்கள் குறித்தும், அவற்றின் பயன்கள் குறித்தும் நுணுக்கமான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற இராக ஆராய்ச்சி மையத்தைத் தமிழக அரசு 1992 ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது. இதன் தலைவராகக் கலைமாமணி திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். இம்மையத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டுள்ளது. மக்களுக்குப் பயன்படும் விதமாக, தெரிந்தெடுக்கப்பட்ட இராகங்களின் மருத்துவக் குணநலன்களைக் கண்டறிய, இசைப் புலமை பெற்ற இசைக் கலைஞர்கள், மருத்துவர்கள் மற்றும் ஆய்வாளர்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் கருத்தரங்கங்களை இராக ஆராய்ச்சி மையம் நடத்தி வருகிறது. சென்னையில் மட்டும் நடந்து வந்த இந்த இராக ஆராய்ச்சி மையத்தின் இசை அரங்கம், ஆய்வரங்கம் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி ஆகிய வெளிமாவட்டங்களிலும் அங்குள்ள பொதுமக்களும் பயன்பெறும் விதமாக, 'இராக வைபவம்' என்ற தலைப்பில் ஆய்வாளர்களையும், இசைக் கலைஞர்களையும் ஒருங்கிணைத்து 2004–2005 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. ஆய்வரங்க இசை நிகழ்ச்சிகள் புகைப்படத்திலும், ஒளி நாடாக்களிலும் பதிவாக்கப்பட்டு இதுவரை நூற்றுக்கும் மேலான ஒளிநாடாக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்**

மேதகு ஆளுநரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூலநிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக, 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சமும், 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை, தமிழக அரசு தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்கு ரூ.200.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. மேலும், தென்னகப் பண்பாட்டு மையக் கட்டடம் கட்டப்பெறுவதற்கு ரூ.2.00 கோடி நிதியுதவியும், மையம் ஏற்படுத்த ரூ.1.54 கோடி மதிப்புள்ள 25 ஏக்கர் நிலமும் தமிழக அரசு ஏற்கெனவே அளித்துள்ளது. தென்னகப் பண்பாட்டு மையம் தனித்தும், மாநிலக் கலை–பண்பாட்டுத் துறை வழியாக நிதி உதவி வழங்கியும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளைத் தமிழ்நாட்டில் நடத்தி வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் தென்னகப் பண்பாட்டு மையம் கலை–பண்பாட்டுத் துறைக்கு ரூ.14.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, இத்தொகையைக் கொண்டு தமிழிசை விழா, கிராமியக்

[2005 ஏப்ரல் 6

கலைவிழா, பழங்குடிக் கலைவிழா, தமிழிசை மூவர் விழா, மயிலாடுதுறை மூவர் விழா, இளைஞர் கலைவிழா, சாரல் விழா, இளந்தளிர் கலைவிழா ஆகிய கலை விழாக்கள், கிராமியக் கலைப் பயிற்சி, தெருக்கூத்துப் பயிற்சி, ஓவியப் பயிற்சி போன்ற முகாம்கள் மற்றும் மாநிலங்களிடையே சவகர் சிறுவர் மன்ற மாணவ மாணவியர்களின் கலை பரிமாற்ற நிகழ்ச்சிகள் ஆகியன சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பெற்று வருகின்றன.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

இந்திய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்துவதற்காகவும், தொன்மைவாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும், தமிழக அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. இந்நிறுவனம், மாநில அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

### 1. கலைப்பணித் திட்டங்கள்

மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ் பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதி உதவி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து அதன்மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தல், கலைத் துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்குச் சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்குக் "கலைமாமணி" என்ற மாநில விருது வழங்கிச் சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச் சித்தரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நூல் வெளியீட்டு நல்கை வழங்குதல், கலை மேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலை அம்சங்களை வருங்காலச் சந்ததியினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப்



2005 ஏப்ரல் 6]

பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழிக் கிராமியக் கலைகள் மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய முக்கியப் பணிகளை இயல் இசை நாடக மன்றம் செம்மையுறச் செய்து வருகின்றது.

### 2. கலைமாமணி விருது வழங்குதல்

கலைத் துறையில் செயற்கரிய சேவை செய்து புகழ்பெற்ற கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பு செய்யும்முகத்தான், அவர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், "கலைமாமணி" விருது வழங்குகிறது. இதுவரை, 1,259 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. கலைமாமணி விருது வழங்கும் விழாவில், இதுகாறும், 272 மறைந்த புகழ்பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன. கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில், 1974–75 ஆம் ஆண்டு முதல் 1986–87 ஆம் ஆண்டு முடிய ரூ.1000/– வீதம் 147 கலைஞர்களுக்கும், 1990–91 ஆம் ஆண்டு முதல் 1993–94 ஆம் ஆண்டு முடிய ரூ.5000/– வீதம் 17 கலைஞர்களுக்கும், 1994–95 ஆம் ஆண்டு முதல் 1998–99 ஆம் ஆண்டு முடிய ரூ.10,000/– வீதம் 13 கலைஞர்களுக்கும், 2000, 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளில் ரூ.15,000/–வீதம் 13 கலைஞர்களுக்கும், ஆக மொத்தம் 190 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயற்பட்டு வரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில், இதுவரை 24 கலை நிறுவனங்களுக்கும் 16 நாடகக் குழுக்களுக்கும் கேடயங்கள் மற்றும் சுழற்கேடயங்கள் வழங்கப் பெற்றுள்ளன.

### 3. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/– நிதியுதவியாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ், 2004–2005 ஆம் ஆண்டில், 500 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்து, இதுவரை, மொத்தம் 7,063 நலிந்த கலைஞர்கள் நிதியுதவி பெறும் வகையில் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 6

## 4. மறைந்த புகழ்பெற்ற கலைஞரின் குடும்பத்தாருக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்

கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 1986 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையில் ரூ.2000/– வீதம் வழங்கிய வகையில் 88 குடும்பங்களும், 1992 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரையில் ரூ.3000/– வீதம் வழங்கிய வகையில் 77 குடும்பங்களும், 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையில் ரூ.5000/– வீதம் வழங்கிய வகையில் 81 குடும்பங்களும், 2004–2005 ஆம் ஆண்டில் இக்குடும்பப் பராமரிப்பு நிதியுதவியை ரூ.5000/– தொகையிலிருந்து ரூ.6000/– ஆக உயர்த்தி வழங்கிய வகையில் 32 குடும்பங்களும் பயன்பெற்றுள்ளன. இதுவரை, மொத்தம் 278 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

## 5. மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்

இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும், மாநிலங்களுக்கிடையே கலை–பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், இந்திய அரசின் சார்பில் புதுதில்லி, சங்கீத நாடக அகாதெமியும், தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் இணைந்து மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை தமிழகத்திற்கு 81 வெளி மாநிலக் கலைக் குழுக்கள் வருகைபுரிந்துள்ளன. 83 தமிழகக் கலைக் குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்றுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில், மேற்கு வங்க மாநிலத்துடன் கலைக் குழுக்களைப் பரிமாறிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 6. திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

வாய்ப்பாட்டு மற்றும் கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை அறிமுகம் செய்யும்வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கி வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மன்றம் நிதியுதவி செய்து அதன் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 2003–2004 ஆம் ஆண்டு வரை, 1,662 இளம் கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். 2004–2005 ஆம் ஆண்டில்,



2005 ஏப்ரல் 6]

இத்திட்டத்தின் விளைவாக 29 இளங்கலைஞர்கள் வல்லுநர் குழுக்களால் தெரிவு செய்யப்பெற்று, அக்கலைஞர்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட தன்னார்வக் கலை நிறுவனங்களின் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 7. கிராமியக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

ஊரகக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும், இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கு ரூ.750/– தொகையும், ஒவ்வொரு கலைக்குழுவிற்கு ரூ.2,500/– தொகையும் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை 1,425 ஊரகக் கலைஞர்களும்/ கலைக்குழுக்களும் பயன்துய்த்துள்ளனர்.

## 8. புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை, 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் உருவாக்கி மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 9. புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. 2004–2005 ஆம் ஆண்டில் சென்னை விபஞ்சி நாட்டிய நிறுவனத்திற்கு "ஜெயசக்தி" எனும் புதிய நாட்டிய நாடகம் தயாரிக்கவும், ஸ்ரீரங்கம் பரத நாட்டியாலயாவிற்கு, "பண்புமலர்" எனும் புதிய நாட்டிய நாடகம் தயாரிக்கவும் மன்றத்தால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நாட்டிய நாடகங்கள் சென்னையில் முறையே 19–11–2004 மற்றும் 20–11–2004 ஆகிய நாட்களில் மேடையேற்றம் செய்யப்பட்டன.

## 10. அரிய கலை நூல்களுக்கு மானியம் வழங்குதல்

கலை நூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை, 103 நூல்கள் மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 6

## 11. கலை விழாக்கள்

மறைந்து வரும் நம் மரபுவழிச் சிறப்புமிக்க ஊரகக் கலைகளின் சிறப்பினைத் தற்போதைய தலைமுறையினர் கண்டுணரும் வண்ணமும், தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வரும் ஊரகக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும்வண்ணமும், மன்றம் ஊரகக் கலை விழாக்களை நடத்தி வருகின்றது. கலைமேதைகளின் நினைவு விழா, சலங்கை விழா, முப்பெரும் கலைவிழா, நாடக விழா, நாட்டிய விழா ஆகிய விழாக்களையும், குற்றாலத்தில் சாரல்விழா போன்ற விழாக்களையும் மன்றம் நடத்தி வருகின்றது. 08–06–2004 முதல் 10–06–2004 வரை சென்னையில் சலங்கை விழா கொண்டாடப்பட்டது. வெளி மாநிலங்களில் தமிழகக் கலை விழாக்கள் நடத்தும் திட்டத்தின்படி, கேரள மாநிலம், கண்ணனூரில் 09–06–2004 ஆம் நாளன்றும், வடகராவில் 10–06–2004 ஆம் நாளன்றும், பையனூரில் 11–06–2004 ஆம் நாளன்றும் மற்றும் ஆந்திர மாநிலம் விஜயநகரம், இராஜமுந்திரி, விஜயவாடா, நெல்லூர் ஆகிய இடங்களில் 2005, பிப்ரவரி திங்கள் 1 முதல் 4 ஆம் தேதி வரையிலும் தமிழகக் கலை விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. திருநெல்வேலி மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து 27–07–2004 முதல் 29–07–2004 வரை குற்றாலத்தில் சாரல் விழாவினையும், மறைந்த புகழ்மிக்க கலைஞர்களான காஞ்சிபுரம் நயினாப் பிள்ளை, வீணை தனம்மாள், மகாராஜபுரம் விசுவநாதய்யர், புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை, கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, எம்.எம்.தண்டபாணி தேசிகர், திருவையாறு அண்ணாசாமி பாகவதர் ஆகியோரின் நினைவைப் போற்றும் வகையில், 25–10–2004 முதல் 27–10–2004 வரை "ஏழு மகான்களின் எழுச்சிமிகு கலை விழா" சென்னையிலும் கொண்டாடப்பட்டது. அருள்மிகு முருகப்பெருமானின் திருக்கோயில்களில் சிறப்புடன் நடத்தப்பட்டு வரும் கந்தசஷ்டி விழாவினை முன்னிட்டு இந்து சமய அறநிலையத் துறையின் உறுதுணையுடன் அறுபடை வீடுகளில் "கந்தசஷ்டி கலை விழா" 12–11–2004 அன்று திருச்செந்தூரிலும், 13–11–2004 அன்று திருப்பரங்குன்றத்திலும், 14–11–2004 அன்று பழமுதிர்ச்சோலையிலும், 15–11–2004 அன்று பழனியிலும், 16–11–2004 அன்று சுவாமிமலையிலும், 17–11–.2004 அன்று திருத்தணியிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தமிழகத்தின் சுற்றுலாத் தலங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தும் திட்டத்தின்படி, சுற்றுலாத் துறையுடன் இணைந்து 30–12–2004 ஆம் நாளன்று கிருட்டிணகிரி மாவட்டம் ஓசூரில் நடைபெற்ற மலர்க் கண்காட்சியில் மன்றத்தின் சார்பாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



2005 ஏப்ரல் 6]

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கிராமியக் கலை விழாக்கள் நடத்திட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.9.00 இலட்சம் தொகையில் முதற்கண், புதுக்கோட்டையில் 5–2–2005 அன்று கிராமியக் கலை விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. இதர மாவட்டங்களிலும், இத்தகைய விழாக்கள் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலை–பண்பாட்டு இயக்ககம், சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, இராக ஆராய்ச்சி மையம் ஆகியவை இணைந்து சுனாமி கடல் கொந்தளிப்பால் உயிர் நீத்த குடும்பங்களுக்காகப் பிரார்த்தனைக் கூட்டத்தை 18–01–2005 அன்று நடத்தின. இந்நிகழ்ச்சியில் ஓதுவார் மூர்த்திகள், இசைக் கலைஞர்கள், வேத விற்பன்னர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல்வேறு கலைப் பணிகளுக்காகத் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நல்கை வழங்கி வருகின்றது.

### தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, சென்னை

கவின்கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், பரப்பவும், இக்கலைகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களை ஊக்குவிக்கவும், புதுதில்லி, லலிதகலா அகாதெமியுடன் ஒருங்கிணைந்து செயல்படவும், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தமிழக அரசால் 1975 இல் தோற்றுவிக்கப்பட்டது. இக்கலையமைப்பு, மாநில அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 'கலைச்செம்மல்' விருது வழங்கும் திட்டம்

மரபுவழி, புதுப்பாணி கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ் பெற்ற ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்கள் அவரவர்கள் துறைகளில் புரிந்து வரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் 'கலைச்செம்மல்' விருதுகள் வழங்கப்படுகின்றன. விருதாளர் ஒவ்வொருவருக்கும், பாராட்டிதழுடன் ரூ.20,000/– விருதுத் தொகையாக வழங்கப்படுகிறது. மரபுவழிப் பிரிவில் 36 5 ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும், புதுப்பாணிப் பிரிவில் 36 ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 6

**மாநில அளவில் மரபு வழிக் கலைக்காட்சி விருது வழங்கும் திட்டம்**

மாநில அளவில், மரபுவழி கலைக்காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, ஓவிய, சிற்பக்கலைஞர்கள் ஊக்குவிக்கப் படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருதுகளாக ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வழங்கப்படுகிறது. 43 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு, மரபுவழிக் கலைக்காட்சி விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

**மாநில அளவில் புதுப்பாணிக் கலைக்காட்சி விருது வழங்கும் திட்டம்**

மாநில அளவில், புதுப்பாணிக் கலைக்காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, ஓவிய சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருது 30 வயது நிறைவடைந்த "மூத்த கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் ஒவ்வொருவருக்கும் ரூ. 15,000/– வீதமும், 30 வயது நிறைவடையாத "இளங்கலைஞர்கள்" பங்குகொள்ளும் பிரிவில் ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000/– வீதமும் வழங்கப்படுகிறது. இதுவரை, 249 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு, புதுப்பாணிக் கலைக்காட்சி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**தனி நபர் கலைக்காட்சி அல்லது கூட்டுக் கலைக்காட்சி நடத்த நிதியுதவி வழங்கும் திட்டம்**

தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்கள் அவரவர்களது கலைப் படைப்புகள் அடங்கிய கலைக்காட்சிகளைத் தனியாகவோ அல்லது குழுவாகவோ இணைந்து நடத்திட, கலைக்காட்சி ஒன்றுக்கு ரூ. 5000/– வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. 137 கலைஞர்கள் தனி நபர் கலைக்காட்சி நடத்துவதற்காகவும், 10 குழுக்கள் கூட்டுக் கலைக்காட்சி நடத்துவதற்காகவும் இதுவரை நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**நுண்கலை பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்**

சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகளில் நுண்கலை பயிலும் மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் முதுகலை மற்றும் இளங்கலை இறுதியாண்டு பயிலும், சிறந்த மாணவ மாணவியருக்கு முறையே ரூ.5000/– வீதமும், ரூ.3000/– வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை,



2005 ஏப்ரல் 6]

இளங்கலைப் பிரிவில் 418 பேருக்கும், முதுகலைப் பிரிவில் 39 பேருக்கும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாவட்டங்களில் கலைக்கூடங்கள்**

ஓவிய நுண்கலைக் குழுவின் கலைக்கூடம் ஒன்று உதகமண்டலத்திலுள்ள எட்டின்ஸ் சாலையிலும், மற்றொன்று மதுரை கலை–பண்பாட்டு மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. அக்கலைக்கூடங்களில் தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களின் படைப்புகள் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

**"நுண்கலை'' கலையிதழ் வெளியீடு**

கலை ஆர்வலர்கள் பயன் பெறும் வகையில் "நுண்கலை" என்னும் கலையிதழ் ஓவிய நுண்கலைக் குழுவால் வெளியிடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் நுண்கலைச் சிறப்புகளை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் கொண்ட 24 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**மாவட்டங்களில் கலைக்காட்சிகள் நடத்தும் திட்டம்**

மாவட்டங்களிலுள்ள கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில், கலை–பண்பாட்டுத் துறையின் 6 மண்டல மையங்களுடன் இணைந்து கலைக் காட்சிகள் நடத்திட, மண்டலத்திற்கு ரூ.10,000/– என வழங்கப்பட்டு வந்த தொகை 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து மண்டலத்திற்கு ரூ.15,000/– என உயர்த்தப்பட்டது. மாவட்டங்களில் நடத்தப் பெறும் கலைக்காட்சிகள், கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளால் ஓவிய சிற்பக் கலைஞர்கள் விருது வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றனர். 2003 ஆம் ஆண்டில் இராமநாதபுரம், தூத்துக்குடி, காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலும், 2004 ஆம் ஆண்டில் திருநெல்வேலி, புதுக்கோட்டை, மதுரை, காஞ்சிபுரம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் கலைக்காட்சிகள், கருத்தரங்க நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், ஓவியப் போட்டிகளில் பங்குபெறும் மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். நுண்கலைகளைப்பற்றிய விழிப்புணர்ச்சியைப் பொது மக்களிடையே ஏற்படுத்த இந்நிகழ்ச்சிகள் தூண்டுகோலாக அமைகின்றன.

[2005 ஏப்ரல் 6

## நுண்கலைப் பயிற்சி வகுப்புகள்

நுண்கலை பயில ஆர்வமுள்ளோருக்காக, நுண்கலைப் பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமை தோறும் சென்னை, அரசு கவின் கலைக்கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. தொடக்க நிலை பயில விருப்பம் உள்ள ஆர்வலர்கள் ரூ.600/– கட்டணம் செலுத்தியும், உயர்நிலை பயில விருப்பம் உள்ள ஆர்வலர்கள் ரூ.900/– கட்டணம் செலுத்தியும் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறலாம். 2004 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இரண்டு ஆறு மாத காலப் பயிற்சி வகுப்புகளில் உயர்நிலையில் 59 ஆர்வலர்களும், தொடக்க நிலையில் 129 ஆர்வலர்களும் பயிற்சி பெற்றனர். 2005, சனவரி முதல் நடந்துவரும் முதல் ஆறு மாத காலப் பயிற்சி வகுப்பில் தொடக்க நிலைப் பிரிவில் 24 ஆர்வலர்களும், உயர்நிலைப் பிரிவில் 25 ஆர்வலர்களும் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

## தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், 1979 ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப் பெற்று தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஐந்து வயதிலிருந்து பதினாறு வயதுக்குட்பட்ட சிறார்களுக்குக் கலைப் பயிற்சி அளிப்பதும், கலைத் திறமைகளை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் 35 இடங்களில் சவகர் சிறுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. 23 இடங்களில் மாவட்டச் சிறுவர் மன்றங்கள் எனவும், 10 இடங்களில் சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் எனவும், இரு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் எனவும் கீழ்க்கண்டவாறு இயங்கிவருகின்றன.

### 1. மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள்

சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோவில், தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம். கிருட்டிணகிரி மாவட்டத்தில் 2004–2005 ஆம் ஆண்டில் ஒரு சவகர் சிறுவர் மன்றம் தொடங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 6]

### 2. சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்

பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை, மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல்.

### 3. சவகர் சிறுவர் மன்ற ஊரக மையம்

புதுக்கோட்டை மாவட்டம், பொன். புதுப்பட்டி மற்றும் மதுரை எல்லிஸ் நகர்.

இச்சிறுவர் மன்றங்கள், அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன.

சிறுவர் மன்றங்களில் பகுதிநேரமாகப் பயிற்றுவிக்கப்படும் கலைகள் பின்வருமாறு :–

| | | | |
|---|---|---|---|
| 1) | பரதநாட்டியம் | 11) | ஆர்மோனியம்–கீபோர்டு |
| 2) | நாட்டுப்புற நடனம் | 12) | வீணை |
| 3) | கைவினை | 13) | அயல் முரசு (டிரம்ஸ்) |
| 4) | குரலிசை | 14) | அயல் முழவு (பேண்ட்ஸ்) |
| 5) | நாடகம் | 15) | தையல் |
| 6) | உடல்திறன் பயிற்சி | 16) | ஓவியம் |
| 7) | மிருதங்கம் | 17) | திரை அச்சு |
| 8) | தபேலா | 18) | புல்லாங்குழல் |
| 9) | கராத்தே | 19) | யோகா |
| 10) | கணினி | 20) | சிலம்பம் |

சென்னையில், 18 கலைகளில் வாரம் ஆறு நாட்களிலும், மாவட்டச் சவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்களில் ஏதேனும் நான்கு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், ஊரக மையங்களில் இரண்டு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், மாலை நேரத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது. மாநிலத்திலுள்ள அனைத்துச் சிறுவர் மன்றங்களிலும், 2004–2005 ஆம் ஆண்டில், 9,500 சிறுவர் சிறுமியர் பயிற்சி பெற்று வருகின்றனர். இரு ஊரக மையங்கள் நீங்கலாக,

[2005 ஏப்ரல் 6

அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களில் சிறுவர் நூலகங்கள் செயல்படுகின்றன.

**அயல்நாடுகளில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்**

29-07-2004 முதல் 02-08-2004 முடிய சீனாவில் நடைபெற்ற விழாவில் ஈரோடு, சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த செல்வன் அனந்தராமன் என்ற மாணவன் குரலிசைக்காகவும், திருச்சிராப்பள்ளி, சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த மாணவி செல்வி ராமப்ரியா வயலின் இசைக்காகவும், புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தினரால் தெரிவு செய்யப்பட்டு, இந்திய நாட்டின் சார்பாகக் கலந்து கொண்டனர்.

திருச்சிராப்பள்ளி சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த செல்வி வி.சுபத்ரா என்ற மாணவி 22-07-2004 முதல் 01-08-2004 வரை மங்கோலியாவில் நடத்தப்பட்ட அனைத்துலகப் பண்பாட்டு ஒருமைப்பாடு மற்றும் சுற்றுச் சூழல் மாநாட்டில் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொண்டு, தமிழக நடன நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

**பிற மாநில நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்**

**1. தென் மண்டல தேசிய இளந்திரு விருது தெரிவு**

புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தினரால், பாண்டிச்சேரி சிறுவர் மன்றத்தில் செப்டம்பர், 2004 இல் நடத்தப்பட்ட தென் மண்டல இளந்திரு விருது தெரிவில், தமிழ்நாட்டிலுள்ள சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து 56 குழந்தைகள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் 15 குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் டிசம்பர், 2004 இல் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் புதுதில்லியில் நடத்தப்பட்ட தேசிய இளந்திரு விருது தெரிவு முகாமில் கலந்து கொண்டனர்.

**2. உடல்திறன் போட்டிகள்**

09-10-2004 மற்றும் 10-10-2004 ஆகிய நாட்களில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தென்னிந்திய உடல்திறன் போட்டியில் சென்னை சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த ஒரு மாணவியும், 12-11-2004 முதல் 16-11-2004 வரை சண்டிகர் நகரில் நடைபெற்ற இளையோருக்கான தேசிய உடல்திறன் போட்டியில் சென்னை சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த ஒரு மாணவனும், 27-12-2004 முதல் 31-12-2004 வரை, மகாராஷ்டிரா மாநிலம், புனே நகரில் நடத்தப்பெற்ற சீனியர் தேசிய உடல்திறன் போட்டியில்



2005 ஏப்ரல் 6]

சென்னை சவகர் சிறுவர் மன்றத்திலிருந்து இரு மாணவிகளும் கலந்து கொண்டனர்.

**3. தேசிய குழந்தைகள் முகாம்**

புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம் 11-11-2004 முதல் 20-11-2004 வரை தேசிய குழந்தைகள் முகாம் நடத்தியது. இம்முகாமில், தமிழகச் சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து 42 சிறார்கள் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகள் வழங்கினர்.

**4. கலை நிகழ்ச்சிகள் பரிமாற்றம்**

19-11-2004 மற்றும் 20-11-2004 ஆகிய நாட்களில் தஞ்சாவூர், தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பாகப் பஞ்சாப் மாநிலம், படால்கர் நகரில் மாநிலங்களுக்கிடையே கலை நிகழ்ச்சிகள் பரிமாற்ற முகாம் நடைபெற்றது. இம்முகாமில், புதுக்கோட்டை சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 20 சிறார்கள் பங்கேற்றுத் தமிழக நடன நிகழ்ச்சிகளை வழங்கினர். ஒரிசா மாநிலம், புவனேஸ்வர் நகரில் 5-3-2005 மற்றும் 6-3-2005 ஆகிய நாட்களில் நடைபெற்றக் கலாச்சாரப் பரிமாற்ற நிகழ்ச்சியில் சென்னை, காஞ்சிபுரம், தஞ்சாவூர் ஆகிய சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து 16 சிறார்கள் பங்கேற்றனர். கலை பரிமாற்றத் திட்டத்தின்கீழ், பெங்களூர் சிறுவர் மன்றச் சிறார்கள், 2005, பிப்ரவரித் திங்களில் திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்களில் கலை நிகழ்ச்சிகள் வழங்கினர்.

பிப்ரவரி, 2005 இல் புதுக்கோட்டை சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 7 சிறுவர்கள் கர்நாடக மாநிலம் சிமோகா சென்று தமிழக நிகழ்ச்சிகளை வழங்கினர்.

**5. தேசிய சுற்றுச்சூழல் முகாம்**

புதுதில்லி, தேசிய சிறுவர் மன்றம், சத்திஸ்கர் மாநிலம், ராய்பூர் நகரில் 2004, டிசம்பர் 27 முதல் 30 முடிய நடத்திய இளையோருக்கான தேசிய சுற்றுச்சூழல் முகாமில் சென்னை, மதுரை, காஞ்சிபுரம், புதுக்கோட்டை ஆகிய சிறுவர் மன்றங்களிலிருந்து இருவர் வீதம் எட்டு சிறார்கள் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

## மாநில அளவிலான திட்டங்கள்

### 1. கோடைக்கால / மாரிக்கால முகாம்கள்

மாநிலத்திலுள்ள அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்தும் 100 சிறார்களுக்கு நடனம், நாடகம், குரலிசை, ஓவியம், கைவினை ஆகிய கலைகளில் 15–05–2004 முதல் 24–05–2004 வரை ஏற்காடு நகரில் கோடைக்காலச் சிறப்புப் பயிற்சியும், 100 சிறார்களுக்கு 25–12–2004 முதல் 02–01–2005 வரை திருநெல்வேலியில் மாரிக்காலச் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

### 2. கலைச் சுற்றுலா

குழந்தைகளின் கலை ஆர்வத்தை ஊக்குவித்திட, 100 சிறார்கள் 23–05–2004 அன்று ஏற்காடு நகரில் முக்கியச் சுற்றுலாத் தலங்களாகிய லேடி சீட், ஜென்ட்ஸ் சீட், குழந்தைகள் பூங்கா, மான்பூங்கா, ஏரி, சேர்வராயன் கோவில், ராஜராஜேஸ்வரி கோவில் போன்ற கலைநயமிக்க இடங்களுக்குக் கலைச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

01–01–2005 அன்று, 100 சிறார்கள் திருநெல்வேலி நகரைச் சுற்றியுள்ள சுற்றுலாத் தலங்களான பாபநாசம் அகஸ்தியர் நீர்வீழ்ச்சி, சேர்வலாறு அணை, காரையர் அணை, திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் ஆகிய இடங்களுக்குக் கலைச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

### 3. உடல்திறன் போட்டி

16–10–2004 மற்றும் 17–10–2004 ஆகிய நாட்களில், சேலத்தில், தமிழ்நாடு உடல்திறன் சங்கத்தினரால் மாநில உடல்திறன் போட்டி நடத்தப் பெற்றது. இப்போட்டியில் சென்னை சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 15 சிறார்கள் கலந்து கொண்டு கேடயங்களும், சான்றுகளும் வென்று வந்தனர்.

29–01–2005 மற்றும் 30–01–2005 ஆகிய நாட்களில் அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்தும் 100 சிறார்களுக்கு, தமிழ்நாடு உடல்திறன் சங்கத்தினருடன் இணைந்து தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரில் மாநில உடல்திறன் போட்டி நடத்தப்பட்டது.



### 4. மாவட்ட/மாநிலக் கலைப் போட்டி

அனைத்து மாவட்டங்களிலும், 5–8, 9–12, 13–16 வயது வகைப் பிரிவில் குரலிசை, நடனம், ஓவியம் ஆகிய கலைகளில் கலைப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கிடையே, 9–12, 13–16 வயது வகைப் பிரிவில் முதற் பரிசு பெற்றவர்களுக்கு, 04–02–2005 அன்று மதுரை மாநகரில் மாநில அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்பட்டு, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

### 5. சிலம்பாட்டப் போட்டிகள்

28–05–2004 முதல் 30–05–2004 வரை விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகரில் தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகத்தினரால் மாநில சிலம்பாட்டப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் சென்னை, சிலம்பாட்டப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் சென்னை, திருவள்ளூர், மதுரை, சேலம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள சவகர் சிறுவர் மன்றங்களைச் சேர்ந்த 17 குழந்தைகள் கலந்து கொண்டு பல பரிசுகளும், சான்றுகளும் பெற்று வந்தனர்.

18–07–2004 அன்று, சென்னை மாவட்டச் சிலம்பாட்டக் கழகத்தினரால் சென்னையில் நடத்தப்பட்ட சிலம்பாட்டப் போட்டியில், சென்னை சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 25 சிறார்கள் கலந்து கொண்டு பல பரிசுகளும், சான்றுகளும் பெற்று வந்தனர்.

மாநிலச் சிலம்பாட்டக் கழகத்தினரும், தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றமும் இணைந்து, அனைத்து மாவட்டச் சிறுவர் மன்றங்களிலிருந்து 100 சிறார்களுக்கு விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகரில் 11–02–2005 முதல் 13–02–2005 வரை மாநில அளவில் சிலம்பாட்டப் போட்டி நடத்தப் பெற்றது.

### 6. கராத்தே போட்டிகள்

தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்தும் 100 குழந்தைகளுக்கு மாநில கராத்தே–டோ–சங்கத்தினருடன் இணைந்து, 20–02–2005 அன்று சென்னையில் கராத்தே போட்டிகள் நடத்தப்பட்டன.

[2005 ஏப்ரல் 6

**7. நடன அரங்கேற்றம்**

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், நடனத்தில் ஆர்வமுள்ள வறிய நிலையிலிருக்கும் குழந்தைகளை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த மூன்று வறிய குழந்தைகளுக்குச் சிறுவர் மன்றச் செலவில் நடன அரங்கேற்றம் நடத்தப்பட்டது.

அதே போன்று, இவ்வாண்டு காஞ்சிபுரத்தில் உள்ள சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளுக்கு நடன அரங்கேற்றம் நடத்தப்பட உள்ளது.

**மண்டல அளவிலான திட்டங்கள்**

**கலைப் பயிற்சி முகாம்கள்**

காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை ஆகிய மண்டலங்களிலும், சென்னை சிறுவர் மன்றத்திலும் குழந்தைகளுக்கு இலவசமாக கோடைக்காலத்தில் கலைப்பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தில், 700 குழந்தைகள் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

**சென்னை மாவட்ட அளவிலான திட்டங்கள்**

**1. கோடைக்கால இலவசக் கலைப் பயிற்சி முகாம்**

சென்னை சவகர் சிறுவர் மன்றத்தில், 14-04-2004 முதல் 29-05-2004 வரை சவகர் சிறுவர் மன்றத்தில் பயிற்றுவிக்கப்படும் 18 வகையான கலைகளில் குழந்தைகளுக்கு இலவசமாகப் பயிற்சியளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் 1,419 குழந்தைகள் பயன்பெற்றனர். சென்னை சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையத்தில், 16-04-2004 முதல் 29-05-2004 வரை நடத்தப்பட்ட இலவசக் கலைப்பயிற்சி முகாமில் 151 குழந்தைகள் பயிற்சி பெற்றனர்.

**2. மாவட்டக் கலைப் போட்டிகள்**

2004, நவம்பர் மாதத்தில் குரலிசை, ஓவியம், நடனம் ஆகிய கலைகளில் சென்னை மாவட்டக் கலைப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் சென்னை நகரிலுள்ள 76 பள்ளிகளிலிருந்து 414 சிறார்கள் பங்கேற்றனர்.



2005 ஏப்ரல் 6]

**3. கைவினைப் பயிலரங்கம்**

02-02-2005 அன்று 15 பள்ளிகளிலிருந்து 5 சிறார்கள் வீதம் 75 குழந்தைகளுக்குக் கைவினைப் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

**தேசிய இளந்திரு விருது**

மேடைக் கலை, படைப்புக் கலை, அறிவியற்கலை, எழுத்துக் கலை ஆகியவற்றில் புதுமை படைத்திடும் சிறார்களுக்குத் தேசிய இளந்திரு விருது எனும் உயரிய விருது புதுதில்லியில் உள்ள தேசிய சிறுவர் மன்றத்தின் சார்பில் ஆண்டு தோறும் மேதகு குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண்டிற்கான இப்போட்டி புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில் நடத்தப்பட்டது. இப்போட்டியில், தமிழ்நாட்டிலிருந்து 15 பேர் கலந்து கொண்டனர்.

இவர்களில், சென்னையைச் சேர்ந்த செல்வி சாத்வீகா மேடைக் கலைக்காகவும், செல்வி விசாலா மிஸ்ரா அறிவியற் கலைக்காகவும், செல்வன் ஜனார்தனன் படைப்புக்கலைக்காகவும் (ஊனமுற்றோர்பிரிவு), மதுரை சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த செல்வி ஆர். தீப்தி எழுத்துக் கலைக்காகவும் தேசிய இளந்திரு விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து விருதுகள் பெறவுள்ளார்கள்.

**புதிய திட்டங்கள்**

2005-2006 ஆம் ஆண்டில், பகுதி-II திட்டத்தின்கீழ், சேலம் மற்றும் திருநெல்வேலி மண்டலக் கலை-பண்பாட்டு மையங்களுக்கு நகல் படிப்பெருக்கி இயந்திரங்கள் (Xerox Machines) வாங்குதல், அரசு இசைக் கல்லூரிகளுக்கு இசைக்கருவிகள் வாங்குதல், இசைக்கருவிகளைப் பாதுகாக்க இரும்பு அலமாரிகள் வாங்குதல், மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய அரசு இசைக் கல்லூரிகளுக்குக் கணினிகள் வாங்குதல், மதுரை, கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிகளுக்கு ஒலி ஒளி நூலகம் அமைத்தல், திருவையாறு அரசு இசைக் கல்லூரிக்குப் புதிதாக அலுவலகம் மற்றும் வகுப்பறைகள் கட்டப்பெறுதல், 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்குக் கணினிகள் மற்றும் இசைக்கருவிகள் வாங்குதல், ஒலி ஒளி நூலகம் அமைத்தல், சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகளுக்குக் கணினிகள், உபகரணங்கள், நீர்மப் படிமக்காட்சிப் பெருக்கிகள் (LIQUID CRYSTAL DISPLAY PROJECTOR) வாங்குதல், கலைக் கண்காட்சி நடத்துதல், கும்பகோணம், அரசு கவின்கலைக் கல்லூரியில் சிறப்புப் பழுது மற்றும் சீரமைப்புப் பணிகள்

[2005 ஏப்ரல் 6

மேற்கொள்ளுதல், மாமல்லபுரம், அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் கணினி வாங்கப்பெற்றுக் கணினி மையம் நிறுவுதல், ஒலி ஒளி நூலகம் அமைத்தல், சென்னை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் கட்டப் பெற்ற கலைக்கூடத்தை விரிவாக்கம் செய்தல், தமிழ் இலக்கிய அரிய காட்சிகளை நாட்டிய நாடகங்களாகத் தயாரித்து மேடையேற்றம் செய்தல், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் மூலம் இளம் ஓவியக் கலைஞர்களுக்கான முகாம் நடத்துதல், சென்னை, சவகர் சிறுவர் மன்றத்திற்கு நகல் படிப் பெருக்கி இயந்திரம் (Xerox Machine) மற்றும் நிகரி இயந்திரம் (Fax Machine) வாங்குதல், சென்னை உட்பட, கலை–பண்பாட்டு மண்டலங்கள் அளவில் கோடைப் பயிற்சி முகாம்கள் நடத்துதல் ஆகிய புதிய திட்டங்களை ரூ.100.36 இலட்சம் செலவில் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், ஆங்காங்கே மறைந்து கிடக்கும் நலிவடைந்த பாரம்பரியக் கலைகளைப் பொதுமக்கள் அனைவரும் அறியும் வண்ணம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, இக்கலைகளில் ஆர்வத்தை ஊட்டும் வண்ணம் கலை–பண்பாட்டுத் துறை, பல்வேறு நிலைகளில்,

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வைர வரிகளுக்கேற்ப முனைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

♦♦♦♦♦

D
N211 2/05
RS. 80/
தமிழ்நாடு ... 
185279
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை—600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.